
ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி ஸ்ரீகாஞ்சீ

P. B. அண்ணங்கராசாரிய ஸ்வாமிகள்

எழுதிய

நற்பொருளெழுநூறில் 2, 3, 4 நூறுகளான

நவரத்ன நவநிதி

ஸ்ரீ ராமாநுஜன் வெளியீடு

கீலக௵ ஐப்பசித் திருமூல மலர்.

26-10-1968

கிடைக்குமிடம் :-

P. B. Annangaracharya, Kanchipuram-3.

விலை 2 ரூ.

ஸ்ரீ:

நவநிதியில் முதல்நிதி—ஆழ்வார்கள் பெருமை

முதலாழ்வார்கள் பெருமை

101. நம்ஸம்ப்ரதாயத்தில் முதலாழ்வார்களென்று கொண்டாடப்படுகின்ற பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் மூவர் ஓடித் திரியும் யோகிகளாய் தம்மில் ஒருவரை யொருவர் அறியாமல் தனித் தனியே ஸஞ்சரித்துக் கொண்டிருந்ததாகவும், இம் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொள்ள எம்பெருமான் குதூஹலங் கொண்டிருந்ததாகவும், ஒருநாள் ஸூர்யன் அஸ்தமித்த பின்பு பொய்கை யாழ்வார் கனமழையினால் திருக்கோவலூரை யடைந்து ம்ருகண்டு மஹர்ஷியின் திரு மாளிகையிற் சென்று அதன் இடைகழியிற் பள்ளிகொண்டிருக்க, பூதத்தாழ்வாரும் பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்ததாகவும் அங்கு மூவரும் அளவளாவி நிற்கையிலே இவர்களை எம்பெருமான் நெருக்கிக் கலந்து பரிமாறினதாகவும் சரித்திரம் கூறப்பட்டு வருகின்றது. இதனால் முதலாழ்வார்கட்குத் திருக்கோவலூரில் மிக்க ஈடுபாடென்பது விளங்குகின்றது. * அந்யோந்யம் கொண்டாடுகிறவர்களாகச் சொல்லப்பட்ட ஆழ்வார்களுள் ஸர்வ கநிஷ்டரான திருமங்கை மன்னன் திருக்கோவலூர்க்குப் பதிகம் பாடுமிடத்து இவ்வரலாற்றினை அநுஸந்தித்திருக்குமழகு இங்கு வெளியிடப்படுகின்றது.

102. பெரிய திருமொழியில் திருக்கோவலூர்ப் பதிகத்தில் நான்காவது பாசுரத்திலே (2-10-4.)''ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்புகூருமடியவர்கட்கு ஆரமுதமானான்றன்னை'' என்ற விடத்திற்கு ஆசார்யஹ்ருதயத்தில் காட்டி யருளப்பட்ட பரமரஹஸ்யார்த்தம் இங்கு விவரிக்கலாகிறது. அதில் மூன்றாம் ப்ரகரணத்தில் மேகத்திற்கு ஸ்வாபதேச மருளிச் செய்கிற ''பூண்ட நாள் சீர்க்கடலை யுட்கொண்டு'' இத்யாதி சூர்ணையில் ''அன்புகூருமடியவர்'' என்றுள்ளதை வியாக்கியானித்தருளா நின்ற நம் மணவாளமாமுனிகள் ''ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரும் அடியவரான முதலாழ்வார்கள்'' என்று அருளிச் செய்திருப்பது குறிக்கொள்ளத் தக்கது. ''ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர்கள்'' என்கிற சந்தை திருமங்கை யாழ்வாருடைய திருக்கோவலூர்ப்பதிகத்திலுள்ள தென்னுமிடம் மறக்கத்தக்கதன்று. அப்படிப்பட்ட அடியவர்கட்கு அரிய அமுதமாக இருந்தவன் திருக்கோவலூ ரெம்பெருமான் என்று துதியுள்ளது. அங்கு அடியவர்கள் என்றது முதலாழ்வார்களை யென்று நம் பூருவாசாரியர்கள் ஒரு மிடறாகத் திருவுள்ளம் பற்றியிருந்தார்களென்னுமிடம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தினால் தெற்றென விளங்குகின்றது. இந்த நிர்வாஹம் மிகுந்தஉபபத்தியோடுகூடியது. எங்ஙனேயெனின், அடியவர் -அன்பு கூருமடியவர் -ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர் என்று வகுத்துக் கொள்ளவேணும். முந்துற 'அடியவர்' என்பது பேயாழ்வாரை. இவர் ''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்'' என்ற முதற்பாசுரத்தில் எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தாம் காணப் பெற்றதாகப் பேசி, அந்த திவ்யமங்கள விக்ரஹத்துள் திருவடி யொன்றே தமக்கு உத்தேச்யம் என்பதைத் தமது திருவந்தாதியில் ஆதி மத்ய அவஸாநங்களில் வெகு அழகாகக் காட்டினர். ''இன்றே கழல் கண்டேன்'' என்கிறார் ஆதியில்; ''பைம் பொன் முடியா னடியிணைக்கே பூரித் தென்னெஞ்சேபுரி'' ''முயன்று தொழு நெஞ்சே!.... தண்ணலங்கல் மாலையான் தாள்'' ''கரியான் கழலே தெருள் தன்மேல் கண்டாய் தெளி'' 'வாழும் வகையறிந்தேன்—எங்கள் பெருமானடி சேரப் பெற்று'' என்று (நாற்பது முதலாக அறுபது ஈறான பாசுரங்களுள்) மத்யத்தில் பேசினமை காண்க. ''குட்டத்துக் கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் தாள் முதலே நங்கட்குச் சார்வு'' என்று அவஸாநத்திலும் தாளேயே பேசித் தலைக்

கட்டினார். ஆக இங்ஙனம் எம்பெருமானது அடியையே சிக்கெனப் பற்றினவர் என்ற காரணத்தினால் பேயாழ்வார் அடியவராகக் கூறப்பட்டார்.

103. 'அன்பு கூருமடியவர்' என்றது பூதத்தாழ்வாரை. எங்ஙனே யெனில், (அன்பு கூரும் என்றது அன்புமிகுந்தவர் என்றபடி,) இவ் வாழ்வார் "அன்பே தகளியா" என்று தொடங்கி "விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றனளவன்றால் யானுடைய அன்பு' என்று முடிவு பாசுரத்தில் தமது அன்பு மிகுதியை வாய்விட்டு உரைத்தவராதலால் அன்புகூருமடியவராக இவரே கருதத் தகுதியுடையவராவர். இனி, அரும்பிக் கண்ணீர் சோருமடியவர் பொய்கையாழ்வார். எங்ஙனே யென்னில், இவ்வாழ்வார் "பழுதே பலபகலும் போயின வென்று அஞ்சியழுதேன்" என்று தம் வாக்கினாலே பேசியருளினபடி அரும்பிக் கண்ணீர் சோர்ந்திருப்பவராதலால்.

ஆக இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரையும் அழகாகக் குறிப்பிட்டு இவர்கட்கு அமுதமாயிருந்தவன் அத்தலத்து நாதன் என்று கலியன் அருளிச் செய்தார்.

104. ஸ்ரீமந் நிகமாந்த வாசிரியரும் "அடியவர்கட்கு ஆரமுதமானான்" என்ற பாசுரத்திலேயே நோக்காக தேஹளீசஸ்துதியில் (7) "காஸார பூர்வகவி முக்ய விமர்த ஜந்மா புண்யாதடேக்ஷுஸ்பகஸ்ய ரஸோ பஹுஸ் தே" என்றருளிச் செய்தார். இங்கு அடியவர்கட்கு என்ற ஸ்ரீஸூக்தியை ஊன்றி நோக்கினால், கலியன் இங்கு மூன்று திருநாமங்களை விவக்ஷித்திருக்கிறார் என்று நன்கு விளங்கும். அடியவன்; அடியவர், அடியவர்கள் என முப்புரியூட்டினமை காண்க. .... *

(உ)
திருமழிசையாழ்வார் பெருமை

—★—

105. இவ்வாழ்வார் அருளிய திவ்வியப் பிரபந்தங்கள் இரண்டு. 1. நான்முகன் திருவந்தாதி, 2. திருச்சந்த விருத்தம். இவையிரண்டும் திவ்ய ப்ரபந்தங்களெல்லாவற்றினுள்ளும் வேதாந்த விழுப்பொருள்கள் நிரம்பித் ததும்பிய மிகச் சிறந்த அரிய பெரிய நூல்களாம். இவ்வாழ்வாருடைய காலத்தில் தேவதாந்தரபரத்துவம் கொள்ளும் மதாந்தரஸ்தர்கள் மலிந்திருந்ததனால் அவர்களைத் திருத்தி வழிபடுத்த வேண்டுவது இவர்க்கு அவசியமாய் அமைந்தது. ஆகவே, இவர் திருவந்தாதி தொடங்கும் போதே ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை மிக அழுத்தமாக அருளிச் செய்கின்றார். அது தலைக் கடுமிடத்தும் "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம், இனியறிந்தேன்எம்பெருமானுன்னை" என்கிறார். இடையிலும் பல பல பாசுரங்களினால் தேவதாந்தரங்களின் அபூர்த்தியையும் பரமபுருஷனுடைய பூர்த்தியையுமே பேசுகின்றார். ஆகவே, இவரது திருவந்தாதி பெரும்பாலும் பரதத்வஸ்தாபனத்தில் நோக்குடைத்தாயிருக்கும்.

106 இதில் முதற் பாசுரம்—" நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்—யான் முகமாய், அந்தாதி மேலிட்டு அறிவித்தேனாழ் பொருளைச் சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து" என்பதாம். இப் பாசுரத்தின் பெரியவச்சான் பிள்ளை வியாக்கியான அவதாரிகையில் அருளிச் செய்யப்பட்டுள்ள ஓர் அற்புதமான திவ்ய ஸூக்தி காண்மின்;—

"ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானாப் போலே தந்நிவ்ருத்திக்கு ப்ரதாநனானேன் நானென்கிறார்" என்று. இந்த ஸ்ரீஸூக்தியின் காம்பீர்யம் வாசாமகோசரம்; இதன் கருத்தாவது — நாராயணன் நான்முகனைப் படைத்துவைத்தான்; அந்த நான் முகனும் மற்றுள்ள ஸ்ருஷ்டிகளைப் பண்ணிப்

போனான். ஆக அவ்விருவரும் இப்படி ஸம்ஸாரத்தை வளரச்செய்து வைத்தார்களேயன்றி அடியறுக்கப் பார்த்தாரல்லர்; நான் அங்ஙனன்றியே, உங்களுடைய ஸம்ஸாரம் வேரறும்படியாக ஆழ்பொருள்களை அறிவிக்க முற்படுகின்றேன் காண்மின்—என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகப் பெரியவச்சான் பிள்ளை எடுத்துக் காட்டியருளியிருப்பது பரமரஸம்.

107. இவ்வாழ்வார் ஆழ்பொருளை அறிவிக்கத் தொடங்கும்போதே அறிவித்தேனாழ் பொருளை என்று இறந்த காலத்தாற் கூறினது—தம்மைக் கொண்டு அறிவிக்க விரும்பிய எம்பெருமான் ஸத்ய ஸங்கல்பனாகையாலும், எம்பெருமானுடைய பரத்துவத்தைப்பற்றிப் பாசுரங்கள் பேசித் தலைக்கட்டியே தீரும்படியான தம்உறுதியினாலும் இப்ப்ரபந்தம் தலைக்கட்டியாய் விட்டதாகவே நினைத்தாம். இதனைத் தமிழர் தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட கால வழுவமைதி யென்பர்.

இப்பாசுரம் முதலிய இருநூற்றுப் பதினாறு பாசுரங்களை (இரண்டு நூலாக) உதவியருளின இம்மஹான் *நற்றவர்கள் கொண்டாடும் நாளான தையில் மகத்தில் திருவவதரித்து நம்மை வாழ்வித்தருளினர்.... .... *

ௐ

நம்மாழ்வார் பெருமை

—★—

108. காரிமாறன், குருகூர்ச்சடகோபன், வகுளாபரணன், மகிழ்மாலைமார்பினன், பராங்குசர், ஸ்ரீசடாரி, ப்ரபந்நஜநகூடஸ்தர்.... இவைமுதலான திருநாமங்களும் இவர்க்குள்ளன. ஆழ்வார்களுள் இவர் ஐந்தாமவராகத் தோன்றினரெனினும் வைபவவிசேஷங்களினால் இவரே முதன்மைபெற்றவர். இவர் அவயவியென்றும் மற்றையாழ்வார்கள் இவர்க்கு அவயவபூதர்களென்றும் ஸ்ரீவைஷ்ணவபரமாசார்யர்களால் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஒரு காலவிசேஷத்தில் திவ்வியப் பிரபந்தங்களெல்லாம் லோபமடைந்திருக்கையில், ஆசார்யபரம்பரையில் தலைவரான ஸ்ரீமந்நாத முனிகள் இவ்வாழ்வார் விஷயமாக மதுரகவிகள் அருளிச் செய்திருந்த *கண்ணிநுண்சிறுத்தாம்பு பிரபந்தத்தை நியமத்துடன் ஜபித்து யோகதசையிலே இவரை ஸாக்ஷாத்கரித்து இவர் முகமாகவே நாலாயிரதிவ்யப் பிரபந்தங்களையும் உபதேசிக்கப் பெற்றார்; ஆனதுபற்றியே இவருடைய வாழித்திருநாமத்தில் ''நாதனுக்கு நாலயிரமுரைத்தான்வாழியே'' என்று அநுஸந்தானம் செய்யப்படுகின்றது. உலகில் பயிர்செய்பவன் தான் செய்யும்பயிர் பழுதுபட்டாலும் சோம்பிக் கைவாங்காமல் பின்னையும் க்ருஷியையே பண்ணுமாபோலே கல்பந்தோறும் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணிப் போராநின்ற எம்பெருமான் அந்த ஸ்ருஷ்டி ஸபலமாகாமலிருந்தும் சிறிதும்விரக்தியடையாமல் என்றேனுமொருநாள் பலிக்கவேபலிக்குமென்று உகந்து ஸ்ருஷ்டியையே பண்ணிக் கொண்டுவந்தும், படைத்த அந்த ஜகத்தில் அநுப்ரவேசித்தும், அறியவேண்டு மர்த்தங்களையெல்லாம் அறிவிக்குமதான சாஸ்த்ரங்களையுபதேசித்தும், *உறங்குவான் போல் யோகு செய்தபெருமான்* என்கிறபடியே நித்ராமுத்ரையாலே ஜகத் ரக்ஷண சிந்தைபண்ணியும், சிந்தித்தவுபாயத்திற்குத் தகுதியாக *மனிசரும்மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த* என்கிறபடியே மநுஷ்யாதி யோனிகளிலே கண்காணவந்து பிறந்தும் 'எனக்கு அடிமையாவாருண்டோ' என்று இதுவேகாரியமாகத் தேடித்திரியா நின்றான். அந்தோ ஒருவரும் அடிமைக்கிசைந்துவந்து அவனுடைய க்ருஷியை ஸபல மாக்கிற்றிலர்.! சிற்றின்பங்களிலே ஆழ்ந்து அழுந்திவருந்துவதே உலகவியற்கையாக இருந்தது.

இவ்வுலகவியற்கையைமாற்றி ஸம்ஸாரி சேதநர்களைத் தன்பக்கலில் ஈடுபடுத்துவதற்குத் தன்னாலாகாதென்றும், ம்ருகத்தைக் கொண்டே ம்ருகத்தைப் பிடிப்பது போல ஸம்ஸாரிகளி லொருவரைக் கொண்டே ஸம்ஸாரிகளை வலைப் படுத்திக்கொள்ள வேணு மென்றும் நிச்சயித்து, அப்படிப்பட்ட அதிகாரியைத் தேடுகையில், *அன்பொடு தென் திசைநோக்கி* என்கிறபடியே தனது அன்பார்ந்த நோக்குக்குப் பள்ளமடையான தென் திசையிலே இவ்வாழ்வார்மேலே தன்னுடைய கடாக்ஷாம்ருத தாரையைப் பெருகவிட்டான். இதனை இவ்வாழ்வார்தாமுமறிந்து தமது முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் ''பெருங்கேழலார் தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம்'' என்கிற பாசுரத்தினால் வெளியிட்டார்.

109. அந்த திவ்ய க்டாக்ஷமடியாகத் தோன்றின இவ்வாழ்வார்க்கு அளவு கடந்த அதிசயங்கள் அமைந்தன. உபய விபூதியிலு மடங்காத பெருமை வாய்ந்த பரப்ரஹ்மத்தைத் தம்முடைய ஹ்ருதய ஏக தேசத்திலே யடக்கி 'புவியுமிரு விசும்பும் நின்னகத்தத, நீ என் செவியின் வழி புகுந்து என்னுள்ளாய், அவிவின்றி யான் பெரியன், நீ பெரியை யென்பதனை யாரறிவார்? ஊன் பருகுநேமியாய்! உள்ளு.'' (பெரிய திருவந்தாதி) என்கிற பாசுரத்தினால் எம்பெருமானோடே போராடும்படியான பெருமை பெற்றார்; (அதாவது) பிரானே! நீ பரப்ரஹ்ம மென்று பேர் சுமக்கின்றாயே, இது உனக்குத் தகுமா? தன்னைக் காட்டிலும் பெரியதொரு வஸ்து வில்லாதபடி தானே மிகப் பெரிதாகவுள்ள வஸ்துவன்றோ பரப்ரஹ்ம மென்னத்தகும்; என் செவிவழியாகப் புகுந்து என்னுள்ளே அடங்கி நிற்கிறாய் நீ; உபய விபூதிமானான உன்னையு மடக்கிக் கொண்டிருக்கிற நானன்றோ பெரியவன்; என்னுள் அடங்கி நிற்கிற நீ பெரியவனாகத் தகுமோ? என்று கேட்டால் விடை யிறுக்க வல்லமை யில்லை யாயிற்று எம்பெருமானுக்கு. நாமெல்லாருங் கூட பகவானை ஹ்ருதயத்தில் அடக்கிக்கொண்டுதானிருக்கிறோ மென்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ளலாமானாலும் ''கண்கள் சிவந்து பெரியவாய் வாயுஞ் சிவந்து கனிந்து, உள்ளே வெண்பலிலகுசுடரிலகு விலகு மகர குண்டலத்தன், கொண்டல் வண்ணன் சுடர்முடியன் நான்குதோளன் குனி சார்ங்கன், ஒண் சங்கதை வாளாழியா னொருவன் அடியேனுள்ளானே'' [திருவாய்மொழி 8—8—1.] என்னும்படியும் *வெள்ளைச் சுரிசங்கொடாழியேந்தித் தாமரைக் கண்ணனென்னெஞ்சினூடே, புள்ளைக் கடாகின்ற வாற்றைக்காணீர் என் சொல்லிச் சொல்லுகேன்* [7—3—1.]என்னும் படியும் இவர் திருவுள்ளத்தே! எம்பெருமான் அடங்கி நிற்குந் தன்மை லோக விலக்ஷணமன்றோ.

110. இவ்வாழ்வாருடைய த்யானச்லோகமாக வழங்கிவருகின்ற

***யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம்**
நாராயணோ வஸதி யத்ர ஸசங்கசக்ர:,
யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ராஸ்
தஸ்மை நமோ வகுளபூஷணபாஸ்கராய. *

என்கிற ச்லோகம் மிக அற்புதமானது. நம்மாழ்வார் இவ்வுலகின் அகவிருளை அகற்றத் தோன்றிய விலக்ஷண ஸூர்யன். எல்லாருங் கண்ட ஸஹஸ்ரகிரணனான ஸூர்யன் தனது ஆயிரங் கிரணங்களினாலும் புறவிருளைமட்டும் போக்குகின்றான்; இந்த வகுள பூஷணபாஸ்கரர் தமது ஆயிரம் பாசுரங்களினாலும் உலகத்தின் அகவிருளையும் போக்குகின்றார். ஸூர்யன் * **த்யேயஸ் ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயணஸ் ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட:, கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபுர் த்ருதசங்கசக்ர:*** என்று உலகமெங்கும்

ஸுப்ரஸித்தமாக அந்தணர் யாவருமநுஸந்திக்கின்ற ச்லோகத்தின் படியே திவ்யாபரண திவ்யாயுத பூஷிதனுன ஸ்ரீமந்நாராயணன் தன்னிடத்தில், நித்ய வாஸஞ்செய்யப் பெற்றவன்; இந்த வகுளபூஷண பாஸ்கரரும் * கண்கள் சிவந்து* என்று கீழேயெடுத்துக் காட்டிய பாசுரத்தின்படியே அப்படிப்பட்டவர். [யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா;] சிலேடையாக அமைக்கப்பட்டதிது; வேதப்ரதிபாத்யமான ஸூர்ய மண்டலத்தை அந்தணர்கள் ஸந்த்யா வந்த நக்ருத்யத்தினுல் முச்சந்தியும் தொழுகின்றனர்; மண்டல மென்று திருவவதாரஸ் தலத்திற்கும் பெயர்; ச்ருதியென்று காதுக்கும் பெயர்; திருக்குருகூர் என்றே ஆழ்வார் திருநகரியென்றே காதில் விழுந்தவாறே ஸகலபக்த ஜநங்களும் மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிநிற்பர். ஆக இவ்வகைகளாலே உள்ளபடி ஸூர்யனென்றே நிரூபிக்கத் தகுந்தவர் நம்மாழ்வார்.

111. இவ்வாழ்வாருடைய திருவவதாரத்தை மஹர்ஷிகளும் தங்களுடைய புராண நூல்களில் ஸூசிப்பித்திருக்கின்றுர்கள். எங்ஙனே யென்னில்; ஸ்ரீ பாகவதத்தில் பதினேராம் ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்யாயத்தில் முப்பத்தெட்டாவது ச்லோகம் தொடங்கி ஸ்பஷ்டமாகவே காணலாம்; ***க்ருதாதிஷு நரா ராஜந் கலௌ இச்சந்தி ஸம்பவம், கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணு: *....த்ரமிடேஷு ச பூரிச: தாம்ரபர்ணீ நதீ யத்ர*** என்பவை முதலான ச்லோகங்கள் குறிக்கொள்ளத் தக்கவை. க்ருதயுகம் முதலான முன்யுகங்களில் தோன்றியிருந்த சில மனிசர்கள் கலியுகத்தில் அவதரிக்க வேணு மென்று ஆசை கொண்டிருந்தார்கள். அவர்கள் ஸ்ரீமந் நாராயணனையே பரதெய்வமாகக் கொண்டவர்களாய்க் கலியுகத்தில் அவதரிக்கப் போகிறுர்கள் ஏதோ சில சில இடங்களில் அவதரிப்பர்கள். தமிழ்நாடுகளிலோ வென்னில் பெரும் பான்மையாக அவதரிப்பர்கள். தாமிரபர்ணி, க்ருதமாலை, பாலாறு; காவேரி என்னு மிப் புண்ணிய நதிகள் எவ்விடங்களில் பெருகுகின்றனவோ அவ்விடங்களில் [அவற்றின் கரையிலே] அவதரிப்பர்கள். —என்று இந்த ச்லோகங்களில் கூறப்பட்டுள்ளது. இந்த நதிகளை யெடுக்கும்போது தாமிரபர்ணி நதியை முந்துற முன்னம் எடுக்கையாலே நம்மாழ்வாருடைய திருவவதாரமே மஹர்ஷிகளால் முக்கியமாகக் கருதப்பட்டதென்பது வெளிப்படை. ஆழ்வார்களிற் சிறந்த நம்மாழ்வாரும் ஆசாரியர்களிற் சிறந்த மணவாளமாமுனிகளும் தாமிரபர்ணிக்கரையில் திருவவதரித்த மஹா புருஷர்களன்றே.

112. இவ்வாழ்வாரை ஸாக்ஷாத் பகவதவதாரமேயாகவும் கொள்வர். பகவான் க்ருதயுகத்தில் தத்தாத்ரேயனும் பரசுராமனுமாய் ப்ராஹ்மண குலத்தில்தோன்றினுன்; அவனே அடுத்த த்ரேதாயுகத்தில் க்ஷத்ரியனுன தசரத சக்கரவர்த்திக்குப் பிள்ளையாய்த் தோன்றினுன்; அவனே த்வாபரயுகத்தில்—வைச்யப்ராயரான வஸுதேவர்க்கும், பசுரக்ஷணத்தாலே ஸாக்ஷாத் வைச்யரான நந்த கோபர்க்கும் பிள்ளையாய்த் தோன்றினுன்! இப்படி யுகக்ரமத்தில் வர்ணக்ரமமாக அவதரித்த பரம புருஷன் நான்காவது யுகமான இக்கலியுகத்தில் நான்காவது வருணத்திலே அவதரிக்க வேண்டி ஆழ்வாராக அவதரித்தனனே! என்று சங்கிக்க ஔசித்யமுண்டு. வேதங்களைப் பரிஷ்கரிப்பது முதலிய காரியங்களுக்காக வியாஸர் முதலானுரிடத்தில் ஆவேசித்தாப்போலே த்ராவிட வேத ப்ரவர்த்தநார்த்தமாக இவர்பக்கல்ஆவேசித்த படியோ! என்றும் சங்கிப்பர்கள், இவ்விபூதியைத் திருத்துகைக்காக ஈச்வரனுடைய நியமனத்தினுல் நித்ய முக்தர்களிலே யொருவர் வந்து அவதரித்தபடியோ! என்றும் சங்கிப்பர்கள். இன்னமும் சில முக்கியமான பெருமைகளைக்கேளீர்.

113. மஹர்ஷிகளென்று கொண்டாடப்படுகிற வ்யாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகளிற் காட்டிலும் ஆழ்வார் மிக்க மேம்பாடு உற்றவர்; அவ்விருடிகள் கனி காய் கிழங்கு சருகு காற்று தண்ணீராகிய இவற்றையே தாரக போஷக போக்யங்களாகக் கொண்டிருந்தார்கள். *ரிஷிம் ஜுஷாமஹேக்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம்* என்று பட்டர் அருளிச் செய்தபடி எம்பெருமான் விஷயமான காதலே வடிவெடுத்தவரான ஆழ்வாரோ வென்னில் * உண்ணுஞ்சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன் * என்று தாமே யருளிச்செய்தபடி தாரக போஷக போக்கியங்களெல்லாம் கண்ணனுன எம்பெருமானே யாயிருப்பர். ரிஷிகளின் சரித்திரங்களைக் காணும்போது அவர்கள் ஸம்ஸாரப் பற்று அருதவர்களென்பது விளங்கும். வஸிஷ்ட பகவான் புத்திரனிறந்த வருத்தத்தினுல் மரணத்தை விரும்பி மலையிலேறி விழுவது, நெருப்பிலே குதிப்பது. கழுத்திலே கல்லைக் கட்டிக்கொண்டு கடலிலே விழுவது ஆகவிப்படி யெல்லாம் தடுமாறினு ரென்றும், வேதவ்யாஸ பகவான் புத்திரவியோகம் பொறுக்க மாட்டாமல் புத்திரனே! யென்று வாய்விட்டுக் கூப்பிட்டு அழுதுகொண்டு காணப் பெருமையால் அலமந்து திரிந்தாரென்றும் கதைகள் காண்கின்றன. ஆழ்வாரோ வென்னில், எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினுல் கண்ணுங் கண்ணீருமாய் * எங்கே காண்கேனீன் துழாயம்மான் தன்னை * என்று கடலும் மலையும் விசும்பும் துழாவி அலமந்து *சிந்தை கலங்கித் திருமாலென்றழைப்பதே போதுபோக்காயிருந்தவர்.

114. ரிஷிகளின் அத்யவஸாயத்திற் காட்டிலும் ஆழ்வாருடைய அத்யவஸாயம் பரம விலக்ஷணமாயிருக்கும். எம்பெருமானைப் பெறுவதே பேறு என்றும், அதற்குக் கர்ம ஜ்ஞாநபக்திகளே உபாயமென்றும் இந்திரன் முதலிய தேவதைகளுக்கு அந்தர்யாமியான ஈச்வரனே உத்தேச்யனுகையாலே அந்தத் தேவதைகளும் அநுவர்த்திக்கவுரியர் என்றும் இப்படி ரிஷிகள் பேசியுள்ளார்கள். ஆழ்வார் அருளிச்செய்வதோ வென்னில், கைங்கர்யமே புருஷார்த்தமாகவும், அதனைப் பெறுவிப்பது ப்ரபத்தியேயாகவும், இதர தேவதைகள் அநுவர்த்திக்கத் தகாதவராகவு மாயிற்று. ரிஷிகள் இயற்றிய நூல்களிற் காட்டிலும் ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திவ்யப்பிரபந்தங்களுக்கு நெடுவாசியுண்டு;— வால்மீகி மஹர்ஷியானவர் ராமகதையைச் சொல்லுவதாக ராமாயணமென்று தொடங்கி, கங்கையின் உற்பத்தி ஸுப்ரஹ்மண்யனுடைய உற்பத்தி புஷ்பகவர்ணநம் முதலான கிளைக் கதைகளைப் பரக்கப்பேசி வாக்கில் அசுத்தி படைத்தார். வேதவ்யாஸர் மஹாபாரதத்தை * நாராயணகதை யென்பதாகத் தொடங்கி பீஷ்மர் முதலான பற்பலருடைய உத்பத்தி ப்ரகாரங்களை விரிவாகப் பேசுகையாலும், "பூசல்பட்டோலை" [யுத்தபுஸ்தகம்] என்னும்படி பாரதப்போர் வகைகளையே பரக்கநின்று வருணித்தபடியாலும் அஸத்கீர்த்தநத்திலே மிகவும் பரந்து வாக்கை அசுத்தமாக்கிக் கொண்டார். இப்படிப்பட்ட அவத்யங்களில் ஏகதேசமும் ஆழ்வாரருளிச் செயலில் இடம்பெற்றிருக்கவில்லை. "மாற்றங்களாய்ந்து கொண்டு மதுசூத பிரானடிமேல்" என்று தாமே பணித்தபடி எம்பெருமான் விஷயமல்லாத ஒரு சொல்லும் கலசாதபடி அத்தனையும் பகவத் விஷயமேயாக அருளிச் செய்த பாசுரங்களே மலிந்திருக்கும்.

115. இவரது பாசுரங்களின் பெருமையைப் பற்றிக் கம்பர் சடகோபரந்தாதியில் கூறியுள்ள செய்யுள்களில் ஒன்று கேளீர் :—

" அந்தமிலா மறையாயிரத் தாழ்ந்த வரும் பொருளைச்
செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும்
தந்தம்விழாவுமழகு மென்னும்? தமிழார்கவியின்
பந்தம்விழாவொழுகுங் குருகூர் வந்த பண்ணவனே!" என்பதாம்.

116. வேதப்பொருள்களையே நிரம்பக்கொண்ட ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள் அவதரிக்க வில்லை யென்றால் கோவில்களையும் உத்ஸவங்களையும் கேட்பாரார்? என்னும் கருத்துப்பட அமைந்துள்ள இப்பாசுரத்தின் சுவை விலக்ஷணமானதே. சைவ சமயத்திலும் தேவாரம் முதலியன தோன்றியிருந்தாலும் சிவாலயங்களில் அவற்றிற்கு ஒரு மதிப்பு கொடுக்கப் பட்டிருக்கவுமில்லை, உபநிஷத்துக்களின் அர்த்தங்களை நிர்வஹிக்குந் திறத்தில் அவற்றைத் துணைகொள்வாருமில்லை. ப்ராஹ்மண பரிக்ரஹமும் வித்வத் பரிக்ரஹமும் அற்றவையன்றோ அவை. நமது ஸம்ப்ரதாயத்தில் அப்படியன்றிக்கே நமது பூருவாசாரியர்கள் யாவரும் தென்மொழி வேதமாகிய திவ்யப்ரபந்தங்களை வலக்கண்ணாகவும், வடமொழி வேதத்தை இடக்கண்ணாகவு மன்றோ கொண்டிருந்தார்கள். கூரத்தாழ்வான் ஆழ்வார் விஷயமாக அருளிச்செய்த *த்ரைவித்யவ்ருத்தஜந* என்ற ச்லோகமும் *பக்திப்ரபாவபவதத்புத* என்ற ச்லோகமும் அமைந்திருக்கு மழகு நெஞ்சால் நினைப்பரிதே. [அவ்விரண்டு ச்லோகங்களும் ஸ்ரீ வைகுண்டஸ்தவத்தின் தொடக்கத்தில் காணத்தக்கன.] ஆழ்வாரைத் துதிப்பதற்கென்று தோன்றிய இந்த ச்லோகங்க ளிருக்கட்டும்; எம்பெருமானை யநுபவித்துக்கொண்டு போம்போதும் ஆழ்வாருடைய ஞாபகமேயன்றோ ஆழ்வான் பட்டர் முதலானார்க்கு இடையறுமலிருப்பது. அதிமாநுஷஸ்தவத்தில் *ஸ்ரீமத் பராங்குச முநீந்த்ரமநோநிவாஸாத்* என்ற ச்லோகமும், வரதராஜஸ்தவத்தில் *ஆம்நாயாநாம் யதபிச சிரோ யச்சமூர்த்தா சடாரே:* என்ற ச்லோகமும், ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *வடதள....கமலாஸ்தந சடகோபவாக்வபுஷி ரங்க க்ருஹே சயிதம்* என்ற ச்லோகமும் இவைபோல்வன பலவும் உயிரையுருக்கியுண்ணுமே. .... *

(அ)

குலசேகராழ்வார் பெருமை

—★★—

117. இவ்வாழ்வார் சக்ரவர்த்தி திருமகனான பெருமாளைப் போலவே க்ஷத்ரிய வம்சத்திலே அவதரித்துப் பெரியது சிறியதை நலியாதபடி செங்கோல் செலுத்திப் பரமோதாரரா யெழுந்தருளியிருந்தபடியால் குலசேகரப் பெருமாள் என்றும் போற்றப்பெற்றார். இவ்வாழ்வார் எம்பெருமானால் மயர்வற மதிநல மருளப்பெற்று எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபவாதிகளை ஸாக்ஷாத்கரித்து வேதவேத்யனான ஸர்வேச்வரன் சக்ரவர்த்திக்குப் புத்ரனாய் அவதரித்தாப்போல் வேதமும் வால்மீகி முகத்தில் நின்றும் ராமாயணமாக அவதரித்திருக்கின்றமையாலும் “கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ” என்றும், “மனத்துக்கினியான்” என்றும் சொல்லப்படுகிற ஸ்ரீ ராம வ்ருத்தாந்தத்தைக் கேட்டுப்போராநிற்க, “சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீம கர்மணாம், ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி” என்கிற ச்லோகத்திற்கு இளைய பெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிக் காவலாக வைத்துவிட்டு தருமாத்மாவான பெருமாள் தாம் ஒருவராய் அதிபயங்கரமான க்ருத்யங்களைச் செய்யும் ராக்ஷஸர்களும் அதிலும் பதினாலாயிரவர்களுமான கரதூஷணாதிகளோடு யுத்தத்திற்கு எழுந்தருளினார்; அங்கு எவ்வாறு முடியுமோ? என்று ருஷி வருந்துகிறான் - என்று அர்த்தம் சொல்லக்கேட்டவாறே பெருமாளிடமுள்ள ப்ரேமாதிசயத்தாலே கலங்கி வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வாரில்லாத குறை தீர்க்கத் தாம் சதுரங்கபலத்தோடு புறப்பட்டு எழுந்தருளா நிற்க, இவருடைய கலக்கத்தைத் தவிர்ப்பிக்க மந்திரிகள் சில வைஷ்ணவோத்தமர்களை எதிரே வரவிடுத்து அவர்களின் வாயிலாய், “ தும்

த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம்'' என்கிற ச்லோகத்தை வ்யாக்யாநிக்கச் செய்ய அவர்களும் "பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் தாம் ஒருவராகவே நிரஸித்து ஆச்ரமம் எழுந்தருளா நின்ற பெருமாளின் வீரத்திற்குகந்து ஜனககுல ஸுந்தரியான பிராட்டி பர்த்தாவான பெருமாளை ஆலிங்கனம்பண்ணி ஆச்வஸிப்பித்தாள்'' என்று சொல்லக் கேட்ட ஆழ்வாரும் அதிஸந்துஷ்டராய் மீண்டு எழுந்தருளினார். அப்பால் மந்திரிகள் இவர்க்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸஹவாஸத்தாலன்றோ இவ்வாறு கலங்கும்படி ஏற்படுகிறது என்று கருதி அவர்களின் ஸஹவாஸத்தை ஒழிக்க உபாயம் தேடி திருவாராதனப் பெருமாளின் ரத்நஹாரமொன்றைக் களவு செய்து வைஷ்ணவர்கள் அபஹரித்தார்கள் என்று பழியிட, பரனான பரமபுருஷனிடத்தில் பக்தி பண்ணும் பரம பாகவதோத்தமர்கள் பர (அந்யர்களின்) வஸ்துவை ஆசைப் படார்கள் என்று ப்ரதிஜ்ஞை பண்ணிப் பாம்புக்குடத்தில் கையிடுவேன் என்று கையிட, மந்திரிகளும் இவருடைய அத்யவஸாயத்தைப் புகழ்ந்து தாங்கள் செய்த அக்ருத்யத்தை விண்ணப்பம் செய்து ஆரத்தை ஆழ்வாரிடம் ஸமர்ப்பித்தார்கள். அப்பால் ஆழ்வாரும் இத்தீயர்களுடன் இவ்வரசாளும் பெருமையை வெறுத்து நல்லார்கள் வாழும் நளிரரங்கமாகிய திருவரங்கம் திருப்பதி சென்று திருக்காவேரி திரைக்கையால் அடிவருடத் திருவனந்தாழ்வான்மேல் திருப்பள்ளிகொண்ட திருமேனியம்மானைக் கண்ணாரக்கண்டு வாயாரப் புகழ்ந்து அநுபவித்து அவ்வநுபவ பரிவாஹ ரூபமாகப் பெருமாள் திருமொழி என்கிற திவ்யப்ரபந்தத்தை அருளிச் செய்து இவ்வுலகை வாழ்வித்தருளினார். .... *

ஸ்ரீ:

பெரியாழ்வார் பெருமை

-(:o:)-

118. இவ்வாழ்வார் பாண்டிய நாட்டில் வில்லிபுத்தூரில் ஆனிமாதத்து ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் வேயர் குலத்திலவதரித்து விஷ்ணுசித்த ரென்று திருநாம முடையவராய் வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தால் எம்பெருமானுக்குத்தொண்டு பூண்டு அமுதமுண்கையே இயல்வாகவுடையராய், 'எம்பெருமான் திருவுள்ளத்துக்கு எந்த கைங்கரியம் உகப்போ, அதுவே நாம் செய்யத்தக்கது என்று உறுதிகொண்டு ஆராய்ந்து பார்த்தவளவில், ஸ்ரீ கிருஷ்ணாவதார பகவான் கம்ஸனுக்குப் பணிசெய்துகொண்டிருந்த மாலாகாரருடைய மனையிலே எழுந்தருளிப் பூமாலையை இரந்து பெற்று அணிந்துகொண்டா னென்கிற கதையை அநுஸந்தித்துப் புஷ்பம் ஸமர்ப்பிக்கையே எம்பெருமான்றனக்கு உவப்பு' என்று நிச்சயித்துத் திருநந்தவனஞ் செய்து வடபெருங்கோயிலுடையானுக்குத் திருமாலை கட்டிச் சாத்திக்கொண்டிருந்தார்.

119. இங்ஙனிருக்கையில் பாண்டிய குலத்திற் பிறந்த ஸ்ரீ வல்லபதேவனென்னு மரசன் மதுரையில் தார்மிஷ்டனாய் அரசாட்சி புரிந்து கொண்டிருக்குங் காலத்தில் ஒரு நாளிரவில் நகர சோதனை செய்து திரியும்போது ஒரு தெருத் திண்ணையின் மேல் ஒருவன் படுத்திருக்கக்கண்டு அவனை யெழுப்பி 'நீ யார்' என்று கேட்க, 'நான் ஒரு பிராமணன்; கங்கை நீராடி மீண்டு வருகிறேன்' என்று அவன் சொல்ல; 'உனக்கு ஏதாவது நீதி தெரிந்திருந்தால் சொல்லு பார்ப்போம்' என்று அரசன் சொல்ல; அந்த அந்தணன்—* வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேத மாஸாந் நிசார்த்தமர்த்தம் திவஸம் யதேத. வார்த்தக்யஹேதோர் வயஸா நவேந பரத்ரஹேதோரிஹ ஜன்மநா ச. * என்ற ச்லோகத்தைச் சொன்னான்.

[இதன் பொருள் -மழை காலத்தில் வேண்டியவற்றுக்காக மற்ற எட்டு மாதங்களில் முயற்சி செய்ய வேண்டியது. இராக் காலத்துக்கு வேண்டியதற்காகப் பகலில் முயற்சி செய்ய வேண்யது. கிழத்தனத்தில் வேண்டியவற்றுக்காக யௌவனத்தில் முயற்சி செய்யவேண்டியது; பரலோகபோகத்திற்காக இப்பிறவி முழுவதும் முயற்சி செய்ய வேண்டியது என்பதாம்.]

120. அரசன் விவேகியாகையாலே இந்த ச்லோகத்தைக் கேட்டதும் "நமக்கோ இஹலோகத்தில் போகங்களுக்கு ஒரு குறையில்லை. இனிப் பரலோக நற்கதிக்கு முயல வேண்டும். இதற்கு என்ன வழி?" என்று அன்றிரவு முழுவதும் இதுவே சிந்தையாயிருந்து, பொழுது விடிந்தவுடனே தன்னுடைய புரோஹிதரான செல்வ நம்பியை வரவழைத்து 'நால்வகைப் புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல பரதத்துவம் இன்னதென்று நிச்சயிப்பதற்கு என்ன உபாயம்?' என்று கேட்க; வித்வான்களைத் திரட்டி அவர்களைக் கொண்டு இதனை நிர்ணயிக்கவேணும் என்று அவர் சொல்ல; ராஜாவும் அப்படியே நல்லதென்று இசைந்து அளவற்ற பொருள்களை ஒரு சீலையில் முடிந்து அந்தப் பொற்கிழியை வித்யா சுல்கமாக ஸபா மண்டபத்தின் முன்னிலையில் உயரக் கட்டுவித்து "பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை வைதிக ப்ரமாணங்களால் நிர்ணயித்துச் சொல்லுகிறவர் இந்தப் பொற்கிழியைப் பெறுவதற்கு உரியர்" என்று பலவிடங்களிலும் பிரசுரப்படுத்தினவளவில், அத் தேசத்திலும் மற்றும் பல தேசங்களிலுமிருந்து பலவகை மதத்துப் பல பண்டிதர்கள் வந்து திரண்டனர்.

121. அப்போது ஸ்ரீவில்லிபுத்தூரெம்பெருமான் ஸ்ரீவிஷ்ணுசித்தரைக் கொண்டு வேதாந்த ஸித்தமானபரதத்வத்தை பிரகாசப்படுத்தி உலகத்தை வாழ்விக்கவேணு மென்று திருவுள்ளங்கொண்டு அந்த அடியவருடைய கனவிலே எழுந்தருளி "நீர் மதுரைக்கு விரைந்து சென்று பாண்டிய ராஜனுடைய பண்டித ஸபையிற் சேர்ந்து ஸ்ரீமந்நாராயணனே பரம் பொருளென்று ஸ்தாபித்துப் பொற்கிழியை அறுத்துக் கொண்டுவாரும்" என்று நியமனம் தந்தருள, அதற்கு அவர் 'சிறிதும் சாஸ்த்ரஜ்ஞானமில்லாத அடியேன் எங்ஙனம் இதனைச் செய்ய வல்லேன்?' என்ன, எம்பெருமான் அதைப்பற்றி உமக்கென்ன கவலை? அந்தபாரம் நம்முடையதன்றோ? என்றருளிச் செய்து மறைந்தான்.

122. அநந்தரம் விஷ்ணுசித்தர் எழுந்து ஆச்சரியப்பட்டு எம்பெருமானது நியமனப்படியே நடக்க நிச்சயித்து உடனே புறப்பட்டுப்பாண்டியராஜபண்டிதஸபையி லெழுந்தருளினவளவிலே, அவரைக்கண்ட அரசனுக்கும் புரோஹிதர்க்கும் 'இவரிடத்தில் ஏதோ விசேஷமிருக்கிறது' என்று தம்மில் தோன்றினபடியால் பரமகௌரவத்துடனே எதிர்கொண்டழைத்தல் திருவடி தொழுதல் முதலியவற்றால் உபசரித்து ஸபை நடுவே சீரியசிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். இவர்கள் இப்படி பஹுமானித்ததைக்கண்டு மற்றுள்ள வித்வான்களெல்லோரும் பொறாமைகொண்டு 'அளவற்ற வேதசாஸ்த்ரங்களைப் பயின்றுள்ள எங்கட்கெல்லாம் அகௌரவ முண்டாகுமாறு ஒன்றுந்தெரியாத வொருவரை இப்படி கௌரவிப்பது அயுக்தம்' என்று சொல்லி ஆக்ஷேபிக்க, செல்வநம்பி அவர்களை அடக்கி விஷ்ணுசித்தரை நோக்கி 'தேவரீர் பரம கிருபையுடன் பரதத்வநிர்ணயம் செய்தருளவேணும்' என்று பிரார்த்திக்க; அந்த விஷ்ணுசித்தர் கனவில் காட்சிதந்த கமலைகேள்வனுடைய கருணையைக் கனக்க நம்பியிருந்தபடியால் எம்பெருமானைச் சிந்தைசெய்ய; அவ்வளவிலே பகவத்க்ருபையாலே அவர்க்கு ஸகலசாஸ்த்ரார்த்தங்களும் கைகொள் நெல்லிக்கனியாக இலங்கின.

123. இங்ஙனம் எம்பெருமானின்னருளால் ஸர்வஜ்ஞரான விஷ்ணுசித்தர் அப்போது ச்ருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களிலிருந்து பலவாக்கியங்களைப் பிரமாணமாக எடுத்துக் காட்டி அவற்றின் அர்த்தங்களையும் தாமே ஆக்ஷேப ஸமாதாநங்களோடு யுக்தி யுக்தமாக வெளியிட்டு இதரமதக் கொள்கைகளை யெல்லாம் கண்டித்து ஸ்ரீவைஷ்ணவ மதமே ப்ராமாணிகமென்றும், ஸ்ரீமந்நாராயணனே பரம புருஷனென்றும், அவனைச் சரணமடைவதே சிறந்த மார்க்கமென்றும் பரக்க உபந்யஸித்துப் பரதத்வ ஸ்தாபநம் பண்ணின வளவிலே முன்பு, பொறாமையாலே தூஷித்த வித்வான்களெல்லாரும் ஒன்றும் வாய்திறக்க வழியில்லாமல் வெள்கித் தலைகவிழ, வல்லபதேவனும் செல்வநம்பியும் அவருடைய ஞானவைபவத்தைக்கண்டு கொண்டாடி ஸாஷ்டாங்கமாக விழுந்து ஸேவித்தனர். முன்பு அரசனால் ஒருகம்பத்தினுச்சியிற்கட்டி நிறுத்தப்பட்ட பொற்கிழி தானாகவே ஆழ்வார் முன்னே தாழவிழிய, இதுவும் ஒரு பகவத்க்ருபையென்று உவந்து ஆழ்வார் அதனை அறுத்துக் கொண்டருளினார்.

124. அதைக்கண்ட அரசனும் புரோஹிதரும் மற்றும் பலபண்டிதர்களும் ஆழ்வாரை யடிபணிந்து மிகப்புகழ்ந்து அவரைப் பட்டத்து யானையின்மேலேற்றிக் குடை சாமரம் மகர தோரணம் முதலியவற்றைத் தாங்களே பணிமாறிக் கொண்டு கூடவே யிருந்து திருவீதிகளிலே மஹோத்ஸவம் செய்வித்தார்கள். அக்காலத்தில் அவர் பண்டிதர்களனைவர்க்கும் தலைவராய் விளங்கினமையால் ராஜா அவர்க்குப் பட்டர் பிரான் என்று திருநாமம் சாத்திப் பல விருதாவளிகளைக் கோஷிக்க, திருச்சின்னம் ஒலிசெய்ய, வெற்றிச் சங்கமெடுத்தூத, இப்படிப்பட்ட வைபவத்துடனே ஆழ்வார் மஹோத்ஸவம் கண்டருள்வதைப் பார்த்து ஆநந்திக்க விரும்பிய பரமபத நாதன் பிராட்டியுடனே பெரிய திருவடியின் மீதேறி எதிரில் வந்து தோன்றினான்.

125. மகனுடைய மஹோத்ஸவத்தைக் காணவரும் மாதாபிதாக்களைப்போல தம்முடைய உத்ஸவத்தைக் காணவந்த திருமாலைக் கண்ட ஆழ்வார் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் அந்த தேவாதி தேவனுடைய ஸர்வஜ்ஞத்வம் ஸர்வ சக்தத்வம் முதலிய திருக்குணங்களை அநுஸந்திப்பதற்கு முன்னே ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களிற் கண் செலுத்தி அவற்றையே ஸேவித்து ஈடுபட்டு ஆழ்ந்து பக்தி பரவசராய் அதனால் தம்முடைய நிலைமையையும் எம்பெருமானுடைய நிலைமையையும் மறந்து "காலம் நடையாடாத பரம பதத்திலே இருக்குமிப் பரமபுருஷன் காலம் நடையாடுகிற இந்த லோகத்தில் வந்து நிற்கிறானே! இவனுக்கு என்ன தீங்கு வருமோ!" என்று மிகவும் அஞ்சி இந்த திவ்யமங்கள விக்ரஹத்துக்கு எவ்விதமான அவத்யமும் நேரிடாதிருக்கவேணும் என்று மிகவும் பரிந்து மங்களாசாஸநம் பண்ணுகிறவராய் யானையின் மணிகளையே தாளமாகக் கொண்டு திருப்பல்லாண்டு என்னும் திவ்ய ப்ரபந்தத்தைப் பாடினார்.

126 பிறகு ஆழ்வார் தம்மைச் சரணமடைந்த பாண்டிய குலபதியைக் குளிரக் கடாக்ஷித்துப் பாகவத கோஷ்டியில் ஒருவனாக்கிவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூர்க்கெழுந்தருளி, கிழியிற் கிடைத்தபொருள்களை யெல்லாம் வடபெருங்கோயிலுடைய பெருமாள் திருமுன்பே வைத்துத் தெண்டன் ஸமர்ப்பித்து அந்தப்பொருளால் அங்கே கோபுரம் கட்டுவித்துப் பழையபடி நந்தவன கைங்கரியமே நடத்திவருகையில், க்ருஷ்ணாவதாரத்திலே மிகவும் ஈடுபட்டு ஆழ்ந்தவராகையால் அவ்வவதார சரிதைகளையே பிரதானமாகப் பாராட்டி அநுபவித்து அவ்வநுபவத்தாலுண்டான ஆனந்தம் உள்ளடங்காமற் பெருகவே அதைப் பிரபந்த முகமாக வெளியிடத்தொடங்கிப் பெரியாழ்வார்திருமொழியென்னும் இரண்டாவது திவ்யப்பிரபந்தத்தையருளிச்செய்தார்.

ஆண்டாள் பெருமை

-(:o:)-

127. முன்பு திரேதாயுகத்திலே விதேஹ தேசத்தில் மிதிலைமாநகரில் ஜநக மஹாராஜன்யாகசாலை அமைத்தற் பொருட்டுக் கலப்பைகொண்டு பூமியை உழுகையில், அவ்வுழுபடைச்சாலிலே ஸ்ரீதேவியின் அம்சமான ஒருமகள்தோன்ற, அவளை அவ்வரசன் தன்புத்திரியாகப் பாவித்துச் சீதையென்று திருநாமஞ்சாத்தி வளர்த்து வந்தான். அதுபோலவே பின்பு கலியுகத்திலே பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பெரியாழ்வார் திருத்துழாய்ப் பாத்தியமைத்தற் பொருட்டுக் களைக்கொட்டுக் கொண்டு திருநந்தவனத்தைக் கொத்துகையில் அக்கொத்தின நிலத்தில் ஸ்ரீ தேவி பூதேவிகளின் அம்சமான ஒருமகள் ஆடிமாதத்துப் பூர்வபல்குநி நாளிலேதோன்ற, அவளை அவ்வாழ்வார் தமது மகளாகப் பாவித்துக் கோதை என்று நாமகரணஞ் செய்து வளர்க்கலானார். நுகரப்படும் பொருள் ஒருசிறிதுமில்லாத வறியனொருவன் பெருநிதியைக் கண்டாற்போல, அப்பெண்ணருங்கலத்தைக் கண்டவளவிலே பெருங்களிப்புக்கொண்டு மிக அருமையாகச் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டிப் பாலூட்டிப் பாலித்துவந்த பட்டர்பிரான் அவளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து பரமஞானத்தைப் போதித்தனர்.

128. தந்தை முதலியோர் கண்டு வியக்கும்படி இளமை தொடங்கி எம்பெருமான் பக்கலிலே பக்திப் பெருவேட்கைகொண்டு அவனையே தான் மணஞ்செய்து கொள்ளக் கருதி, அப்பிரானது மஹிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல் முதலியனசெய்து நிற்கிற அச்சுரிகுழற்கோதை, நாடோறும்விஷ்ணுசித்தர் வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்துதற்காகக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத ஸமயம் பார்த்து எடுத்துத் தன் குழலிலே தரித்துக்கொண்டு, ‘அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனோ இல்லையோ’ என்று சிறந்த ஆபரணங்களை அணிந்து உயர்ந்த பட்டாடையை உடுத்துத் தன்னை அலங்கரித்து அவ்வொப்பனையழகைக் கண்ணாடியிலே கண்டு தந்தையார் வருவதற்குமுன் மலர் மாலையைக்களைந்து முன்போலவே செண்டாகச்சுற்றிப் பூங்கூடையினுள்ளே நலங்காமல் வைத்துவந்தாள். ரஹஸ்யமாக நடக்கிற அச்செய்தியை உணராமல் ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய் ஸ்வாமிக்குச் சாத்திவர; பெருமானும் ப்ரீதியுடன் ஏற்றருளினன்.

129. இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டு வந்தபொழுது, பூமாலையைக் கோதை சூடியிருத்தலைப் பார்த்துக் கோபங்கொண்டு பெண்ணே! நீசெய்த இது மிக்க அபசாரமான காரியம்: இனி இவ்வாறுசெய்தற்கு நினைப்புங் கொள்ளாதே என்று நங்கைக்கு நற்புத்தி சொல்லிவிட்டு அன்று வடபத்திர சாயிக்கு மாலை சாத்தாமல் திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம் வருந்தியிருந்தார். அற்றை நாளிரவில் ஆலிலைத் துயில்வோன் ஆழ்வாரதுகனவில்தோன்றி ‘இன்று நீர் நமக்கு மாலைகொண்டு வாராதிருந்தது ஏன்?’ என்று வினவியதற்கு அவர் தம் திருமகளாரது பொருந்தாச் செய்கையை விண்ணப்பஞ் செய்ய, அது கேட்டுஅப்பெருமான், அவள் சூடிக் கொடுத்த மாலையே காணும் நறுமணம்மிக்கு நமது உள்ளத்துக்கு நனி உகப்பாவது; ஆதலின் இனி அத்தன்மைத்தான தொடையலையே நமக்குக் கொண்டுவருவீர்; என்று அருளிச்செய்தனன்; உடனே கண்விழித்தவிஷ்ணுசித்தர் அம்மங்கையை மலர் மங்கையென்றே எண்ணி அவள்திறத்து அளவற்ற அன்பு கொண்டு அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டு வருகிற இலக்குமியின் அவதார விசேஷ

மென்ற காரணத்தால், அவளுக்கு ஆண்டாள் என்றும், மாதவனுக்குரிய மலர் மாலையைத் தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்தது காரணமாகச் ' சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் திருப்பெயரிட்டு அழைத்துவந்தார்.

130. அந்நாச்சியார் தனது பருவம் வளருந்தோறும் ஞானபக்திகளும் உடன் வளர்ந்து வரப்பெற்று, தனக்கு ஏற்ற காதலனுகக் கருதிய கடல்வண்ணன் விஷய மான வேட்கை விஞ்சியவளாகி, இனி அவனை ஒரு நொடிப்பொழுதும் கூடாதிருக்கப் பொறுமல், கண்ணனது பிரிவை ஆற்றுத ஆயர்மங்கைகள்போலத் தானும் நோன்புநோற்று உயிர்தரிப்பவளாய் அவ்வபிப்ராயத்தைத் திருப்பாவை நாச்சியார் திருமொழி என்ற திவ்வியப் பிரபந்தங்களின் மூலமாகப் பகவத் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து வாழ்ந்திருந்தாள்.

131. இப்படி யிருக்கையில், இவட்கு விவாஹத்துக்கு ஏற்றபருவம் வந்ததைக் கண்டு தந்தையார் இவளுக்கு ஏற்ற கொழுநனைக் காணப்பெருது கவலைப்பட்டு இவளையழைத்து நீ யார்க்கு வாழ்க்கைப்பட விரும்புகின்ருய்? என்று வினவ, ஆண்டாள் ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்றுசொல்ல, பட்டர்பிரான் பின்னை எங்ஙனம் நிகழ்வது? என்றுகேட்க, சூடிக்கொடுத்தாள் 'பெருமாளுக்கே உரியவளாக விருக்கிறேன்' என்று கட்டுரைத்தாள்

132. அதுகேட்டு விஷ்ணுசித்தர் நூற்றெட்டுத்திருப்பதிகளிலுள்ள எம்பெருமான் களுள் யார்க்கு வாழ்க்கைத்துணையாகத் துணிகின்ருய்? என்று விசாரித்தலும், கோதை 'அவ்வப்பெருமான்களுடைய வைபவத்தை விளங்க எடுத்துக்கூறி யருள வேண்டும்' எனவேண்ட, வேயர்குலத்தலைவரும் அவ்வாறே எடுத்து அருளிச்செய்து வருகையில், வடமதுரையில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானது வரலாற்றைக் கேட்ட வளவிலே மயிர்ச்சிலிர்ப்பும், திருவேங்கட முடையானது வரன்முறையைச் செவியுற்றபொழுது முகமலர்ச்சியும், திருமாலிருஞ்சோலைமலையழகரது வடிவழகை அறிந்த மாத்திரத்தில் மன மகிழ்ச்சியும் பெற்று ஸ்ரீ ரங்கநாதனது மஹிமை செவிப் பட்டவுடனே அளவற்றஆனந்த மடைந்து நிற்க, அப்பொழுது அந்தந்தத் திருப்பதி யெம்பெருமான்க ளெல்லாரும் இவளது சுயம்வரத்தை யுத்தேசித்து ஸ்ரீ வில்லி புத்தூர்க்கு எழுந்தருளி இவளது ஞானக்கண்ணுக்கு விஷயமாக, இவள் அவர் களுள் ரங்கநாதனிடத்தே மனத்தைச் செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்சயித்து அவ்வமலனையே ஸர்வகாலமும் சிந்தித்திருந்தாள்.

133. அதனையறிந்து ஆழ்வார் ' நம்பெருமாள் இவளைக் கடிமணம் புரிதல் கைகூடுமோ!' என்று சிந்தித்திருக்கையில், திருவரங்கச் செல்வன் இவருடைய ஸ்வப்நத்திலே யெழுந்தருளி உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு வாரும். அவளை யாம் அங்கீகரிப்போம் என்று அருளிச்செய்ய, அதனுல் விஷ்ணுசித் தர் வியாகுலம் நீங்கி மனமகிழ்ந்திருந்தனர். பின்பு ஸ்ரீரங்கநாதன் ஸ்தாநிகர் முதலிய கோயிற் பரிஜனங்களுடைய கனவிலே தோன்றி ' நீங்கள் ஸகல மங்கள வாத்தியங்களோடும் சத்திர சாமராதிகளோடும் நமது நவரத்தினப் பல்லக்கையும் உடன்கொண்டு வில்லிபுத்தூர்க்குச்சென்று ஆண்டாளைப் பல்லக்கிலேற்றி அழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டான்; அவ்வாறே எல்லாப்பரிகரத்தாரும் சென்று பெரியாழ்வாரையடுத்து நம்பெருமாளது அருளிப்பாட்டை விண்ணப்பஞ் செய்ய, கர்ணும்ருதமான அவ்வார்த்தையைச் செவியாரக் கேட்டுச் சந்தோஷித்து, கோதைதாதை, வடபெருங்கோயிலுடையானுடைய ஸந்நிதியிலே ஸ்ரீரங்கநாதனது நியமனத்தை விண்ணப்பஞ்செய்து அநுமதி பெற்றுப் பிரயாண மாயினர்.

134. அதனைக்கேள்வியுற்று வல்லபதேவன் அக்கல்யாண மஹோத்ஸவத்தைத் தானும் உடனிருந்து விசேஷமாக நடத்திக்கொண்டு களிகூர்ந்து திருநார்த்தனுக்

மருதித் தன் ஏவலாளரைக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரையும் ஸ்ரீரங்கநகரத்தையும் இவ்விரண்டுக்கும் நடுவிலுள்ள நெடுவழியையும் தண்ணீர் தெளித்தும் பூப்பந்த லிட்டும் தோரணங்கட்டியும் வாழைகமுகு நாட்டியும் நன்ருக அலங்கரிப்பித்துக் கஜதுரங்காதி சதுரங்க பலத்துடனே ஆழ்வார்பக்கல்வந்து சேர்ந்தான். அப்பால் பட்டர்பிரான் ஆண்டாளை மணிச் சிவிகையில் எழுந்தருளப் பண்ணி மங்கள வாத்திய கோஷத்துடனே 'ஆண்டாள் வந்தாள்! சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்! சுரும்பார் குழற்கோதை வந்தாள்! திருப்பாவை பாடிய செல்விவந் தாள்! பட்டர்பிரான் புதல்விவந்தாள்! வேயர் குலவிளக்கு வந்தாள்! என்று பல திருச்சின்னங்கள் பணிமாற 'மெய்காப்பாளர் உடன் சூழ்ந்து நிற்க, தாமும்அரசனு மாக இருபுறத்தும் இடைவிடாதிருந்து அழைத்து வந்து திருவரங்கம் பெரியகோயிலை யடைந்து பெருமாளுடைய முன்மண்டபத்திலே அப்பிராட்டியை நிறுத்திப் பெரு மாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில், அத்திருமாலின் திவ்வியஸௌந்தர்யம் இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல ஆண்டாளைக் கவரத் தொடங்கியத ஞல், சூடிக்கொடுத்த நாச்சியார் சிலம்பார்க்கச் சீரார்வளையொலிப்பக் கொடி யேரிடையாடக் காதளவுமோடிக் கயல்போல் மிளிருங்கடைக்கண் பிறழ அன்ன மென்னடை கொண்டு அருகிற்சென்று ஆநந்தக்கடலில் ஆழ்ந்து திருவரங்கன்திரு வடி வருட நாகபரியங்கத்தை மிதித்தேறி நம்பெருமாள் திருமேனியிலே ஐக்கியமாயினள். .... *

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் பெருமை

-(:o:)-

135. மன்னியசீர் மார்கழியில் கேட்டையானது, 'துன்னுபுகழ் மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால் நான்மறையோர் கொண்டாடும் நாள் என்பது உலகமறிந்ததே. இவ்வாழ்வாரருளிய திருமாலையின் சிறப்பை, "திருமாலை யறியாதவன் பெருமாளை யறியான்" என்னும் முதுமொழியே விளங்கக் காட்டும்.

136. இவ்வாழ்வார் இத்திருமாலை தொடங்கும்போதே ***காவலில் புலனைவைத்து*** என்று தொடங்குகின்ருர். செவி வாய் கண் முதலிய இந்திரியங்களைச் சிறையில் வைத்து நமன் தமர்தலைகள்மீதே தாம் நர்த்தனஞ்செய்வதாகக் களித்துப் பேசுகின் ருர். இவருடைய சரித்திரத்தில் இவர் சில காலம் இந்திரியங்களுக்கு வசப்பட்டிருந்த தாகவும் அதன் பலனுகச் சிறையிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அப்படி தம்மைக் காவலில் வைத்த புலன்களைத்தாம் காவலில் வைத்ததாகப் பேசுகிறவிது, மந்தோத ரியினுடைய ஒரு அழகிய பேச்சை நினைப்பூட்டுகின்றது. அதாவது, இராவணன் இராமபிரானுல் கொல்லப்பட்டு மாண்டொழிந்தா னென்பதை யறிந்த அவள் போர்க்களத்திலே வந்து புரண்டழும்போது ***இந்த்ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா, ஸ்மரத்பிரிவ தத் வைரம் அத்ய தைரேவ நிர்ஜித:*** என்ருள வள். இராவணன் நெடுங்காலம் இந்திரியநிக்ரஹஞ் செய்து கோரமா தவம் புரிந்து அதன் பலனுக மூவுலகங்களையும் வென்றவன். அந்த இந்திரியங்களானவை இப்பாவி நம்மைப் பங்கப்படுத்திவிட்டானே யென்று கறுவியிருந்து ஸமயம் பார்த்து அவையே இவனைப்பங்கப்படுத்தி விட்டனவாம். இந்திரியங்களை அடக்கியாண்டவன் இந்திரியகிங்கரனுனமையாலே பங்கப்பட்டானென்றவாறு. அதுபோலவே, இவ்வாழ் வாரும் தம்மை முன்பு பங்கப்படுத்தின(—சிறையிலிட்ட) அவ்விந்திரியங்களைத்தாம் பங்கப்படுத்திக் காவலில் வைத்து ஸித்திபெற்றதாகக் கூறினவிது பக்தர்களுக்கு **ஜிதேந்த்ரியத்வ முண்டாஞல் எதுவும் சாதிக்க வெளிதாமென்று** காட்டினபடி. *

திருப்பாணழ்வார் பெருமை

-(:o:)-

137. இவ் வாழ்வார்க்கு முநிவாஹனரென்னுந் திருநாமம் ப்ரஸித்தம். இவருடைய திவ்வியப் பிரபந்தத்திற்கு ஒரு காரண விசேஷத்தினல் வியாக்கியான மிட்டருளின நிகமாந்தகுருவரர் அவ்வுரைநூலுக்கு **முநிவாஹநபோக** மென்றே திருநாமம் சாற்றினர். லோகஸாரங்க மஹாமுனிகள் இவ்வாழ்வாரிடத்து மிகக் கொடிய அபசாரம் புரிய, அது பொருத அரங்கநாதன் 'அவரைத் தோளிலே தூக்கி இங்குக் கொண்டுவாரும்' என்று அம் முனிவர்க்குக்கட்டளையிட, அவர் வந்து அக் கட்டளையை விண்ணப்பஞ்செய்து 'என்தோளிலே ஏறியருளீர்' என்றார். பாணர், இவ்வுத்தமாச்ரமியின் மிக்க பெருமையையும் தம்முடைய மிக்க தாழ்வையும் நன் கறிந்தவராகையாலே 'இக் கொடிய அபசாரத்தை நான் நெஞ்சாலும் நினைக்க வில்லே' யென்று சொல்லி இருய்க்க வேண்டியிருக்க, அது செய்யாதே உடன்பட்டு அம் முனிவரின் தோளிலே யேறி வீற்றிருந்தார், இது ஸம்பாவிதமான கதை யென்று உலகங் கொள்ளாது. ஆனலும் இக்கதையை உலகம் நம்புமாறு ஆழ்வார் தாமே செய்திட்டார். எங்ஙனே யெனில், முனிவர் தோளிலேறினவுடனே "அமலனதிபிரான் **அடியார்க் கென்னை ஆட்படுத்த விமலன்**" என்றன்றோ அநுஸந்தித்தார். சேஷத்வத்திற் காட்டிலும் சீரியதான பாரதந்திரியத்தைப் பரிபாலிக்க வேண்டி முனிவரது கட்டளைக்கு இசைந்தேன் என்பது இங்கு உட்கருத்து. திருத்துழாயானது திருவடியில் கிடப்பதோடு திருமுடியில் கிடப்பதோடு வாசியற இரண்டையும் உகந்திருப்பது பாரதந்திரியத்தினலன்றே. முமுக்ஷுப்படியில் "அசித்தைப்போலே தனக்கேயாக எனைக்கொள்ளவேணு மென்கிறது நமஸ்ஸால்" என்றருளிச்செய்தது அனுஷ்டான சேஷமாகக் கண்டதிங்கு. .... *

திருமங்கையாழ்வார் பெருமை

-(:o:)-

138. கலியன், கலிகன்றி, குறையல்பிரான், வாள்வீசும்பரகாலன், ஆடல்மாவலவன், ஆலிநாடன், மங்கைவேந்தன், மங்கையர்கோன், திருமங்கையாழ்வார் என்றிவை முதலான பல திருநாமங்கள் இவர்க்குள்ளன. திருவாலி திருநகரியைச் சார்ந்த திருக்குறையலூரில் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னளில் இவரது திருவவதாரம். *மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூறவவதரித்த* என்ற உபதேசரத்தினமாலையின் படியும், "வேத சதுஷ்டய அங்கோபாங்கங்கள் பதினலும் போலே இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றை யெண்மர் நன் மாலைகளும்" என்ற ஆசார்யஹ்ருதய (43) சூர்ணையின்படியும் அறிய வேண்டிய விசேஷ மொன்றுண்டு.

139. வடமொழி வேதத்திற்கு அங்கங்களும் உபாங்கங்களும் இருப்பது போல தமிழ் வேதத்திற்கும் அவையுள்ளன; ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்கிற நான்கு வேதங்களுக்கும் சீக்ஷா வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்கிற ஆறு அங்கங்களும் மீமாம்ஸா ந்யாய புராண தர்மசாஸ்த்ரங்கள் முதலிய உபாங்கங்கள் எட்டும் ஆகப் பதினன்கு உறுப்புக்கள் அமைந் திருப்பது போலவே, நம்மாழ்வாரருளிச் செய்த திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய் மொழி ஆகிற தமிழ்மறை நான்கிற்கும் இத் திருமங்கையாழ்வாருடைய திவ்யப் பிரபந்தங்களாறும் மற்றையாழ்வார்கள் எண்மருடைய திவ்யப் பிரபந்தங்களும் அங்கோபாங்கங்களா மென்று ஸ்ரீமந்

நாதமுனிகள் முதலான பூருவாசாரியர்கள் அறுதியிட்டனர். இவ்வாழ்வாருடைய பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகிய ஆறு பிரபந்தங்களும் ஆறு அங்கமாகக் கொள்ளப்பட்டன. வடமொழி வேதங்களுக்கு சீக்ஷா வியாகரணம் நிருக்தம் முதலியவை அங்கமாகுந் தன்மையை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *"சீக்ஷாயாம் வர்ணசிக்ஷா பதஸமதிகமோ வ்யாக்ரியா நிர்வசோப்யாம்" இத்யாதி ச்லோகத்தினால் நிரூபித்துக் காட்டியிருப்பது போல நம்மாழ்வாருடைய தமிழ்மறைகளுக்கு இவ்வாழ்வாருடைய ஆறு பிரபந்தங்களும் அங்கமாகுந்தன்மையை நிரூபித்துக் காட்ட வேண்டாவோ வென்னில்: கேண்மின்;

140. அங்காங்கிபாவஸமன்வயம் பலபடிகளால் பொருந்தும். வடமொழி வேதங்களுக்கும் சீக்ஷாதிகளுக்கும் அங்காங்கிபாவம் எவ்விதமாகப் பொருந்தியிருக்கின்றதோ அவ்விதமாகவே இங்கும் பொருந்தவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை. நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தைப் பெரும்பாலும் பின்பற்றியே இவ்வாழ்வார் அருளிச்செய்துள்ளார் என்பதுவே இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ளத் தக்கது; இதையிட்டே "மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூற" என்றது. ஸ்தாலீபுலாக நீதியாய்ச் சில விஷயங்களைக்காட்டி ஸமந்வயமுணர்த்துவோம்.

*மாறன் பணித்த வென்னும் பாசுர விவரணம்.

141. திவ்விய தேசங்களுள் நம்மாழ்வார்க்கு எந்த திவ்ய தேசத்தில் அதிகமான அபிநிவேசமென்று ஆராயுங்கால், அது திருக்குடந்தையிலே யென்பது அறியவெளிதாகும்; நம்மாழ்வார் இந்நிலத்தி லிருந்துகொண்டே *சூழ்ந்து நின்ற மால் விசும்பில் தொல்லைவழி காட்ட, ஆழ்ந்ததனை முற்று மநுபவித்து, வாழ்ந்தங்கடியருடனே இருந்தவாற்றை யுரைசெய்தான், முடிமகிழ்சேர் ஞானமுனி* (திருவாய்மொழி நூற்றந்தாதி—99.) என்னும்படி பரமபதாநுபவத்தைச் செய்து அமைத்த *சூழ்விசும்பணி முகிற்பதிகத்தில் ஒரு திவ்யதேசத்தைப்பற்றியும் ப்ரஸ்தாவஞ்செய்ய வேண்டிய அவசியம் இல்லாதிருக்கவும் (அப்பதிகத்தில் ஏழாவது பாசுரமாகிய) *மடந்தையர் வாழ்த்தலும்* என்கிறபாட்டில் "குடந்தையெங் கோவலன் குடியடியார்க்கே........தொடர்ந்தெங்கும் தோத்திரஞ் சொல்லினர்" [அதாவது, இந்தமுக்தாத்மா திருக்குடந்தை யெம்பெருமானிடத்திலே குடிகுடியாக அடிமைப்பட்டவரென்று சொல்லிக்கொண்டு அங்குள்ளார் கொண்டாடினர்] என்று அருளிச்செய்திருக்கையாலே திருநாட்டிலுங்கூட மறக்கமுடியாதபடி நம்மாழ்வார்க்குத் திருக்குடந்தைப் பதியின்அநுபவம் செல்லுகின்றதென்று தெரிவதனால் இத்திருப்பதியே நம்மாழ்வாருடைய நிகரில்லாத அபிநிவேசத்திற்கு ஆஸ்பதமானதென்று அறுதியிடப்படும்.

142. அன்றியும் திவ்வியப் பிரபந்தங்களெல்லாம் லோபமடைந்திருந்தவொரு காலவிசேஷத்தில் ஸ்ரீமந்நாதமுனிகள் அவற்றைப் புநருத்தாரஞ் செய்வதற்கு திருக்குடந்தைப்பதி விஷயமான *ஆராவமுதே யென்கிற திருவாய்மொழியே மூலகாரணமாயிற்றென்று ஐதிஹ்ய மிருப்பதனாலும் மேலே குறித்த விஷயம் ஊர்ஜிதமாகும்.

143. இதற்குச் சேரவே திருமங்கையாழ்வார் தாம் திருமொழி பாடத் தொடங்கும் போதே "தூவி சேரன்னம் துணையொடும் புணருஞ் சூழ்புனற் "குடந்தையே தொழுது' என்றும் *சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின் சூழ்புனற் குடந்தையே தொழுமின்" என்றும் அருளிச் செய்து, சரமப்பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்தின் முடிவிலும் "தண் குடந்தைக் கிடந்த மாலை நெடியானையடிநாயேன் நினைந்திட்டேனே" என்று திருக்குடந்தையையே பேசித் தலைக்கட்டினார்.

144 அன்றியும் திருக்குடந்தைக் கென்றே தனிப் பிரபந்தமு மொன்று [திருவெழுகூற் றிருக்கை] திருவாய் மலர்ந்தருளினர்.

145. அர்ச்சாவதாரம் நிற்க; விபவாவதாரங்களுள் எவ்வவதாரத்தில் நம்மாழ்வார்க்கு மிகுந்த அபிநிவேச மென்று ஆராயுங்கால், முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில்''பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப்புண்டரீகம்நம்மேலொருங்கே பிறழ வைத்தார்'' என்றும், ''ஏனத்துருவாயிடந்த—ஞானப் பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே'' என்றும் அருளிச் செய்து, * அவாவற்று வீடு பெறுவதற்கு முன்னே''கோலவராக மொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்ட எந்தாய்!-உன்னைப் பெற்றினிப் போக்குவனோ?''என்று சொல்லித் தலைக்கட்டுகையாலே ஸ்ரீவராஹ நாயனார் பக்கலிலே நம்மாழ்வார்க்குநல்லன்பு என்று தெரியலாகும். இதற்குச்சேரவே திருமங்கையாழ்வார் தாம் திருமொழி தொடங்குகையில் விபவாவதாரத்தைப் பற்றி வாய்திறக்கும் போதே ''பன்றியாயன்று பாரகங் கீண்ட பாழியானாழியானருளே நன்று நானுய்ய நான் கண்டு கொண்டேன்'' என்று ஸ்ரீவராஹநாயனாருடைய அருள்கொண்டே தாம் உஜ்ஜீவிக்கப் பெற்றதாகவருளிச்செய்தார்.

146. நம்மாழ்வார் தமது திருவுள்ளத்தில் ஆராத்ய தேவதையாகக் கொண்டது தேவப்பெருமானையே என்பது—முதற் பிரபந்தத்தின் முதற் பாசுரத்தில் ''இமையோர்தலைவா! மெய்ந்நின்றுகேட்டருளாய் அடியேன்செய்யும் விண்ணப்பமே''என்றதனாலும், சரமப் பிரபந்தத்தின் முதற்பாசுரத்தில் ''அயர்வறு மமரர்களதிபதியவனவன் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே!'' என்றதனாலும் தேறிநிற்கும். இதற்குச் சேரவே இவ்வாழ்வார் தமது திருமொழியில் ''துணிவினியுனக்குச் சொல்லுவன் மனமே! தொழுதெழு—அமரர் பெருவிசும்பருளும் பேரருளாளனெம்பெருமான்'' என்று பணித்தார். நம்மாழ்வாருடைய *தொழு தெழென்மனனே போலவே இவருடைய *தொழுதெழுமனமேயும் பேரருளாளன் விஷயத்திலேயே அமைந்த அமைதி நோக்கத்தக்கது, 'தொழுதெழு மனமே' யென்றார் நம்மாழ்வார்; மனமே தொழுதெழு என்றாரிவ்வாழ்வார்.

147. நம்மாழ்வார் திருவாய் மொழியில் *மாசறுசோதிப் பதிகத்தில் மடலூர்தலை இருமுறை ப்ரஸ்தாவித்து விட்டார்; இவ்வாழ்வார் அதற்கென்று தனிப்பட 'சிறிய திருமடல் பெரிய திருமடல் என இரண்டு பிரபந்தங்களைப் பணித்தருளினர்.

148. நம்மாழ்வார் திருவாசிரியத்தில் 'நளிர்மதிச் சடையனும் நான்முகக்கடவுளும் ....முழுவது மகப்படக்கரந்து, ஓராலிலைச்சேர்ந்த எம்பெருமா மாயனையல்லது, ஒருமா தெய்வம் மற்றுடையமோ யாமே'' என்ற ஒரு பாசுரத்தினால் சுருங்கவருளிச் செய்த விஷயமொன்றை இவ் வாழ்வார் தமது திருமொழியில் (11-6) * மைந்நின்ற கருங் கடல்வாயுலகின்றி* என்ற வொருபதிகத்தினால் விரியவுரைத்தருளினர். இங்ஙனே பெரியார்வாய்க் கேட்டறிய வேண்டிய பல பல விஷயங்கள் இங்குப் பொருத்தமாக உணரத்தக்கன.

149. இவ்வாழ்வார் திருவரங்கம் பெரிய கோயிலிலே மிகப் பெரிய திருப்பணிகள் பல செய்தருளினார். அதைப்பற்றி பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் அருளிச் செய்யுமிடத்து *ஜிதபாஹ்யஜிநாதி மணிப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணிமண்டப வப்ரகணாந் விததே பரகாலகவிः ப்ரணமேமஹி தாந்* என்றருளிச் செய்தார். அந்த ச்லோகமமைந்த அழகு வெகு அற்புதமானது. இதன் கருத்தைச் சிறிது விளக்குவோம். ஆழ்வார்களுடைய திருவமதாரம் அவைதிகர்களையும்

வைதிகர்களாக்குவதற்காக. திருமங்கையாழ்வாருடைய திருவவதாரத்தினால் இவ் வர்த்தம் நன்கு விளங்கிவிட்டது. மற்றையாழ்வார்கள் அவைதிகர்களாயிருந்த சேதநர்களை மாத்திரமே வைதிகர்களாக்கிப் போந்தார்கள். இவ்வாழ்வார அவை திகங்களாயிருந்த அசேதநங்களையுங்கூட வைதிகங்களாம்படி திருத்திப் பணி கொண்டாரென்பது தன்னேற்றம். அவைதிகங்களாயிருந்த ஜைந பௌத்த விக்ர ஹங்களையும் இவ்வாழ்வார் வைதிகங்களாக ஆக்கிவிட்டாரன்றோ. பகவத் பாகவத விஷயங்களில் கிஞ்சித்கரிக்கப் பெறுவதே வைதிகத்வமாகும்.

150. இவ்வாழ்வாருடைய கவித்திறம் *சதுஷ்கவி ப்ரதாநாய பரகாலாய **மங்களம்**'' என்றதனால் மிகவிளங்கும். ஆசு கவி, மதுர கவி, சித்ரகவி,விஸ்தார **கவி**—என்று நால்வகைப் பட்ட கவிகளிலும் இவர் தலைவரென்பது இவரது ஆறுபிர பந்தங்களினாலும் அறிய வெளிதாகும். அந்த திவ்ய ஸூக்திகளின் பதவுரை பொழிப்புரை விசேஷ வுரை ஸ்வாபதேச வுரை முதலியனயாவும் அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையுரையின் வாயிலாக அறியத்தக்கன. .... *

(10)

ஸ்ரீ மதுரகவிகள் பெருமை.

151. மதுரகவிகள்ஆழ்வார் திருநகரிக்கு அருகேயுள்ள திருக்கோளூரில் சித்திரையில் சித்திரை நாளில் திருவவதரித்து, ஜாதியில் தம்முடைய பெருமையையும் நம்மாழ் வாரது தாழ்வையும் கணிசியாமல் *தேவுமற்றறியேனென்று ஆழ்வார் திருவடி களையே தஞ்சமாகக் கொண்டிருந்து, ஆழ்வார் விஷயமான *கண்ணிநுண் சிறுத்தாம் பென்னும் பிரபந்த மொன்றையே அருளிச்செய்தவர். நாலாயிர திவ்யப்ரபந்தங் கள் முழுவதும் பகவத் விஷயமாயிருக்க, அங்ஙனல்லாத இவரது பிரபந்தத்தை அவற்றினிடையே சேர்த்துக்கொண்டது தகுதியோவென்னும் சங்கையை மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில்

''வாய்த்த திருமந்திரத்தின் மத்திம மாம் பதம் போல்
சீர்த்த மதுரகவி செய்கலையை—ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து.''

என்கிற பாசுரத்தினால் போக்கியருளினர்

152. ஸ்ரீவசன பூஷணத்திற்கு அந்தரங்கார்த்தமான ஆசார்ய நிஷ்டைக்கு மதுர கவிகளின் நிலையே மூலமாகுமென்பது ''உண்டபோது ஒரு வார்த்தையும் உண்ணாத போதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே'' இத்யாதி ஸ்ரீ வசன பூஷணஸூக்தியாலும் அவ்விடத்து மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளாலும் உணரத்தக்கது. ஆழ்வார்களோ டொப்ப, அவரும் மதுரகவி யாழ்வாரென்று வழங்கப்பெற்றார். ஆழ்வார்கள் எம்பெருமானுடைய குணக்கடலில் ஆழ்ந்தது போல, இவர் ஆசார்ய குணக்கடலில் ஆழ்ந்தவர் என்றுணர்க. .... *

நவரத்ந நவநிதியில் ஆழ்வார்கள் வைபவபரமான

முதல்நிதி முற்றிற்று.

—ஸ்ரீ:—

நவத்ன நவநிதியில் - இண்டாவது நிதி

ஆசாரியர்களின் பெருமை யநுபவம்.

ஸ்ரீமந் நாதமுனிகளின் பெருமை

153. இனி ஆசாரியர்களின் பெருமையையனுபவிக்க இழிகிறோம். நாதமுனிகள் திருவவதரித்தது வீரநாராயணபுரமென்கிற காட்டுமன்னார் ஸன்னிதியில் சொட்டைக்குலத்தி லென்பர். அத்தலத்தில் ஸேவைஸாதித்தருளும் திவ்ய மங்கள விக்ரஹம் பரம போக்ய மாகப் பொலிகின்றது. *லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்* என்றும் *நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரிதம் அகில தம:கர்சநம் தர்சநம்* என்றும் சொல்லுகிறபடியே நாதமுனிகள் தொடங்கியே நம்முடைய ஸ்ரீவைஷ்ணவதர்சனம் ப்ரவ்ருத்தமாயிற்று. அடிகாணவியலாத இந்த ஸம்ஸாரமண்டலத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு முன்பு ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸ்ரீவைஷ்ணவ தர்சனமும் இருந்ததில்லையென்று கருதலாகாது: ஸூர்யசந்திரர்களுண்டானகாலம் முதலாகவே இவையுமுண்டுதான். ஆனால் நாமறியப் பெற்றது நாதமுனிகள் தொடங்கியேயாதலால் *நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்* என்று பணித்தார் நிகமாந்த மஹாகுரு. *அருள்பெற்ற நாதமுனி முதலாம் நந்தேசிகரை யல்லால் பேதை மனமேயுண்டோ பேசு* என்று மணவாள மாமுனிகளருளிச் செய்தனர்.

154. இவர் வீரநாராயணபுரமென்கிற காட்டுமன்னார்ஸன்னிதியில் ஆனி அநூராதா நக்ஷத்திரத்தில் ஈச்வர முநிகளுக்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்து காலங்களில் சௌளம் உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களைப் பெற்று வேத வேதாங்கங்களையும் ஸாமாந்ய சாஸ்த்ர அத்யாத்ம சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹாவித்வானாக எழுந்தருளி யிருந்தார். இவருடைய திருக்குமாரர் திருநாமம் ஈச்வர பட்டாழ்வான். அவருடைய திருக்குமாரரே யமுனைத்துறைவர்-யாமுநாசார்யர் என்கிற ஆளவந்தார்.

155. ஸ்ரீமந்நாதமுனிகள் தம் இருப்பிடந்தன்னில் மன்னனாரென்கிற எம்பெருமானுக்கு ஸகலவிதமான கைங்கரியங்களையும் செய்துகொண்டு வாழ்ந்தருளுங்காலத்தில் அவ்விடத்திற்குத் திருநாராயணபுர ப்ராந்தத்தில் நின்றும் சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து மன்னனார் ஸன்னிதியில் தங்களுக்குத் தெரிந்த ஸ்தோத்ரங்களை யெல்லாம் அநுஸந்தித்துக்கொண்டிருக்கையில் நம்மாழ் வாரருளிச் செய்த திருவாய்மொழியில் *ஆராவமுதே அடியேனுடலம்* என்கிற பதிகத்தையும் செவிக்கினிய இசையுடனே அநுஸந்தித்தார்கள். அதில் முடிவு பாசுரத்தில் *குழலில் மலியச்சொன்ன ஓராயிரத்துளிப் பத்தும்* என்று அவர்கள் அநுஸந்தித்ததைக் கேட்ட நாதமுனிகள், இப்படி ஆயிரம் பாசுரங்கள் அவதரித்திருப்பதாகத் தெரிந்ததனால் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி "ஸ்வாமிகாள்! உங்களுக்கு ஆயிரம் பாசுரமும் முகபாடமாக வருமோ"? என்று கேட்டார். அவர்கள் இப்பத்துப் பாசுரந்தவிர வேறொரு பாசுரமும் அறியோம் என்று சொல்லிப் போனார்கள்.

156. அது முதலாக நாதமுனிகளுக்கு இரவும் பகலும் இதுவே சிந்தையாயிற்று. "குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்" என்று செவிப்பட்டபடியாலே அந்த சடகோபர் [நம்மாழ்வார்] திருவவதரித்த குருகூரிலே சென்று விசாரித்தோமாகில் அங்கே கிடைக்கக் கூடுமென்று கருதி எம்பெருமானிடம் விடை பெற்று ஆழ்வார்

திருநகரிக்கு எழுந்தருளி பொலிந்து நின்ற பிரானையும் நம்மாழ்வாரையும் ஸேவித்து நிற்கையில், ஸ்ரீமதுரகவிகளின் சிஷ்ய பரம்பரையிலே ஒருவரான ஸ்ரீ பராங்குசதாஸ ரென்பவர் நேர்பட, அவரைத்தெண்டனிட்டுத் தாம் எழுந்தருளின கார்யத்தை விண்ணப்பஞ்செய்து ''இவ்விடத்தில் ஆயிரமும் தெரிந்தவர்களுண்டோ? ஸ்ரீ கோச மாவது உண்டோ?,, என்று கேட்க, அதற்கு அவர் சொன்னதாவது:—திருவாய் மொழியும் மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் பிரசாரம் மறைந்து நெடுநாளாய் விட்டது; ஆனாலும் எங்கள் குலக்கொழுந்தான ஸ்ரீ மதுரகவிகள் அருளிச்செய்த *கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தமுண்டு; அதனை திருப்புளியாழ்வார் திரு முன்பே ஆழ்வார் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு நியமத்துடனே பன்னீராயிரம் விசை ஜபித்தால் ஆழ்வார் அருள்புரியக்கூடுமென்று கேட்டிருந்ததுண்டு,. என்றார்.

157. அது கேட்ட நாதமுனிகள் திருவுள்ளம்தேறி ஆனந்தக்கடலில் மூழ்கின மனத் தராய் அவரைத் திருவடி தொழுது ''ஸ்வாமிந்! அந்தக் கண்ணிநுண் சிறுத்தாம்பு பிரபந்தத்தை அடியேனுக்கு அநுக்ரஹித்தருள வேணும்'' என்று விநயமுடன் வேண்ட, அவரும் திருவுள்ளமுவந்து இவர்க்கு அந்தப்பிரபந்தத்தைப் பாடம் செய் வித்தார். இவரும் அதிகரித்துத் திருப்புளியாழ்வாரடியிலே நியமமுடன் பன்னீராயி ரம் முறை அந்தப் பிரபந்தத்தை யநுஸந்தித்துத் தலைக்கட்டினவாறே இவரது ஆர்த்திக்கு இரங்கின நம்மாழ்வார் திவ்யதிந்த்ரிணீவ்ருக்ஷத்தின் சாகையொன்றில் பத்மாஸநோபவிஷ்டராய் அசரீரிவாணி சொல்லுவது போல ''உமது அபிமதம் இன்னதென்று தெரிவிக்கவேணும்'' என்று சொல்ல, நாத முனிகள் ஆனந்தக்கண் ணீர் பெருக நின்று கூப்பிய கையராய் ''ஸ்வாமிந். திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங்களை அடியேனுக்குப்ரஸாதித்தருளவேணும்'' என்று விண்ணப்பஞ் செய்ய, ஆழ்வாரும் பரமப்ரீதராய் அவர்க்கு திவ்யமானஞானக்கண்ணைக் கொடுத்து ரஹஸ் யத்ரயத்தையும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களையும் தர்சனத்தின் ஆழ்பொருள்களை யும் அஷ்டாங்க யோக ரஹஸ்யத்தையும் யோக தசையிலே ப்ரஸாதித்தருளி அந் தர்த்தானமாயினர்.

158 ஸ்ரீவேதாந்த வாசிரியர் பணித்த **ஸம்ப்ரதாய பரிசுத்தி** யென்னும் ரஹஸ் யத்திலே ''வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதி களுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்'' என்றும், ''இப்பரம்பரையாலும் ப்ராதுர்ப்பாவ விசேஷத்தாலும் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யரானார்'' என்றும், மேலே **குருபரம்பராஸாரத்திலே**—'இவ்வாசார்யர்களில்...........நாதமுனி களுக்கு ஸ்ரீ மதுரகவிகள்முதலாக வுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திரு வாய் மொழி முகத்தாலும் யோக தசையிலே ஸாக்ஷாத் க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார்'' என்றும் அருளிச் செய்துள்ளவைகளை நிச்சலும் நினைப்பது.

''வ்யோம்நஃ பரஸ்தாத் ஸவிதம் ஸமேத்ய லக்ஷ்ம்யா நியோகாத் குருகாதிராஜஃ ஸமந்த்ரராஜத்வயமாஹ யஸ்மை நாதாய தஸ்மை முநயே நமோஸ்து''

என்கிற தனியனும் இங்கே அநுஸந்தேயம்.

159 இப்படி நம்மாழ்வார் பக்கலிலே ஸர்வஸ்வமும் லபிக்கப்பெற்ற நாத முனிகள் சிலகாலம் திருநகரியிலேயே வஸித்திருந்து அங்குள்ளார்க்கு அருளிச்செயல் களை ப்ரவசனம் செய்தருளி, பிறகு ஸ்வதேசத்திற்கு மீண்டெழுந்தருளி அந்த திவ் யப்ரபந்தங்களை சாகோபசாகமாக ப்ரவர்த்திப்பித்தருளினர் வடமொழி வேதத் திற்கு வேதவ்யாஸர்போலே தமிழ்மறைக்கு நாதமுனிகளென்று ப்ரஸித்தமாயிற்று.

ஆளவந்தார் பெருமை

—★—

160. ஸ்ரீமந்நாத முனிகளின் பௌத்திரரான ஆளவந்தாரும் காட்டுமன்னார் ஸன்னிதியிலேயே ஆடி மாதத்து உத்தராடத் திருநன்னாளில் திருவவதரித்தருளினார். நம்முடைய தர்சனத்தில் ஆளவந்தாரைப்போன்ற வித்வத் ஸார்வபௌமர் இதற்குமுன்பு தோன்றினதுமில்லை, இனித் தோன்றப் போகிறதுமில்லையென்று திண்ணமாகச்சொல்லலாம். *ந வயம் கவயஸ்து கேவலம் ந வயம் கேவலதந்த்ர பாரகா: * என்று இவர்தாமேயருளிச் செய்தபடி கவித்திறத்தில் வந்தாலும் நாநா சாஸ்த்ர வைதுஷ்யத்தில் வந்தாலும் ஒத்தாரும் மிக்காருமின்றிக்கே அத்விதீயரான வ்யக்தி இவரொருவரே. ஸ்வாமி எம்பெருமானார் இவ்வாசிரியரை நேரில் ஸேவித்து இவர் திருவடிகளிலே பரிசர்யைகளைப் பண்ணி அர்த்த விசேஷங்களை க்ரஹிக்க ப்ராப்தியற்றவரானாலும் " ஆம் முதல்வனிவன்" என்று இவர் விசேஷ கடாக்ஷம் செய்தருளினதே ஹேதுவாக அவர் விளக்கில் கொளுத்தின தீவட்டிபோலே மஹாதேஜஸ்வியாக விளங்கி உலகுக்கு ஓருயிராகி நின்றார். இவ்விஷயத்தை ஸ்வாமி தாமே தம்முடைய திருவாக்கினால் ஒருவாறு காட்டியருளினார். கீதாபாஷ்யத்தின் உபக்ரமத்தில்.

161. *யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாசேஷகல்மஷ:; வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம் * என்றருளிச்செய்த ச்லோகம் இங்கு அநுஸந்திக்கவுரியது. இதில், ஆளவந்தார் தம்மைக் கடாக்ஷித்தருளினதுதானே ஹேதுவாகத் தாம் சீர்மை பெற்றதாக அருளிச் செய்யாமல், தாம் அவருடைய திருவடித்தாமரைகளையே சிந்தித்து அதனால் சீர்மை பெற்றதாகச் சொல்லியிருக்கிறார்; இதனுடைய உட்கருத்து யாதெனில், ஆளவந்தார் என்னைக் கடாக்ஷித்தருளினதன் பயனாகவே நான் அவரது திருவடிமலரைச் சிந்திக்கும் பாக்கியம் பெற்றேனென்பதாம். *குருபாதாம்புஜம் த்யாயேத் * என்கிற சாஸ்த்ரவிதியைப் பின் பற்றியருளிச்செய்தவாறு.

162. ஸ்வாமி ஆளவந்தாரிடத்தில் நேரில் அர்த்த விசேஷங்கள் கேட்கப்பெறாத குறைதீர அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர்களெல்லாரையும் தாம் ஆச்ரயித்து ஒவ்வொருவரிடத்திலும் அர்த்த விசேஷங்களை யதிகரித்து * பஞ்சாசார்யபதாச்ரித: * என்னும் விருதுபெற்றார். "ஆளவந்தாரோடு நான் கூடியிருந்தேனாகில் பரமபதத்திற்குப் படிகட்டியிருப்பேன்" என்று ஸ்வாமி ஸாதித்ததாக ப்ரஸித்தமான வார்த்தையே இவருடைய ஒப்புயர்வற்ற பெருமையை விளக்காநின்றது. நித்ய விபூதியும் லீலாவிபூதியும் சேர்ந்து ஒரு விபூதியாகவே ஆய்விட்டால் உபயவிபூதிநாதனென்று தான் வஹிக்கும் விருதுக்குக் குறை விளைந்திடுமேயென்கிற எண்ணத்தினாலேயே எம்பெருமான் இவ்வாசிரியர்களைக் கூட்டி வைக்கவில்லைபோலும்.

163. உபய வேதாந்த ரஹஸ்ய ப்ரஸ்தாநங்களில் இப்போது நாம் அநுபவித்து வரும் அர்த்த விசேஷங்களுக்கெல்லாம் ஆகரம் ஆளவந்தாரேயென்பதில் அத்யுக்தியில்லை. இவரருளிச் செய்த ஸித்தித்ரயம் முதலான உத்துங்க சாஸ்த்ர க்ரந்தங்கள் இருக்கட்டும். ஆளவந்தார் ஸ்தோத்ரம் என்று வழங்குகின்ற ஸ்தோத்ரக்ரந்தமானது மஹாவித்வான்களுக்கும் பக்தர்களுக்கும் *எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே* என்று உள்குழைந்து பேசும்படியாக அமைந்து, உட்புகுந்து நோக்க நோக்க உபயவேதாந்தரஹஸ்யார்த்தங்கள் அனைத்தையும் அழகாகவும் எளிதாகவும் தெளியலாம்படி மஹோபகாரம் செய்திருக்கிற மாண்பு வாசாம் அகோசரம். இதற்கு **ஸ்தோத்ர ரத்நம்** என்று திருநாமம் சாத்தியுள்ளார்கள், ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார்கள் மூன்றுரத்தினங்கள் எனவழங்குகிறார்கள், (1) ஸ்ரீ விஷ்ணுபுராணத்தைப்

புராணரத்நமென்பர்கள். [இது ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் நான்காவது சுலோகத்தில் காணத்தக்கது.] (2) த்வயம் என்கிற மந்த்ரத்தை மந்த்ரரத்நமென்பர்கள். [இது ஸ்ரீ வரவரமுநி திநசர்யையில் *மந்த்ர ரத்நாநுஸந்தாந ஸந்தத ஸ்புரிதாதரம்* என்பதில் காணத்தக்கது.] இனி மூன்றாவது ரத்னம் ஸ்தோத்ரரத்ந மென்று வழங்கப்படுகிற இவருடைய ஸ்தோத்ரமேயாகும். இதன் எளிமையும் இனிமையும் வாசாமகோசரம்.

164. ஆழ்வான் பட்டர் முதலான ஆசார்யர்கள் பணித்த ஸ்தவங்களுக்கு இந்த ஸ்தோத்ரரத்நமே வழிகாட்டியாயிருந்தாலும் இதனுடைய போக்யதை மற்று எதற்கும் அமையவில்லை. ஆளவந்தாருடைய நியமனத்தினால் எம்பெருமானாரை யீடுபடுத்திக்கொள்வதற்காகக் காஞ்சிபுரத்திற் கெழுந்தருளின பெரிய நம்பி, சாலக்கிணற்றில் நின்றும் திருமஞ்சன தீர்த்த மெழுந்தருளப் பண்ணிக் கொண்டு போராநின்ற அவரை (எம்பெருமானாரை)ச் சார்ந்து பின்புறத்திலே இந்த ஸ்தோத்ரரத்நத்தில் ஒரு ச்லோகத்தைச் செவிக்கினிதாக அநுஸந்தித்து வருகையில் எம்பெருமானார் திரும்பிப்பார்த்து 'இது யாருடைய திவ்யஸூக்தி? என்று' நம்பியை நோக்கிக் கேட்க, அவரும் 'இது ஆளவந்தாருடைய திவ்யஸூக்தி என்றுரைக்க 'ஆகில் அவரை அடியேன் ஸேவிக்கவேணுமே' என்று எம்பெருமானார் கூற, 'ஆகலாம், நம்மோடே வந்து ஸேவிக்கலாம்' என்று பெரிய நம்பி பணிக்க, அப்போதே திருக்கச்சி நம்பியிடம் விடைபெற்றுக்கொண்டு பெரிய நம்பிகளுடன் கோயிலுக்குப் புறப்பட்டருளினதாகக் காண்கிறது. இப்படி எம்பெருமானார் திருவுள்ளத்தைக்கொள்ளைகொண்ட ஸ்ரீஸூக்தியின்பெருமையை நாமோபகர்வது.

திருக்கச்சிநம்பிகள்பெருமை.

165 ***கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வேயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்*** என்று நம் ஆசிரியர்கள் உதாஹரித்தருளியுள்ள பிரமாணத்தின்படி, திருக்கச்சி நம்பிகள் திருவவதரித்த வருணம் எது? என்கிற விசாரத்தில் நாம் வாய்வைப்பது அநபேக்ஷிதம். எக்குலத்தினும் சிறந்ததான தொண்டக்குலமே இவர்தாம் அவதரித்த நற்குலமாகும். மாசிமிருகசீருஷத்தில் பூவிருந்தவல்லியில் இவரது திருவவதாரம்.

166. இவர், ஆளவந்தார்திருவடிகளில் ஆச்ரயித்து, ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களனைத்தையும் அதிகரித்துப் பரம விலக்ஷணராயினர். அர்ச்சாவதார எம்பெருமானுக்குத் திருவாலவட்டத் திருத்தொண்டு செய்வதில் இவர்க்கு இயற்கையான அபிநிவேச முண்டாயது. திருவரங்கம் பெரியகோயிலல் அழகிய மணவாளனுக்கு அந்ததிருத்தொண்டைச் செய்யப் புகுந்தார். அப்போது பெரிய பெருமாள் "*தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளி கொள்ளுகிற நமக்குத் தாபம் இல்லாமையால் இங்குஉமது திருத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே" என்றருளிச்செய்ய, அவ்விடத்தில் நின்றும் திருவேங்கடமலையேறப் போந்து, அங்கே திருவேங்கடமுடையானுக்கு அந்த திருத்தொண்டைச் செய்யப் புகுந்தார். அப்பெருமானும் "குளிரருவி வேங்கடத்தில் குளிரநிற்கும் நமக்கும் இந்தத் திருத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே; அயமேத வேள்வியில் அவதரித்த அத்திகிரியருளாளப் பெருமாளுக்கு இது அபேக்ஷிதமாயிருக்கக்கூடும்; அங்கேறச் சென்று தொண்டு செய்து வாழ்வீராக" என்று நியமிக்க, அங்கு நின்றும் ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதனை பேரருளாளனுடைய திருவடி வாரத்திலே விடைகொண்டு திருவாலவட்டமும் கையுமாய் ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி அத்தாணிச் சேவகம் செய்து வந்தார். [நிகமாந்தமஹாகுருபணித்தகுருபரம்பராஸாரத்தில் இவர் பெரிய நம்பி ஸ்ரீபாதத்திலாச்ரயித்தவராகக் காண்பது விசாரணீயம்.] ஆளவந்தார் திருவடியென்றே ப்ரஸித்தி.

167 இவருடைய ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்ஸம்ருத்தியையும் பக்திவிரக்திகளின் விலக்ஷணபரிபாகத்தையும் கண்டு வியந்த எம்பெருமானார், தாம் இவரது திருவடிகளில் ஆச்ரயித்து உய்வுபெற வேணுமென்று பாரித்து, இவரை எவ்வளவோ அநுவர்த்தித்தும் மநோரத ஸித்தி பெற்றிலர். ஒருநாள் "போனகஞ் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே" என்ற தொண்டரடிப்பொடியாழ்வார்பாசுரத்தின்படி நம்பிகள் பக்கலில் திருப்போனகசேஷம் பெற வேணுமென்று பாரித்தும், எம்பெருமானார்க்கு அதுதானும் ஸித்தித்ததில்லையாக, பேரருளாளப் பெருமாள் அர்ச்சாவதாரஸமாதியைக் கடந்து நம்பிகளோடே ஸல்லாபம் செய்தருளுகிற படியையறிந்த அவ்வெம்பெருமானார், தமக்கு சாஸ்த்ரார்த்தங்களிலே சில ஸந்தேஹங்கள் இருப்பதாகவும், அவற்றின் பரிஹாரத்தைத் தேவப்பெருமாள் மூலமாகப் பெற நினைத்திருப்பதாகவும் நம்பிகள்பாடே விஜ்ஞாபிக்க, நம்பிகளும், அன்றிரவு தேவப்பெருமாளுடனே வார்த்தையாடுமளவில் எம்பெருமானார்க்கு ஸந்தேஹபரிஹாரமாகப் பெற்று வெளியிட்டவை ஆறுவார்த்தைகள் என்று ஸுப்ரஸித்தமாயிருக்கும். அந்த ஆறுவார்த்தைகளின் விவரணம்வருமாறு.

[முதல் வார்த்தை—அஹமேவ பரம் தத்வம்.]

168 ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்பது முதல் வார்த்தை. எது ஜகத்காரண வஸ்துவோ அதுவே உபாஸ்ய மென்றும் அதுவே முழுமுதற்கடவுள் என்றும் உபநிஷத்துக்களின் கொள்கையாகும். எதுஜகத்காரணவஸ்துவென்று ஆராயப் புகுமளவில், சாந்தோக்கிய உபநிஷத்தில் "ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்" என்று **ஸத்** என்ற சப்தத்தாலே மூலப்பொருள் ஓதப்பட்டது. அதனால் ஒரு நிஷ்கர்ஷம் பிறக்க வழியில்லை. மற்றும் உபநிஷத்துக்களை ஆராயுமிடத்தில் **வாஜஸநேயக**த்தில் *ப்ரஹ்ம வா இதம் ஏகமேவ அக்ர ஆஸீத்* என்று ஓதப்பட்டது. முற்காட்டிய உபநிஷத்தில் மூலப்பொருள் **ஸத்** சப்தத்தாலே கூறப்பட்டு; இதில் **ப்ரஹ்ம** சப்தத்தாலே கூறப்பட்டது; அந்த வஸ்து **மிகவும்பெரிது** என்று அதனால் ஏற்பட்டது, இன்னமும் உபநிஷத்துக்களை ஆராயுமளவில் ஐதரேயத்தில். *ஆத்மா வா அயமேக ஏவாக்ர ஆஸீத்* என்றுள்ளது. அதனால், அந்த மூலப்பொருள் **அறிவுடையது** என்று மாத்திரம் ஏற்பட்டது. இந்திரன் சந்திரன் ஸூர்யன் யமன் வாயு வருணன் குபேரன் சிவன் பிரமன் என்று சொல்லப்படுகின்ற ஆத்மவர்க்கங்களில் ஒவ்வொருதெய்வத்திற்கும் ஸ்ருஜ்யத்வமே சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருத்தல் குறிக்கொள்ளத் தக்கது. ஸர்வேச்வரனுடைய ஆஜ்ஞைக்கு அஞ்சி நடப்பாருமாய், அவனை ஆராதித்துப் பதவிகள் பெற்றாருமாய், சாஸ்த்ரங்களின் அநுவர்த்தந-அதிவர்த்தநங்களாலே புண்யபாபங்களைப் பெற்று அவ்வவற்றின் பயனாகிய சுகதுக்கங்களை அநுபவிப்பாருமாய், ஓரளவுபட்ட ஐச்வர்யங்களையுடையவர்களாகச் சொல்லப்படுகையாலே அஸ்மதாதிகளைப்போன்ற, அல்லது நம்மைக்காட்டிலும் சிறிது மேம்பட்டவர்களாகவுள்ள தேவர்கள் ஜகத்காரணபூதர்களாயிருக்கத் தகுதியுடையாரல்லர். *"ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேசாந:"* இத்யாதியாகவுள்ள மஹோபநிஷத்வாக்யத்தில் நாராயணனே மூலப்பொருளென்று ஸுஸ்பஷ்டமாக ஓதப்பட்டுள்ளது. முந்துற உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதிவாக்யங்களில் **ஸத் ப்ரஹ்ம ஆத்ம** பதங்களால் விவக்ஷிக்கப்பட்ட வஸ்து நாராயணனேயாகவடுக்கும். ஏன்? ஸர்வசாகாப்ரத்யயந்யாயத்தாலே காரண வாக்யங்களெல்லாவற்றுக்கும் ஏகவிஷயத்வம் வேண்டுகையாலே "**பசுமால பேத**" என்று நாற்கால் விலங்குகளையெல்லாம் சொல்லக்கடவதான ஸாமாந்யமான] பசுசப்தம் "**ச்சாகோ வா மந்த்ரவர்ணாத்**" என்கிற ஸூத்ரத்தின்படி ஆடாகிற பசுவிஷயத்திலே பர்யவஸிக்குமாபோலே **ஸத் ப்ரஹ்ம ஆத்ம** பதங்கள் நாராயணனாகிற விசேஷத்திலே பர்யவஸித்துநிற்குமிந்தத் தெளிவைத் தேவப் பெருமாள் ***அஹமேவ பரம் தத்வம்*** என்ற முதல்வார்த்தையினாலுண்டாக்கினர்.

2. இரண்டாம் வார்த்தை—தர்சநம் பேத ஏவ ச.

169. இது நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அந்தரங்கமான தொரு வார்த்தையாகும். உபநிஷத்துக்களில் "நேஹ நாநாஸ்தி கிஞ்சந* ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம*இத்யாதிகளான வாக்கியங்கள் ப்ரஹ்மமொன்றே யுள்ளதென்றும் வேறு எந்தப் பொருளுமில்லையென்றும் தெரிவிக்கின்றன. *க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹரஃ க்ஷராத்மாநா வீசதே தேவ ஏகஃ" *த்வா ஸுபர்ணா ஸயுஜா* இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களோ வென்னில் சித்து அசித்து ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களும் உள்ளனவென்று தெரிவிக்கின்றன. சங்கராசார்ய ப்ரப்ருதிகள், முந்துறக் காட்டிய அபேத ச்ருதிவாக்யங்களையே முக்கியமாகக் கொண்டு அத்வைதக்கொள்கையை ப்ரவசனம் செய்தார்கள். அவர்களுடைய கொள்கையின்படி உண்மையில் ஒருதத்துவமே உள்ளதென்றும் சேதந-அசேதந-ஈச்வரர்களென்று தத்வத்ரயம் கிடையாதென்றும் தேறுகிறது.அது தவறு என்றுகாட்டுவது இந்த வார்த்தை.சேதந அசேதநங்கள் ஈச்வரனுக்கு சரீரங்களாகையாலே உலகத்தில் சரீரசரீரிகளை ஒற்றுமை நயத்தினுற் கூறும் வழக்கில் அபேத ச்ருதிகள் அவதரித்தனவேயல்லது உண்மையில் தனியே மூனறு தத்துவங்கள் இல்லையென்று மறுக்க வந்தவையல்ல. சரீராத்ம பாவத்தாலே அபேதம் நிர்வஹிக்கப்படுகிறது. ஸம்ஸார தசையோடு முக்தி தசையோடு வாசியற எங்கும் பாரமார்த்திகமாகவே ஜீவ பரபேதம் உண்டு —என்று இவ்வார்த்தையினுல் விளக்கிற்றுயிற்று.

3. மூன்றும் வார்த்தை—உபாயேஷு ப்ரபத்திஸ் ஸ்யாத்

170. பகவத்கீதை முதலியவற்றில் கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் எனப் பல உபாயங்கள் எம்பெருமானைப் பெறுதற்கு வழியாக வகுக்கப் பட்டுள்ளன. ப்ரபத்தி தவிர மற்ற உபாயங்கள் ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமே வடிவாகவுள்ள ஸ்ரீ வைஷ்ண வாதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தங்களாகையாலே ஸ்வரூபஜ்ஞர்களான அதிகாரிகள் அவ்வுபாயங்களை அனுட்டிக்கத் தகுதியுடையரல்லர் "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு அஜ்ஞாந அசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" என்று ஸ்ரீ வசந பூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் அருளிச்செய்த படிக்கு சரணுகதியே ஸ்வரூபோசிதமான உபாயமென்பது இந்த வார்த்தையின் கருத்து. முமுக்ஷுப்படியில் சரமச்லோக ப்ரகரணத்தின் உபக்ரமத்தில் "கீழே சில உபாய விசேஷங்களை யுபதேசிக்க" என்று தொடங்கி அருளிச்செய்துள்ள சூர்ணையும் இங்கு நோக்கத்தக்கது. இதை நிகமாந்தகுருவும் திடப்படுத்தியுள்ளார்

4. நான்காவதுவார்த்தை—அந்திமஸ்ம்ருதி வர்ஜநம்.

171. ப்ரபந்நாதிகாரிகள் சரீரவியோகமடையுங்காலத்தில் "மடிவழிவந்து நீர்ப்புலன்சோர வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே; கடைவழிவாரக் கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவது" இத்யாதிகளிற் சொல்லுகிறபடி மனமொழி மெய் களாகிய கரணத்ரயமும் சிதிலமாகி எம்பெருமானை நினைக்கவும் முடியாதபடியிருந்து அப்படியே பிராணவியோகமாய் விட்டால் அன்னவர்களுக்கு ஸத்கதி கிடையாதோ? என்று சங்கிக்கவேண்டா; வராஹசரமச்லோகப் படிக்கும் * எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன் அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே * என்ற அருளிச் செயலின்படிக்கும், யோக்யகாலங்களில் மநோவாக் காயங்களை நல்வழிப்படுத்தின மஹான்களுக்கு சரீராவஸாநகாலத்தில் நல்ல ஸ்மரணமில்லையாயினும் குறையில்லை யென்பது இந்த வார்த்தையின் கருத்து. "அந்திம ஸ்ம்ருதிவர்ஜநம்" என்றிருப்பதால் அந்திம காலத்தில் ஸ்மரணம் இருக்கவே

கூடாதென்று நிஷேதிப்பதாகச் சிலர் பொருள் கொள்ளக்கூடும். அது தவறு; அந்திம காலத்தில் நல்ல ஸ்மரணமில்லேயாயின் அதனுல் ஸத்கதிக்கு ஹாநி யுண்டாகுமோவென்று கவலைப்பட வேண்டாவென்பது மாத்திரமே இங்கு விவக்ஷிதம்; அந்திமஸ்ம்ருதி நிர்ப்பந்த வர்ஜனம் என்றபடி.

5. ஐந்தாவது வார்த்தை—தேஹாவஸாநே முக்திஸ் ஸ்யாத்.

172. செய்த பாபங்கள் அநுபவிக்கப்பட்டுக் கழிந்தாலல்லது மோக்ஷம் பெற வழியில்லை. ப்பாபங்களோ எத்தனை ஜன்மமெடுத்து அநுபவித்தாலும் இன்னமும் மேன்மேலும் அவை வளரும்படியாதவுள்ளதே யன்றிக் கழியும்படியாக இல்லையே, ''வாயினுற்பாடி மனத்தினுல் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்கிறபடியே வித்யா மாஹாத்ம்யத்தினுல் பாபங்கள் கழிவ தாகக் கொண்டால் உடனே மோக்ஷம் கிடைத்துத் தீரவேணுமே; அப்படி கிடைப் பதாகத் தெரியவில்லையேயென்று தோன்றும் சங்கைக்குப் பரிஹாரம் இந்த வார்த்தையினுல் கிடைக்கிறது. பாபங்கள் ப்ராரப்தமென்றும் ஸஞ்சிதமென்றும் இருவகைப்படும்; பலன் கொடுக்கத் தொடங்கின பாவங்கள் ப்ராரப்தமெனப்படும். இங்ஙனல்லாதவை ஸஞ்சிதமெனப்படும். வித்யா மாஹாத்மியத்தினுல் ஸஞ்சித கருமங்கள் தொலையும். ப்ரபந்நாதிகாரிகளுக்கு ப்ராரப்த கர்மாநுபவத்தை இந்த தேஹத்தளவோடே செய்வித்து முடித்து மறுபடியும் தேஹ ஸம்பந்த முண்டாகாத படி எம்பெருமான் செய்தருள்வனுதலால் ''மரணமானுல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்'' என்கிறபடியே இந்ததேஹத்தின் அவஸானத்திலே மோக்ஷம் திண்ணம் என்பது இந்த வார்த்தையின் கருத்து, ஆர்த்த ப்ரபந்ந னென்றும் த்ருப்த ப்ரபந்ந னென்றும் ப்ரபந்நன் இருவகைப்படுவன். வர்த்தமாந தேஹத்தை ஒரு படி பொறுத்திருக்கவல்லவன் த்ருப்த ப்ரபந்நன். இதையும் பொறுத்திருக்க முடியாத படி ஆர்த்தி கனத்தவன் ஆர்த்தப்ரபந்நன். அன்னவனுடைய ஆர்த்திமிகுதியை யறிந்தவாறே எம்பெருமான் அப்போதே முக்தியளிப்பனென்பதும் அறியத்தக்கது.

6. ஆருவது வார்த்தை—பூர்ணுசார்ய ஸமாச்ரய:

173. எம்பெருமானுர் தாம் எவரை ஆசார்யராகப் பற்றுவதென்று விசார முற்றி ருந்தபடியாலே அதற்குப் பரிஹாரம் இந்த ஆருவது வார்த்தையினுலாகிறது ஆளவந்தாருடைய சிஷ்யர்களில் தலைவரான பெரியநம்பியை ஆச்ரயிக்கும்படி இதனுல் நியமனமாயிற்றென்று அறிவது. ''பஞ்சாசார்ய பதாச்ரித:'' என்றபடி. ஸ்வாமி ராமாநுஜர் ஐந்து ஆசார்யர்களை ஆச்ரயித்தவராயினும், ஸ்ரீவசன பூஷணத்தில் ''நேரே ஆசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனே'' என்றருளிச் செய்திருக்கையாலே அப்படிப் பட்ட ஆசார்யர் இவர்க்குப் பெரிய நம்பியே. ஆறுவார்த்தைகளின் விவரணம் முற்றிற்று.

—(*)—

எம்பெருமானுர் பெருமை

174. *ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாள்களினும் வாழ்வானநாள் நமக்கு ஏழ்பாருமுய்ய எதிராசருதித்தருளுஞ் சித்திரையில் செய்ய திருவாதிரையாம். இத்திருநன்னுளின் சிறப்பை மணவாள மாமுனிகள் ஒரு செய்யுளினுல் வெளியிட் டருளினர்; அது

''சங்கரபாக்கரயாதவ பாட்ட ப்ரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்

வெங்கலி யிங்கினி வீறு நமக்கிலேயென்று மிகத்தளர்நாள்
மேதினி நஞ்சுமை யாறுமெனத் துயர்விட்டு விளங்கியநாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ் சிறந்தபெரும்பூதூர்ச்
சீமா னிளையாழ்வார்வந்தருளிய நாள் திருவாதிரை நாளே'' என்பதாம்.

175. இஃது ஆர்த்திப் பிரபந்தத்துள் முப்பத்திரண்டாவது பாசுரமாகும். எம்பெருமானுர் திருவவதரிப்பதற்கு முன்னே பலபல மாயமதத்தவர்கள் இவ்வுலகில் மலிந்து வேதங்களுக்கு ஏலாத பொருள்களை ஏறிட்டுரைத்துத் தத்வார்த்தங்களுக்கு க்ஷோபத்தை விளைத்திருந்தார்கள். அதனுல் வேதங்களெல்லாம் நமது கதி இப்படியாயிற்றே! என்று சாலவும் வருந்திக் கிடந்தன. எம்பெருமானுர் திருவவதரித்தவன்றே அவற்றின் வருத்தம் தொலைந்து அவை வாழ்ச்சிபெறத் தொடங்கிவிட்டன.

176. அன்றியும், இந்நிலத்தில் கலிபுருஷன் நெடுநாளாகச் செங்கோல் செலுத்திக் கொண்டு தன்னுடைய பராக்கிரமமே எங்கும் ஓங்கி வருமாறு அரசாட்சி புரிந்து வந்தான், அன்னவனும் எம்பெருமானுர் திருவவதரித்தவன்றே ''கலியுங் கெடுங் கண்டுகொண்மின்'' என்ற மூதுவர்மொழி பலிக்குங்காலம் வாய்த்தது போலுமென்று துணிந்து இனி நாம் மாள்வதன்றி வாழ்வதற்கில்லையென்று தளர்ச்சியடையத்தொடங்கி விட்டான்.

177. அன்றியும், பூமிப்பிராட்டியானவள் ஸர்வம்ஸஹா' என்று பெயர் பெற்றிருந்தாலும், நல்லார்கள் பலபல கோடிக்கணக்காகத் தன் மீது வாழப் பெற்றாலுங்கூட அவர்களைப் பஞ்சுச்சுருள் போல் சிறிதும் ஆயாஸமின்றித் தாங்கி நிற்பள்; தீயவர் ஓரிருவர் இருப்பினும் இரும்பு மூட்டை தாங்குவதனுற்போல் மிக மெலிந்து நிற்பள் உடையவர் திருவவதாரத்திற்கு முன்னே நல்லார்கள் மிக மெலிந்து தீயார்களே மிக மலிந்திருக்கப் பெற்றதனுல் பூமிப்பிராட்டி பொறுக் கொணுச் சுமையினுல் மிகவும் துயருற்றுக் கிடந்தாள்; அன்னவள் எம்பெருமானுர் திருவவதரித்தவன்றே இனி இந்நிலவுலகில் தீயார் ஒருவருமின்றிக்கே அனைவரும் நல்லாராகவே வாழ்ச்சி பெறுவர்களென்று சிக்கெனத் துணிந்து இனி நமக்குப் பொறுக்கவொண்ணுத பாரம் சிறிது மிராதென்று தேறித் துயர்விடத் தொடங்கினள்.

178. அன்றியும், பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஏற்கெனவே திருவவதரித்து அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகளை உதவியருளி யிருந்தாலும் அவற்றுக்கு ஸர்வதோமுகமான ப்ரசாரம்ஏற்படாமலும்அழகியவியாக்கியானங்கள் அமையாமலுமிருந்ததனுல் 'நம்முடைய அரிய பெரிய காரியங்கள் உலகுக்குப் பெரிதும் பயன்படவில்லையே! என்று அவர்களெல்லாம் களிப்பின்றியே குன்றியிருந்தனர்; ஸ்வாமிஎம்பெருமானுர் திருவவதரித்தவன்றே ' இனி ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி திவ்யக்ரந்தங்கள் ஓங்கப் பெறுமாதலால் நமக்கொருகுறையில்லை; நாம் செய்திருந்த காரியங்களெல்லாம் சதசாகமாகப் பணைக்கும்படியானபாக்கியம் வாய்க்க நற்சமயம் விளைந்திட்டது என்று துணிந்து அன்னவர்கள் அளவிலாத ஆனந்த மெய்தத்தொடங்கினர்.

179 அன்றியும் எம்பெருமான் தான் பரமபதத்தில் பரவாஸுதேவனுக வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தியிருக்கு மிருப்பிலும், திருப்பாற் கடலில் அடியார்களின் கூக்குரல் செவிப்படுமாறு வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பைமெத்தையாக விரித்து அதன் மேலே கள்ள நித்திரை கொண்டு உறங்குவான்போல் யோகு செய்திருக்குமிருப்பிலும், ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு ராவணகம்ஸ சிசுபாலாதிகளையெல்லாம் தொலைத்திட்டு உலகை வாழ்விக்க ராமக்ருஷ்ணுதி விபவாவதாரங்கள் செய்தவற்றிலும், கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்து எங்கும் பரந்துறையுமிருப்பிலும்

திருப்திபெறுதே, கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான திருப்பதிகளிலே பின்னுனர் வணங்குஞ் சோதியாய் நித்யஸந்நிதி பண்ணியிருந்தும் அந்தத் திருப்பதிகளைத் திருத்திப் பணி கொள்வாரில்லாமையாலேஅர்ச்சாவதாரமும் அப்ரயோஜநமாக ஆய்விட்டதே! என்று வருந்த வேண்டி யிருந்தது எம்பெருமானர் திருவவதரிப்பதற்கு முன்னே. இப்பெரியார் இவ்வுலகினிற் போந்த வன்றே "ஸர்வதேச தசாகாலேஷு அவ்யாஹத பராக்ரமா, ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்றுநீடுழியூழி நாடெங்கும் போற்றும் படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் அற்புதமான சீர்திருத்தங்களும் கைங்கர்ய அபிவிருத்திகளும் இனி ஒளிமல்குமென்று துணிந்து அர்ச்சாவதார எம்பெருமான்கள் குறை தீர்ந்து மகிழத்தொடங்கினர். ஆக இங்ஙனம் வேதவேதாந்தங்கள் களிப்புறவும், கலி புருஷன் தேய்வுறவும், மண்மாது மகிழ்வுறவும், பூருவர்கள் யாவரும் பொலிவுறவும் எம்பெருமான்கள் இன்புறவும் அமைந்த நன்னுள் இத்திருவாதிரையொன்றேயாம்.

180. நம்முடைய ஸம்ப்ரதாயமானது எம்பெருமானர் தர்சனமென்றும் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த மென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. 'ஸ்ரீராமாநுஜரால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மதம்' என்று இதைக்கொண்டு சிலர் சொல்லுவர்கள். உண்மையில் அங்ஙனமன்று; ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றி ஸ்ரீராமாநுஜரால் பரிபாலனம் செய்யப்பட்ட ஸித்தாந்தம் என்பதே இங்கு விவக்ஷிதம். இவ்வர்த்தத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில்

"எம்பெருமானர் தரிசனமென்னே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்—அம்புவியோர், இந்தத் தரிசனத்தை யெம்பெருமானர் வளர்த்த, அந்தச் செயலறிகைக் கா." என்ற பாசுரத்திஞல் வெளியிட்டருளினர்.

181. 'ஸ்ரீராமாநுஜமதம் நவீநம்' என்கிறவாதம் நிகமாந்த குருவின் காலத்திலேயே தோன்றியதாகத் தெரிகின்றது. யதி ராஜஸப்ததியில் "**யதிக்ஷமாப்ருத்த்ருஷ்டம் மதமிஹ நவீநம் ததபி கிம்?**" என்கிறச்லோகத்தில் அந்த வாதத்தை அநுவதித்து பூர்வார்த்தத்திஞல் அப்யுபகம்ய ஸமாதானமும், உத்தரார்த்தத்திஞல் வஸ்துஸ்திதிப்ரதிபாதனமான ஸமாதானமும் கூறப்பட்டது. டங்கத்ரமிடகுஹதே வாதிகளான முன்னோர்கள் தொடங்கியே உள்ளது. நம் தர்சனம் என்றவாறு. *

(6) கூரத்தாழ்வான்

182. இவ்வாசிரியரோடு ஒப்பிடக் கூடியவர்களும் இவர்க்கு மேம்பட்டவர்களும் முன்னுமவ தரித்ததில்லை. பின்னு மவதரிக்கப் போகிறதில்லை. புருஷ குணங்களெல்லாவற்றினுஞ் சிறந்த ஜீவகாருண்யம் ஆசார்யபக்தி பகவத்பக்தி விரக்தி அப்ரதிம பாண்டித்யம் ஸத்கர்ம அநுஷ்டாந நிஷ்டை முதலிய எண்ணில் பல் குணங்கட்குப் பிறப்பிடமிவரே யென்ன வமைந்தவரான இவ்வாசிரியரது திருக் குணங்களில் சில வற்றை இங்கெடுத்து அநுபவிப்போம்.

183. இவர் தமக்கிருந்த விசேஷ ஸம்பத்துக்களை யெல்லாம் துறந்து, இராமாநுசனடிக் கீழ்ப்புகுந்து வாழுங்காலத்திலே, இராமானுசன், திருக்கோட்டியூர்நம்பி திருவடிகளிற் சென்று பரம ப்ரயாஸங்கள்பட்டு சரம ச்லோக பரம ரஹஸ்யார்த்தத்தை உபதேசிக்கப் பெற்று மீண்டு மடத்திற்கு எழுந்தருளினவளவிலே, ஆழ்வான் உடையவர் ஸ்ரீபாதத்திலே தெண்டனிட்டுநிற்க, உடையவரும் 'வாரீர் ஆழ்வான்! சரமச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி, இவ்வர்த்த விசேஷத்தை ஒருவர்க்கும் செவிப்படாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளினபோது, பரமபாகவத சிகாமணியான ஆழ்வானுக்கு

மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்க முடியாதே' என்று நான் விண்ணப்பஞ் செய்ய, 'ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகாரமுண்டேயாகிலும் பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஓராண்டு சுச்ரூஷைகொண்டு சொல்லும், என்று நியமித்தருளினர் —என்று ஆழ்வானை நோக்கி அருளிச் செய்ய, அது கேட்ட ஆழ்வானும் * மின்னின் நிலையில்ல மன்னுயிராக்கைகள் * என்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி ஒரு ஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலையுண்டோ இல்லையோ வென்று வியாகுலப்பட்டு ஆலோசித்து அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றாலல்லது தரித்திருக்க முடியாத பேராசையாலே ஆசார்யனது திருமாளிகை வாசலிலே ஒரு மாஸம் பட்டினி கிடக்கை ஸம்வத்ஸர சுச்ரூஷையோடொக்கும் என்று சாஸ்த்ர முண்டென்றறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்தத்தைப் பெற்றார் என்று ப்ரஸித்தம்.

184. திருவரங்கத்தமுதனார், உடையவர் நியமனப்படி ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபஞ் செய்துவருகிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைய, தசாஹம் கடந்த பின்பு ஏகாஹத்திற்கு நிமந்த்ரணஸ்வாமியாக ஒருவரை நியமித்தருளவேணும் என்று உடையவர் திருவடிகளிலே விண்ணப்பஞ் செய்ய, உடையவரும், ஆழ்வானை நோக்கி 'நீர் போம்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் அப்படியே எழுந்தருள, அமுதனாரும் ஆசாரியர் இங்ஙனே எழுந்தருளப் பெறுவதே! என்று தாழ்ந்து தரைப்பட்டு ஸேவித்து ஏகாஹச்ராத்தத்திலே அமுது செய்வித்தார். நம்பெருமாள் ஸந்நிதித் திறவுகோல் அமுதனாருடைய ஆதீனத்திலிருந்தபடியால் அதை உடையவர் உபாயமாகக் கைப்பற்ற விரும்பியே ஆழ்வானை ஏகாஹத்தில் புஜிக்க நியமித்தார்; **ஸகலம் ஸம்பூர்ணம்** சொல்லும் ஸமயத்தில் ஆழ்வான் கோயில் திறவுகோலை நல்விரகாலே ஸ்வீகரித்தருளி, அதைக் கொணர்ந்து உடையவர் திருவடிவாரத்திலே ஸமர்ப்பிக்கலானார். பின்பு * **ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்*** என்று கடல்சூழ்ந்த மண்ணுலகமுற்றும் போற்றும்படி எம்பெருமானார் நம்பெருமாள்ஸந்நிதிக் கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினர் என்று ப்ரஸித்தம்.

185. எம்பெருமானார் ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு ஸ்ரீ பாஷ்யம் செய்தருளி, ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக் கருதி, அதற்காக போதாயநவ்ருத்திக்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய். அந்த ஸ்ரீகோசம் காச்மீர மண்டலத்தில் சாரதா பீடத்திலுள்ள தென்றுணர்ந்து ஆழ்வானுடன் அங்கேற எழுந்தருளின வளவில், ஆழ்வான் அந்த வ்ருத்திக்ரந்தத்தை வெகு விரைவில் முழுதும் கடாக்ஷித்து ஹ்ருதயத்திலே தரித்துக் கொண்டார். பிறகு கோயில் வந்து சேர்ந்து உடையவர், ஆழ்வானை உசாத்துணையாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்ய மருளிச்செய்து தலைக்கட்டினார். உடையவர் அருளிச் செய்த திவ்ய க்ரந்தங்களெல்லாம் ஆழ்வான் பட்டோலை கொண்டவை என்று பெரியோர் கூறுவர். ஸ்ரீ பாஷ்யத்தில் "இதி ஸ்ரீ பகவத்ராமாநுஜவிரசிதே சாரீரக மீமாம்ஸா பாஷ்யே" இத்யாதி வாக்கியங்களை ஸ்ரீ பாஷ்யத்தோடொப்பப் பெரியார் அநுஸந்தித்துவருவது ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியென்றேயாம்.

186. எம்பெருமானார்கோஷ்டியில் உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நடவாநிற்க, ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வ சேஷத்வங்களில் எது அந்தரங்க நிரூபகம்? என்று ப்ரஸ்தாவம் நிகழ, எம்பெருமானார் ஸர்வஜ்ஞராய் எழுந்தருளி யிருக்கச் செய்தேயும் இதன் நிஷ்கர்ஷத்தை ஆசார்ய முகேந வெளியிடுவிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி ஆழ்வானைத் திருக்கோட்டியூர்நம்பி பக்கல் அனுப்ப ஆழ்வானும், நம்பிபக்கல் விடைகொண்டு ஆறு மாஸம் காத்திருந்து ஜ்ஞாத்ருத்வத்திற் காட்டில் சேஷத்வமே அந்தரங்க நிரூபகமென்னும் மஹார்த்தத்தைப் பெற்று வந்தார். இங்ஙனே இப்பேராசிரியரின் மஹா வைபவங்கள் விரிப்பிற் பெருகும் ... *

௭ பட்டர் பெருமை

187. நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானுருடைய பதவியிலே அபிஷிக்தராய் அவரினும் விஞ்சிய ஞான வைபவத்தையுடையரான பட்டர் என்னும் ஆசிரியருடைய வைபவக் கடலில் சில சிறு திவலைகளை ஈண்டு அனுபவிக்க விழிகின்றோம். இவ்வாசிரியர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் ஸ்ரீரங்கநாதனுடைய திருக்குமாரர் என்றும் வழங்கப்படுவர். ஆழ்வான் க்ருஹஸ்தாச்ரமத்தி லெழுந்தருளியிருக்கச் செய்தேயும் ''விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்'' என்று ஸ்ரீ வசநபூஷணத்திலருளிச் செய்த கணக்கிலே விரக்தாக்ரேஸரராக எழுந்தருளி யிருந்தனர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானுர் திருவடிகளில் ஆச்ரயித்தது முதல் நாடோறும் உபாதாந காலத்திலே ஸ்ரீரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து, அது கொண்டு குடும்ப காரியத்தை நிர்வஹித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் கிடைக்கிற உணவுப் பொருள்களில் மறுநாளைக் கென்று சிறிதும் சேஷப் படுத்தி வைத்துக் கொள்ளாமல் அன்றன்றைக்கே தேஹ யாத்திரை நடத்தியருளுகையில் ஒரு நாள் விடாப் பெருமழை பொழிந்ததனுல் வெளியே போய் உபாதாநம் செய்து வரக்கூடாமல் போக, அதனுல் அன்றைக்கு வெறும் தீர்த்தத்தையே உட்கொண்டு அருளிச்செயலநுஸந்தாநமே தாரகமாகக் கொண்டு வேறு உணவின்றியே யிருந்திட, அன்றிரவு பெரிய பெருமாள் அமுது செய் தருளுகிறபோது உண்டான திருச்சின்னவொலி கேட்ட வளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினியிருக்க நீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீரோ?' என்று நினைப்பிட்ட வளவிலே ஸர்வஜ்ஞனை ஸ்ரீரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாந கார்ய நிர்வாஹகரான உத்தம நம்பிக்கு அர்ச்சக முகேந கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுது செய்த அக்காரவடிசிலை ஸகல பரிஜந பரிவாரங்களுடன் அவரைக்கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பி யருள, ஆழ்வானும் இதனையறிந்து பதறி யெழுந்து எதிர்கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளை யெடுத்துக் கொண்டு உத்தம நம்பியை அனுப்பிவிட்டு பக்தவத்ஸலனை பகவானுடைய வரம்புகடந்த கருணைத் திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுதுசெய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ர காமேஷ்டியிற் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீ ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோலே இப்பொழுது இவர்க்கும் இத்திரளைகளிரண்டுமே இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் திருநாமம் ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீவேதவ்யாஸபட்டர் என்பனவாம்.

188. பராசர பட்டர் என்று திருநாமமாயினும் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலெங்கும் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்படுவர் பட்டர் என்னும் வடசொல் வேதசாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்த வித்வானையும் ஸ்தோத்ரஞ் செய்யும் தொழிலுடையவனையும் சொல்லும்; ['' பட்டாரக'] என்னும் சொல்லும் இத் திறத்ததே. 'விளையும் பயிர் முளையிலே' என்னுமாபோலே சிசுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்குணர்ந்த எம்பெருமானுர் இவர்க்குப் பொருத்தமாக பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும் அத் திருநாமத்திற்கு மிகப் பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய் விளங்கிப் புகழ் பெற்றதும் எம்பெருமானுடைய ஸத்ய ஸங்கல்பத்வத்தை ஸத்யமாக்கின போலும். இங்ஙனே நாமகரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளிக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பார்க்கு நியமிக்க அவர் அங்ஙனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்

துக் கொண்டு வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தங்காதபடி ரக்ஷையாக த்வய மென்னும் மந்த்ர ரத்நத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந் தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர்; அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய் விக சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக் கொண்டு 'எம்பாரே! இக் குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தாநம் செய்து கொண்டு வந்தேன்' என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு நீர் முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்' என்று நியமித்தரு ளினரென்றும், அப்படியே அத்திருக் குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய க்ருத்யங் கள் செய்தருளினரென்றும், அது பற்றியே, எம்பெருமானார் எம்பார் பட்டர் நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிற தென்றும் ப்ரஸித்தமானது.

189 இங்ஙனேயிருக்கச் செய்தேயும் ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது எங்ஙனே யெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது "எண்பெருக்கந் நலத்தொண்பொருளீறில, வண்புகழ் நார ணன் திண்கழல் சேரே" என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையினாலும் மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர் கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளி யிருக்கு மிடத்தைக் குறித்துப் போகப் புக்கவளவில் ஆழ்வான் "மின்னின் நிலை யில மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளம் பற்றி அவர்களை யழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னார் போவா ரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பாசுரத்தின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத் திருமந்திரத் தின் அர்த்தமா(நினைத்திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று ஸம்பிரதாயம் வல்ல பெரி யோர் கூறுவர். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யம் அருளிச்செய்யும்போது ஆசார்ய வந்தநம் செய்கிற முதல் ச்லோகத்தில் "வந்தே கோவிந்த தாதௌ—எம்பாரை யும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபய :ஸம்பந்த மும் தமக்கு உண்டானது பற்றியேயாம். ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் இரண்டு ஆசிரியருக்கும் இரண்டு ச்லோகங்களைத் துதியாக இட்டருளினர்.

190 பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீ ரங்கநாதன் தனது புத்திர னாக அங்கீகரித்துத் தன்னுடைய ஸந்நிதியிலே திருமணத்தூணினருகே தொட்டி விடுவித்து ஸ்ரீ ரங்க நாச்சியாரும் தானுமாகச் சீராட்டி வளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுது செய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து ஸமர்பிக்கப்படுகிற அடிசிலைக் கைகளால் அள்ளியளைந்து துழாவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி, "அமிழ்தினும் ஆற்றவினிதே தம் மக்கள், சிறுகையளாவிய கூழ்" (குறள்) என்றபடி இந்த இன்னடிசிலை மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்ரஸ்வீகாரம் செய்தருளப் பெற்ற பாக்கிய முடைமையால் பட்டர் ஸ்ரீரங்க நாதர் புத்ரர் என்று வழங்கப்பட்டு வந்தார். "வானிட்ட கீர்த்தி வளர் கூரத் தாழ்வான் மகிழவந்த, தேனிட்டதார் நம்பெருமாள் குமாரர்... பட்டர்" என்று இவரது சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவரங்கக் கலம்பகக்காப்புச்

செய்யுட்களுள் ஒன்றில்) கூறினர். பட்டர் தாமும் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் பதினேழாம் ச்லோகத்தில் "ஸ்ரீ ரங்கராஜ கமலாபதலாலிதத்வம்" என்ற பதத்தினுல் இதனை ஸ்பஷ்டமாக்கி யருளினதும் உணர்க.

191. இப்பேராசிரியர் ஸகல சாஸ்திரங்களிலும் அபாரமான பாண்டித்யம் பெற்றவர் என்பது இவர் அருளிச் செய்த க்ரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்று கொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர் என்பது இவர் அருளிய ஸ்ரீ ரங்கராஜஸ்தவ ஸ்ரீ குணரத்ந கோசாதிகளால் நன்கு விளங்கும். அருளிச் செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அநிதரஸாதாரணமான வல்லமை பெற்றவர் என்பது திவ்யப்ரபந்த வியாக்கியானங்கலில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி அருளிச்செய்யு மவற்றால் தெரிகின்றது. வியாக்கியானங்களில், 'என்று பட்டர் அருளிச் செய்வர்' என வருமிடங்களிலெல்லாம் ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல்நெஞ்கினர்க்கும் உண்டாவது வழக்கம். இவரது நிர்வாஹங்களில் ஒன்றை ஈண்டெடுத்துக்காட்டுவோம்.

192. திருநெடுந்தாண்டகத்தில் 'அறுகாலசி றுவண்டே தொழுதேனுன்னை' என்ற பாசுரத்தில் வண்டுக்கு ஸ்வாபாவிகமான ஆறுகால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறுகால்கள் இருக்கப்பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக நிர்வஹித்தார்களாம். இந்த நிர்வாஹத்தில் ஸ்வாரஸ்யமில்லை, வண்டு செல்லுதற்கு ஸாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே; ஆதலால் 'அறுகால' என்னும் அடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச்செய்வதாவது—தொழுதேனுன்னை என்று மேலேயிருக்கையாலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். இதனை விவரிப்போம். தூது சென்று மீண்டு வந்தால் வண்டின் கால்களைத் தலை நிறைய வைத்துக்கொண்டு கூத்தாடக் குதூஹலித்திருப்பதனுல் அதற்குச் சேர இங்ஙனே கருத்துரைத்தபடி. ஸ்வாபதேசத்தில் 'வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை. ஆசாரியனும் ஆசாரியனுடைய தேவியாரும் அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உத்தேச்யர் என்பது ஆபஸ்தம்ப ஸூத்ரஸித்தம். மூவர்க்கும் சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அது தோன்றவே அறுகால சிறுவண்டே! என்றது—என்பது பட்டர் திருவுள்ளம். "கொங்கார் பூந்துழாய் முடி என்குடக் கூத்தற்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஸ்வாபதேசார்த்தத்திற்கு மிகவுமிணங்கியதாமிது.

193 த்ரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டும் கேட்டும் அவரிடத்து மதிப்புக் கொண்டு ஒருநாள் 'பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒருவிசை வந்து போம்' என்றுசொல்ல, அதற்கு பட்டர் சிறிதும் இணங்காமல் "நம்பெருமாள் அஞ்சலென்ற கைமறித்தாலும் அவர் வாசலொழிய வேறொரு போக்கிட முண்டோ எனக்கு?" என்று சொல்லி மறுத்து விட்டனர் என்பது ப்ரஸித்தம். தன்னைச் சரண மடைந்தவர்கட்கு ஆவன வெல்லாஞ் செய்து அவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனை பரம புருஷனுக்கு அடிமைப்பட்ட நாம் சில சிற்றரசரின் வாசலிலே கிடந்து துவளக்கடவோமல்லோம்மென்கிற அத்யவஸாயத்தை வெளியிட்டவாறு.

பட்டர் வைபவம் கடலினும் மிகப் பெரிது. தற்போது நிற்போம்.

—(*)—

நஞ்சீயர்வைபவம்

194. இப்பெரியார் அத்வைத ஸம்ப்ரதாயத்தில் அவதரித்திருந்தவர். மாதவாசார்யர் என்பது இவருடைய திருநாமமாக இருந்தது. வேதாந்தி என்பது இவர்க்குச் சிறப்புத்திருநாமம். ஷட்தர்சநங்களுக்கும் ஷடாஸநமிட்டு நிகரற்ற வித்வானாக மேல் நாட்டில் எழுந்தருளியிருந்தவர்இவர். மதாந்தரஸ்தர்களான வித்துவான்கள் பலரையும் திருத்திப் பணிகொண்டருளின எம்பெருமானார் இவரையும் திருத்திப் பணிகொள்ள விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய வாழ்நாளில் இந்த மநோரதம் நிறைவேறாதொழியவே தம்து சரம ஸமயத்தில் ஆழ்வான் திருக்குமாரரான பட்டரை விசேஷேண கடாக்ஷித்தருளி தர்சந ஸ்தாபகராக நியமித்தருளின காலத்து "மேல்நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப் பணிகொண்டு வாழ்விக்கக் கடவீர்" என்று நியமனம் தந்தருளலாயிற்று. பட்டரும் அதனை நிறைவேற்றுதற்கு உரிய ஸமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

195. இந்நிலைமையில் மேல் நாட்டில் நின்றும் ஒரு அந்தணர் யாத்திரை யடைவிலே நம் பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு பட்டரையும் திருவடி தொழுதார். அப்போது வேதாந்தியின் பிரபாவங்களை வார்த்தையடைவிலே அவர் எடுத்துரைத்தார். "மேல்நாட்டில் வேதாந்தி யென்று ஒரு பெரிய வித்வான் இருக்கிறார். அவருடைய வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கு மிருக்கக்கண்டு களிக்கின்றேன்" என்று பட்டரை நோக்கிக் கூறினர். அவர் திரும்பி ஸ்வதேசத்திற்குச் சென்று வேதாந்தியை நோக்கி "ஸ்வாமிந்! ஸ்ரீரங்கத்தில் பட்டரென்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்; அவர் அத்விதீய வித்வான்; அவருடைய சிஷ்ய கோஷ்டிகளின் பெருமையும் வாசாமகோசரம்" என்று சொல்ல, வேதாந்தியும், 'அவர் நமக்கு ஒத்த வித்வானோ? அவர்க்கு என்ன சாஸ்த்ரம் வரும்?" என்று கேட்க; அதற்கு அவ்வந்தணர் "பட்டர் உம்மிலும் சிறந்த வித்வானே யாவர்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்திரங்களும் அவர்க்கு வாசோ விதேயங்கள்" என்று கூறினர். வேதாந்தியும் அது கேட்டு "இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லை; ஷட்தர்சனத்திற்கும் ஷடாஸநமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டரென்பவர் நம்மிலும் அதிகர் என்று இவர் சொல்லுகிறாரே!" என்று திடுக்கிட்டிருந்தார்.

196. அவ்வந்தணர் மீண்டும் ஒருகால் அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கு வந்து பட்டரைத் திருவடித்தொழுது 'தேவரீருடைய வைபவங்களை யெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்த்ரங்களும் தேவரீர்க்கு வாசோ விதேயங்களென்று சொன்னேன்; அவரும் அதுகேட்டு விஸ்மயப்பட்டிருக்கிறார்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்குபட்டர் 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம் நமக்குத் தெரியும் என்று வேதாந்திகளிடம் சொல்லிற்றிலீரே!" என்றருளிச் செய்ய, அந்தணரும். அப்படியே சொல்லுகிறேனென்று சொல்லிச் சென்று வேதாந்தியிடம் "பட்டர்க்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் அஸாதாரணம்" என்று கூற, அது கேட்ட வேதாந்தி அந்த சாஸ்த்ரம் இன்னதென்று அறியப் பெறாதவராகையாலே அது என்னோ? வென்று வியந்திருந்தார்.

197. இங்ஙனே சிலநாள் சென்றபின், எம்பெருமானாருடைய நியமனப்படி வேதாந்தியைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றியபட்டர் நம்பெருமாள் ஸந்நிதியிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல் நாட்டிலெழுந்தருளிக் காவேரிக் கரையில் சிறுப்புத் தாரண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தியறிந்து சடக்கென வந்து ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும் மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?" என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து ஸேவித்து

யிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல் நாட்டிலெழுந்தருளிக் காவேரிக் கரையில் சிறுப்புத்தூரண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தியறிந்து சடக்கென வந்து ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும் மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?'' என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து ஸேவித்து ''மேல்நாட்டிலே போய் வேதாந்தியைத் திருத்தி நம் தர்சநப்ரவர்த்தகராகும்படி பண்ணென்று நம் உடையவர் நியமித்தருளினுரே; அப்படியே நம் பெருமாளும் விடை ஸாதித்து நியமித்தருளினுர்'' என்று சொல்ல; அனந்தாழ்வானும் 'எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை மிகவுமுகந்து அழைத்துக் கொண்டுபோய்த் திருநாராயண புரத்திலே மஹாவைபவமாக மங்களாசாஸநம் செய்வித்து வேதாந்திகள் விஜயஞ் செய்திருக்கிற ஊர்க்கும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு சென்றுர்.

198. சிஷ்யர்கள் பலர் பிருதாவளிகள் கூறத் திருப்பல்லக்கிலே பட்டர் எழுந்தருளா நிற்கக் கண்ட அங்குள்ள அந்தணர் சிலர் பட்டரை நோக்கி '' நீர் ஆர்? எங்கேற எழுந்தருளுகிறீர்?'' என்று கேட்க; அதற்கு பட்டர் '' நாம் இராமாநுசனடிகள்; வேதாந்திகளுடனே தர்க்கிக்கப்போகிறேம்'' என்று கூற, அதுகேட்ட அவர்கள் '' தேவரீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினுல் வேதாந்திகளைக் காண்பதும் அருமைப்படும்; அவருடைய சிஷ்யப்ரசிஷ்யர்கள் தலைவாசலிலேயிருந்து, வந்த வித்வான்களுடனே நாலாறுமாதம் தர்க்கித்து அவர்களை உள்ளே புகுர வொட்டாதே புறம்பே தள்ளிவிடுகிறுர்கள்; அங்ஙனமாகாமே அவரை நேரிற் கண்டு தர்க்கிக்க ஒருபாய முரைக்கிறேம் கேளும்;

199. '' வேதாந்திகள் மிக்க செல்வச் சிறப்புடையவராதலால் தினப்படியாக ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை வெகுவிசேஷமாக நடத்திவருகிறுர். புஜிக்கவருகிற பிராமணர்களுடனே கலந்து தேவரீரும் போஜந சாலையிற்சென்று சேர்தல் நன்று; அங்கு வேதாந்திகள் அவசியம் நிரீக்ஷிக்க வருவர், அப்போது காணலாம்; ஆகையாலே பரிஜந பரிபர்ஹங்களையெல்லாம் இங்கே நிறுத்தித் தனியே யெழுந்தருளத் தக்கது'' என்று ஸதுபாயம் சொல்லிப் போனுர்கள்.

200. பட்டரும் அவ்விதமாகவே போஜநசாலையில்சென்று சேர்ந்து, பங்க்தியில் எழுந்தருளியிராமல் வேதாந்திகள் பக்கத்திலேயே நிற்க, அவரும் 'பிள்ளாய்! இங்கு ஏன் நிற்கிறீர்?' என்ன, 'பிக்ஷைக்காக' என்று பட்டர் சொல்ல, 'எல்லோரும் புஜிக்கிறவிடத்திலேபோய் உட்காரும்' என்று வேதாந்திகள் சொல்ல. ''நான் அன்ன பிக்ஷைக்கு வந்தேனல்லேன்'' என்று பட்டர் சொல்ல, அது கேட்ட வேதாந்திகள் இவர் வித்வானுயிருக்கக்கூடும் என்றெண்ணி ''கா பிக்ஷா?'' என்று கேட்க, பட்டரும், ''தர்க்க பிக்ஷா'' என்ன, வேதாந்திகள் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு ''முன்னே நாம் கேள்விப்பட்டிருந்த பட்டரல்லது வேறெருவர் நம் முன்னே வந்து கூசாமல் நின்று இங்ஙனே சொல்லப் பெறுர்; இவர் அந்த பட்டரேயாயிருக்கக்கூடும்'' என்று நிச்சயித்து ''நம்மைத் தர்க்க பிக்ஷை கேட்டீர்; நீர் பட்டரோ?'' என்ன; அவரும் 'ஆம்' என்ன; அவ்வளவிலே வேதாந்திகள், இவருடைய வித்யாவைபவம் காண்போமென்று குதூஹலித்துத் தர்க்கிக்கத் தொடங்கினுர். ஒருவர்க்கொருவர் மத்த வாரணம் பிணங்குமாபோலே தர்க்கிக்க இங்ஙனே ஒன்பதுநாள் சென்ற பின்பு பத்தாநாளில் பட்டர் அத்வைதத்தை ஸஹஸ்ரமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்துத் திருநெடுந்தாண்டகத்தின் விழுமிய பொருள்களையும் அழகாக உபந்யஸித்தருள, வேதாந்திகள் விஸ்மய ஸந்தோஷ விவசராய் எழுந்திருந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று ''உம்மை மநுஷ்ய மாத்ரமே யென்றிருந்தேன். உம்மோடு நம்பெருமாளோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள்

நீர்" என்று பலவாறு துதித்துத் திருவடிகளிலே விழுந்து தொழுது 'அடியேனை அங்கீகரித்தருள வேணு' மென்று விஜ்ஞாபிக்க, பட்டரும் தாமெழுந்தருளின காரியம் மிக விரைவாகப் பலித்தமைக்குத் திருவுள்ளமுவந்து வேதாந்திகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளி மஹாபாகவதோத்தமராக்கி விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி 'வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; நாம் உமக்குப் பரக்கச் சொல்லலாவ தொன்றுமில்லை; வேதாந்தார்த்தங்களிலே தெளிவு பெற்ற நீர் இனி மாயாவாத ரீதியை ஸவாஸநமாக த்யஜித்து அருளிச் செயல்களை ஓதி, எம்பெருமானார் தர்சனத்தை நிர்வஹித்துப் போரீர்' என்று நியமித்து, அவ்வளவிலே நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவம் அணித்தான படியை ஸ்மரித்தருளி விரைந்து கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு மார்கழி மாதம் அமாவாஸ்யையன்று திருவரங்கம் வந்து சேர்ந்து அன்றுமாலை நம் பெருமாள் திருமுன்பே விடை கொண்டு நிற்க, பெருமாளும் பட்டரே! நீர் புறப்பட்டுப்போன காரியம் என்னுயிற்று?" என்று கேட்டருள, பட்டரும் 'வேதாந்திகள் தேவரீருடைய திருவடிகட்கு அடியவராயினர்' என்று விஜ்ஞாபிக்க, 'அவரைத் திருத்திப் பணிகொண்டபடி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்க, பட்டர் உடனே 'இங்ஙனே காணும்' என்று சொல்லித் திருநெடுந்தாண்டகத்தைத் திருவோலக்கத்திலே உபந்யஸித்தார். இந்த இதிஹாஸத்தை அடியொற்றியே நாளைக்கும் நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னுள் திருநெடுந்தாண்டகத் திருநாளென்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்று பெரியார் கூறுவர். .... *

நற்பொருளெழுநூறில் இரண்டாவது நூறு முற்றிற்று.

மூன்ருவது நூறு

201. இது இங்ஙனமிருக்க, வேதாந்திகள் ஸ்வதேசத்திலே திருமாலடியார்களைப் பூசித்து வரும்நாளில், ஸம்ஸாரத்தில் விரக்தி யெய்தி உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து, இனி பட்டர் திருவடிவாரத்திலேயே நிழலும் அடிதாறுமாக நித்யவாஸஞ் செய்யவேணுமென்று அறுதியிட்டுக் கோயிலை நோக்கி யெழுந்தருளா நிற்கையில், சிறுப்புத்தூரிலே அனந்தாழ்வானைக் கண்டு ஸேவித்து நிற்க, அவரும் வாரீர் வேதாந்திகளே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுது செய்து பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளி விடுவாருண்டோ? இனி என்? திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளந்து த்வயைக நிஷ்டராவீர்' என்று ஆசீர்வதித்துப் போக விட்டார். வேதாந்திகளும் பயணகதியிலே போய்க் கோயிலேற எழுந்தருளி பட்டர்திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து கிடக்க, பட்டரும் மிகவு முகந்தருளி'நம்முடைய சீயர் வந்தார்' என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒரு க்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, ஜீயரும் பட்டரை யன்றித் தேவுமற்றறியேன் என்றிருந்தார். [பட்டர் 'நம்முடைய சீயர்' என்று சொல்லி அணைத்துக்கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்சீயர் என்றுதிருநாமம் வழங்கலாயிற்று.] உபதேசரத்தினமாலையில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை யென்பர், அவரவர் தமேற்றத்தால் - அன்புடையோர், சாத்து திருநாமங்கள் தாமென்று நன்னெஞ்சே, ஏத்ததனைச் சொல்லி நீயின்று'என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்க.

202. நஞ்சீயருடைய ஆசார்ய ப்ரேமம் பரம விலக்ஷணமானது. ஒரு கைசிக த்வாதசியன்று பட்டர் ப்ரம்மரதத்திலெழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக " உத்தமாச்ரமியாய் த்ரிதண்டதாரியான வுமக்கு இக்காரியம் தகாது" என்று பட்டர் முதலானுர் மறுத்துக்

கூற, அப்போது நஞ்சீயர் 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடையதான "ஸகா மா கோபாய" என்கிற மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல் தானே இன்று எனக்கு விரோதி யாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூபரக்ஷணத்திற்கு இடையூருயின், இது எனக்கு வேண்டா' என்று சொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனுராம். அப்போது அவருடைய பக்தி விசேஷத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

203. பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாஸத்தாலே ஒரு தூற்றடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியை வைத்துக் கண்வளர்ந்தருள, ஓரிரவெல்லாம் துடைமாறுடுதல் அசைத்தல் செய்யாதே நஞ்சீயர் இருந்தார் என்பதும் இவருடைய ஆசார்ய ப்ரேமத்தின் கனத்தை விளக்கும்.

204. நஞ்சீயர் நெடுநாள் வரையில் அருளிச் செயல்களின் வாஸனையும் அறியாதவரா யிருந்துவைத்தும், பட்டரை ஆச்ரயிக்கப் பெற்றபின்பு ஆசார்ய கடாக்ஷ விசேஷத்தினுல் சிறிது காலத்திலேயே திவ்யப்ரபந்தங்க ளெல்லாவற்றையும் ஓதித் தரித்து, அவற்றில் விசேஷார்த்தங்கள் நிர்வஹிப்பதில் நல்ல விரகராய் விளங்கினர்.

205. சிறிய திருமடலில் "அவட்கு மூத்தோனை வெந்நரகம் சேராவகையே சிலை குனித்தான்" என்ற விதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடிய விதம் என்னெனில்; கரனை நரகத்திற்குப் போக வொட்டாமல் வீர ஸ்வர்க்கத்திற்குப் போகச் செய்தார் பெருமாள் என்று. இதற்கு இங்ஙனல்ல பொருள். வளைத்த வில்லுங் கையுமாய் நின்ற பெருமாளைக் கண்ட கரன் 'நாம் மேலேபோய் வேருெரு நரக யாதனை அநுபவிக்கவேண்டா: எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தாயிற்று' என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடும் படுத்தினுன் என்று பட்டர் அருளிச் செய்யும் பொருள். நஞ்சீயர் பட்டரை ஆச்ரயிப்பதற்கு முன்னே ஸ்வதேசத்தில் வாழுங்காலத்து பட்டருடைய சிஷ்யரொருவர் நஞ்சீயரைச் சந்தித்து வார்த்தை யாடும்போது 'எங்களுடைய திவ்யப் பிரபந்தத்தில் "அவட்கு மூத்தோனை வெந்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான் என்றிருக்கிறது; வேதாந்திகளே! இதற்கு நீங்கள் என்ன பொருள் சொல்லுவீர்கள்?' என்று கேட்க; அவர் ஸாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, 'உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்!' என்று கேட்க, மேலே விவரித்த பொருளை அவர் கூற, இப்பொருள் கூறவல்ல பட்டரை நாம் ஸேவிக்கவேணுமென்று அவருக்குக் காதல் கிளர்ந்திருந்ததாகப் பெரியோர் கூறுவர்.

(6) இனி நம்பிள்ளை வைபவம்

206. நஞ்சீயருடைய திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களில் தலைவர் நம்பிள்ளை. இவர்க்கு இயற்கையான திருநாமம் 'நம்பூர் வரதராஜார்யர்' என்பது. ஸ்வாசார்யரான நஞ்சீயர் உகந்து சாத்தின திருநாமம் நம்பிள்ளை யென்பது. அந்தத் திருநாமம் சாத்துகைக்கு அடியென்னென்னில்; நஞ்சீயர் பட்டருடைய நியமனப்படி திருவாய்மொழியின் திவ்யார்த்தங்களை ப்ரவசனஞ் செய்வதையே போது போக்காகக் கொண்டு வாழ்ந்து வந்தார் திருவரங்கம் பெரிய கோயிலில். அவருடைய காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்தவர்களில் நம்பூர் வரதராஜாசார்யரும் ஒருவராயிருந்து வந்தார். இவர் நீறு பூத்த நெருப்புப்போல இருந்து வந்த படியாலே இவருடைய ஞான வைபவம் முதலிய பெருமைகளை விசேஷித்து யாரும் அறியாதிருந்தனர்.

207. இப்படியிருக்கையில், நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிரான் பிள்ளானுடைய ஆறுயிரப் படியிற் காட்டிலும் சிறிது விரிவாக வொரு வியாக்கியானமிடும்படி பட்டருடைய நியமனம் பெற்றிருந்ததனுல் ஒன்பதினுயிரப்படி

யென்றொரு வியாக்கியானம் இட்டருளியிருந்தார். அதைச் செவ்வையாகப் பட்டோலை கொள்ள வல்லாரிடம் கொடுத்து எழுதுவிக்க வேணுமென்று கருதி இதற்குத் தகுந்தவர்கள் யாரேனுமுளரோ வென்று அந்தரங்கர்களை விசாரிக்கையில் 'நம்பூர் வரதராஜாசார்யரென்றொருவர் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டிக்குத் தவறாது வருகின்றாரே; அவர் நல்ல விரகர்; எழுத்திலும் வல்லவர்: அவரைக் கொண்டு இப்பணியை நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். பிறகு அவரை அருகே வரவழைத்து ஆராய்ந்து பார்க்கையில் அவருடைய பாண்டித்யம் ஒப்புயர்வற்றதென்று தெரிய வந்தது; அதனால் உள்ளம் பூரித்து அவர்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருளித் தம்முடைய ஒன்பதினாயிரப்படியை வரியடைவே அவர்க்கு ப்ரவசனமும் செய்து அதை யெழுதித் தரும்படி ஸ்ரீகோசத்தைஅவரிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவர் தம்மூருக்குச்சென்று எழுதிக் கொண்டு வருவதாகச் சொல்லிப் போகையில் திருக்காவேரியில் நீஞ்சிச் செல்ல நேர்ந்தது; அப்போது திரு முடியில் கட்டிக்கொண்ட அந்த ஸ்ரீகோசம் நெகிழ்ந்து விழுந்து வெள்ளத்திற் போய் விடவே இப்படி அபசாரமாய்த் தலைக்கட்டிற்றே யென்று வருந்த நேர்ந்தது. ஆனாலும் இவர் தாம் அந்த வ்யாக்யானத்தை ஸ்வாசார்யர் திருவடிகளிலே வரியடைவே கற்றிருந்தபடியாலும் அவருடைய கருணை கடாக்ஷத்தை விசேஷித்துப் பெற்றிருந்த படியாலும் அவருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே பட்டோலை கொள்ளத் தொடங்கி விரைவில் எழுதி முடித்து ஸ்ரீகோசத்தை நஞ்சீயர் திருவடிகளிலே கொண்டு வைத்தார். 'நாம் கொடுத்த ஏடு எங்கே?' என்று அவர் கேட்கையில், நடந்தது நடந்தபடியே விண்ணப்பஞ் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு நஞ்சீயர் ஸ்ரீகோசத்தை அவிழ்த்துக் கடாக்ஷிக்கையில், தாமருளிச் செய்த ஸ்ரீஸூக்திகள் விடாமலும் தம்மிடம் அவர் கேட்டிருந்த சில அர்த்த விசேஷங்களும் பொருத்தமாக அமைந்தும் விரிவு மில்லாமல் இருந்த அழகுக்கு மிகவுகந்து 'வாரீர் நம்முடைய பிள்ளையே!' என்று எடுத்தணைத்துக் கொண்டார். அது முதலாக நம்பிள்ளை யென்றே இவர் வழங்கப் பெற்று வந்தார். திருக்கலிகன்றிதாஸர் என்பதும் இவர்க்கு நஞ்சீயர் சாத்தின திருநாமம்.

208. இவருடைய ஞான வைபவத்தைப் பற்றி நாம் விரிவாக எழுத வேண்டுமோ? பெரிய திருமொழி வ்யாக்யானத்தில் *ஓதுவாய்மையு முவனியப் பிறப்புமுனக்கு முன் தந்த அந்தணனொருவன்* என்ற விடத்து "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலே யாம் நம்பிள்ளையைப் போலே" என்று பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி யொன்றே இவருடைய ஞானப்பெருமையை விளக்கக் கூடியது. திவ்யப்ரபந்தங்களுக்கும் இதிஹாஸ புராணாதிகளுக்கும் ஆழ்ந்து இன்சுவையே வடிவெடுத்த அர்த்தங்களை யருளிச் செய்வதில் இவர்க்கு ஒத்தாரும் மிக்காருமில்லை.

209. லோகாசார்யரென்கிற திருநாமமும் இவர்க்கு உண்டு. அது நிகழ்ந்த வரலாறு கேண்மின்; இவர் கோயிலில் வாழ்ந்த காலத்தில் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இவர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களும் கேட்டு வந்தார்கள். 'நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ' என்னும்படி மிகப்பெரிய சிஷ்ய கோஷ்டி ஸம்பத்துடன் வாழ்ந்து வந்தார். அப்போது முதலியாண்டான் திருப்பேரனான கந்தாடைத் தோழப்பரும் அங்கு வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாயிருக்கச் செய்தேயும் அவரிடத்தில் ஒருவரும் ஆச்ரயியாதிருக்கவே அவர்க்குப் பொறாமையுண்டாகி ஒரு நாள் நம்பிள்ளையைப் பெருமாள் கோஷ்டியிலே திரஸ்கார மான வார்த்தைகளைச் சொல்லிப் பரிபவித்துவிட்டுத் திருமாளிகைக் கெழுந்தருளினார். அவருடைய தேவிகள் இந்த அஸஹ்யாபசாரத்தை யறிந்து கண்ணுங் கண்ணீருமாக வந்து 'அந்தோ! இப்படியும் பரமாசார்யர் திருவடிகளிலே அபசாரப்பட்டு

வீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ? என் செய்தீர்! என் செய்தீர்! ஐயோ' என்று பலவுஞ்சொல்லி அநுதாபத்தை யுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளைதிருவடிகளில்க்ஷமைவேண்டவேணுமென்று பாரித்திருக்க . அதற்குள்ளே தாமே தோழப்பருடைய திருமாளிகையேற வந்திருந்து வேரற்ற மரம்போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கன்றும்படி வர்த்தித்த அடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லை யென்று பலவுமருளிச் செய்து தாம் க்ஷாமணம் பண்ணிக் கொண்டார். அப்போது தோழப்பர் அந்த மஹா குணத்திற்கு வியந்து "ஸ்வாமிந்! தேவரீரை இத்தனை நாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்; இப்போது லோகத்துக் கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று திண்ணமாகக் கொண்டேன்" என்றார். அது முதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்ய ரென்று திருநாமம் வழங்கி வந்தது; "துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் முகப்பால், என்னவுலகாரியனோ வென்றுரைக்க, பின்னை யுலகாரியனெனும் பேர் நம்பிள்ளைக்கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்" என்ற உபதேச ரத்தின மாலைப் பாசுரம் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

210. நம்பிள்ளை திருவடிகளில் பலர் ஆச்ரயித்திருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர்க்கு இருந்த ஆசார்ய பக்தி ஒப்பற்றதென்று தெரிகிறது; உபதேச ரத்தின மாலையில் "பின் பழகராம் பெருமாள் சீயர் பெருந்திவத்தில், அன்பதுவுமற்று மிக்க வாசையினால்-நம்பிள்ளைக் கான வடிமைகள் செய் அந்நிலையை நன்னெஞ்சே! ஊனமற வெப்பொழுது மோர்" என்று விசேஷித்து அருளிச் செய்கையாலே.

211. இப்பேராசிரியரின் திருவடிகளில் பணிந்து அல்லும் பகலும் ஸகலார்த்தங்களையுங் கேட்டுத் தரித்த வடக்குத் திருவீதிப்பிள்ளையும் பெரிய வாச்சான்பிள்ளையும் உலகுக்குச் செய்திருக்குமுபகாரம் கைம்மாறற்றது.

212. பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மஹா வித்வானாயிருந்த நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டரும் கந்தாடைத் தோழப்பர் போலவே நம்பிள்ளையிடத்தில் பொறாமை கொண்டிருந்தவர். அவர் ஒரு நாள் ராஜஸபைக்குச் சென்றிருந்தார்; அந்த ராஜா மஹாவிவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களையெல்லாம் ஸ்ரீ ராமாயணாதி க்ரந்தங்களில் கேள்வி கேட்ப னுமாயிருந்தபடியால் இந்தபட்டரை ராமாயணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது: ஸ்ரீ ராமபிரான் நாராயணத்வப்ரயுக்தமான பரத்வத்தை மறைத்துக் கொண்டு அஜ்ஞனைப்போலவும் அசக்தனைப்போலவும் அவதரித்திருக்கையில்"மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்" என்று ஜடாயுவுக்கு முத்தி யளித்தது எங்ஙனே பொருந்தும்?—என்று. இக்கேள்விக்கு த்ருப்திகரமான விடையளிக்க பட்டருக்கு ஸ்புரியாமையாலே ஆலோசிக்க வேண்டியதாயிற்று. அப்போது ராஜாவும் அந்யபரனாயிருக்க, இவருடைய பாக்ய வசத்தாலே அங்கு ஒரு ஸ்வாமி தென்பட்டார். அவர் நம்பிள்ளை திருவடிகளில் அர்த்த விசேஷங்கள் கேட்டவர்; இந்த பட்டர் அவரை அருகே வரவழைத்துச் செவியோடு செவிமடுத்து 'இவ்வரசன் கேட்ட கேள்விக்கு நம்பிள்ளை எப்படி நிர்வஹிப்பது?' என்று கேட்டார்; அவர்—"ஸத்யேந லோகாந் ஜயதி" என்கிற ச்லோகத்தைக் கொண்டு நிர்வஹிப்பர் என்று சொல்ல, அதை இவர் தமது மனதில் நன்றாக வாங்கிக்கொண்டு பிறகு ராஜாவிடம் உபந்யஸித்தார். அரசனும் மிகமிக உகந்து விசேஷ ஸத்காரங்கள் செய்தான். அந்த ஸத்காரங்களை ப்ராமாணிகரான இவர் தம் க்ருஹத்திற்குக் கொண்டுபோகவிரும்பாமல் நம்பிள்ளை திருவடிகளிலே கொண்டு ஸமர்ப்பித்து தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன வொரு சொல்லுக்குப் பெற்ற ஸத்காரமிது; இனிஅடியேனை அங்கீகரித்தருளி வாழ்விக்க வேணுமென்று வேரற்ற மரம்போல விழுந்து ப்ரார்த்திக்க, அவரையும் சேர்த்துக்

கொண்டு உய்வித்தார். நம்பிள்ளையின் பகவத்விஷயோபந்யாஸங்களை அவரும் ஏடுபடுத்தி ஸபாத லக்ஷம் க்ரந்தமாக்கி யிருந்தார். அதிகாரி தௌர்லப்யத்தைக் கணிசித்து அதை நம்பிள்ளை ப்ரசாரத்திற்கு நியமித்தருளவில்லை.

213. நம்பிள்ளையின் வைபவம் அர்த்த விசேஷங்களைப் பொறுத்ததேயாதலால் அவ்வர்த்த விசேஷங்கள் திவ்யப்ரபந்த வியாக்கியானங்களிலும் வார்த்தாமாலை முதலிய வற்றிலும் பாக்யசாலிகளால் உய்த்து உணரத்தக்கன. ....

நம்பிள்ளை வைபவம் முற்றிற்று.

௯ வடக்குத் திருவீதிப் பிள்ளை வைபவம்

214. ஆனி மாதத்தில் பெரியாழ்வாருடைய திருவவதார நன்னாளாகிய ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் இப்பேராசிரியர் திருவவதரித்தருளினார். ஸ்ரீவசன பூஷணம் முமுக்ஷுப்படி முதலிய அஷ்டாதச ரஹஸ்யங்களையருளிச் செய்த பிள்ளை லோகாசாரியர்க்கும், ஆசார்யஹ்ருதயமருளிச் செய்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்க்கும் திருத்தந்தையார் இவர். இவருடைய நிஜநாமதேயம் ஸ்ரீக்ருஷ்ணமஹாதரு வென்பதாம். இந்தத் திருநாமமே பெரிய வாச்சான் பிள்ளையென்கிற மற்றோராசிரியர்க்கும் இருந்ததனால் நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்திருந்த விவர்களுக்கு வாசி தெரிவதற்காக இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளையென வழங்கப்பட்டு வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததுவே இத்திருநாமத்திற்குக் காரணம். *ஸ்ரீக்ருஷ்ண பாதபாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா, யத்ப்ரஸாத ப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம* என்பது இவருடைய தனியன்.

215. இப்பேராசிரியருடைய திவ்விய சரித்திரங்களைப்பற்றி முன்னோர்கள்விசேஷமாக எழுதி வைக்கவில்லை யாதலால் இவருடைய ஞானப் பெருமைகளை இங்கு விசேஷமாக அநுபவிப்போம். பகவத் விஷயமென வழங்கப்படுகிற [திருவாய்மொழிவியாக்கியானமான] ஈடு முப்பத்தாறாயிரப் படியை இவ்வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேச ரத்தின மாலையில் *தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது, ஈடு முப்பத்தாறாயிரம்* என்றருளிய பாசுரத்தின்படி, நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யாஸங்களைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக் கொண்டிருந்து அற்புதமாகப் பட்டோலை கொண்ட பெருமை இவ்வாசிரியருக்கு அஸாதாரணமானது. சிலர் கூறுவதாவது, நம்பிள்ளை சோதிவாய் திறந்து அருளிய பங்க்திகள் எப்படியோ அப்படியே அப்பங்க்திகளே ஈட்டில் அமைக்கப்பட்டன வென்று. இதில் ஔசித்யம் சிறிதுமில்லை. வாசிகவ்யவஹார நடை வேறு; க்ராந்திக சைலிவேறு. கங்காப்ரவாஹம்போல் நம்பிள்ளையருளிச் செய்தவையாய், கரை கட்டாக் காவேரியென்னும்படியாயமைந்த ஸ்ரீ ஸூக்திகள் அப்படியே ஏடு படுத்தப் பட முடியாதவை. மஹோபந்யாஸங்களில் குறிப்பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பங்க்தி ஸந்நிவேசமானது, வேறு எந்த க்ரந்தத்திலும் கண்டறியாததும் காண முடியாததுமான அத்விதீய விலக்ஷண ஸந்தர்ப்பம். ஸம்ஸ்க்ருத வித்வான்களும் தமிழ் வித்வான்களும் தனித்தனியே உள் குழையத்தக்க உயர்ந்த ரசநாவிசேஷம். "ககநம் ககநாகாரம் ஸாகரஸ்ஸாகரோபம:" என்கிறாப்போலே "ஈட்டுக்குவமை ஈடே" என்ன வேண்டு மத்தனை. மணிப்ரவாள நடையில் மற்றும் பலவாசிரியர்களுமெழுதியுள்ளார்களெனினும், இவருடைய ரசநாவைகரி தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுது மொத்து விளங்குமழகு அநுபவ ரஸிகர்களுக்கே அறியவெளிது. அர்த்தம் தெரியாமற் போனாலும் பங்க்தி ஸந்நிவேசத்தை ஸேவித்த மாத்திரத்திலே இரும்புபோல் வலிய நெஞ்சும் இறையிறை

யுருகும். பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுத வேண்டிய பொருள்க
ஒரு வரியில் வெகு கம்பீரமாக அடக்கி யெழுதுந்திறன் இவ்வாசிரியர்க்கேயா

216. மணவாள மாமுனிகள் இவ்வாசிரியர்க்கு வள்ளல் என்று விசேஷணமிட்ட
ளினுர். [உதாரர் என்றபடி.] ஔதார்யம் மிக்கவர்கள் உலகில் பலர் புகழ் பெ
றிருந்தாலும் இவரொருவருடைய ஔதார்யமேஉண்மையில் கொண்டாடத்தக்கது
ஒப்புயர்வற்றதுமாம். ஏற்கெனவே திருக்குருகைப் பிரான் பிள்ளானருளிச் செய்
ஆருயிரப்படி வியாக்கியானமும், நஞ்சீயரருளிச் செய்த ஒன்பதினுயிரப்படி வியா
கியானமும் இருந்தாலும் அவை மிகவும் ஸம்க்ஷிப்தங்களாகையாலே, அநுபவ ர
கர்களுக்குப் பரிபூர்ண த்ருப்தியை விளைக்கப் போதாதவை. * நம்பிள்ளை தம்
டைய நல்லருளாலேவியிடப் பெரியவச்சான் பிள்ளை யருளிச்செய்த இருபத்து நால
யிரப்படி வியாக்கியானம் அவைபோலே ஸம்க்ஷிப்த மன்றிக்கே சிறிது விரிவாக
யிருந்தாலும், ஈடு முப்பத்தாருயிரப்படி திருவவதரித்தபின்பு அதுவும் ஸம்க்ஷி
தமே யென்னும்படியாயிற்று. அனேக ஸ்தலங்களில் இருபத்து நாலாயிரப்ப
பங்க்திகளும் ஈட்டுப் பங்க்திகளும் ஒற்றுமைப் பட்டிருக்கையாலே முன்னமவதரி
ததான அந்த வியாக்கியானத்தைத் துணைகொண்டே ஈடு எழுதியருளப் பட்
தெனத் தெரிகின்றது. ஆயினும், ஸ்ரீஸூக்தி காம்பீர்யமும் அர்த்த பௌஷ்கல்யமு
ஈட்டுக்கு அநிதர ஸாதாரணமாயிருப்பது பற்றியே இதுவே எங்கும் காலக்ஷேப
ரந்தமாகக் கொள்ளப்பட்டுக் குலாவப் பெறுகின்றது. ஸ்ரீராமாயணம் முதல்
இதிஹாஸ புராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்குப் பல பல ச்லோகங்க
யெடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்கியானஞ் செய்தருளுமழகு ஈட்
குச் சிறந்த அணிகலன்.

217. திருவிருத்தத்திற்கும் இங்ஙனே ஈடு வியாக்கியானம் அமைந்துளது. அ
டச்லோகி பெரியபடி வியாக்கியானத்திலே "வடக்குத் திருவீதிப் பிள்ளை அஷ்ட
க்ஷர தீபிகையிலே அருளிச் செய்தருளினுர்" என்று காண்கையாலே அஷ்டாக்ஷ
தீபிகை யென்கிற க்ரந்தமும் இவ்வாசிரியரது க்ருதி யென்று தெரியவருகின்ற
(அது லுப்தம்). இப்பேராசிரியருடைய பெருமைகளில் ஒன்றே நாம் உ
குழைந்து போற்றத்தக்கது; அதுயாதெனின்; உலகுக்கெல்லாமுயிரான பிள்ளைலோக
சார்யரையும் அழகியமணவாளப்பெருமாள்நாயனுரையும் பெற்றுக்கொடுத்ததே.

வடக்குத் திருவீதிப் பிள்ளை வைபவம் முற்றிற்று.

௰ பெரியவாச்சான் பிள்ளை வைபவம்

218. ஆவணி மாதத்து ரோஹிணி நக்ஷத்திரத்தில் பூர்வசிகி ஸந்ததியில் திருவ
தரித்தவர் பெரிய வாச்சான்பிள்ளை. இவ்வாசிரியருடைய சரித்திர வரலாறுகளை
பற்றியும் விசேஷமாக அறியப் பெறுகின்றிலோம். இவர் தம்மால் உலகு
விளைந்த மஹோபகாரம் அபரிமிதமாதலால் அதைப்பற்றியே சிறிது பேசியு
போம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கெல்லாம் மிகச் சிறந்த வியா
யானமும், ஸ்ரீராமாயணத்தில் பல பல ச்லோகங்களுக்கு இன்சுவையே எ
வெடுத்த வியாக்கியானமும் ஸ்தோத்ர ரத்நாதி வியாக்கியானங்களும் இவ
ளிச் செய்தவை. இவருடைய அப்ரதிமமான பாண்டித்யத்தையும் அப்ரமேயமா
மேதாப்ரதிபா விலாஸத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. வடக்குத் திருவீ
பிள்ளையுமிவரும் நம்பிள்ளை திருவடிகளில் ஸப்ரஹ்மசாரிகளாக வாழ்ந்து
லார்த்தங்களையும் ஸம்சய விபர்யயமறக் கற்றவர்கள். நம்பிள்ளை ஸகல சாஸ
ரங்களையும் வரியடைவே அதிகரித்து அந்தப் பாண்டித்யம் முழுவதையும் அரு
செயற்பொருளுபந்யாஸங்களிலே உபயோகப் படுத்தி வந்தாரென்பது ப்ரஸித்த

அவ்வண்ணமாகவே இவ்வாசிரியரும் ஸகல சாஸ்த்ரஜ்ஞராகித் தமது ஞான விளக்கத்தை வியாக்கியானங்களருளிச் செய்வதில் வெகுஅழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மஹோபகாரகர்களில் தலைமை ஸ்தானம் பெற்றருளினர்.

219. மதாந்தரஸ்தர்களில் பட்டபாஸ்கரரும் வித்யாரண்யரும் வேத பாஷ்யங்களை விபுலமாகவெழுதிப் புகழ்பெற்றவர்களே. ஆனாலும் அந்த பாஷ்யங்களானவை பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானங்களின் முன்னிலையில் பகல் விளக்கும் மின்மினியுமாயிருக்கும். அந்த வேத பாஷ்யங்கள் சுமை சுமையாக இருந்தாலும் இன்னது சொல்லிற்றென்று ஒருவர்க்கு மறியப்போகாது. மூலத்தில் ரஸமிருந்தாலன்றோ பாஷ்யத்தில் ரஸங்காண முடியும். காடு பரந்த கர்ம காண்டங்கள் கர்ம நிஷ்ணுதர்களுக்கும் உபயோகமற்றவையாயுள்ளன. பகவத்குண ப்ரசம்ஸை யென்பது ஓரிடத்திலும் அணுமாத்திரமும் காணமுடியாதது. பகவத்குண ரஸிகர்களுக்கு அவை கொண்டு பயனொன்றுமில்லையே. அப்படியன்றிக்கே த்ராவிட வேத பாஷ்யகாரரான பெரிய வச்சான் பிள்ளையின் ஸ்ரீ ஸூக்தி ஒவ்வொன்றும் பகவத் குணாநுபவத்தாலல்லது போது போக்கவறியாத முமுக்ஷுக்களுக்கு ரஸாயநமாயிருக்கும். பகவத் விஷயத்தில் சேராமல் பாஹ்ய விஷயங்களைப் பற்றிப் பேசினாலுங்கூட பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் மிகமிக அதிசயிக்கத் தக்கதாயிருக்கும். ஒன்றே இங்கெடுத்துக் காட்டுவோம்.

220. பெரிய திருமொழியில் திருநறையூர் விஷயமான பாசுரங்களுள் (6—7—4) *மென் மலர் மேல் களியாவண்டு கள்ளுண்ணக் காமர் தென்றல் அலர் தூற்ற, நளிர் வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர்* என்பது ஒரு பாசுரம். இது சாதாரணமாகச் சோலைகளில் நடக்குஞ் செய்தியைச் சொல்லுவது. வண்டுகள் மதுபானம் பண்ணுவதும் தென்றற்காற்று தூற்றுவதும் முல்லை வாய்திறப்பதுமான ஸம்பவம் சொல்லியிருக்கிற விது ஸ்வபாவோக்தி. ஆனாலும் இங்குச் சொற்சேர்க்கையமைந்த அழகை நோக்கிப் பெரிய வாச்சான் பிள்ளை தமது வியாக்கியானத்தில் அருளிச் செய்திருப்பதாவது “ [மென் மலர் மேலித்யாதி.] கண்ட விடமெங்கும் பரப்புமாறப் பூத்துக் கிடக்குமிறே; அதிலே மதுபாநார்த்தமாகக் கிட்டின வண்டுகள் அத்தைக் கிட்டப்பெற்ற ஹர்ஷத்தாலே களித்து நிஷித்த ஸேவைபண்ணுவாரைப்போலே மதுபானத்தைப் பண்ணிற்றின. அத்தைக் கண்ட தென்றல் நாட்டிலே பழியைத்தூற்றிற்று· அத்தைக் கண்ட முல்லை, புகுந்த ப்ரமாதத்தை யநுஸந்தித்து ‘அதுதான் அப்படி செய்கிறது, இதுதான் இப்படி செய்யக்கடவதோ வென்று வாய்விட்டுச் சிரிக்க மாட்டாமை ஸ்மிதம் பண்ணிற்று” என்று; இதனை நாமே விவரிப்போம்: வண்டு கள்ளுண்ணதாகவும் தென்றல் அலர் தூற்றினதாகவும் முல்லை முறுவலித்ததாகவும் மூலத்திலுள்ளது. ‘அலர் தூற்றுதல்’ என்னுஞ் சொல்லுக்குப் புஷ்பங்களைத் தூற்றுதலென்கிற பொருளேயல்லாமல் பழி தூற்றுதலென்கிற பொருளுமுண்டாதலால் அதைக்கொண்டு ரஸோக்தியாக இங்கு மிகவழகிய வியாக்கியானம்செய்தருளுகிறபடி. வண்டு என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சொன்னபடியாய்; அவன் ஏதோ விதிவசத்தால் கள்ளுண்ண நேர்ந்துவிட்டதாம்; அதைக் கண்டவொருவன், கள்ளுண்டான் கள்ளுண்டானென்று நாட்டிலே பழி தூற்றப் புறப்பட்டானாம்; இவ்விரண்டையுங் கண்டவொரு சுத்த ஸாத்விகன் ‘ஏதோ விதி வசத்தால் ஒருவன் ஒருகால் மதுபானம் பண்ண நேர்ந்துவிட்டால் அதைப்பற்றி இப்படியும் ஒருவன் பழி தூற்ற வேணுமோ? இவ்விருள் தருமாஞாலத்தில் இது ஸஹஜந்தானே யென்று வாளாவிருக்கலாகாதோ வென்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல் இவையென்ன வுலகியற்கை!’ என்று புன் சிரிப்புச் செய்கிறானாம். எப்படிப்பட்ட அதிகாரிக்கும் ஒரு நிஷித்த காரியஞ் செய்யநேர்ந்து விடுவது ஸஹஜமென்றும், அதைப்பற்றி யொரு

வன் பழி தூற்ற நேருவதும் ஸஹஜமென்றும், 'இதுவொரு ப்ரமாதமா? இதைப் பழி தூற்றவேணுமோ?' என்று சில மஹான்கள் நினைப்பது முண்டென்றும் லௌகிக ஸந்நிவேச முணர்த்தியதாக வியாக்கியானங் கண்டது விலக்ஷண மேதா விலாஸம். இஃது ஓர் எடுத்துக் காட்டாக ஈண்டமைக்கப்பட்டது. அத்யாத்ம சாஸ்த்ரார்த் தங்கள் அபரிமிதமாகக் காண்பதோடு இத்தகைய லௌகிக வாக் விந்யாஸங்களும் விபுலமாகக் காணப்படும் பெரியவாச்சான்பிள்ளைவியாக்கியானங்களில்.

221. திவ்வியப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானமிட்டருளுந் திருப்பணியில் மற்றுஞ் சில ஆசார்யர்களும் கை வைத்ததுண்டு. ஆனால் பூர்த்தியாக நாலாயிரத்திற்கும் வியாக்கியானமிட்டருளினவரென்னும் பெருமை இவ்வாசிரிய ரொருவர்க்கே அஸாதாரணமாக அமைந்ததாகும். இவ்விஷயம் உபதேச ரத்தின மாலையில் "பிள்ளான் நஞ்சீயர் பெரிய வாச்சான்பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாள யோகி திருவாய் மொழியைக் காத்த, குணவாளரென்று நெஞ்சே கூறு" "நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு, எஞ்சாமை யாவைக்கு மில்லையே- தஞ்சீரால் வையகுருவின் தம்பி மன்னுமணவாள முனி, செய்யுமவை தாமுஞ்சில" "பெரியவாச்சான் பிள்ளை பின் புள்ளவைக்குந்தெரிய, வியாக்கியைகள் செய்வால்- அரிய அருளிச் செயல் பொருளை ஆரியர்கட்கிப்போது, அருளிச் செயலாய்த்தறிந்து, என்ற பாசுரங்களினாலு முணரத்தக்கது. பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியர் தம் வியாக்கியானம் லுப்தமாயிருந்த தென்றும், மணவாள மாமுனிகள் பலருடைய பிரார்த்தனைக்கிணங்கி அக்குறையைத் தாம் நீக்கியருளின ரென்றும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பகர்வர்.

222. கடல் ரத்நாகரமென்று பெயர் பெற்றிருத்தல் போல இவ்வாசிரியரது வியாக்கியானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்த ரத்ன நிதியாகப் புகழ் பெற்றுள்ளதாதலால் அதனை யநுபவிப்பதே இவ்வாசார்யருடைய பெருமை யநுபவம்.

223. அர்த்தாத் இங்கொரு முக்கியமான விஷயம் விளக்க வேண்டியதாகிறது. நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் பெரிய வாச்சான் பிள்ளை யென்றும் ஆச்சான் பிள்ளை யென்றும் வ்யபதேச பேதம் காண்பதுண்டு. பெரிய வாச்சான் பிள்ளையின் ஸம காலத்தவர்கள் சிலர் இவரை ஆச்சான் பிள்ளை யென்றும் வழங்கி யிருந்தாலும் பிற்பட்டவர்களான மணவாள மாமுனிகள் போல்வார் இவரை ஆச்சான் பிள்ளை யென்ற சொல்லால் ஓரிடத்திலும் வழங்கினதில்லை. மணவாள மாமுனிகள் தமது ரஹஸ்ய வ்யாக்யாநாதிகளில் ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தியாகப் பல விடங்களிலும் எடுத்துக் காட்டியுள்ளவை பெரிய வாச்சான் பிள்ளை யுடையனவே யென்று நாமும் மயங்கியிருந்து பன்னிரு திங்களனுபவம் முதலான சில நூல்களிலே ஆச்சான் பிள்ளை யருளிச் செயலான பரந்த ரஹஸ்யாதிகளையும் பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செயலாக வெழுதி யிருந்தோம். பிறகு நிகழ்ந்த விபுலமான ஆராய்ச்சிகளினால் தேறின தெளிவுகளை ஆச்சான் பிள்ளை யஷ்டாத்யாயி முதலான விமர்ச க்ரந்த முகேந உலகுக்கு விளக்கியிருக்கிறோம். அவற்றில் நிரூபித்த பலபல ஹேதுக்

களில் இரண்டு மூன்றை மாத்திரம் இங்கெடுத்துக் காட்டி நிற்போம். பரந்த ரஹஸ்யம் முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களையும் பெரிய வாச்சான் பிள்ளையே விரிவாக அருளிச் செய்திருந்தால் உபதேசரத்தின மாலையில் திவ்யப் பிரபந்த வியாக்கியான விஷயத்தில் பெரிய வாச்சான் பிள்ளைக்கு மஹத்தான கௌரவத்தைக் காட்டி விட்டு ரஹஸ்யார்த்த ப்ரகாசன விஷயத்தில் பிள்ளை லோகாசாரியர்க்கு மஹத்தான பெருமையை விளக்கியிருப்பது விரஸமாகும். ரஹஸ்யார்த்தங்களையும் பெரிய வாச்சான் பிள்ளையே ப்ரபஞ்சனம் செய்தருளினரென்று ஒரு பாசுரமாவது அவசியம் அருளிச் செய்திருக்க வேண்டும். மாமுனிகள் இதை உபேக்ஷிக்க ப்ரஸக்தியே கிடையாது. ரஹஸ்யார்த்தத்திற்காகப் பெரிய வாச்சான் பிள்ளையைப்பற்றி ஒரு பாசுரங்கூட அருளாமையாலும் அது பற்றிப் பிள்ளை லோகாசாரியர்க்கே ஏழு பாசுரங்கள் அருளிச் செய்திருக்கையாலும் அவ்வுலகாசிரியர்க்குப் பிற்பட்டவரே பரந்த ரஹஸ்யாதி க்ரந்த கர்த்தாவென்பது தெளிவாகும். நம்பிள்ளை திருவடிகளில் நேராகக் கேட்டவரும் பல விதங்களிற் பெருமை பெற்றவருமான பெரிய வாச்சான் பிள்ளையே பரந்த ரஹஸ்யாதிகளை யருளிச் செய்திருந்தால்அவருடைய கிரந்தங்களை விட்டு பிள்ளை லோகாசாரியருடைய முமுக்ஷுப்படி முதலான க்ரந்தங்களையே எங்கும் யாவரும் காலக்ஷேபக்ரந்தமாகக் கொள்ள ப்ரஸக்தியேயிராது. ஆச்சான் பிள்ளை ஸந்ததியாரென்று சொல்லிக் கொள்பவர்களுங்கூட இற்றைக்கும் நாளைக்கும் பரந்த ரஹஸ்யாதிகளின் பெயரையும் கேட்டறியாதவர்களாக வன்றோ உண்மையுள்ளது. அன்றியும், பரந்த ரஹஸ்யத்தில் வேதாந்தாசார்யருடைய சில வாதங்களுக்கு மறுப்பு உரைக்கப்பட்டு மிருக்கிறது. பெரிய வாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளை மேற்கோள் காட்டும் வேதாந்தாசாரியர் பெரிய வாச்சான் பிள்ளைக்குப் பிற்பட்டவரென்பது நிர்விவாதம். அவருடைய உக்திகளுக்கு விடை கூறுகின்ற பரந்த ரஹஸ்யகாரர் பெரிய வாச்சான் பிள்ளையாயிருக்கத் தகுதியில்லை. ஆகவே, வேறோராசிரியருடைய க்ரந்தங்களைப் பெரியவாச்சான்பிள்ளையின் க்ரந்தங்களாகக் கொள்வது அநுசிதமென்று பெரியார்களின் துணிவு.

224. பெரிய வாச்சான் பிள்ளையின் கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகள் அமுதிலுமாற்ற வினியவை. இவ்வாசிரியர் அவதரியாதிருந்தால் ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்கு ஆனந்தானுபவம் மிகவும் குன்றியேயிருக்கும். இவரது திருவடிகளே நமக்குத் தஞ்சம். .... *

(7) பிள்ளைலோகாசாரியர்வைபவம்

225. ஐப்பசியில் திருவோணத்தன்று அவதரித்த பரமகாருணிகரான இவ்வாசிரியரின் பெருமையைச் சிறிது பேசி மகிழ்வோம். இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானப் பெருமைகள் ஒரு புறமிருக்க, பரமகருணையின் திறத்தை என்னென்று பகர்வது! ஆசாரியர்கள் பொதுவாக இருவகைப்படுவர்கள்; 1. அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் என்றும் 2. க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்களென்றும். சிஷ்யர்கள் பலகால் துவண்டு வேண்ட அதனாலே அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களாவர்; சிஷ்யப்ரார்த்தனையைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கையின்னருளால்

தாமாகக் கனிந்து *பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்* என்ற கணக்கிலே தாமாகவே அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்கள்.

226. நமது ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானார் தாம் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்கிற பட்டத்தை முதன்மையாகப் பெற்றவர். ஆயினும் அவர் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும் அருளிச் செய்தாரல்லர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களை யருளிச்செய்தவவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறு நூலாவது அருளிச் செய் திருக்கலாம். இன்னுமொரு திருக்கோலம் பூண்டு [அதாவது—மணவாளமாமுனி களாக அவதரித்து] மிக விரிவாக அருளிச்செய்ய வேணுமென்று திருவுள்ளம்பற்றி யிருந்தமையாலே ஸ்ரீ ராமாநுஜரான அந்த அவதாரந்தன்னிலே ரஹஸ்யார்த்தங் களை ஏடுபடுத்தாமே சென்றனர்; ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம் கத்யத்ரயம் முதலிய திவ்யக்ரந்தங்களில் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப் பட்டே யிருந்தாலும் அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித் தாராத குறை குறையே. அக்குறை தீரவே ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான இப் பிள்ளையுலகா சிரியர்தாமே முதன்முதலாகஸ்ரீவைஷ்ணவ மண்டலிக்கு மஹோபகாரஞ்செய்தருளி னார். லோகாசார்யரென்கிற திருநாமம் இவர்க்கேதகும். இவ்விருள் தருமாஞாலத் தின் அகவிருளை அறவேயொழிக்கவல்ல திவ்ய ஸ்ரீ ஸூக்திகளைத் தேனும் பாலும் நெய்யுங்கன்னலு மமுதுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர். இவருடைய ஸர் வஜ்ஞத்வமும் பரமகாருணிகத்வமும் பரம ப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைப்பரிதே. ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமின்றிக்கே ஆசார்யபரம்பரா ப்ராப்தமான அர்த்தங்களையே அற்புதமாக அமைத்திருக்குமழகு இவருடைய க்ரந் தங்களுக்கே அஸாதாரணச் செல்வமாயிருக்கும். இவரருளிச் செய்த நூல்கள் அஷ்டாதச ரஹஸ்யமென்று ஸுப்ரஸித்தமாயிருக்கும். அவற்றுள் ஒப்பில்லாத திவ்யசாஸ்திரம் ஸ்ரீ வசனபூஷணம். .... *

(9) நிகமாந்தகுரு வைபவம்

227. நம்மிராமாநுச தர்சனத்தை வளர்த்தருளின ஆசார்யர்களில் ஸ்ரீ மந்நிக மாந்த மஹாகுரு சிறந்த ஸ்தானம் பெறுவர். இவர் பல படிகளாலும் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பெருமைப் படுத்தினவர். ஸ்ரீ பாஷ்யத்திற்குக் காப்பாகப் பல பல க்ரந்த ரத்தினங்களை யருளிச்செய்தும், ஸ்ரீ பாஷ்யத்தைப் பலகால் ப்ரவசநஞ் செய் தருளியும், ஸ்ரீ பாஷ்யார்த்த தூஷகர்களைப் பலவாறு கண்டித்தும்; ஸ்ரீ பாஷ்யகார ரைப் பல பல ச்லோகங்களால் ஏத்தியும்—இப்படியே தமது வாழ்நாளைக் கழித் தருளின மஹாநுபாவர் இவர். ந்யாயஸித்தாஞ்ஜநம், தத்வ முக்தாகலாபம், ஸர் வார்த்தஸித்தி, அதிகரண ஸாராவளி, தத்வடீகா, சததூஷணீ, தாத்பர்ய சந்த்ரி கை—இத்யாதிகளான பல உத்க்ரந்தங்கள் நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத் திற்கு அணி விளக்காக அவதரித்தவை. இவர் முப்பது தடவை ஸ்ரீ பாஷ்யப்ரவசநத்

செய்தருளினவர் என்பது ஸங்கல்பஸூர்யோதயத்தில் இவர் தாமே பணித்த *த்ரிம்சத்வாரம் ச்ராவிதசாரீரகபாஷ்ய:* என்ற ச்லோகத்தினால் விளங்கும். ஞானம் அனுட்டானம் வைராக்யம் முதலிய ஸகலகுணங்களிலும் நிகரற்ற இப்பேராசிரியருடைய சரித்திர வரலாறுகளைப்பற்றிச் சுருக்கமாகவும் விரிவாகவும் பல நூல்களை வெளியிட்டிருக்கிறேன். வேதாந்ததேசிகக்ரந்தமாலையைப் பதிப்பித்தேனாகிலும் அது இப்போது துர்லபம்: மறுபதிப்புச்செய்ய மிக்க விருப்பமுடையேன். நித்யஸ்ரீர் நித்யமங்களம். *

மணவாள மாமுனிகள் வைபவம்

228. ஐப்பசியில் திருமூலத்தன்று அவதரித்தருளின இவ்வாசார்ய ஸார்வபௌமருடைய அமுதிலுமாற்றவினிய பெருமையை இன்று நாம் புதிதாகப் பேசப் போகிறோமோ? எத்தனை தடவை பேசினாலும் *அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதமே* என்னும்படியாக விருக்கும் இவர் பெருமை. எம்பெருமானார் அவ்வவதாரத்திலே சேஷித்திருந்த காரியங்களை நிறைவேற்றுவதற்கென்றே இங்ஙனேயொரு திருக்கோலம் மீண்டும் பூண்டபடி. பெரும்பாலும் வியாக்கியான க்ரந்தரத்னங்களை யருள்வதிலேயே இரண்டவதாரத்திலும் முழு நோக்கு. அத்யுக்தி அதிசயோக்தி யென்னும்படியான வசனவ்யக்திகளைக் கனவிலுமறியாமை இரண்டவதாரத்திற்கும் அஸாதாரணமஹிமை. மயங்கவைத்தல் வலிந்து கூறல் நலிந்து பொருள் கொள்ள வேண்டுதல் முதலிய குற்றங்களுக்குச் சிறிதும் இடம் தாராமே தெள்ளமுதெனும் திவ்யஸ்ரீஸூக்திகளை அருளுந்திறன் இவ்விரண்டவதாரத்திலேயே கண்டதாகும்.

229. கீழே பிள்ளைலோகாசார்யரைப் பரமகாருணிகரென்று புகழ்ந்தோம். மணவாளமாமுனிகள் திருவவதரியாவிடில் அவருடைய பரமகாருணிகத்வமும் *கன்னவிலுங் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின் நன்னறுவாசம் மற்றாரானுமெய்தாமே மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோலாகுமத்தனை. அவ்வாசிரியர் அருளிய அஷ்டாதச ரஹஸ்யங்களுள் தலைசிறந்து விளங்கும் முமுக்ஷுப்படி தத்வத்ரயம் ஸ்ரீவசநபூஷணமென்னும் மூன்று ரஹஸ்யங்களுக்கு இவருடைய வியாக்கியானங்களில்லையேல் இம்மாஞாலம் இருள் தருமாஞாலமேயென்னத் தட்டுண்டோ?

230. மாமுனிகளுக்கு விசதவாக் சிகாமணி யென்றொரு பிருதம் வழங்கிவருகின்றது; இதனை முதன் முதலாக அளித்த மஹாநுபாவர் யாரோ அறிகின்றிலோம், மருமமறிந்து அளித்த அந்த விருது இவ்வாசார்ய சிகாமணியொருவர்க்குத்தான் ஏற்கும். நீறுபூத்த நெருப்பு என்ன நின்ற இவ்வாசிரியரின் திருவாக்குப்போல் இவ்வுலகில் இதுகாறும் கண்டதில்லையென்றால் இனிமேலா காணப்போகிறோம். இவருடைய திவ்ய மங்கள விக்ரஹமும் திருவுள்ளமும் ஸத்வ குணமொன்றே வடிவெடுத்ததாயிருந்த தென்பது இவரது திருவாக்குகளில் அக்ஷரந்தோறும் புலப்படா நின்றது. ஸகலசாஸ்த்ரார்த்தங்களையும் வெகு அழகாகத் திருவுள்ளத்திலே யடக்கிக்கொண்டு நாட்பூ அலர்ந்தாற்போலே ஸ்ரீஸூக்திகளை ஏற்றக் குறைவின்றி

அமைத்திருக்கிற அழகுகாண என்னே! என்னே!! என்று உள்ளம் குழைகின்றதத் தனே. விமர்சசக்தி, நிரூபண நைபுண்யம் என்றிங்ஙனே சொல்லும்படியான திறமை யெல்லாம் மிக வியக்கும்படியான முறையில் இவர் தம்முடைய வியாக்கியான ஸ்ரீஸூக்திகளிலே தானுள்ளது.

231. பல சொல்லி என்? ஸாரமாக வொன்று சொல்லித் தலைக்கட்டுவோம். *அப்திர் லங்கித ஏவ வாநரபடை: ....என்று முராரியென்கிற வொரு மஹா கவி சொல்லுகிறார் —வாநரவீரர்கள் கடலைக்கடந்து அப்பால் சென்று விட்டார் களெனினும் கடலின் ஆழத்தை அவர்கள் சிறிதும் அறியகில்லார்கள். கடலினுள் ளே பாதாளம் வரையில் அமிழ்ந்து கிடந்த மந்தர மலைக்கன்றோ அந்த ஆழம் தெரியும்—என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. ஜ்ஞாதாக்களென்று பேர்படைத்த மற்றவர்களெல்லோரும் வானர முதலிகளின் ஸ்தானத்திலேயாய் மணவாளமாமுனி களொருவரே மந்தர மலையின் ஸ்தானத்திலே யெண்ணக்கூடியவராகவுள்ளார். ஆசார்யரென்கிற சொல்லுக்கு மாமுனிகளொருவரே இலக்காமவர் என்றும், ஸூக்தி ஸ்ரீ ஸூக்தி திவ்யஸூக்தி திவ்ய ஸ்ரீஸூக்தி என்றிங்ஙனே சொல்லும் சொற்களெல் லாம் மாமுனிகளின் திருவாக்கையேதான் இலக்காகக் கொள்ளத்தக்கவை யென் றும் நிஷ்பக்ஷபாதர்களின் ஸித்தாந்தம்.

232. *செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடவும், சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடவும், மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடவும், மாசறு ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடவும், கந்த மலர்ப்பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடவும், காரமர்மேனி யரங்கநகர்க் கிறை கண்கள் களித்திடவும் இந்த நிலந்தனில்வந்து உதயஞ்செய்த பரமாசார்ய ரன்றோவிவர், நமது ஆழ்வார்களும் ஆசாரியர்களுமெல்லாரும் ஒருங்கே திரண்டு அவதரித்த அவதாரமான இம் மாமுனிகளின் தனியனையும் வாழித் திருநாமங் களையும் இப் பரத கண்டம் முழுவதும் அநுஸந்தித்து உஜ்ஜீவனம் பெறுகின்றது.*

நவரத்ன நவநிதியில் ஆசார்ய வைபவ விவரணபரமான இரண்டாவது நிதி முற்றிற்று.

—இனி அடுத்த நிதிகள் ஏழும் ரஹஸ்யார்த்த விவரணபரங்கள்—

நவரத்ன நவநிதியில் மூன்றாவதுநிதி-திருமந்த்ரார்த்த ஸாரம்.

233. முமுக்ஷுக்களுக்கு உபஜீவ்யங்களான ஸகல க்ரந்தங்களினுள்ளும் ரஹஸ்ய க்ரந்தங்களே மிகச் சிறந்தவை. ரஹஸ்யார்த்தங்களில் தெளிவுள்ளவர்களுக்கே இதி ஹாஸ புராணாதிமஹார்த்தங்களும் பகவத்விஷயார்த்தங்களும் ரஸிக்கும். ஆகவே ரஹஸ்யார்த்தங்களில் தெளிவுபெற வேண்டியது முக்கியம். திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களின் பொருளை பட்டர் அஷ்டச்லோகி யென் கிற வடமொழிச் சிறுநூலில் அதிஸம்க்ஷேபமாகவருளிச் செய்தார். தேவப்பெரு மாளுடைய அபராவதார பூதரும், வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரரும்

ஸர்வஜ்ஞருமான பிள்ளை லோகாசாரியர்தாம் ரஹஸ்யார்த்த விவரணக்ரந்தங்களை மிக விரிவாகவும் அழகாகவும் அநவத்யமாகவும் அருளிச் செய்தவ ரென்பது புநருக்தம். அஷ்டாதசரஹஸ்யமென்று ஸுப்ரஸித்தமான க்ரந்தஜாலம் பிள்ளை லோகாசாரியர் பணித்ததென்பதும் புநருக்தம்.

234. உபதேச ரத்தினமாலையில் *ஓராண் வழியாய்* என்னும் பாசுரத்தில்*ஏரா ரெதிராசரின்னருளாலென்று தொடங்கிப் பரமகாருணிகராகப் போற்றப்பட்ட எம்பெருமானார்தாமும் ப்ரபந்தரூபேண வெளியிட்டருளாமல் மறைத்து வைத்திருந்த மஹார்த்தங்களைப் பிள்ளைலோகாசாரியர் ஒருவரே பல பிரபந்தங்களினுல் வெளியிட்டருளினவராதலால் க்ருபா மாத்ரப்ரஸந்நாசார்யர்களில் எம்பெருமானுரைக் காட்டிலும் இவரே முதல் ஸ்தானம் பெற்றவராவர். இப்பேராசிரியர் மூல மருளிச் செய்திருந்தும், ஸூத்ரம் போன்ற அந்த திவ்ய ஸூக்திகளின் பொருளையும் கருத்தையுமறிவதற்கு எளிய வழியில்லாதிருந்தகாலத்தில் விசதவாக்சிகாமணிகளான மணவாளமாமுனிகள் தேனும் பாலுமமுதுமான வியாக்கியானங்களையிட்டருளி மஹோபகாரம் செய்தருளினவராதலால் பிள்ளை லோகாசாரியரையுங் காட்டில் மணவாளமாமுனிகளே பரமகாருணிகரென்று போற்றுதற்குரியராவர். மாமுனிகளின் வியாக்கியானங்கள் திருவவதரிக்க வில்லையென்றால் உபயவேதாந்தங்களிலும் மற்று எத்தனை க்ரந்தங்கள் அவதரித்திருந்தும் அவை பகல்விளக்கு என்னத்தக்கவையேயாகும்.

235. பிள்ளை லோகாசாரியர் அருளிய அஷ்டாதச ரஹஸ்யங்களுள், யாத்ருச்சிகப்படி, பரந்தபடி, ச்ரியஃபதிப்படி என்னும் க்ரந்தங்கள் ரஹஸ்யத்ரய வியாக்கியானமாக அவதரித்திருந்தவைகளிருந்தாலும் முமுக்ஷுப்படி யென்னும் திவ்யக்ரந்தமே பலபடியாலும் பெருமை பெற்று விளங்கா நின்றது. மற்ற க்ரந்தங்கள் அதிஸங்க்ரஹம், அதிக விஸ்தரம், ஸம்ஸ்க்ருத வாக்ய பாஹுள்யம் முதலியவற்றால் குறைபெற்றிருக்குமென்றும், அவ்வகைக் குறைகளுக்கு இடமின்றியே அவை யெல்லாவற்றுக்கும் பின்பு முமுக்ஷுப்படி யென்னும் திவ்யக்ரந்தம் அருளிச் செய்யப்பட்டதென்றும், இதன் சீர்மையைக் கண்டு ஆஸ்திகர்கள் அனைவரும் இந்த க்ரந்தரத்னத்தையே விசேஷித்துப் பரிக்ரஹிக்கலாயினர் என்றும் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியிலிருந்து அறியக்கிடக்கின்றது. மற்ற க்ரந்தங்களில் அருளிச் செய்யப்படாத பல அபூர்வ விஷயங்களும் இதனில் குடிகொண்டிருக்கின்றன வென்பதும் இதற்குத் தன்னேற்றம். .... *

பகவன்மந்த்ரங்களின் பாகுபாடும் திருமந்த்ரத்தின் சிறப்பும்.

236. திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களும் முமுக்ஷுக்களுக்கு நித்யாநுஸந்தேயங்கள். இவற்றுள் திருமந்த்ரமென்கிறது ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹா மந்த்ரம். இது ஸ்ரீபதரிகாச்ரமத்திலே வெளியிடப்பட்டது. எம்பெருமானைப் பற்றின மந்த்ரங்கள் அபரிமிதங்களாயிருக்கும். அவற்றுள் வ்யாபகமந்த்ரங்களென்றும் அவ்யாபகமந்த்ரங்களென்றும் இரு வகுப்புண்டு. பகவானுடைய ஸர்வத்ர வ்யாப்தியைத் தெரிவிக்கும் மந்த்ரங்களே வ்யாபக மந்த்ரங்களெனப்படும்.

அவை எவை யென்னில், விஷ்ணு மந்த்ரம், வாஸுதேவ மந்த்ரம், நாராயண மந்த்ரம் என்பவை. இம்மூன்று மந்த்ரங்களே பகவானுடைய மற்றெல்லா மந்த்ரங்களிற் காட்டிலும் சிறந்தவை. இம்மூன்றினுள்ளும் நாராயண மந்த்ரமே மிகச் சிறந்தது. விஷ்ணுமந்த்ரமானது ஆறெழுத்துடையதாகும். வாஸுதேவ மந்த்ரமானது பன்னிரண் டெழுத்துடையதாகும். நாராயண மந்த்ரமானது எட்டெழுத்துடையதாகும். இதனையே திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரமென்பர். இதன்பெருமையையேஆழ்வார்கள்“எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே” என்பது முதலான பல பல பாசுரங்களினால் வெளியிட்டுள்ளார்கள்.

திருமந்த்ரத்தின் முதற் பதமான ப்ரணவத்தின் பொருள்விளக்கம்.

237 இந்த மந்த்ரத்தில் முதல்பகுதி (ஓம்) என்னும் ப்ரணவம். அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றெழுத்துக்கள் சேர்ந்து (ஓம்) என்று ஒரே எழுத்தாயிற்று. ஸகல ஜகத்துக்கும் காரண பூதனும் ஸர்வரக்ஷகனுமான எம்பெருமானைச் சொல்லுகிறது அகாரம். எம்பெருமான் ஸ்ரீ மஹாலக்ஷ்மியோடு கூடியிருந்தே ரக்ஷணத் தொழிலை நடத்தவல்லனாதலால் இவ்வகாரத்திலே பிராட்டியையும் சேர்த்து அநுஸந்திக்க வேணுமென்பது நூற் கொள்கை. அகாரத்தின் மேல் நான்காம் வேற்றுமையுருபு ஏறியிருந்து அது வேதத்திற்கு உரிய இலக்கணத்தினால் லோபமடைந்துவிட்டது. அதன் பொருள் உரிமைப்பட்டிருத்தல் (சேஷத்வம்)ஆகும். மூன்றாவதான எழுத்தாகிய மகாரத்திற்கு அறிவுள்ளவனான [சேதனனாகிய] ஜீவாத்மா அர்த்தமாதலால் ஜீவாத்ம ராசிகளெல்லாம் பகவானுக்கும் பிராட்டிக்கும் சேஷப்பட்டவை என்றதாயிற்று.

238. இடையில் இருக்கின்ற உகாரத்தின் பொருள் யாதெனில் வடமொழியில் அவதாரணப்பொருள் எனப்படும்; தமிழில் பிரிநிலைப் பொருளெனப்படும்.ஸ்ரீமந்நாராயணனுக்குத் தவிர மற்ற எவர்க்கும் சேஷப்பட்டவனல்லன்என்றதாகத் தேறிற்று. உலகில் ஒருவனுக்கு உரியவனானவன் மற்றும் பலர்க்கும் உரிமைப் பட்டிருத்தலைக் காணா நின்றோம். இங்கு அப்படியல்லாமல் நாராயணனுக்கு சேஷப்பட்டவன் நாராயணனுக்கேயன்றி மற்றொருவற்கும் சேஷப்பட்டவனல்லன் என்றதாயிற்று. இதுதான் உகாரத்தில் தேறின பொருள். ஆக, ப்ரணவத்தினால் எம்பெருமானுக்கே உரிமைப்பட்ட தன்மையும் பிறர்க்கும் தனக்கும் உரிமைப்படாத தன்மையும் சொல்லிற்றாயிற்று.

நமः பதார்த்த விவரணத்தில் விரோதிகளின் விவரணமும் அவை கழியும் விதங்களும்

239. இனிமேல்(நமः)என்பதும் (நாராயணாய) என்பதும் நிற்கிறது. இவை மந்த்ர சேஷ மெனப்படும். இதனால் கீழ்ப் பிரணவத்தில் (ஓம் என்றதில்) சொன்ன பொருளே விவரிக்கப்படுகிறது. (நம;) என்பதனால் விரோதி கழிக்கப்படுகிறது மூன்று வகையான விரோதிகள் அறியத்தக்கன. ஸ்வரூப விரோதி யென்றும் உபாய விரோதியென்றும் புருஷார்த்த விரோதி யென்றும் விரோதிகள் மூவகைப்

படும். அஹங்கார மம காரங்களோடு கூடியிருக்கும் நிலை ஸ்வரூப விரோதி யெனப்படும். அந்த நிலையை ஆழ்வார் "யானே யென்னையறியகில்லாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்" என்ற பாசுரத்தினாலும், இந்த விரோதி கழிந்த நிலையை "யானே நீ என்னுடைமையும் நீயே" என்ற பாசுரத்தினாலும் அநுஸந்தித்துக் காட்டினர்.

240. தன்னைக்காப்பாற்றிக் கொள்ளத் தான் முயற்சி செய்கை உபாய விரோதியெனப்படும். அதுகழிந்த நிலையை ஆழ்வார் "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்" என்ற பாசுரத்தினால் காட்டினார். நமது துன்பத்தை எம்பெருமான் தீர்த்தாலும் தீர்க்காவிட்டாலும் ஒருவிதமான முயற்சியையும் செய்யகில்லோம் என்றிருக்கையே உபாய விரோதி கழிந்த நிலையாகும். இனி புருஷார்த்த விரோதியாவது, பலனையனுபவிக்கும்போது அதனால் தான் ஆனந்தப்படுகை. அது இவனுக்குத் தகாது; அந்த ஆனந்தம் எம்பெருமானுடையதே யென்று கொண்டிருக்கை—புருஷார்த்த விரோதி கழிந்த நிலையாகும். இது *மற்றை நங்காமங்கள் மாற்று* என்ற ஆண்டாள் பாசுரத்தில் காணத்தகும்.. ஆக, இம்மூன்று விரோதிகளின் கழிவும் (நம:)என்னுமதில் தெரிவிக்கப்படுகிறது.

பாகவத சேஷத்வம் உய்த்துணரும் வகையும் அதன் பெருமையும்

241. இனி (நம:) என்றவதின் ஆழ் பொருள் விவரிக்கப்படுகின்றது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பகவானுக்கு சேஷப்பட்டிருப்பதிற் காட்டிலும் பாகவதர்களுக்கு சேஷப்பட்டிருத்தல் மிகச் சிறந்ததாகக் குலாவப்படுகிறது. திருமங்கையாழ்வார் "மற்றுமோர் தெய்வ முளதென் றிருப்பாரோடுற்றிலேன், உற்றது முன்னடியார்க் கடிமை, மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே" [பெரிய திருமொழி 8-10-3] என்றருளிச் செய்துள்ள பாசுரத்தையே முக்கியமான பிரமாணமாகக்கொண்டு பாகவத சேஷத்வத்தைத் திருமந்திரத்திற்குத் தலையான பொருளாகக் கூறுவர் பேராசிரியர்கள். இதில் எந்த எழுத்தினால் (அல்லது) எந்தபதத்தினால் பாகவத சேஷத்வம் தெரிவிக்கப்படுகிறதென்றுஆராயவேண்டும்; ஒன்றினாலும் தெரிவிக்கப்படவில்லையென்றே நினைக்கக்கூடியதாயிருக்கும். அப்படியில்லை; ப்ரணவத்தில் அகாரத்திலே இதை யநுஸந்திப்பாருளர்; எங்ஙனேயென்னில்: அகாரத்தின்மேல் சதுர்த்தி விபக்தி [நான்காம்வேற்றுமையுருபு] ஏறிக் கழிந்திருப்பதாக(லோபித்திருப்பதாக)க் கீழே விவரிக்கப்பட்டது; லுப்த சதுர்த்தியோடு கூடின அந்தஅகாரத்தினால் பகவானுக்கு சேஷப்படுந்தன்மை தெரிவிக்கப்பட்டதன்றோ? பாகவத சேஷத்வ மென்பது பகவத் சேஷத்வத்தின் எல்லைநிலமே யாதலால் அந்த அகாரத்திற்குப் பொருளுரைக்கும்போதே இதையும் சேர்த்துப் பொருளாக வுரைத்திடுவர்கள் சில ஆசாரியர்கள். வேறு சிலர், அந்த அகாரத்திற்கு அடுத்த உகாரத்தில் பாகவத சேஷத்வத்தையநுஸந்திப்பர்கள். எங்ஙனே யென்னில்; உகாரத்தினால் பகவானுக்குத் தவிர மற்றையோர்கட்கு சேஷப்பட்டவனல்லன் என்பது [அநந்யார்ஹத்வம்] தெரிவிக்கப்படுகிறதல்லவா? பாகவதர்கள் பகவானுடைய திருவடிஸ்தானத்திலேயே சேர்ந்தவர்களாகையாலே உகாரத்தின் பொருளை அநுஸந்திக்கும்போதே இந்த பாகவதசேஷத்வத்தையும் சேர்த்து அநுஸந்திப்பர்களென்றதாயிற்று.

பாகவத சேஷத்வத்தை நம: பதத்தில் அநுஸந்திப்பதின் ஔசித்ய நிரூபணம்

242. ஆகவிப்படி முதற்பதமான ப்ரணவத்திற்குள்ளேயே பாகவத சேஷத்வம் அநுஸந்திக்கத் தக்கதாயிருந்தாலும் இடையிலுள்ள (நம:) என்னும் பதத்திலே இதனை யநுஸந்திப்பது மிகவும் பொருத்தமானதென்று பேராசிரியர்களின் திருவுள்ளம். ஏனென்னில்; அஹங்கார மமகாரங்களை அறவே விட்டுத் தொலைத்தவர்களுக்கே பாகவத சேஷத்வம் ருசிக்கும். நமச்சப்தார்த்தம் ஊறலூற அஹங்கார மமகாரங்கள் அறவே நீங்குமாதலால், இங்ஙனம் நீங்கப்பெற்ற அதிகாரிகளுக்கே பாகவத சேஷத்வம் உறைத்திருக்குமென்றுகொண்டு நம் ஆசார்யர்கள் பாகவத சேஷத்வத்தை (நம:) என்பதிலே அநுஸந்திக்கும்படி நியமித்தருளினது மிகப் பொருத்தமானது.

பகவச்சேஷத்வத்தின் காஷ்டையே பாகவதசேஷத்வம் என்னும்மருமமுணர்த்துதல்

243. பாகவத சேஷத்வம் என்பதன் உண்மைஸ்வரூபத்தை யறியாதார் பலர் இதில் ஆக்ஷேபங்களைச் செய்து கொண்டிருப்பர்கள்; பகவானுக்கே அடிமைப்பட்டிருக்கக் கடமைப் பட்டிருக்கின்ற நாம் வேறு சில வழிப்போக்கர்களுக்கு அடிமைப்படுகையாவது என்? ப்ரணவத்தில் உகாரத்தினால் உறுதிசெய்யப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வத்தோடு முரண்பட்ட தன்றோவிது; இதைத் திருமந்திரார்த்தமாகக் கொள்வது எப்படி சேரும்? என்று ஆக்ஷேபிப்பதுண்டு. அன்னவர்களைத் தெளிவிக்கிறோம்.

244. ஒரு வஸ்துவிலே நாம்அன்புவைத்தால் அவ்வன்பு அந்தவொருவஸ்துவோடு முடிந்து நிற்பதில்லை; அத்தோடு ஸாக்ஷாத் ஸம்பந்தமும் பரம்பரா ஸம்பந்தமும் பெற்ற வஸ்துக்களிலேயும் அன்பு பரந்து செல்லா நின்றது. மனைவியினிடத்திலே கணவன் வைக்கிற அன்பு அவளோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களிடத்தும் பெருகிச் செல்வதை எங்கும்காண்கிறோம். எம்பெருமானும் நம்மிடத்திலே வைக்கிற அன்பு நம்மளவிலே நிற்காமல் "கேசவன் தமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பும் மாசதிரிது பெற்று" என்று ஆழ்வார் அருளிச்செய்கிறபடியே நம்மோடு உறவுபெற்றோரிடத்திலும் பெருகிச் செல்வதை இதிஹாஸ புராணகதைகளினாலுமறிகிறோம். இவ்விதமாகவே நம்முடைய அன்பும் எம்பெருமானளவிலே சுவறிப் போகாமல் அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் பக்கலிலும் பெருகிச் சென்றால் இது பகவத் பக்தியின் ஒரு உறைப்பேயொழிய வேறன்று, ஆக, பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் ஒரு காஷ்டையே யொழிய வேறுபட்டதன்று என்றதாயிற்று. இதில் செய்யும் ஆக்ஷேபங்கள் இதன் உண்மையை உணராதார் செய்யுமவையத்தனையென்று விடுக்க-

நாராயண பதார்த்தவிவரணமும், ஸ்வரூபதோநித்ய—ப்ரவாஹதோ நித்யங்களின் விவரணமும்

245. இனி (நம:) என்பதற்கு அடுத்ததான நாராயண பதத்திற்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. நார-அயந என்று இரண்டு பதங்கள் சேர்ந்து நாராயண

என்ருகிறது. நாரங்களுக்கு அயநமாயிருப்பவன் நாராயணன். நித்ய வஸ்துக்களின் திரள்களுக்கு ஆதாரமாயிருப்பவனென்றபடி. நாராயணன் நித்ய வஸ்துக்களுக்கு ஆதாரமாயிருந்தால் அநித்ய வஸ்துக்களுக்கு ஆதாரமாயிருப்பவன் யாவன்? என்று கேள்வி பிறக்கும்; கேண்மின்; வேதாந்த ஸித்தாந்தத்தில் அநித்ய வஸ்துவே கிடையாது; எல்லாம் நித்ய வஸ்துக்களேயாகும். அழிந்தொழியும் பொருள்களை நாம் கட்கூடாகக் காணுநிற்க, அநித்ய வஸ்துவே கிடையாதென்ருல் எப்படி பொருந்துமென்று கேள்வி பிறக்கும். இங்குத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமாவது—நித்ய வஸ்துக்கள் இருவகைப்படும்; ஸ்வரூப நித்யமென்றும், ப்ரவாஹ நித்யமென்றும். எப்போதும் எவ்விதத்தாலும் அழிவில்லாத பொருள்கள் ஸ்வரூப நித்யமெனப்படும். ஆன்மா, மூலப்ரக்ருதி, காலம் முதலானவை இந்த வகுப்பிற் சேர்ந்தவை. இனி ப்ரவாஹ நித்ய வஸ்துக்கள் எவையென்னில்; உற்பத்தியையும் விநாசத்தையுமுடையனவாக இருக்கச் செய்தேயும் முன்னிருந்த நாமம் உருவம் லிங்கம் முதலானவற்றின் மாறுபாடின்றிக்கேயிருக்கப்பெற்ற பொருள்கள் ப்ரவாஹ நித்யங்களெனப்படும். பஞ்ச பூதங்களின் விகாரப் பொருள்களாக உலகிற் காணப்படுகின்ற செடி கொடி மரம் பானை துணி முதலான ஸகல வஸ்துக்களும் ப்ரவாஹ நித்யங்களாம். ஒருபானை உடைந்து போனுலும் அதே விதமான பல பானைகளை எஞ்ஞான்றும் காணுநின்ருேம்; ஒரு துணி கிழிந்து போனுலும் அதே விதமான பல துணிகளை எந்நாளும் பார்க்கின்ருேம். இங்ஙனே ஒவ்வொரு பொருளின் விஷயத்திலும் கண்டுகொள்ளலாம். இவையெல்லாம் ப்ரவாஹதோ நித்யமெனப்படும்.

ப்ரஸங்காத் உத்பத்தி விநாசஸ்வரூபத்தின் உபபாதனம்

246. அன்றியும், வேதாந்திகளின் மதத்தில் ஒரு வஸ்துவுக்கும் புதிதாக உற்பத்தியும் அழிவும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஒரு அவஸ்தையிலிருந்து மற்ருேரவஸ்தைக்கு மாறுவதே உற்பத்தியாகும். அந்த நிலைமையினின்று மற்ருேர் நிலைமைக்கு வருவதே விநாசமாகும்; ஆக ஸூக்ஷ்மாவஸ்தைக்கும் ஸ்தூலாவஸ்தைக்கும் மாறி மாறி வருவதே உத்பத்தி விநாசங்களாகையாலே இந்த வகையில் எல்லாப் பொருள்களையும் நித்யங்களென்று கொள்ளக்குறையில்லை. நாராயண னென்பதற்குப் பொருள் அருளிச் செய்யா நின்ற பிள்ளை லோகாசாரியர் முமுக்ஷுப்படியில் "நாராயண னென்றது, நாரங்களுக்கு அயந மென்றபடி; நாரங்களாவன நித்ய வஸ்துக்களினுடைய திரள்" என்று பணித்து உடனே அந்த நித்ய வஸ்துக்களை விவரிக்கத் தொடங்கி, "அவையாவன—ஜ்ஞாநாநந்த அமலத்வாதிகளும்...பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும் நித்யஸூரிகளும்... ப்ரக்ருதியும் பத்தாத்மாக்களும்....அண்டங்களும் அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்" என்று அருளிச் செய்தார். இதனுல் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் ஒரு பொருளையும் விடாமல் எல்லாமும் நாரமென்னுஞ் சொல்லுக்குப் பொருளாகச் சொல்லிற்ருயிற்று. இப்பொருள்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பவன் நாராயணன்—என்று முடிக்கப்பட்டது.

நாராயண பதத்தின் தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸங்களினுல் தேறின பொருள்

247. பகவான் இப்பொருள்களிலே யிருக்கின்றுனு? அல்லது இப்பொருள்கள் பகவானிடத்து இருக்கினறனவா? என்று பார்க்கு மளவில் இரண்டு வகைக்கும் குறையில்லையென்றே நூற்கள் கூறுகின்றன. எல்லாப் பொருள்களிலும் பகவானுளன்; எல்லாப் பொருள்களும் பகவானிடத்து உள்ளன என்பதே நூற்கொள்கை. பகவானிடத்துள்ள பரத்துவம் ஸௌலப்யம் என்கிற இரண்டு திருக்குணங்களும் மேற்கூறிய இருவகைப் பொருள்களினுலும் விளக்கம் பெற்றனவாகும்.

248. எல்லாப் பொருள்களும் பகவானிடத்தே யுள்ளன வென்னும்போது எல்லாப் பொருள்களுக்கும் தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்துவம் விளங்கிற்றுகும். எல்லாப் பொருள்களிலும் பகவானுளன் என்னும் போது அறப் பெரியனுன தான் ஸகல சேதநாசேதநங்களிலும் தன்னை அமைத்துக் கொண்டு புகுந்திருக்கை யாகிற ஸௌலப்யம் [எளிமை] விளங்கிற்றும். ஆக நாராயணபதத்தின் பொருள் ஒருவாறு விவரிக்கப்பட்டதாயிற்று.

நாராயண பதத்தின் மேலுள்ள விபக்தியின் பொருள் விளக்கம்

249. இனி நாராயண பதத்தின் மேலுள்ள நான்காம் வேற்றுமையின் பொருளாவது, கைங்கர்ய ப்ரார்த்தனை யென்பர்; அதாவது, நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனுக வேணுமென்று கோரப்படுகிற தென்கை. எவ்விதமான கைங்கர்யம் செய்ய வேணும்? என்கிற கேள்விக்கு இடமில்லை; ஸகல தேசங்களிலும் ஸகலகாலங்களிலும் ஸகலாவஸ்தைகளிலும் ஸகலவிதமான கைங்கர்யங்களையும் செய்வதற்கே இட்டுப் பிறந்தோம். இதனை நம்மாழ்வார் ' ஒழிவில் காலமெல்லாமுடனுய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்'' என்கிற பாசுரத்தினுல் தெளிவித்தார்.

கைங்கர்ய ஸ்வரூபசோதனமும், கைங்கர்யத்தில் இருவகைகளின் நிரூபணமும்

250. கைங்கர்யம் செய்வது மனம் மொழி மெய்களாலும் பொருளாலுமாகக் கூடியது. இவற்றுள் மனத்தினுலும் வாக்கினுலும் கைங்கரியம் செய்வதில் அருமை யில்லை; உடலைச் சிரமப்படுத்தி அடிமை செய்வது அரிது; அதுதான் முக்கியமானது. பொருளைச் செலவு செய்து கைங்கரியம் செய்வதுதான் மிகச் சிறந்ததென்று சிலர் நினைக்கக் கூடும்: அது மிகத் தாழ்ந்ததென்பதை நிரூபிக்கிறேம் காண்மின்: ஒருவன் தவறு செய்து ராஜ தண்டனைக்கு உட்படுகிறுன்; அரசன், ஒரு மாதம் கடுங்காவல், அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என்று விதித்தால் எப்படிப்பட்ட ஏழையும் சிரமப்பட்டாகிலும் பணத்தைச் செலுத்தப் பார்க்கிறுனே யொழிய, தேஹத்தை நலிவுறுத்தக் கூசி சிறைவாஸத்திற்கு உடன்படுவதில்லை. இதனுல் அனைவர்க்கும் தேஹத்திலே தான் அதிகமான அன்பு என்றும், பொருளில் அன்பு கிடையாதென்றும் கண்டுகொள்கிறேமல்லவா? நாம் எதை அதிகமாக அபிமானிக்கிறேமோ அதைச் சிரமப்படுத்திச் செய்யும் கைங்கர்யமே சிறந்ததாகுமென்பதில் தட்டில்லை, ஆகவே, திரவியத்தைக்கொண்டு செய்யும் பணிவிடையிற்காட்டிலும் உடலைக் கொண்டு செய்யும் பணிவிடையே மிகச் சீரியதென்று தேறுகின்றது.

251. கோவில்களில் பெருமானுக்குத் திருத்தேர்த்திருவிழா நடைபெறுகின்றது; அன்பர்களே! திருத்தேரை யிழுக்க வாருங்கள் என்றழைத்தால், பத்தெட்டு ரூபாயைக் கொடுத்துக் கைகூப்பி நிற்கும் அதிகாரிகளே மலிந்துள்ளார்கள். உடலைச் சிரமப்படுத்திக் கைங்கரியம் செய்வோமென்று குதுகலிப்பவர்கள் மிகச் சிலரே அத்தகைய கைங்கர்யமே எம்பெருமானுக்குப் பரம ப்ரீதியை விளைக்கும்.

கைங்கரியம் துக்கரூபமன்று என்பதன் நிரூபணம்

252. ஒருவற்குப் பணிவிடை செய்வதென்பது உலகில் கிலேசமாகக்காணப் படுகிற தேயொழிய ஆனந்தமாகக் காணப்படவில்லை "ஸேவா ச்வவ்ருத்திராக்க்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்" என்று மநுமஹார்ஷியும் கூறியுள்ளார்; இதன் பொருளாவது, பணிவிடை செய்வதென்பது நாய்த்தொழிலாதலால் அதனை விட்டுவிடவேண்டு மென்பதாம். ஆனந்தமயனான ஆன்மா ஆனந்த ஹேதுவான செயல்களைச் செய்து ஆனந்தப்பட வேண்டியிருக்க, கிலேசத்திற்கே ஹேதுவான பணிவிடையைச் செய்துவருந்தலாமோ வென்னில்;இதற்கு ஸமாதானம்கேண்மின்;

253. பணிவிடைகள் இரண்டு வகையாகவுண்டு. தேஹபோஷணத்திற்காகப் பணிவிடை செய்பது ஒன்று; அதாவது கூலி வேலை செய்வது. ஆத்மானந்தத்திற்காகப் பணிவிடை செய்வது மற்றொன்று. அதாவது பகவத் பாகவதாசார்ய விஷயத்திற் கைங்கரியஞ் செய்வது. இவற்றுள் முந்தின பணிவிடையினால் கிலேசம் விளையுமே யல்லது பிந்தின பணிவிடையினால் சிறிதும் கிலேசம் விளையாது; பரமானந்தமே கொந்தளிக்கும். சிஷ்யன் ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடைகளையும், காமுகன் காமினிக்குச்செய்யும் பணிவிடைகளையும் பார்க்கின்றோம். இவைவெகு மகிழ்ச்சியுடன் நடைபெறுகின்றன வென்பதை உலகிற் காண்கிறோம். (ஒருசிறுகதைகேண்மின்.)

254. துஷ்யந்த மஹாராஜன் வேட்டையாடிக்கொண்டு செல்லும்போது ஒரு மஹார்ஷியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்தான்; அங்கே சகுந்தலை யென்னும் தெய்வமாதைக் கண்டு காதல் கொண்டான்; அவளோடு ஸம்பாஷிக்கவும் பெற்றான்; அப்போது சொல்லுகிறான்:—"ஸம்வீஜயாமி நளிநீதள தாளவ்ருந்தை, அங்கே நிதாய கரபோரு! யதாஸுகம் தே ஸம்வாஹயாமி சரணாவுத பத்ம தாம்ரௌ" என்கிறான்; சகுந்தலையின் முகத்தில் வேர்வை நீர் பெருகுவதைக் கண்டு அரசன் பொறுக்கமாட்டிற்றிலன்; தாமரையிலையை விசிறியாகக் கொண்டு விசிறட்டுமா? உன்னுடைய பாத பல்லவங்களை மடியிலே யிட்டுக் கொண்டு நோவு தீர வருடட்டுமா? என்று கேட்கிறான்; கேட்டுக்கொண்டே அப் பணிவிடைகளையும் செய்கிறான். இவனோ சக்ரவர்த்தி; அவளோ ஒரு காட்டுப்பெண்; காதல் விளைந்ததே காரணமாகக் கைங்கர்யம் செய்வதில் அன்பு ததும்பிய குதூஹலம் விளைகின்றது. இதனால் என்ன தெரிந்துகொள்ளுகிறோம்; உகப்பில்லாதவிடத்தில் செய்ய நேரும் பணிவிடையே துக்கரூபமானதென்றும், உகப்புள்ளவிடத்தே செய்ய ப்ராப்தமாகும் கைங்கர்யமானது ஆனந்த மயமாகவே யிருக்குமென்று முணருகிறோம்

கைங்கர்ய ப்ரார்த்தனை பண்ணுவது ஸ்வரூபாநுரூபமேயென்று சொல்லித் திருமந்த்ரப் பொருளை நிகமித்தல்

255. ஆகவே எம்பெருமானிடத்தில் ஸ்வரூபத்தாலும் திருக்குணங்களடியாகவும் உகப்புகொண்டவர்களுக்குக் கைங்கர்யம் ருசித்திருக்குமே யொழிய க்லேசரூபமென்று வெறுக்கத் தக்கதாயிராதென்று தெரிந்துகொள்ளுகிறோம். இவ்விஷயத்தைப் பிள்ளைலோகசார்யர் எவ்வளவு அழகாகத் தெரிவித்தருளுகிறார் பாருங்கள்—"சேஷத்வம் துக்கரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில்; அந்த நியமமில்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்குமிருப்பு ஸுகமாகக் காண்கையாலே" என்பது அவ்வாசார்ய சிகாமணியின் திவ்யஸூக்தி.

256. வேதார்த்த ஸங்க்ரஹமென்னும் நூலின் முடிவில் ஸ்வாமி ராமாநுஜர் தாமும் அருளிச்செய்த அர்த்தமிது. கைங்கர்யப் பிரார்த்தனை செய்வது ஸ்வரூபாநுரூபமே யாதலால் *நாராயணாயவென்பதனால் அது செய்யப்படுவதில் குறையொன்றுமில்லை யென்க. ஆக இவ்வளவாலும் திருமந்திரப் பொருள் விளக்கப்பட்டதாயிற்று. .... (*)

நவரத்னநவநிதியில் மூன்றாவதுநிதி முற்றிற்று.

நவரத்ன நவநிதியில்—நான்காவதுநிதி—த்வயார்த்தஸாரம்.

த்வயமந்த்ரத்தின் ஏற்றத்தை விரியவுரைத்தல்

257. நமது ஸம்பிரதாயத்தில் திருமந்திரத்திற் காட்டிலும் த்வயத்திற்கே ஏற்றமதிகம். திருமந்திரத்திற்கு மந்த்ரராஜமென்று பெயர்; த்வயத்திற்கு மந்த்ர ரத்ன மென்று பெயர். ராஜாவும் விரும்பக்கூடிய வஸ்து ரத்னமாதலால் ரத்னமென்று திருப்பெயர் பெற்ற த்வயமே சிறந்ததாகும்.

258. நம் ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்தில் மூன்று ரத்னங்கள் பிரஸித்தமாக வழங்கப் பெறுகின்றன. பராசரமஹர்ஷி பணித்த விஷ்ணு புராணம் புராணரத்னமென்றேப்ரஸித்திபெற்றது. ஆளவந்தார் "ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்நம் தஸ்மை நமோ முனிவராய பராசராய" என்றருளிச் செய்தது காண்க. ஆளவந்தாரருளிச் செய்தஸ்தோத்ரமானது ஸ்தோத்ரரத்னமென்றே புகழ்பெற்றுளிர்கின்றது. த்வயமந்த்ரம் மந்த்ரரத்னமென்று வழங்கப்பெறுகின்றதென்று சொன்னோம். எறும்பியப்பா பணித்த மணவாள மாமுனிகளின் திநசர்யையில் "மந்த்ரரத்நாநுஸந்தாந ஸந்தத ஸ்புரிதாதரம், ததர்த்ததத்வ நித்யாந ஸந்நத்த புலகோத்கமம்" என்றருளிச் செய்திருப்பது காண்க.

259. திருமந்த்ராநுஸந்தானத்திற்குக் காலநியதியுண்டு; த்வயத்தின் அநுஸந்தானத்திற்கு அஃது இல்லை. சரணாகதி கத்யத்தில் "த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று எம்பெருமானார்க்கு அழகிய மணவாளன் இட்டருளின கட்டளை. நம் பூர்வாசாரியர்கள்

அந்தேவாஸிகளையும் அந்தரங்கர்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமிடத்து "திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிரதராவீர்" என்று ஆசீர்வதிப்பர்களென்று ப்ரஸித்தம்.

260. திருமந்திரத்திற்காட்டிலும் மூன்றும்ரஹஸ்யமான சரமச்லோகத்திற்காட்டிலும் த்வயம் மிகச் சிறந்ததென்பதை யாவரும் எளிதாகவறியலாம். எங்ஙனேயென்னில்; "இதிலே ஸ்ரீ ஸம்பந்த மநுஸந்தேயம்' என்று பிள்ளையுலகாசிரியரருளிச் செய்தபடியே திருமந்திரத்தில் பிராட்டிஸம்பந்தம் ஆர்த்தமாகக் கிடைப்பதேயன்றி ஸ்பஷ்டமாகவில்லை. சரமச்லோகத்தில் லக்ஷ்மீஸம்பந்த ப்ரஸ்தாவமே செய்தார்களில்லை. இக்குறைதீர த்வயத்தில் பூர்வகண்டத்தின் தொடக்கத்திலும் உத்தர கண்டத்தின் தொடக்கத்திலும் லக்ஷ்மீஸம்பந்தம் ஸுஸ்பஷ்டமாக விளங்கா நிற்பது ஒரு விசேஷம்.

261. அவ்விரண்டு ரஹஸ்யங்களிலும் பகவானுடைய திருவடிகளின் ப்ரஸ்தாவமேயில்லாமை பெரியகுறை. அக்குறையும் தீர இதில் திருவடிகளையே தஞ்சமாகக் காட்டிக்கொடுத்தது மற்றொரு விசேஷம். ஆகப் பல படிகளாலும் த்வயத்தின் சிறப்பை அறிவித்தோமானோம்.

வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்களை நிருபித்தல்

262. ஸ்ரீவைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு த்வயரஹஸ்யம் மிகவும் உபாதேயம், இந்த ப்ரஸங்கத்திலே வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்களானவற்றை முந்துற முன்னம் தெரிந்துகொள்ள வேண்டுவதும் முக்கியமாகும். பத்து விஷயங்கள் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்களாம். அவையாவன:— (1)*பிதரம் மாதரம் தாராந்* இத்யாதிப்படியே பாஹ்ய விஷயஸங்கங்களையடைய மறுவலிடாதபடி ஸவாஸநமாக விடுகை. (2) வேறொன்று தஞ்சமென்கிற நினைவு கலசாதபடி நிருபாதிகரக்ஷகனான ஸர்வேச்வரனையே தஞ்சமாகப்பற்றுதல். (3) பேறு கனத்திருப்பதையும் அதற்குரிய உபாயம் நம்பக்கலில் இல்லாமையையும் நாம் செய்யும் பாபங்கள் அளவு கடந்திருப்பதையும் நோக்கித் தளும்பாமல் பலன் தப்பாது கைபுகும் என்று விச்வஸித்திருக்கை. (4) இப்படி விச்வஸித்து 'பேறு ஸித்தித்தபோது காண்கிறோம் என்று ஆறியிராமல் * தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக் கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ* என்கிறபடியே க்ரமப்ராப்தி பற்றாமல் பதறுகை. (5) பரமபதத்திலே போய் பகவதநுபவகைங்கரியங்களைப் பண்ணுகையாகிற பேற்றில் பதற்றம் நடவா நிற்கச் செய்தேயும் இந்த வுடம்போடேயிருக்கும் வரை திவ்ய தேசங்களிலே *கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டுகையாகிற ப்ராவண்யத்தை யுடையனாய், அந்த திவ்ய தேசங்களிலே நிற்கிறவனுடைய கல்யாண குணாநுபவமும், அது அடியாகக் கரணத்ரயத்தாலும் அவன் விஷயத்தில் பண்ணும் கைங்கர்யமுமே காலக்ஷேப விஷயமாம்படி யிருக்கை. (6) கீழ்ச்சொன்ன விவையெல்லா முடையராயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களைக்கண்டால் 'இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே இந்த விபூதியிலே இப்படியும் சில மஹான்கள் உண்டாவதே! என்று அவர்களது வைபவத்தை யறிந்து உகந்திருக்கை. (7) இதர மந்த்ரங்களின் அருகே மறந்தும் செல்லாமல், த்யாஜ்யோபாதேயங்களைத் தெளிய

வறிவிக்கும் திருமந்த்ரத்திலும் அதின் அர்த்தத்திற்கு விவரணமான த்வயத்திலும் நிஷ்டனாயிருக்கை. (8) கீழ்ச் சொன்னவற்றையெல்லாம் உபதேசத்தாலே தனக்குண்டாக்கின ஆசார்யன் விஷயத்தில் பக்தி அதிசயித்திருக்கை. (9) நித்ய ஸம்ஸாரியான தன்னை நித்ய ஸூரிகளநுபவிக்கும் பேற்றுக்கு உரியனாம்படி இரும்பைப் பொன்னுக்குவாரைப்போலே திருத்தின அந்த ஆசார்யனிடத்திலும், அந்த ஆசார்ய ஸம்பந்தத்தை யுண்டாக்கின எம்பெருமானிடத்திலும் இடையறாது நன்றி பாராட்டுதல். (10) தான் கலங்கினாலும் கலங்காமல் நோக்குவதற்காகவும் கீழ்ச் சொன்னவை தனக்கு வளர்ந்து செல்லுகைக்காகவும் ஜ்ஞாந பக்தி விரக்தி சாந்தி ஸம்பந்நனாய்ப் பரமஸாத்விகனாயிருப்பானொரு பாகவதனோடே ஸஹவாஸம் பண்ணுகை - ஆக இவை இத்தனையும் வைஷ்ணவனென்றிருப்பானொரு அதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்கள்.

த்வயத்தின் பொருளின் மேன்மையை விரிவாக விளக்குதல்.

263. இனி த்வயத்திற் சொல்லுகிற அர்த்தத்தின் அதிசயத்தை யறிவிப்போம் ஸகல சாஸ்த்ரங்களிலும் இன்னது சொல்லுகிறது, திருமந்திரத்தில் இன்னது சொல்லுகிறது,சரமச்லோகத்தில் இன்னது சொல்லுகிறது என்று தெரிந்துகொண்டு பிறகு த்வயத்திற் சொல்லுகிறது இன்னது என்று தெரிந்துகொண்டால் நலமாகும். ஸகல சாஸ்திரங்களுக்கும் சேதநனுடைய விசிஷ்ட வேஷத்திலே நோக்கு, விசிஷ்ட வேஷமாவது தேஹவிசிஷ்டவேஷம். ப்ராஹ்மணாதி வர்ணதர்மங்களைப் பற்றியும் ப்ரஹ்மசர்யாதி ஆச்ரமதர்மங்களைப் பற்றியும் பேசுவதே ஸகல சாஸ்திரங்களுக்கும் விஷயமாகையாலும்,அந்த வர்ணாச்ரமங்கள் தேஹத்தைப்பற்றி நிற்கையாலும் ஸகல சாஸ்திரங்களுக்கும் தேஹவிசிஷ்ட வேஷத்திலே நோக்கு என்னத் தட்டில்லை. அப்படிப்பட்ட ஸகல சாஸ்திரங்களிலும் தேறுகிறஅர்த்தமாவது—ஸாதநநுஷ்டானயோக்யமானதேஹத்தாலே இவனுக்குப் புருஷார்த்த லாபம் என்பதாம்

264. திருமந்திரத்திற்கு நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்கு. (அதாவது, சுத்த ஆத்மவஸ்துவிலே நோக்கு என்றபடி.) திருமந்திரமானது ஸகலாத்மாக்களுக்கும் பொதுவான தன்மையைத் தெரிவிப்பதேயன்றி ஜாத்யாச்ரம ஸம்பந்தியான விஷயமொன்றையும் தெரிவிப்பதல்லாமையாலே திருமந்திரத்திற்கு நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்கு என்னத் தட்டில்லை. அப்படிப்பட்ட திருமந்திரத்தில் இவன் தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்வதில்நின்றும் கைவாங்கினாலொழிய ஈச்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாதாகையாலே அந்த ஈச்வரனுடைய ப்ரவ்ருத்திக்கு விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியை விட்டிருக்கும் ஆத்மாவாலே புருஷார்த்தலாபம் என்கிறது. நம:பதார்த்தப்ராதாந்யத்தையிட்டு இங்ஙனே சொல்லுகிறதென்க.

265. ஈச்வரனுடைய ஸ்வாதந்திரியத்திலே நோக்கான சரம ச்லோகத்தில் இவனுடைய ஸ்வீகாரமும்மிகையாம்படி தானே கைக்கொண்டு ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான ஸகலபாபங்களையும் தள்ளிப்போகட்டுத் தன் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளும் ஈச்வரனாலே புருஷார்த்தலாப மென்கிறது.

266 இனி, ஈச்வரனுடைய லக்ஷ்மீவிசிஷ்ட வேஷத்திலே நோக்கான த்வயத்திலோ வென்னில், விசேஷணபூதையான பெரிய பிராட்டியாராலே புருஷார்த்த லாபமென்கிறது. பேறுபெறுவதற்கு தேஹமும் வேணும், ஆத்மாவும் வேணும், ஈச்வரனும் வேணும், பிராட்டியும் வேணும்; முக்கியமாக வேண்டுவது பிராட்டி யாகையாலே அவளாலே புருஷார்த்தலாபமென்று தெரிவிக்கிற த்வயம் மிகச் சிறந்தது. என்றதாயிற்று.

267. உபாயம் எம்பெருமானுயிருக்க, பெரியபிராட்டியாராலே புருஷார்த்த லாபமென்ருல் என்ன அர்த்தம்? என்னில், இவனுடைய குற்றங்களைப் பாராதே ரக்ஷிக்கும்படி இவள் புருஷகாரமாஞலொழிய எம்பெருமான் இவனுக்குக் காரியம் செய்யானென்பதே தேறின தாற்பரியம்.

த்வயாதிகாரியின் அருமையும், த்வயத்தின் திரண்ட பொருளும்

268. ஸித்தோபாய வரணத்தைக் கூறுமதான த்வய ரஹஸ்யத்திற்கு அதிகாரி கள் கிடைப்பது அரிது. ஆகிஞ்சந்யமும் அநந்ய கதித்வமுமாகிற இரண்டு முடைய வனே த்வயாதிகாரியாவான். ஆகிஞ்சன்யமாவது—*நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்* என்கிறபடியே ஒருவிதமான கைம்முதலுமில்லாமை; அநந்ய கதித்வமாவது—* புகலொன்றில்லாவடியேன்* களைகண் மற்றிலேன்* என்கிறபடியே வேறு ரக்ஷகனை நெஞ்சிலும் நினையாமை. ஆக இவ்விரண்டும் வாய்க்கப்பெற்ற அதிகாரியே த்வயாதிகாரியாவான்.

269. இரண்டு கூருக [கண்டங்களாக] இருக்கின்ற இந்த த்வயத்தில் முதற்கண்டத்தினுல் — பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகப் பற்றி எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது. ஸ்ரீமத் என்பதனுல் பெரிய பிராட்டியாரை முன்னிடுகிறது; நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே என்பதனுல் எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது. உத்தரகண்டத்தாலே, பெரிய பிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே கைங்கரியம் பண்ணவேணுமென் கிற பிரார்த்தனை காட்டப்படுகிறது. [ஸ்ரீமதே என்று பிராட்டியும் அவனுமான சேர்த்தி; நாராயண பதத்தின் மேலுள்ள சதுர்த்தி கைங்கர்யப் பிரார்த்தனையைக் காட்டும். நமஸ்ஸு கைங்கர்ய விரோதி நிவ்ருத்தியைக் காட்டும்]

த்வயத்தின் பிரதிபதார்த்த விவரணங் காட்டுதல்

270. இனி, பிரதிபதார்த்தம் விவரிக்கப்படுகிறது. ஸ்ரீ என்கிற சொல்லுக்கு ஸம்பத்து முதலியவைகளும் பொருளானுலும் இங்கே இச் சொல் பெரிய பிராட்டி யார்க்குத் திருநாமமாயிரா நின்றது. * ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா:* என்கிற ப்ரமாண வசனம் காண்க. " ஸ்ரீரித்யேவ ச நாம தே" என்ருர் ஆளவந்தாரும். இந்த ஸ்ரீ சப்தமானது, * ச்ரீஞ்—ஸேவாயாம்* என்கிற தாதுவிலே இரண்டுவகையான வ்யுத் பத்தியால் நிஷ்பந்நமாகும். ஸ்ரீயதே இதி ஸ்ரீ; (இது கர்மணி வ்யுத்பத்தி.) ச்ரயதே இதி ஸ்ரீ: (இது கர்த்தரி வ்யுத்பத்தி) கர்மணி வ்யுத்பத்தியில் எல்லாராலும் ஸேவிக்

கப்படாநின்றுள் என்று பொருள்படுகின்றது. ஸகல சேதநர்கட்கும் இவளைப்பற்றியே தங்களுடைய சேஷத்வரூபமான ஸ்வரூபம் ஸித்திக்கு மென்றவாறு. கர்த்தரி வ்யுத்பத்தியில் ஈச்வரனை இவள் ஸேவியா நின்றுளென்று பொருள்படுகிறது. இவள் தனக்கும் ஈச்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூப லாபமா யிருக்குமென்றவாறு. ஸகல சேதந விஷயத்தில் சேஷித்வத்தையும் ஈச்வர விஷயத்தில் சேஷத்வத்தையும் உடையவள் என்று ஸ்ரீ சப்தார்த்தம் தேறிற்றுயிற்று. எம்பெருமானுக்கு உபாயத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுண்டானுப் போலே இவளுக்குப் புருஷகாரத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுண்டு; புருஷகாரத்வமென்கிற தன்மையை நினைத்து இப்போது இவளைச் சொல்லுகிறது. உபாய வஸ்துவில் விசேஷணமாயிருக்கிற தன்மையையிட்டு இவளுக்கும் உபாயத்வமுண்டென்கிற பக்ஷம் சேராது. இதை நாம் ஸத்ஸம்ப்ர தாயார்த்த ஸாரநிதி, ஸத்ஸம்ப்ரதாய ஸுதாநிதி முதலிய நூல்களிலே பரக்க உபபாதித்தோம். வேதாந்தவாசிரியரும் ரஹஸ்யரத்நாவளி முதலிய ரஹஸ்யங்களிலும் சரணகதிகத்ய பாஷ்யத்திலும் "பிராட்டிக்குப் புருஷகாரத்வம் மட்டுமேயுள்ளது. எம்பெருமான்தான் பலப்ரதன்" என்பதைப் பன்னிப்பன்னிப் பேசியுள்ளார்.

பிராட்டியின் புருஷகாரத்வத்தின் ஆவச்யகத்வமுணர்த்துதல்

271. எம்பெருமானுடைய நாராயணத்வ ப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு அவனை ஆச்ரயிக்கிற இச் சேதநனுக்கு இவளைப் புருஷகாரமாக முன்னிட வேண்டிய அவசியம் என்ன? என்னில்; குளிர்ந்த ஜலத்திலுங் கூடக் கொடிதான நெருப்பு [படபாக்நி] கிளருமாபோலே, ஸர்வ பூத ஸுஹ்ருத்தானவன் திருவுள்ளத்திலே சேதனன் அளவுகடந்து பண்ணின அபராதம்டியாகச் சீற்றம் பிறப்பதுமுண்டே; அங்ஙனே சீற்றம் பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது இப் பிராட்டிக்காக இவள் தன்னுடைய உபதேசாதிகளாலே அச் சீற்றத்தை யாற்றி தயையையுண்டாக்குவள். ஆகையாலே ஸம்பந்த வுணர்ச்சி யுள்ளவனுக்கும் அபராத பயத்தாலே புருஷகாரத்தை முன்னிடுகை அவசியமேயென்க. பிராட்டியின் புருஷகாரம் அவ்வளவு காரியம் செய்யுமோவென்னில், *அகில ஜகந்மாதரம்* என்கிற படியே சேதநர்கட்கு இவள் மாதாவாய், அந்த ஸம்பந்தமடியாக இவர்களுடைய வருத்தம் கண்டு பொறுத்திருக்கமாட்டாதே யிருக்கிற வொரு தன்மையும், எம்பெருமானுக்குப் பத்நியாய் *பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு* என்கிறபடியே அவன் தன் வைலக்ஷண்யத்தைக்கண்டு பிச்சேறித் தன் சொற்படி நடக்கும்படி அபிமதவிஷயமாயிருக்கிற வொரு தன்மையும் உடையவளாகையாலே ஒருவகையாலும் விபலமாக மாட்டாத புருஷகாரம். உலகில் புருஷகாரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் வேண்டும்; எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவர் விஷயத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்கவேண்டியது ஒன்று, யாரிடத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவரிடத்தில் தம் வாக்கு வெற்றிபெற்றே தீரும்படியான வால்லப்ய மிருக்கவேண்டியது மற்றொன்று. இவ்விரண்டும் பிராட்டியிடத்தே புஷ்கலமென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

ப்ரஸங்காத் பிராட்டியின் திருவாக்கின் வெற்றியை நிரூபித்தல்

272. இதெல்லாம் வாஸ்தவந்தான்; ஈச்வரனே கேட்பாரற்ற ஸ்வதந்திரன்; அன்னவன் சேதநருடைய குற்றங்களை நிறுத்து அவற்றுக்குத் தக்கபடி தண்டனை செலுத்தியே தீர்வேன் என்று நிற்குமளவில் பிராட்டிதான் என்ன செய்ய முடியும்? என்னில்; இது இவளுடைய செய்தியறியாதார் செய்யும் ஆக்ஷேபமாகும். இவள் சிறையிருந்த காலத்தில் இவளைப் பத்துமாதம் இடைவிடாது படாத பாடுகளும் படுத்தின ராக்ஷஸிகளின் கொடுமையை மரத்தின்மேல் மறைந்திருந்து கண்ட அனுமான் "பெருமாள் வெற்றிபெற்ற பின்பு இவர்களைப் பார்த்துக்கொள்வோம்" என்று ஆறியிருந்து, ராவணவதமான பின்பு ஓடிவந்து "இவ்வரக்கிகளின் அபராதங்களைக் கணக்கிட்டு சித்திரவதம் பண்ண நினைத்திருக்குமெனக்கு இடமளிக்கவேணும்' என்று (பிராட்டியை நோக்கிக்) கேட்டவளவிலே, சொல்மிறுங்கனுன அவ்வனுமனையுமுட்பட இவள் உபதேசத்தாலே பொறுப்பித்தாளென்பது ஸ்ரீராமாயணப் பிரஸித்தம். [*பாபாநாம் வா சுபாநாம் வா*இத்யாதி.] அப்படிப்பட்டவிவள் *அல்லி மலர் மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான்* என்கிறபடியே தன் போக்யதையிலே மிகவும் ஈடுபட்டிருப்பவனாய், *நின்னன்பின் வழி நின்று சிலைபிடித்தெம் பிரானேக* என்கிறபடியே 'மாயாமிருகத்தின் பின்னே போ' என்றாலும் விளைவதறியாதே அதின் பின்னே தொடர்ந்து போமவனாய் இப்படி தனக்கு விதேயனாய் ரஸிகனா யிருக்குமவனைப் பொறுப்பிக்க வல்லளென்பது சொல்லவேணுமோ?

பூர்வகண்டத்தில் ஸ்ரீமத் பதார்த்த நிரூபணம்

273. 'ஸ்ரீமத்' என்கிற பதத்தில் ப்ரக்ருதியான ஸ்ரீ என்பதன் பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. அதன்மேல் ஏறிக்கிடக்கும் மதுப்பென்கிற பிரத்யயத்தின் பொருள் கேண்மின். 'எப்போதும் கூடியிருத்தல்' என்னும் பொருளில் 'மதுப்பு' வந்திருப்பதாகக் கொள்க. "நித்யயோகே மதுப்" என்பது வியாகரணம். இத்தால் புருஷகாரபூதையான பிராட்டியும்ஈச்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போது முண்டென்பது தேறும்.

274 இந்த நித்யயோகம் எப்படிப்பட்டதென்னில், ஸ்வரூபாநுபந்தித்வ ப்ரயுக்தமான நித்யயோகமென்று கொள்ளக்கடவது. ஞானம் ஆனந்தம் முதலியவை எப்படி பகவானுக்கு ஸ்வரூப நிரூபகங்களோ அப்படி ஸ்ரீபதித்வமும் நிரூபகமாகையாலே இவளோடே கூடியே ஈச்வரவஸ்துவின் ஸத்தையுளதாகக் கொள்க.

275 இவளுடைய குணப்ரயுக்தமாகவும் நித்ய யோகமுண்டு; அபராதங்களைக் கணக்கிட்டு தண்டிக்க வல்லனான ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ரியத்தையும் சேதனர் செய்யும் குற்றங்களின் அளவில்லாமையையுங் கண்டு "ஐயோ என்னுகுமோ!" என்கிற பயத்தாலே ஈச்வரனை விட்டு ஒரு நொடிப்பொழுதும் அகலமாட்டாள். இப்படி இவளிருந்து நோக்குகையாலே, ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ரியத்தைக் கண்டோ தன்னுடைய அபராதங்களை நினைத்தோ சேதனன் அஞ்சவேண்டிய ப்ரஸக்தியில்லை. அன்றியும், பிராட்டி எப்போதும் எம்பெருமானோடு கூடியே யிருக்கின்றுளென்று தெரிந்துகொள்ளுமளவில், எந்த ஸமயத்திலும் எம்பெருமானை ஆச்ரயிக்கலாம் என்

பது தேறிற்றுகும். 'புருஷகாரம் செய்பவள் அருகே யிருக்குங்காலம் பார்த்து ஆச்ரயிக்கவேணும்' என்று ஸமய ப்ரதிஜ்ஞை வேண்டியதில்லை; ஆச்ரயிக்க வேணுமென்கிற ருசி பிறக்கவேண்டுவ தத்தனையே. பிராட்டியின் புருஷகாரம் அவசியம் வேண்டியதே யென்பதை விபவாவதார காலத்துச் செய்தியாலும் தெரிந்துகொள்ளலாம்; ராமாவதாரத்தில், அளவுகடந்த அபராதத்தைச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரத்திற்கு இலக்காய்த் தலையறுப்புண்ண வேண்டின காகம் க்ருபைக்கு இலக்காய்த் தலை பெற்றுப்போனது பிராட்டியின் ஸந்நிதியினாலேயாம். அவ்வளவு அபராதியல்லாத ராவணன் ராமசரத்துக்கு இலக்காய் முடிந்துபோனது இவளுடைய ஸந்நிதி யில்லாமையினாலேயாம். ஆகவே பிராட்டியின் ஸந்நிதானம் பழுதுபடாதென்று உணர்க. ஆக இவ்வளவும் ஸ்ரீமத் பதார்த்தம் சொன்னோம்.

த்வயபூர்வகண்டத்தில் நாராயண பதார்த்த விவரணம்

276. இனி நாராயண பதார்த்தம் கேண்மின். 'நாராயணன்' என்பதற்குப் பல பொருள்கள் உண்டு; ஆங்காங்கு ஸந்தர்ப்பாநுகுணமாகப் பொருள் கொள்ள வேண்டியதாகும். இங்கு வாத்ஸல்யம் ஸ்வாமித்வம் ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஜ்ஞாநம் சக்தி ஆகிற இத்திருக்குணங்களை யுடையவன் என்கிற பொருள் கொள்ளக்கடவது ஏனெனில், ஆச்ரயிக்க ருசியுடைய சேதநன் அநாதிகாலமாகப் பண்ணின அபராதங்களைப் பார்த்துச் சீற்றங்கொண்டு 'இவனை அங்கீகரிக்கமாட்டேன்' என்றிருக்கும் எம்பெருமானுடைய ஸ்வாதந்திரியமானது உபதேசத்தாலும் அழகாலும் வசீகரித்துக் காரியங்கொள்ளவல்ல புருஷகாரபலத்தாலே தலைமடிந்தொழிந்த பிறகு, அந்த ஸ்வாதந்திரியத்தின்கீழ்த் தலையெடுக்கப் பெறுமலிருந்த கஷ்டம் தீர்ந்து தலையெடுக்குமவையான குணங்கள் இவையாதலால் இக்குணங்கள் இங்கு நாராயண பதத்திற்கு அர்த்தமாகக் கொள்ளப்படவேணும்.

நாராயண பதார்த்தமாகச் சொல்லப்பட்ட திருக்குணங்களின் உபயோக விவரணம்

277. இக்குணங்களுக்கு இவ்விடத்தில் விநியோகம் என்னவெனில்; ஆச்ரயிக்க வந்த இந்த சேதநன் தன் தோஷங்களைப் பார்த்து அஞ்சாமைக்கு உறுப்பு வாத்ஸல்யம்; வாத்ஸல்யமாவது கன்றினிடத்திலே பசு இருக்குமிருப்பு; அதாவது அதனுடைய தோஷங்களை போக்யமாகக் கொள்ளுகையும் பாலைக் கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவர்களைக் கொம்பிலும் குளம்பிலுங் கொண்டு நோக்குகையுமாம். அப்படியே எம்பெருமானும் ஆச்ரிதருடைய தோஷத்தை [*என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்* என்கிறபடியே] போக்யமாகக்கொண்டு *பாலேபோல் சீர் *என்கிற குணங்களாலே தரிப்பித்து. *ந த்யஜேயம் கதஞ்சந* என்று ஒரு நிலை நின்று ரக்ஷித்தருள்வன். ஆகவே இந்த வாத்ஸல்ய குணமானது தன் குற்றங்களைக் கண்டு அஞ்சாமைக் குடலாகும். 'நமது காரியம் செய்வனோ மாட்டானோ வென்று சங்கியாமல் 'அவசியம் காரியம் செய்வன்' என்று நம்பியிருப்பதற்குறுப்பு ஸ்வாமித்வம். உடைமையை யுடையவனா யிருக்கைதான் ஸ்வாமித்வமென்பது, சேதநன் விமுகனான தசையிலும் விடாமல் நின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகைக்கு ஹேதுவான உறவுமுறையாம். ஆகவே இழவுபேறு தன்னதாம்படியான

ஸ்வாமித்வமானது,எம்பெருமான் நம் காரியத்தைச் செய்தே தீருவனென்று துணிகைக்கு உடலாம். உபய விபூதிக்கும் கடவனுயிருக்கும் பெருமைக்கு ப்ரகாசகமான ஸ்வாமித்வத்தைக் கண்டு (சேதநன்) தன் தாழ்வை யநுஸந்தித்து அகலாமைக்கு உறுப்பு ஸௌசீல்யம். எல்லாரோடுமொக்க மேல்விழுந்து புரையறக் கலக்கையே ஸௌசீல்யமாதலால் இது ஸ்வாமித்வங்கண்டு பின் வாங்காமைக்கு உடலாம் அதீந்த்ரியன் [அதாவது கண்ணுக்கு விஷயமாகாதவன்] என்று பிற்காலியாமல் கண்ணுலே கண்டு ஆச்ரயிக்கைக்கு உறுப்பு ஸௌலப்யம். தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்குவதேயன்றே ஸௌலப்யமாவது. *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்கிறபடியே ப்ராப்தி விரோதியைப் போக்கி ப்ராப்யனுன தன்னை உபகரிக்கைக்கு உறுப்பு ஜ்ஞாந சக்திகள். இந்த சேதநன் கீழ்நின்றநிலையையும் மேல் போக்கடியையும் எம்பெருமானறிந்து கொள்ளுகைக்கு ஜ்ஞாநம் உறுப்பு; அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கு சக்தி உறுப்பு; ஆகவே விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞாநசக்திகள் உடலாம்.

விசேஷித்து ஸௌலப்ய குணத்தின் விவரணம்.

278. கீழ்ச் சொன்ன குணங்களில் ஸௌலப்யம் மிக முக்கியமானது; அந்த ஸௌலப்யத்திற்கு எல்லை நிலம் எதுவென்றால் * தமருகந்த தெவ்வுருவம் அவ்வுரு வந்தானே* என்கிறபடியே அன்பர்கள் உகந்ததொன்றைத் திருமேனியாகக் கொண்டு நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கும் அர்ச்சாவதாரமாம். அர்ச்சாவதாரமானது தேசவிப்ரகர்ஷத்தாலே கண்ணுக்கு இலக்காகாத பரவ்யூஹங்கள் போலல்லாமல், காலவிப்ரகர்ஷத்தாலே கண்ணுக்கிலக்காகாதபடி போன விபவாவதாரங்கள் போலுமல்லாமல் அணித்தாகி ஸதா ஸந்நிதி பண்ணிக்கொண்டிருக்கையாலே எப்போதும் கண்ணுலே காணலாம்படி யிருக்கும். ஆனது பற்றியே ஆழ்வார்கள் அர்ச்சாஸ்தலங்களையே தங்களுடைய பிரபத்திக்கு இலக்காக்கினுர்கள்.

279. திருவாய்மொழியில் *அகலகில்லேனிறையுமென்று* என்கிற பாசுரத்தினுல் திருவேங்கடமுடையான் திருவடிகளில் ப்ரபத்தி செய்யுமிடத்து த்வயத்தின் பூர்வவாக்யத்தை அநுஸந்தித்துக்கொண்டே செய்தாரென்பது அப்பாசுரத்தினுல் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. எங்ஙனேயென்னில்; * அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா!* என்பதனுல் ஸ்ரீமத்பதார்த்தாநுஸந்தானம். * நிகரில் புகழாயென்று தொடங்கி *திருவேங்கடத்தானே* என்னுமளவும் நாராயண பதார்த்தத்தின் அநுஸந்தானம், (எவ்வாறென்னில்;) நாராயண பதத்திற்கு வாத்ஸல்யம் ஸ்வாமித்வம், ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஞானம் சக்தி என்னும் ஆறுகுணங்களுடைமையே அர்த்தமாதலால்' நிகரில்புகழாய் என்னு வாத்ஸல்யம்: உலகம் மூன்றுடையாய் என்று ஸ்வாமித்வம். என்னையாள்வானே என்று ஸௌசீல்யம். திருவேங்கடத்தானே யென்று ஸௌலப்யம் .சக்திமான்களான அமரர்களும் ஞானவான்களான முனிவர்களும் வந்து தொழுகிறுர்களென்று தெரிவிக்குமதான நிகரிலமரர்முனிக்கணங்கள் விரும்பு மென்கிற விசேஷணத்தினுல் ஜ்ஞான சக்திகள். *புகலொன்றில்லா வடியேனுன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே* என்கிற ஈற்றடியினுல் *சரணௌ சரணம் ப்ரபத்யே* என்பதன் அநுஸந்தானம்— என்று சுருக்கமாக வநுஸந்திப்பது.

சரண சப்தார்த்தமும் த்விவசனத்தின் பொருட் சுவையும்.

280. இனி 'சரணௌ' என்கிற பதத்திற்கு 'திருவடிகளை' என்று பொருள். இது த்விவசநாந்த பதமாகையாலே இரண்டு திருவடிகளைச் சொல்லிற்றுகிறது. இரண்டு திருவடிகளையும் சொல்லுகிற வித்தால் *இணைத்தாமரை யடியெம் பிரான்* என்கிறபடியே இரண்டு தாமரைப் பூவை ஒழுங்குபடச் சேர்த்து வைத் தாற்போலே யிருக்கிற சேர்த்தியழகு சொல்லப்படுகிறது. அதுவன்றியும் உபாய பூர்த்தியும் சொல்லப்பட்டதாகிறது. அது எங்ஙனே யென்னில்; ஏகவசந ப்ரயோகம் பண்ணுமிடங்களில் ஜாத்யேகவசந மென்று கொண்டு பல பொருள்கள் பொருளாகவுங் கூடும்; பஹுவசநமுள்ளவிடங்களில் 'பூஜாயாம் பஹுவசநம் 'ஆத்மநி பஹுவசநம் என்கிற முறைகளாலே ஒரு வ்யக்தியே பொருளாகவுங் கூடும். த்விவசநமோ வென்னில், இரண்டுக்குக் குறைவாகவும் இரண்டுக்கு மேற்படவும் கொள்ளுவதற்கு இடந்தரமாட்டாதாகையாலே, உபாயமாமளவில் ஸஹாயாந்தரத்தை அபேக்ஷியாமையாகிற பூர்த்தியைச் சொல்லுகிறது.

281 ஸ்ரீமந்நாராயணனைப் பற்றுகிறேனென்னுமல் அவனுடைய திருவடிகளைப் பற்றுகிறேனென்று சொல்லுகையாலே உபாயத்துக்கு உற்றதான குணச்சிறப்பு திருவடிகளுக்குள்ளதென்னுமிடம் தோன்றுகிறது. கீழே புருஷகாரமாகச் சொல்லப்பட்ட பிராட்டியும்; ரக்ஷகனுகச் சொல்லப்பட்ட எம்பெருமானுங்கூட கைவிட்டாலும் திருவடிகள் கைவிடமாட்டா; *வண்புகழ் நாரணன் திண்கழல்* என்கிறபடியே பற்றினுரை ஒருகாலும் நழுவவிடாத திண்மையையுடைத் தாயிருக்கும். *அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்* என்னுநின்றார்களன்றோ. திருவடிகளுக்கு இப்படிப்பட்ட குணச்சிறப்பு இருப்பதும் தவிர, இவனுடைய ஸ்வரூபத்துக்குச் சேரவும் திருவடிகளிலே யிழிகை ப்ராப்தம். ஸ்தநந்தய ப்ரஜையானது தாயினுடைய அவயவமெல்லாங் கிடக்கத் தனக்கு வகுத்ததாயுள்ள முலையிலே வாய்வைக்குமாபோலே சேஷிபக்கல் ஆச்ரயிக்க விழியும் சேஷபூதன் தன் ஸ்வரூபத்துக்குச் சேர இழியும் துறை திருவடிகளாம்.

282 திருவடிகளைச் சொன்னவிது திருமேனிக்கு உபலக்ஷணமாகும். விக்ரஹத்தில் 'ஏகதேசமான திருவடிகளைச்சொன்னபோதே புருஷகாரபூதையான பிராட்டிக்கு இருப்பிடமாய், நாராயணபதத்திற் சொன்ன குணங்களுக்கு ப்ரகாசகமாய் நிச்சலும் பழித்த சிசுபாலனையுங்கூடத் திருத்தி*சேட்பால்பழம்பகைவன் சிசுபாலன் திருவடி தாட் பாலடைந்த* என்கிறபடியே சேர்த்துக் கொள்ளுமியல்வினதான திவ்யமங்கள விக்ரஹத்தை நினைக்கிறதென்க.

'சரணம்' என்கிற பதத்தின் பொருள் விளக்கம்

283. த்வயத்தில் இரண்டாவது பதம் 'சரணம்' என்பது. இஷ்டத்தைப் பெறுகைக்கும் அநிஷ்டத்தைத் தவிர்க்கைக்கும் தப்பாத உபாயமாக என்று இதன் பொருளாம். அவித்யை யென்ன, அதடியாக வரும் ராகத்வேஷங்களென்ன, புண்ய பாப ரூப கருமங்களென்ன அவற்றின் பயனான தேவாதி சரீரங்களென்ன, பலவகைப்பட்ட துக்க பரம்பரைகளென்ன—ஆகிய இவை அநிஷ்டங்களாம். அர்ச்சிராதி மார்க்கத்தாலே செல்லுகையும் பரமபதத்தை

ப்ராபிக்கையும் பரம புருஷனைக் காண்கையும் குணாநுபவ கைங்கரியங்களுமாகிய இவை இஷ்டங்களாம், ஆக இந்த இஷ்டங்களைப் பெறுகைக்கும் அந்த அநிஷ்டங்களைத் தவிர்க்கைக்கும் தப்பாத உபாயமாக என்றதாயிற்று.

284 திருவடிகளையே உபாயமாகச் சொன்னதனால் உபேயமானதுதானே உபாயமென்பதுசொல்லிற்றாகும். உபாயம் வேறும் உபேயம் வேறுமாயிருக்கிறபடி கிடையாதென்க. ஆனால் உபேயமானதுதன்னையே உபாயமாக்குகிறது ஏனென்னில்; அகிஞ்சநனாய் அநந்யகதியா யிருக்கிறவிவன் தன்செயல்மாட்சியாலே [அதாவது வேறொன்றும் செய்யமாட்டாமையாலே] உபேயமானதுதன்னையே உபாயமாக்குகிறானித்தனை. உலகில், போக்யமான பாலையே மருந்தாக்கும்படியாக நேர்ந்துவிடுகிறதன்றோ. அதுபோல வென்று கொள்க. உபேயமான வஸ்துவையே உபாயமாகச் சொல்லுகையாலே உபேயம்வேறும் தான் வேறுமாயிருக்கிற உபாயாந்தரங்களிற்காட்டில் விலக்ஷணமான வுபாயம் இது என்றதாயிற்று.

'ப்ரபத்யே' என்றதன் பொருள் விளக்கம்

285. இனி ப்ரபத்யே என்றது பற்றுகிறேனென்றபடி. ரக்ஷித்தருள வேணுமென்று வாயினால் பிரார்த்திக்கையாகிற கேவல வாசிகமாகவும், கைகூப்புதல் நமஸ்கரித்தல் முதலியவையாகிற கேவலகாயிகமாகவும் பற்றினாலும் பலன் ஸித்திக்கக் குறையில்லை; ஆனாலும், *தத்வஜ்ஞாநாத் முக்தி:* என்று ஞானத்தாலே மோக்ஷமென்கையாலே இங்கு மாநஸமான பற்றுதலே சொல்லிற்றாகக் கடவது. எம்பெருமானுடைய ரக்ஷகத்வத்தை இசைகையாகிற ஒரு அத்யவஸாயமே இந்த ஞானமாம்.

286 மாநஸிகம் மாத்திரமே போதுமோ? *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே ...அடைந்த* என்கிறபடி மனமொழி மெய்கள் மூன்றாலும் ஸ்வீகரிக்கவேண்டாவோவென்னில், இம்மூன்றும் வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஏனென்னில், பற்றப்படுகிற ஈச்வரனே பலன் ஸித்திக்கைக்கு உபாயமாகையாலும், மனமொழி மெய்களாலுண்டான பற்றுதல்களான இவை மேலெழ உபாயம்போல் தோற்றிக் கழிந்து போமதொழிய ஸாக்ஷாத் உபாயமல்லாமையாலும், பலன் ஸித்திப்பதற்கு அத்யவஸாயரூபமான ஸ்வீகாரமொன்றுமே போதுமானது.

287 *நின்னடியிணை யடைந்தேன்* அடிக்கீழமர்ந்து புகுந்தேன்* என்றாப்போலே இறந்தகாலமாகச் சொல்லுகையன்றிக்கே [ப்ரபத்யே-பற்றுகிறேன்] என்று நிகழ்காலமாகச் சொல்லுகிறது ஏதுக்காகவென்னில், ப்ரக்ருதியோடே யிருக்கிறவிவன் ரஜோகுண தமோகுணங்களாலே கலங்கி உபாயாபாயங்களில் ஏதேனுமொன்றிலே அந்வயித்து, பின்னை ஸத்வகுணம் தலையெடுத்து அநுதாபம் பிறந்து பயப்பட்ட காலத்திலே ப்ரபத்தியொழிய அதுக்குப் பரிஹாரமில்லாமையாலும் அதுதான் ஒருகால் செய்தற்றபின்பு மீண்டும் செய்யலாகாமையாலும் முந்துற்ற ப்ரபத்தியை அநுஸந்திக்கைக்காகக் கொழுந்துபடக் கிடக்கிறபடி. ஆக, பூர்வவாக்யார்த்தம் சொல்லிற்றாயிற்று.

த்வயத்தில் உத்தரவாக்யத்தின் திரண்டபொருள்

270. இனி உத்தரவாக்கியத்தின் பொருள் சொல்லுகிறோம். ஸர்வஸ்வாமியாயிருக்கிறஸர்வேச்வரனது திருவடிகளில் பண்ணும்கைங்கர்யத்தைப் பிரார்த்திப்பதே இதற்குத்திரண்ட பொருள். பூர்வ வாக்கியத்தில் உபாயஸ்வீகாரம் பண்ணி இப்போது உபேயம் சொல்லுகிறவிதனல் என்ன தேறுகிறதென்னில்; பூர்வ வாக்கியத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஸாதனம் ஸகல பலன்களுக்கும் பொதுவாகையாலே கீழ்ப்பண்ணின உபாயவரணம் வேறொருபலனுக்காகவன்று, பகவத்கைங்கர்ய ஸித்திக்காகவே என்றதாகத் தேறுகின்றது. மற்ற பலன்களை விட்டு இந்தப் பலனை அபேக்ஷிக்க வேண்டுவானென்னென்னில்; உபாயவரணம் பண்ணுகிறவளவில் அநந்யோபாயத்வரூபமான ஸ்வரூபத்துக்குத் தகுதியாக கர்மஜ்ஞான பக்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டு சரமமான ஸித்தோபாயத்தைப் பற்றினுப்போலே உபேய ப்ரார்த்தனை பண்ணுகிறவளவிலும் அநந்யபோக்யத்வரூபமான ஸ்வரூபத்துக்குத் தகுதியாக உபேயாந்தரமான ஐச்வர்ய கைவல்யங்களைவிட்டு சரமமான உபேயத்தை [பகவத்கைங்கர்யத்தை] வேண்டுவது ப்ராப்தமேயன்றோ.

289 *உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறிதி* என்கிறபடியே நினைவறியுமவனன எம்பெருமான் பக்கலிலே பிரார்த்தனை வேணுமோ? ஸர்வஜ்ஞனை அவன் இவனது நினைவை அறியமாட்டானோ வென்னில் நெடுங்காலமாக இதரபலன்களில் நசையாகிற நோய்கொண்டு இந்த உபேயத்தில் நசையற்றுக்கிடந்தவன், இதிலே ருசிபிறந்து தன்பக்கலிலே வந்து இத்தை அபேக்ஷிக்கிறதித்தனை. ரோகத்தாலே சோற்றில் ஆசையற்றுக் கிடந்த குழந்தை, ரோகம்தீர்ந்து பசிவிளைந்து சோறு என்றபேக்ஷித்தால், அது கேட்டுப் பெற்றதாய் உகக்குமா போலே இதனைக்கொள்க.

ஸ்ரீமதே என்றதன் பொருள் விவரணம்

290. இனி ஸ்ரீமதே என்கிற பதத்திற்கு அர்த்தம் கேண்மின். ஸ்ரீசப்தத்திற்கு பூர்வவாக்யத்தை விவரிக்கும்போது சொன்ன இரண்டு வ்யுத்பத்திகளும் குர்த்தமும் மதுப்புக்கு அர்த்தமான நித்யயோகமும் அப்படியே அநுஸந்திக்கத் தக்கது. ஆகவே ஸ்ரீமதே என்பதற்கு பெரியபிரட்டியாரோடே கூடியிருக்குமவனுக்கு என்று பொருளாம். பிராட்டியின் நித்ய யோகமானது இரண்டிடத்திலும் ஒரேவிதமாக இருப்பதாலும் அந்தந்த நிலைமைக்குத் தக்கபடி இவளிருக்குமிருப்பை நிஷ்கர்ஷித்துக்கொள்ளவேணும். எம்பெருமான் சேதநர்களுக்கு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்ட ப்ராப்திகளைக் குறித்து உபாயமாமளவில் அவள் புருஷகாரமாயிருப்பள்; அவன் சேதநர்களுக்கு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய் ப்ராப்யனுமளவில் தானும் அவனைப்போலே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தினியாய்க்கொண்டு ப்ராப்யையுமாய், இவர்கள் செய்யும் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப் படுத்தி உகப்பிக்குமவளாயிருப்பள். ஆகவே, பூர்வ வாக்யத்தில் சொன்ன நித்யயோகம் புருஷகாரத்வோபயுக்தமென்றும், இப்போது உத்தர வாக்யத்தில் சொல்லுகிற நித்யயோகம் கைங்கர்ய ப்ரதிஸம்பந்திநி யாகைக்காகவும் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப் படுத்துகைக்காகவும் அமைந்ததென்றும் சொல்லிற்றாயிற்று.

291 முதல் ரஹஸ்யமான திருமந்திரத்திலே 'நாராயணாய, என்று சொல் விற்று. நாராயணனுக்கே அடிமை செய்யப்பெறுவேனாகவேணும் என்கிற வேயொழிய, அடிமை கொள்ளுமவன் பெரிய பிராட்டியாரோடு கூடியிருப் பவனாக வேணுமென்றும் அடிமை செய்யுமவன் மம காரமற்றவனாக இருக்க வேணுமென்றும் அங்கு ஸ்பஷ்டமாகச் சொல்லிற்றில்லையே; அவையிரண்டும் இங்கே ஸுஸ்பஷ்டமாகச் சொல்லுகையாலே திருமந்திரத்தில் உத்தர பதத்திற்கு இவ் வுத்தரவாக்யம் விவரணமா யிருக்குமென்று கொள்ளக்கடவது.

த்வயத்தில் 'நாரயணாய' என்றதன் பொருள் விவரணம்

292. இனி 'நாராயணாய' என்கிற பதத்தின் பொருள் கேண்மின். நாராயணத்வமா வது உபயவிபூதி நாதத்வமாகையாலே இப்பொருள்தான் இங்குப்பொருந்தும் கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாவான் சேஷியேயன்றோ [சேஷி—ப்ராப்தனான ஸ்வாமி கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியைச் சொல்லுகிற இப்பதத்திலே, கைங்கர்யத்துக்கு முன்னாடி நேரும் அநுபவத்துக்கு இலக்கான திவ்யமங்கள விக்ரஹத்தையும் கல் யாண குணங்களையும் சொல்லுமானாலும் இவ்விடத்திலே சேஷித்வமென்கிற குணத்திலே முக்கியமான நோக்கு என்று கொள்ளவேணும். ஏனென்னில், இங்குச் சொல்லுகிற கைங்கர்யத்திற்கு மிகவும் அந்தரங்கமாயிருப்பது சேஷித்வமாகை யாலே; அப்ராப்த விஷயத்தில் கைங்கர்யம் சாஸ்த்ரங்களிலே நிஷேதிக்கப்பட் டிருக்கும்; அதுபோலல்லாமல் விஹிதமான ப்ராப்த விஷயத்தில் பண்ணும் கைங் கர்யமன்றோ இவனுக்கு ரஸிப்பது; ஆகவே சேஷித்வத்திலே நோக்கென்றது நன்று.

293. நாராயணபதத்தின் மேலுள்ள சதுர்த்தியானது கைங்கர்ய ப்பிரார்த்தனை யைக் காட்டுகிறது. சேஷத்வஜ்ஞாநகார்யமான உபாயபரிக்ரஹத்துக்கு அடுத்த படியாக ப்ராப்தமான இந்த சதுர்த்தியானது, பரிக்ரஹித்த உபாயத்தினுடைய பலனான கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கின்ற தென்கை மிகவும் உசிதம். சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலும், அந்த சேஷத்வமானது கைங்கர்ய மில்லாத போதுஸத்தைபெற்றதாகாமையாலும் கைங்கர்யம் ஆத்மாவுக்கு நித்யமாயிருக்கும். நித்யமாயிருக்குமாகில் பிரார்த்திக்க வேணுமோ வென்னில், ப்ரார்த்தனா விசேஷ மில்லாதபோது கைங்கர்யம் ஸித்தியாமையாலே அதை நித்தியமாகப் பிரார்த் தித்தே பெறவேணும்.

த்வயத்தின் முடிவிலுள்ள நமஸ்ஸின் பொருள்

294. இனி நம: பதத்தின் பொருள். நமச் சப்தமானது பொதுவாக அஹங் காரமமகாரங்களைக் கழிக்குமதாகையாலே திருமந்திரத்தில் நடுவிலுள்ள நமச் சப்தம்போலே ஸ்வரூபவிரோதி உபாய விரோதி புருஷார்த்த விரோதி ஆக மூன்றையும் கழிக்க வல்லதாயிருந்ததேயாகிலும் இங்கு அப்படியல்லாமல் கைங்கர் யப் பிரார்த்தனைக்கு அடுத்தபடியாக வுள்ளதாகையாலே இந்த கைங்கர்யத்தில் விரோதியைக் கழிக்கிறது. கைங்கர்யத்தைத் தன்னுடைய உகப்புக்கு உறுப்பாக நினைத்துப் பண்ணுகையே இங்கு விரோதியாகும். அங்ஙனம் நினைத்துப் பண்ண லாகாது. " பகவந்முகவிகாஸ ஹேதுவாகையாலே இது நமக்கு ஆதரணீயம்"

என்கிற பிரதிபத்தியே நடக்கக்கடவது. இதில், தான் போக்தா என்கிற பிரதிபத்தியும், போகம் தன்னுடையது என்கிற பிரதிபத்தியும் நடக்குமாகில் அபுருஷார்த்தமாகும்.

295. ஆக, இரண்டு கண்டமான த்வயத்தின் பொருள் தேறினதாவது, புருஷகார பூதையான பிராட்டியும், அவளுடைய நித்யஸாஹித்யமும். அவளாலே தலையெடுக்கும்படி செய்யப்பட்ட வாத்ஸல்யாதி குண பூர்த்தியும் அந்த குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹமும், குணங்களோடும் விக்ரஹத்தோடுங் கூடின வஸ்துவின் உபாயத்துவமும், அவ்வுபாய ஸ்வீகாரமும் பூர்வ கண்டத்தால் சொல்லிற்று.

296. அவ்வுபாய ஸ்வீகாரத்திற்குப் பலமாக கைங்கர்யத்திற்கு விஷயம் திவ்ய தம்பதிகளாகிற மிதுனமென்பதும், அவ்வஸ்துவினுடைய ஸர்வசேஷித்வமும்; அவ்விஷயத்தில் கைங்கர்யமும், அக்கைங்கர்யத்தின் விரோதி நிவ்ருத்தியும் உத்தர கண்டத்தால் சொல்லிற்று. இதுவே த்வயத்தின் ஸாரமான பொருள். ....

297. பட்டர் அருளிச்செய்த அஷ்டச்லோகியில் *நேத்ருத்வம் நித்யயோகம்* என்கிற ஐந்தாவது சுலோகமும், *ஈசாநாம் ஜகதாம்* என்கிற ஆறுவது சுலோகமும் த்வயத்தின் பொருளை விவரிப்பனவாதலால் அவ்விரண்டு சுலோகங்களும் இங்கே அநுஸந்தேயங்கள். *நேத்ருத்வம் நித்யயோகம் ஸமுசிதகுணஜாதம் தநுக் க்யாபநஞ்ச உபாயம் கர்த்தவ்யபாகம் து* என்கிற வளவால் பூர்வகண்டத்தில் ஆறு அர்த்தங்கள் வகுக்கப்படுகின்றன வென்கிறது. எங்ஙனே யென்னில் [1. நேத்ருத்வம்.] புருஷகாரத்வமென்றபடி. த்வயத்தின் முதலில் ஸ்ரீ சப்தம் காண்பது அவள் புருஷகார பூதையென்று காட்டுவதற்காகவென்று கருத்து. [2. நித்ய யோகம்.] ஸ்ரீ சப்தத்திற்கடுத்த மதுப் ப்ரத்யயத்தின் அர்த்தம் சொன்னபடி. *அகலகில்லேனிறையு மென்றிருக்கும்படியைச் சொன்னவாறு. [3. ஸமுசிதகுணஜாதம்], புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்" என்ற முமுக்ஷுப்படி சூர்ணையை இங்கு நினைப்பது. [4. தநுக்க்யாபனஞ்ச.] 'சரணௌ' என்று திருமேனியில் ஏகதேசமான திருவடிகளைச் சொன்னவிது திருமேனிக்கு உபலக்ஷணமென்று கொள்ளக்கடவது. புருஷகார பூதையான பிராட்டிக்கு இருப்பிடமாய் நாராயணபதத்திற் சொன்ன குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்ய மங்கள விக்ரஹத்தைச் சொல்லிற்றென்க. [5. உபாயம்.] ஸ்ரீ மந்நாராயண சரணௌ வரையில் அர்த்தம் சொல்லிற்று கீழ்; இனி அடுத்தபதமான சரணம் என்பதற்கு - இஷ்டத்தைப் பெறுகைக்கும் அநிஷ்டத்தைத் தவிர்க்கைக்கும் தப்பாத உபாயமாக- என்று பொருள். [6. கர்த்தவ்யபாகம்.] 'ப்ரபத்யே' என்பதனால் சொல்லப்படுகிற மாநஸிக- வாசிக- காயிகங்களான ஸ்வீகாரங்களில் ஒரு பாகமான மாநஸிக ஸ்வீகாரம். ஆக இவ்வளவும் பூர்வகண்டார்த்தம்.

298. [அத மிதுநபரம் ப்ராப்யம் ....ஸ்வாமித்வம் ப்ரார்த்தநாஞ்ச ப்ரபலதரவிரோதி ப்ரஹாணம்] இனி உத்தரகண்டத்தின் பொருள் பணிக்கத் தொடங்குகிறபடியை 'அத' என்றிட்டுக் காட்டுகிறபடி. பெருமாளும் பிராட்டியுமாக இருவருமான சேர்த்தியிலே

அடிமை செய்கையை ப்ரார்த்திப்பதே உத்தரவாக்யத்தின் திரண்ட பொருள் என்பதை 'மிதுநபரம் ப்ராப்யம்' என்பதனுல் காட்டினபடி. இது (7) 'ஸ்ரீமதே' என்றதன் அர்த்தம் சொன்னபடி. பெரிய பிராட்டியாரோடே கூடியிருக்குமவனுக்கு என்று பொருள்.

299. பிராட்டியின் நித்ய யோகத்தை அநுஸந்தித்ததானது பூர்வகண்டமும் உத்தரகண்டமுமாகிற இரண்டிடத்திலும் ஒரே விதமாக இருந்தாலும் அந்தந்த நிலைமைக்குத் தக்கபடி இவளிருக்குமிருப்பை நிஷ்கர்ஷித்துக் கொள்ளவேணும். பூர்வகண்டத்தில் அநுஸந்தித்த நித்யயோகம் புருஷகார க்ருத்யத்திற்காக. உத்தர கண்டத்தில் அநுஸந்திக்கிற நித்யயோகம் எம்பெருமானுக்குப் போலவே பிராட்டிக்கும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வேந அந்வயம் உண்டென்கைக்காக. ஆகவே கைங்கர்யத்திற்கு உத்தேச்யம் மிதுனமேயென்றதாயிற்று.

300. [8. ஸ்வாமித்வம்] இது நாராயண பதார்த்தம் சொன்னபடி. நாராயணத்வமாவது உபயவிபூதி நாதத்வமாகையாலே ஸர்வசேஷியாயுள்ளவனுக்கு என்றதாகும். கைங்கர்ய ப்ரகரணமாகையாலே இப்பொருள்தான் பொருந்தும். ப்ராப்தனை ஸ்வாமியேயன்றே கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாவான். அப்ராப்த விஷயத்தில் பண்ணும் கைங்கர்யம் ரஸிக்கமாட்டாதே. [9. ப்ரார்த்தநாஞ்ச] நாராயணபதத்தின் மேலுள்ள சதுர்த்தீ விபக்தியின் அர்த்தம் ப்ரார்த்தனையென்க. [10. ப்ரபலதர விரோதி ப்ரஹாணம்.] இது த்வயத்தின் முடிவிலுள்ள நமச்சப்தத்தின் பொருள் விவரணம். (294. லக்கத்தில் விவரணம் காண்க.) ஆகப் பத்து அர்த்தங்கள் த்வய ரஹஸ்யத்தில் அநுஸந்திக்கத் தக்கனவென்றதாயிற்று. .... *

நவரத்ன நவநிதியில் த்வயார்த்த ஸாரமான நான்காவதுநிதி முற்றிற்று.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியரெழுதிய

நற்பொருளெழுநூறில் மூன்றுவது நூறு

முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியரியற்றிய

நவரத்ன நவநிதியில் ஐந்தாவது நிதி – சரமச்லோகார்த்த ஸாரம்

நற்பொருளெழு நூறில் நான்காவது நூறு

த்வய சரமச்லோகங்களின் பௌர்வாபர்ய விசாரம்.

301. முமுக்ஷுக்களுக்கு அறியவேண்டியவையான மூன்று ரஹஸ்யங்களுள் திருமந்த்ரம் த்வயம் ஆகிற இரண்டு ரஹஸ்யங்களின் ஸாரார்த்தங்களை அநுபவித்தாயிற்று கீழ். இனி சரமச்லோகார்த்தத்தை யனுபவிப்போம். த்வயம் சரமச்லோகம் என்கிற இரண்டு ரஹஸ்யங்களின் பௌர்வாபர்யத்தில் மதபேத முண்டு. திருமந்த்ரத்திற்கடுத்தபடி சரமச்லோகத்தை விவரிப்பது ஒரு ப்ரகாரம். த்வயத்திற்குப் பிறகு அதனை விவரிப்பது மற்றொரு ப்ரகாரம். ஆசாரியர்களுக்கு இவ்விரண்டு படியும் ஸம்மதமே.

302. ஆசார்ய ஹ்ருதயத்தில் மூன்றுவது பிரகரணத்தில் "இவற்றுக்கு மந்த்ரவித்யநுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி" என்றொரு சூர்ணையுள்ளது. இதில், ரஹஸ்யத்ரயமும் விலக்ஷண சப்தத்தாலே காட்டப்பட்டுள்ளது. மந்த்ரம், விதி, அநுஸந்தானம் என்ற மூன்றோடும் ரஹஸ்ய பதத்தைச் சேர்த்தால், மந்த்ர ரஹஸ்யம், விதிரஹஸ்யம், அநுஸந்தான ரஹஸ்யம் என்றதாகத் தேறும். திருவஷ்டாக்ஷரத்திற்கு மந்த்ர ரஹஸ்யமென்று பெயர்; சரமச்லோகத்திற்கு விதி ரஹஸ்யமென்று பெயர்; த்வயத்திற்கு அநுஸந்தாந ரஹஸ்யமென்று பெயர். * ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர:* என்று திருவஷ்டாக்ஷரத்திற்கு மேற்பட்ட மந்த்ரம் வேறில்லையென்கையாலே அதற்கு மந்த்ரரஹஸ்யமென்றேபெயர். ஸித்தோபாயவரணத்தை ஸாங்கமாக விதிக்கையாலே சரமச்லோகத்திற்கு விதிரஹஸ்யமென்று பெயர். ஸாரஜ்ஞராலே ஸதா அநுஸந்தானம் பண்ணப்படுமதான த்வயத்திற்கு அநுஸந்தான ரஹஸ்யமென்று பெயர். ஸித்தோபாய வரணத்தை அநுஷ்டான முகத்தாலே காட்டிற்று த்வயரஹஸ்யம். அதுதன்னை விதிமுகத்தாலே காட்டுகிறது சரமச்லோக ரஹஸ்யம்.

சரமச்லோகங்கள் மூன்றென்று முதலித்தல்.

303. ஸம்ப்ரதாயத்தில் வராஹ சரமச்லோகமென்றும் ஸ்ரீ ராம சரமச்லோகமென்றும் ஸ்ரீ கிருஷ்ண சரமச்லோக மென்றும் மூன்று சரமச்லோகங்கள் ப்ரஸித்தமாக உண்டு. *ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே....அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்.* என்பது வராஹ சரமச்லோகம். *ஸக்ருதேவ ப்ரபந்நாய....ஏதத் வ்ரதம் மம* என்பது ஸ்ரீ ராம சரமச்லோகம். *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:* என்கிற விது ஸ்ரீ க்ருஷ்ணசரமச்லோகம். இவை முறையே பூமிப்பிராட்டியை நோக்கியும், கடற்கரையிலே விபீஷணாழ்வானை நோக்கியும், திருத்தேர்த்தட்டிலே அர்ஜுனனை நோக்கியும் அருளிச் செய்யப்பட்டவை.

சரமச்லோக சப்தார்த்த நிரூபணம்

304. சரமச்லோகமென்பதற்குக் கடைசியான சுலோகமென்று பொருள் தோன்றும். கீதையில் கடைசியான சுலோகம் * யத்ர யோகேச்வர: க்ருஷ்ண:... த்ருவா நீதிர் மதிர் மம* என்பதேயொழிய * ஸர்வதர்மாநித்யாதி ச்லோகமன்று. எழுபத்தெட்டு சுலோகங்கள் கொண்ட பதினெட்டாமத்யாயத்தில் அறுபத்தாறும் சுலோகமான விதனை எங்ஙனே சரமச்லோக மென்றுர்கள்? என்று சங்கை தோன்றும். கேண்மின்.

305. ஸமாஸங்களில் மத்யமலோபி ஸமாஸமென்று ஒன்றுண்டு; அதனை சாக பார்த்திவஸமாஸ மென்றும் சொல்லுவர்கள். ஒரு அரசன் கீரையிலே மிகவும் ப்ரீதி கொண்டிருந்தான். அவனை சாகப்ரிய பார்த்திவனென்ன வேண்டி சாக பார்த்திவனென்றே சொல்லிவிடுவதுண்டு. “ சாகப்ரிய: பார்த்திவ:- சாகபார்த்திவ: ” என்பர்கள். இங்கு மத்யமமான ப்ரிய பதம் லோபித் திருக்கையாலே மத்யமலோபி ஸமாஸமென்று சொல்லுவர்கள். அதுபோல இங்கும் “ சரமோபாய ப்ரதிபாதக: ச்லோக:- சரமச்லோக: ” என்றுகக் கடவது. கர்மஜ்ஞாநாதிகளான உபாயங்களில் சரமமான உபாயம்- சரணுகதி; அதனைத் தெரிவிக்குமதான இந்த ச்லோகம் சரமச்லோக மென்று பேர்பெற்றதாயிற்று.

306. இது, மா சுச: என்று முடிவு பெறுகின்றது. துக்கப்படாதே என்று பொருள் அர்ஜுனன் துக்கப்பட்டதாகத் தெரிந்தாலொழிய இங்ஙனே சொல்ல ப்ரஸக்தி யில்லை. அவன் துக்கப்படும்படியாகக் கண்ணன் ஏதாவது சொல்லியிருக்கிருனே வென்று பார்க்குமளவில் அப்படி யொன்றும் தெரியவில்லை. “ கண்ணு! நீ சொன்னது எனக்கு துக்ககரமாக இருக்கிறது” என்று அர்ஜுனன் ஏதேனும் சொல்லி யிருக்கிருனே வென்று பார்த்தால் அதுவுமில்லை. இப்படியிருக்க மா சுச: என்று எது கொண்டு சொல்லிற்று? என்று விமர்சிக்கவேணும்.

(மா சுச:) என்றதில் தோன்றும் சோக நிரூபணம்

307. முந்தின சுலோகங்களிலிருந்து ஒருவாறு துக்கத்தை யூஹிக்கலாம்; (61, 62 ச்லோகங்கள்) * ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந! திஷ்டதி * என்றும் * தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத* என்றுமுள்ளன; இவற்ருல் க்ருஷ்ணனுகியதான் ஈச்வரனன்றுபோலவும், தன்னிற்காட்டில் வேறுபட்ட ஒருவன் ஈச்வரனுகவுளன் போலவும் காட்டுகையாலே, ஐயோ! தன்னையே தஞ்சமாகக் காட்டிக் கொடாமல் இப்படி நம்மை வஞ்சிக்கிருனே! என்று சோக முண்டாகி யிருக்கலாம்.

308. அன்றியும், (சுலோ. 63ல்) * யதேச்சஸி ததா குரு* [உனக்கு இஷ்டமானபடி செய்] என்று சொல்லித் தலைக்கட்டினுனே! ஆதியிலே * யச் ச்ரேயஸ் ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந்மே* என்று நாம் பிரார்த்தித்திருக்க, தானே ஒன்றை அறுதியிட்டுச் சொல்லாமல் ‘யதேச்சஸி ததா குரு’ என்று சொல்லுகிறவிது

என்ன வார்த்தை! என்றும் சோக முண்டாகி யிருக்கலாம். முக்கியமான சோகத்தை நம் ஆசாரியர்கள் தெரிவித்தருளுகிறுர்கள்;—

309. முமுக்ஷுப்படியில். "கீழே சில உபாய விசேஷங்களை யுபதேசிக்க. அவை துச்சகங்களென்றும் ஸ்வரூபவிரோதிகளென்றும் நினைத்து சோகாவிஷ்டனுன அர்ஜுனனைக்குறித்து" என்றுள்ள ஸ்ரீ ஸூக்தி மருமமுணர்ந்துரைத்ததாகும். கீழே பல அத்யாயங்களிலே கருமம் ஞானம் முதலிய சில உபாய விசேஷங்களை மோக்ஷஸாதனமாக விஸ்தரேண உபதேசித்தருளக் கேட்ட அர்ஜுனன் அவை அனுஷ்டிக்க அரிதானவையென்று கண்டான்; எதனுலென்னில், அவை காயக்லேச ரூபமாகை யாலும் இந்திரியங்களை வென்றே அவை அனுஷ்டிக்கவேண்டுகையாலே இந்திரிய ஜயம் அரிதாகையாலும், ஸாதனமாக நெடுங்காலம் ஸாதிக்கவேண்டி யிருக்கை யாலும், முக்கியமாக பரதந்திரமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்நரூபங்களான இவை விரோதிகளாகையாலும்.

310. ஆக இவற்றுலே எம்பெருமானைப் பெறுவதென்பதொன்றில்லை: இனி இழந்தே போமித்தனையன்றே? என்று சோகித்து நின்றுன்; அந்த சோகம் தீரவே இதில் சரமோபாயம் விதிக்கப் படுகையாலே இதில் மாசுச: எனப்பட்டது என்ப தாக ஆசாரியர்களின் திருவுள்ளம்.

சரமச்லோகத்தின் திரண்ட பொருள்

311. இந்த ச்லோகமானது பூர்வார்த்தமென்றும் உத்தரார்த்தமென்றும் இரண்டு படியாக வகுப்புண்டிருக்கும். இவ்வுபாயத்துக்கு அதிகாரியானவன் செய்ய வேண்டுமது பூர்வார்த்தத்தாலே சொல்லப்படுகிறது;உபாயபூதனுன ஸர்வேச்வரன் இவனுக்குச் செய்யுமது உத்தரார்த்தத்தாலே சொல்லப்படுகிறது. அதிகாரியான வன் செய்ய வேண்டுமது இவ்வுபாயத்தை ஸ்வீகரிப்பதேயாகும்; [அதுதான் பூர்வார்த்தத்தால் பிரதிபாதிக்கப்படுகிற தென்க] ஆனுல் அந்த உபாய ஸ்வீகாரத் தைமட்டும் சொல்லாதே * ஸர்வதர்மாந்பரித்யஜ்ய* என்று உபாயாந்தரங்களை விடு கையும் சொல்லப்படுகிறதே, அது எதற்காகவென்னில்; அங்கியான உபாய ஸ்வீகாரத்திற்கு அங்கமும் சொல்லப்பட வேண்டுகையாலும் உபாயாந்தர பரித்யாகமே அங்கமாகையாலும் அந்த அங்கத்தோடேகூட விதிக்கிறபடி.

312. ஆசமனம் முதலியவற்றுக்கு அங்கமான கைகாலலம்புகை முதலான வற்றை யொழிய அவை [ஆசமநாதிகள்] அனுஷ்டிக்க வொண்ணுதாப்போலே இங்கும் அங்கமாகச் சொல்லுகிற உபாயாந்தர பரித்யாகத்தை யொழிய சரண வரணம் ஆகாதென்பது தேறிற்று. உபாயாந்தர பரித்யாகமே சரணவரணமாகக் கொள்ளத்தகும். "ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்திஃ ப்ரபத்திஃ" என்பது பூருவாசாரியர் களின் மருமமானவார்த்தை.

ஸர்வதர்மாந் என்ற முதற் பதத்தின் விவரணம்

313. ஸர்வதர்மாந்' என்பதற்கு ' எல்லா தர்மங்களையும்' என்று பொருள். ஒரு பலனுக்கு ஸாதனமா யிருக்குமது எதுவோ அதுவே தருமமெனப்படுவது. மோக்ஷோபாயங்களை உபதேசித்து வருகிற ப்ரகரணமாகையாலே இவ்விடத்திலுள்ள தர்ம சப்தமானது ஐஹிகமாயும் ஸ்வர்க்காதி ஆமுஷ்மிகமாயு மிருந்துள்ள த்ருஷ்ட அத்ருஷ்ட பலன்களுக்கு ஸாதனங்களானவற்றைச் சொல்லுகையன்றியே பகவத் ப்ராப்தி ரூபமான மோக்ஷபலத்துக்கு ஸாதனமா யுள்ளவற்றைச் சொல்லுகிறது

314. அந்த மோக்ஷபலஸாதனங்கள் ச்ருதி ஸ்ம்ருதிகளாலே விதிக்கப்பட்டவையாய்க் கொண்டு அநேகங்களா யிருக்கையாலே (தர்மாந்) என்று பஹுவசநமுள்ளது. அவை எவை யென்னில்; *கர்மணைவ ஹி ஸம்ஸித்திம்* இத்யாதிகளால் ஸ்வதந்த்ர ஸாதனமாகச் சொல்லப்பட்ட கர்மயோகமும், *ஸர்வம் கர்மாகிலம் பார்த்த! ஜ்ஞாநே பரிஸமாப்யதே* என்று சொல்லப்பட்ட கர்ம ஸாத்யமான ஜ்ஞாநயோகமும்; *மந்மநா பவ மத்பக்த:* இத்யாதிகளாலே சொல்லப்பட்ட கர்மஜ்ஞாந ஸஹக்ருதமான பக்தியோகமுமாகிற இவையும், *ஜந்ம கர்ம ச மே திவ்யம்* இத்யாதிகளால் பகவத் ப்ராப்திக்கு ஸாதனமாகச் சொல்லப்பட்ட அவதார ரஹஸ்ய ஜ்ஞானம், *ஏதத் புத்த்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யச் ச பாரத* என்றவிடத்துச் சொல்லப்படுகிற புருஷோத்தம வித்யை, * தேசோயம் ஸர்வகாமதுக்* என்று சொல்லும் புண்ய க்ஷேத்ரவாஸம், *ஸர்வபாப விசுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதனம்* என்று பகவத் ப்ராப்தி ஸாதநமாகச் சொல்லப்படுகிற திருநாமஸங்கீர்த்தனம் திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை முதலாக ஸாதநபுத்தியோடு செய்யப் படுமவையும் இங்கு (தர்மாந்) என்பதனாலே விவக்ஷிதங்கள்.

315. (ஒரு சங்கை) பஹுவசநமே போதுமாயிருக்க, தர்ம சப்தத்திற்கு விசேஷணமாக ஸர்வசப்தமு மொன்று இருக்கிறதே, இதனால் சொல்லுகிறது என்னென்னில்; பஹுவசநத்தால் சொல்லப்பட்ட அந்தந்த உபாய விசேஷங்களை அனுட்டிக்குமளவில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான ஸந்தியாவந்தந பஞ்ச மஹாயஜ்ஞாதிகளான நித்ய கருமங்கள் ஸர்வ சப்தத்தால் விவக்ஷிதங்களென்க.

316. ஆக ஸர்வதர்மாந் என்பதற்குத் தேறின பொருள்யாதெனில்: ச்ருதிஸ்ம்ருதிகளாகிற ப்ரமாணங்களாலே விதிக்கப்பட்டுள்ளவையாய் நித்ய நைமித்திகம் முதலானவற்றை வடிவாக வுடையதான கர்மயோகம் முதலான உபாயங்களை என்றதாயிற்று, [ஸஹஸா இங்கே தோன்றக்கூடிய சங்கைகள் மேலே தொலையும்.]

பரித்யஜ்ய என்கிற பதத்தின் பொருள்

317 இனி பரித்யஜ்ய பதத்திற்குப் பொருள் கேண்மின். த்யாகமாவது விடுகை. இவ்விடத்திற் சொல்லுகிற த்யாகமாவது வெறும்விடுகையன்று. கீழ்ச்சொல்லப்பட்ட உபாயங்களின் படியை நன்கு நோக்கி, வெள்ளியல்லாததொரு சிப்பியிலே வெள்ளி யென்கிற புத்தியைப் பண்ணுவாரைப்போலேயும்,ஒரு திக்கிலே போக விரும்பி வேறொரு திக்கை அதுவாக நினைத்துப் போவாரைப் போலேயும் பகவத்

ப்ராப்திக்கு உபாயத்தை விரும்புகின்ற நாம் உபாயமல்லாதவற்றிலே உபாய புத்தி பண்ணினோமே! என்கிற அநுதாப புத்தி விசேஷத்தோடுகூட விடுகை.

318. பரி என்கிற வுபஸர்க்கம் மிகுதிக்கு வாசகமாகி இங்குத் தெரிவிப்பதாவது ப்ரஹ்மஹத்யை ஸுராபானம் முதலிய பாதகங்களையும் மற்றும் நிஷித்தமான வற்றையும்விடுமளவில், அவற்றில் மறுபடியும் அந்வயிப்பதற்குறுப்பான ருசிவா ஸனைகள்கூட இல்லாதபடி வெள்கி விடுமாபோலே, உபாயாந்தரங்களை விடுமளவில் மீளவும் அவற்றில் அந்வயம்வாராதபடி விடவேணுமென்று தெரிவிக்கப்படுகிறது.

319. பரித்யஜ்ய என்கிறல்யப்பாலே ஸித்தோபாயத்தைப் பற்றுமளவில் த்யாஜ்ய மான உபாயாந்தரங்களை விட்டே பரிக்ரஹிக்க வேணுமென்கிற நியமம் என் னென்னில்; உபாயாந்தரங்களான இவற்றிலே சிறிது அந்வயம் கிடந்தாலும் இவை பேற்றுக்கு ஸாதநமாகாத மாத்திரமன்றிக்கே பேற்றுக்குப் பிரதிபந்தக மாயும் நிற்கும். ஆதலால் விட்டே பற்ற வேணும்.

ஸாத்ய தர்ம பரித்யாகத்தின் ஆவச்யகத்வ நிரூபணம்

320. இதற்கொரு த்ருஷ்டாந்தமுண்டு; இராவணன் ராமசரங்களாலே மிகவும் நொந்து நிலை கலங்கி எதிரம்பு கோர்க்கமுடியாமே நின்றான்; அப்போதும் ராமபா ணங்கள் மேன்மேலும் விழுந்துகொண்டிருந்தன. தருமயுத்தஞ் செய்யுமிராமன் நாம் அம்புவிடாமலிருக்கவும் தான் அம்புகளை விடுவதற்கு என்ன காரணமென்று இராவணன் சிந்தித்தான்; தன் கையில் வில் இருப்பதுதான் காரணமென்று தெரிந்து கொண்டு பிறகு அந்த வில்லையும் பொகட்டான். அப்போது பெருமாள் பாணப்ரயோகத்தை நிறுத்தி அவனுக்கு விடை கொடுத்தனுப்பினர் என்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. இராவணன் பொகட்ட அந்த வில் அவனது கையிலிருந்தபோது எதிரியை வெல்வதற்கு ஸாதநமாகாமலிருந்தவள வேயன்றிக்கே தன்னைப் பெருமாள் வாட்டுவதற்கும் ஹேதுவாயிருந்தது, *கச்சாநு ஜாநாமி* [இராவணாபுறப்பட்டுப் போ; விடை தருகின்றேன்] என்கிற திருவாக்கு அப்போது அவதரியாமல் வில்லைப் பொகட்ட பின்பே அவதரித்தமையால் அந்த வில்லே இராவணனுக்குக் கால்கட்டாயிருந்ததென்று தெளிவாயிற்று, அதுபோல வேயாம் உபாயாந்தரங்களுமென்க. உபாயாந்தரப்பற்று உள்ளவரையில் பகவத நுக்ரஹம் தான் புகுவதற்கு அவகாசம் பெறாதென்றவாறு.

321. உபாயாந்தரங்களில் அந்வயம் இழவுக்கு உடலாம் என்பதை மற்றொரு த்ருஷ்டாந்தத்தாலும் அறியலாம். தசரத சக்ரவர்த்தியானவன் ஆபாஸமான ஸத்யதர்மத்தைப்பற்றி நின்றமையாலன்றோ பெருமாளோடே கூடி வாழவிருந்த பேற்றை இழந்தான். *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்கிற ஸித்ததருமமான பெரு மாளைப்பற்றி ஆபாஸதர்மமான ஸத்யவசனத்தை தசரதன் விட்டிருக்க வேண்டு மன்றோ. 'முன்பே வரம் கொடுத்துவைத்து இப்போதாக மறுக்கவொண்ணாது' என்று ஆபாஸமான (ஸத்ய)தர்மத்தைப்பற்றி நின்றமையாலன்றோ பெருமாளை யிழந்தான். ததிபாண்டன் கிருஷ்ணனை மறைத்துவைத்து இங்கில்லையென்று

யசோதைக்குப் பொய்சொல்லி மோக்ஷம் பெற்றான்; தசரதன் ஸத்யவாதியென்று பேர்பெற்று பேற்றை இழந்தான்.

322. ஆக ஆபாஸமான உபாயாந்தரங்களிலே அந்வயித்து நிற்கையானது *க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்* என்று .ஸநாதனதர்மமான பகவத் விஷயத்தோடே கூடி வாழுகையாகிற பேற்றை இழப்பதற்கு உறுப்பாய்விடும். ஆகவே அவை பரித்யாஜ்யங்களென்னத் தட்டில்லை.

மாம் என்ற மூன்றாவது பதத்தின் பொருளை விவரித்தல்

323. எல்லாரையும் ரக்ஷிப்பதிலே தீக்ஷிதனாய். உனக்கு இஷ்டமானபடி ஏவிக் காரியம் கொள்ளலாம்படி கையாளாய், ரக்ஷ்யபூதனான உன்னுடைய இசைவு பார்த்து உன் குற்றங்களுக்கு நீ அஞ்சவேண்டாதபடி அவற்றையே பச்சையாகக் கொண்டு உனக்குப் புகலாய், *தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்* என்கிற படியே புருஷகாரம் செய்யக்கடவ பிராட்டியே குற்றத்தைக் காட்டி அகற்றப் பார்க்குமிடத்திலும் விடமாட்டாதே *என்னடியார் அது செய்யார்* என்று மறு தலைத்து ஒருதலைநின்று ரக்ஷிக்குமவனான என்னை யென்றபடி.

324. அவதரித்துக் கண்ணுக்கிலக்காய் அணுகி நிற்கிற விபவரூபனான தன்னை மாமென்று குறிப்பிட்டு வரணீயனாகச் சொன்னவித்தாலே - தேச விப்ரகர்ஷத்தாலே காணவும் கிட்டவு மொண்ணாதபடி யிருக்கிற பரவ்யூஹங்களையும், அஸாதாரண விக்ரஹயுக்தமல்லாமல் உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேச்யமா யிருக்கிற அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமித்வத்தையும் தவிர்க்கிறது. அவற்றிற் காட்டிலு முண்டான வாசியைக் காட்டுகிறது மாமென்பது. இந்த மாம் என்கிற பதத்திலே ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களான குண விசேஷங்களெல்லாம் விளங்கும், அவையாவன: வாத்ஸல்யமும் ஸ்வாமித்வமும் ஸௌசீல்யமும் ஸௌலப்யமும்.

325. அதர்ம புத்தியாலே ஸ்வதர்மத்தில் நின்றும் நிவ்ருத்தனான அர்ஜுநனுக்கு குற்றம் பாராதே அர்த்தங்களையெல்லாம் அருளிச்செய்கையாலே வாத்ஸல்யம் பிரகாசிக்கிறது. தன்னுடைய பரத்வத்தைப் பலகாலுமருளிச் செய்த மாத்திரமன்றிக்கே அர்ஜுநன் நேரே காணும்படி பண்ணுகையாலே ஸ்வாமித்வம் பிரகாசிக்கிறது. .*ஹேக்ருஷ்ண ஹேயாதவ!* என்று அர்ஜுநன் தானே சொல்லும்படி இவனோடே கலந்து பரிமாறுகையாலே ஸௌசீல்யம் பிரகாசிக்கிறது. இவை யெல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு மிகவும் அபேக்ஷிதம் ஸௌலப்யமாகையாலே அவதார ப்ரயுக்தமான ஸௌலப்யத்தளவேயல்லாமல் ஸாரதியாயும் நிற்கிற ஸௌலப்யாதிசயம் மாம் என்று உறுத்திக் காட்டப்படுகிறது. குதிரைகளை நடத்து கைக்காகத் திருக்கையிலே பிடித்த உழவுகோலும் சிறுவாய்க்கயிறும் திருமுடியில் ஒன்றும் அணியாமல் நிற்கையாலே சேனைத்துகளாலே புழுதிபடைத்த திருக்குழலும், சாத்தின சிறு சதங்கையுடனே தேருக்குக் கீழே தொங்கவிட்ட திருவடிகளுமாய் நிற்கிற ஸாரதி வேஷத்தை மாமென்று காட்டுகிறான்.

ஏகம் என்கிற நான்காவது பதத்தின் பொருள் விவரித்தல்

326. இவ்வுபாய விசேஷத்தைச் சொல்லு மிடங்களிலே பல விடங்களிலும் *மாமேவ யே ப்ரபத்யந்தே* என்பது முதலான விடங்களில் அவதாரண ப்ரயோக முண்டாகையாலே உகாரம் போலே இந்த ஏக சப்தமும் ஸ்தான ப்ரமாணத் தாலே அவதாரணமாகிற பொருளைக் காட்டுகிறது. இந்த அவதாரணத்தினால் வ்ரஜ என்று மேலே சொல்லுகிற சரணவரணத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது. இந்த ஸ்வீகாரமுண்டானால் பேறு; இல்லையாகில் இழவு, என்று அந்வயவ்ய திரேகங்களாலே இதில் ஸாதநத்வபுத்தி நடையாட ப்ரஸக்தி யுண்டாகையாலே இதின் ஸாதநத்வம் அவச்யம் கழிக்கப்படவேணுமன்றோ.

327. அந்வயவ்யதிரேகங்களாலே உபாயமென்று திண்ணமாகத் தோற்றுகிற ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறபடிதான் எங்ஙனேயெனில்; ஸ்வீகார மானபிறகு இவனுக்கு அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பண்ணுகை அவ னாலேயானாப்போலே, அதற்கு முன்னம் நேருகின்ற ஸ்வீகாரந்தானும் அவனாலே யுண்டாமது என்பதே பரமார்த்தம். ஆகவே ஸ்வீகாரம் உபாயகார்யமே யொழிய உபாயமன்றென்க. இதுதான் முக்கியமாக நெஞ்சிற் படவேணும்.

328. ஸ்வீகாரம் அவனாலே வருகையாவதென்னென்னில்; கரணகளேபரங்க ளொன்று மின்றிக்கே அசித்துப்போலே கிடக்கிற தசையிலே கரணகளேபரங்களைக் கொடுத்து ஸ்ருஷ்டி பண்ணி *எதிர்சூழல்புக்கு* என்கிறபடியே இவனை அங்கீகரிக்கை க்காக அவன் அநேகாவதாரங்களைப்பண்ணி. அவதரித்த விடங்களிலே ஆச்ரயிப்பதில் ருசிவிச்வாஸங்களை விளைவிப்பதான தன்குணசேஷ்டிதம் முதலியவற்றைப் பிரகா சிப்பித்து இவ்வழியாலே அவன் பண்ணின க்ருஷியாலே பலித்ததன்றோ இந்த ஸ்வீகாரம். ஆகையாலே இது அவனாலே வந்ததென்னத் தட்டுண்டோ? *அதுவுமவன தின்னருளே* என்கிற ஆழ்வார் பாசுரம் காணத்தக்கது. இந்த ஸ்வீகாரத்துக்கும் தானே க்ருஷி பண்ணுவானொருவனாகையாலே அவன் இதுக்காக வன்று நமக்குக் காரியம் செய்கிறது, இது இல்லாமற் போனாலும் இவ்வாத்மாவை உய்விப்பதிலே நோக்குடையனான தானே நம்முடைய இஷ்டப்ராப்தி அநிஷ்ட பரிஹார ரூப மான காரியத்தைச் செய்வனென்று நினைக்கவேண்டும்; இப்படி நினைக்காவிடின் [அதாவது-நம் ஸ்வீகாரமில்லையானாலும் காரியம் செய்வனென்று நினையாதே அவன் காரியம் செய்கைக்கு இதுவும் வேணுமென்று நினைக்குமளவில்] ஸித்தோபாய மானது ஒரு ஸஹாயத்தையும் எதிர் பாராத தென்கிற பெருமை குலைந்ததாகும்.

சரணம் வ்ரஜ என்றவற்றின் பொருள் விவரித்தல்

329. ஸர்வதர்மங்களையும் விட்டு தன்னையே பற்றச் சொல்லுகிற ப்ரகரண மாகையாலே. கீழோடே சேரவேண்டுகைக்காக சரணம் என்பதற்கு 'உபாயமாக என்பது பொருளாகக் கடவது. 'உபாயமாக நெஞ்சிற்கொள்ளக்கடவாய்' என் பதே (சரணம் வ்ரஜ) என்பதன்பொருளாயிற்று, *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்* என்கிறபடியே மனமொழிமெய்கள் மூன்றினாலுமுண்டான ஸ்வீ காரம் அதிகாரபூர்த்திக்கு உடலாகையாலே வாசிகமும் காயிகமும் இந்த ஸ்வீ

காரத்திற்கு வேண்டியிருக்கச் செய்தேயும், *ஜ்ஞாநாத்மோக்ஷ மென்கையாலே அவை யிரண்டையு மொழிய மாநஸமான அனுஷ்டான மாத்திரத்தைச் சொல்லு கிறது. ஆக, பூர்வார்த்தத்தால் சொல்லிற்றுயிற்றென்னென்னில்; ஸர்வதர்மாந் என்று த்யாஜ்யத்தைச் சொல்லி பரித்யஜ்ய என்று த்யாக ப்ரகாரத்தைச் சொல்லி மாம் என்று பற்றப்படுமுபாயத்தைச் சொல்லி ஏகம் என்று அந்த உபா யம் இதர நிரபேக்ஷமென்பதைச் சொல்லி; சரணம் வ்ரஜ என்று உபாயஸ்வீகாரம் சொல்லிற்றுயிற்று.

உத்தரார்த்தத்தை விவரிக்கத் தொடங்குதல்

330. பூர்வார்த்தத்தில் அதிகாரி க்ருத்யமன்றோ சொல்லிற்று. உபாய பூத னை தன்னுடைய க்ருத்யம் சொல்லுகிறது உத்தரார்த்தத்தில். அஹம்—எல்லா மறிந்தவனாய் எதுவும் செய்ய வல்லவனாய் சேஷியாகையாலே ப்ராப்தனாயிருக்கிற நான். [த்வா] உன் காரியங்களை அறிகைக்குத்தக்க ஞானமில்லாதவனாய் அறிந் தாலும் செய்து தலைக்கட்டிக்கொள்ளுகைக்கு சக்தியில்லாதவனாய், சக்தியுண்டானா லும் தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்ள உரிமையற்றவனாய், இப்படியிருக்கையாலே ஸர்வ தர்மங்களையும் விட்டு என்னையே உபாயமாகப்பற்றியிருப்பவனான உன்னை யென்றபடி.

331. ஸர்வபாபேப்ய:—இஷ்ட விரோதியாயும் அநிஷ்ட ஹேதுவாயு மிருக்குமது பாபம்; மோக்ஷப்ரகரண மாகையாலே எம்பெருமானையடைவதற்கு விரோதிகள் எவையோ அவையே இஷ்ட விரோதிகள். ஆகவே நீ என்னையடைவதற்கு விரோதி களென்று எந்தெந்த பாபங்களில் நின்றும் பயப்படுகிறாயோ அந்தந்த பாபங் களெல்லாவற்றில் நின்றுமென்றவாறு.

332 மோக்ஷயிஷ்யாமி—இவற்றில் நின்றும் விடுபட்டவனாம்படி பண்ணக் கடவே னென்கை. நானும் இதுக்கொரு முயற்சி செய்ய வேண்டா; நீயும் இதற்கு ப்ரார்த்திக்க வேண்டா: நீ என்னை அடிபணிந்த பெருமையாலே உன்னைக் கண்டு தானே பயப்பட்டு, போனவழி தெரியாதபடி தன்னடையே விட்டுப்போம் அவை என்பது ணிச்சாலே தெரிவிக்கப்படும். 'அஹம் தே ஸர்வபாபாநி நிஹநிஷ்யாமி'' என்று சொல்லாமல் '' த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'' என்று ணிஜந்த ப்ரயோகம் பண்ணினவிதனால் தேறின அர்த்தமிது. பாபமென்று ஒரு வஸ்து கிடக்கிற தன்றே; குப்பையில் ஆமணக்குப்போலேயெழுந்து பாம்புபோலே பிடுங்குவதன்றே பாபமென்பது. சேதநன் பண்ணின கருமங்கள் ஒரு நொடிப் பொழுதில் நசித்துப் போம்; கர்த்தாவான இவன் அஜ்ஞனாகையாலே மறந்து போவான்; ஸர்வஜ்ஞனாய் ஒன்றொழியாமல் நினைத்திருந்து ஸமயங்களிலே தப்பாமல் பலாநுபவம் பண்ணு விக்கிறவன் ஸர்வேச்வரன். ஆகவே அப்படி அனுபவிப்பிக்கிற என்னுடைய நிக் ரஹ ரூபமாகையாலே அந்த நிக்ரஹபலமாய் வந்தவை நிக்ரஹத்துக்கு ப்ரதி கோடியான அநுக்ரஹத்தை நான் பண்ணினால் பின்னையும் கிடக்குமோ வென்கை.

333. நெடுங்காலமாக அப்பாபங்களைக் கண்டு நீ நடுங்கின நடுக்கம்போய் உன் னைக் கண்டு அவை தாம் குடல் கரிந்து நடுங்கும்படி பண்ணக்கடவேன் என்ற வாறு. இத்தனை காலமும் நம் காரியத்துக்கு நாம் கடவோமென்று நீ திரிகை

யாலே தன் காரியம் தானே செய்துகொள்கிறுனென்றிருந்தேனத்தனே. எனக்கு நீ சரீரதயா சேஷமென்றறிந்து என்னைச் சரணமடைந்த பின்பு 'உன்னுடைய பாபம் போகைக்கு நீயே முயற்சி பண்ணிக்கொள்' என்று உன் கையிலும் உன்னைக் காட்டித் தரமாட்டேன். என்னுடலானவுன்னுடைய அவித்யையாகிற அழுக்கை சரீரியான நானே போக்கிக்கொள்ளேனே?

மாசுசঃ என்றதன் விவரணம்

334. இனி மாசுசঃ என்றது சோகப்படாதேகொள் என்றபடி. நீ உன் கார்யத்தில் கைவைத்திருந்தாயாகில் 'நம் கார்யத்துக்கு என்செய்வோம்' என்று நீ கரைந்து சோகிக்கலாம்; நான் உன் காரியத்திலே கைவைத்திலேனுகில் "நம் காரியத்தில் இவன் உதாஸீநனுயிருக்கிறுனே! நாம் எப்படி உஜ்ஜீவிக்கப் போகிறேம்" என்று நீ சோகிக்கலாம்; இப்படியல்லாமல் உன்னுடைய ஸ்வரூபத்தை யுணர்ந்து நீ உன் ரக்ஷணகார்யத்திலே கைவைக்காமையாலும் ஸ்வாமியான நான் உன்னுடைய ரக்ஷண கார்யத்திலே ஊன்றிப் போருகையாலும் உனக்கு சோகிக்கைக்கு நிமித்தமில்லைகாணென்று முன்பு சோகித்து நின்ற அவனுடைய சோக நிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கிறபடி. இவ்வளவும் சரமச்லோகார்த்தம் விவரித்தோம்.

335. உபஸம்ஹாரம். ஆக சரமச்லோகத்தின் பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. இதில் உத்தரார்த்தத்திற் காட்டிலும் பூர்வார்த்தத்தில் தான் குறிக்கொள்ள வேண்டிய விஷயங்கள் நிரம்பிக்கிடக்கின்றன. முக்கியமாக இரண்டே விஷயங்களை இங்கு ஸாரமாகத் தெரிவிக்கிறேம். "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்ற மூலத்தையும் அதன் வியாக்கியானத்தையும் மேலெழப் பார்த்துவிட்டுப் பலர் எல்லாவற்றையும் விட்டுவிட வேணுமென்பதே கீதாசார்யனுடைய திருவுள்ளம் என்று நினைக்கிறுர்கள். இது மிகத் தவறுன நினைவு. கீதார்த்த ஸங்க்ரஹத்தில் ஆளவந்தார் "நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:, உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவே து தாம் அபீ:" என்று மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளார்.

336. ஆளவந்தார் குர்யாத்என்றுரேயொழிய த்யஜேத்என்னவில்லை. மூலத்தில் த்யஜிக்கச் சொன்னது எது? என்பதையும் ஸ்பஷ்டமாகக் காட்டியுள்ளார் உபாயதாம் பரித்யஜ்ய என்று. அவை மோக்ஷோபாயம் என்கிற புத்தியை விடச்சொன்னதேயொழிய அவற்றையே விடச் சொன்னதன்று. கர்மஜ்ஞான பக்தி யோகங்களுக்கு உபாயதயா அநுஷ்டானம், ப்ரீத்யா அநுஷ்டாநம் என்று இருவகையுண்டு; ப்ரீத்யா அநுஷ்டானம் தவிர்க்கப்படவில்லை; உபாயதயா அநுஷ்டானம் மட்டுமே தவிர்க்கப்பட்டது. ஏவஞ்ச, புத்தி த்யாகமேயொழிய ஸ்வரூபத்யாகமன்று என்கை.

337. ஸ்வரூபத்யாகமே யென்று கொண்டாலும் குறையில்லை. அப்போதும் புத்தித்யாகந்தான் தேறிநிற்கும். எங்ஙனே யென்னில்; "ஸங்கல்பபேதேந கர்மபேத:" என்பது சாஸ்த்ரந்யாயம். உபாயமென்கிற ஸங்கல்பத்தோடே செய்யும் கருமம் உகப்பேயடியாகச் செய்யும் கருமத்திற் காட்டிலும் வேறுபட்டதா யிருக்கையாலே முந்தின கருமத்திற்கு ஸ்வரூபத்யாகமேயாகும்.

338. பட்டர் ஸ்ரீ ரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் ' நித்யம் காம்யம் பரமபி கதிசித் த்வய்யத்யாத்ம ஸ்வமதிபிரமமா: , ந்யஸ்யா ஸங்கா விதததி விஹிதம் ஸ்ரீ ரங்கேந்தோ! விதததி நச தே '' என்றருளிச் செய்த சுலோகம் இங்கு அநுஸந்திக்கத் தகும். '' விஹிதம் விதததி, ந விதததி ச '' என்று இரண்டையும் சொல்லி வைத்ததை நிர்வஹிக்குமிடத்து இங்கே நாம் செய்த நிருபணமே தேறி நிற்கும்.

339. கீழே உதாஹரித்த கீதார்த்த ஸங்க்ரஹச்லோகத்தில் '' உபாயதாம் பரித்யஜ்ய'' என்று ஸுஸ்பஷ்டமாக ஆளவந்தார் அருளிச் செய்திருக்கவும், சிலர் '' உண்மையாக உபாயமாயிருக்குமவற்றிலே உபாயத்வ புத்தியை விடுகையென்று ஒன்றுண்டோ?'' என்று சோத்யம் செய்து கொண்டேயிருப்பர்கள். அவர்களை கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையிலே வேதாந்த வாசிரியர்தாமே நன்கு நிரஸித்துள்ளார். அவ்விடத்துப் பங்க்திகளை அப்படியே யெடுத்துக்காட்டுகிறோம்.

340. ''முக்தவ்யாபாரந்யாயேந ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தர பாவி பலஸாதநத்வாநுபபத்தி தர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மேக்ஷோபாய தாபுத்திரபி ஸ்யாதிதி பாவஃ அந்ததஸ் தைஸ்தை ராராதிதோ பகவாநேவ ஹி ஸர்வத்ரோபாயஃ...... அதஸ் தஸ்மிந்நேவ *மாமேகம் சரணம் வ்ரஜேதி வக்தரி உபாயதாபுத்தி: கார்யா என்பன. இங்ஙனேவிவரித்தருளின அர்த்தத்தையே ''நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுணஃ'' என்று ரஹஸ்யத்ரயஸாரத்திலும், ''இயம் கேவலலக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா, ஸ்வஹேதுத்வதியம் ருந்தே கிம் புநஸ் ஸஹகாரிணம்'' என்று ந்யாய ஸித்தாஞ்ஜனத்திலும், ''த்வதுபாயதிரபிஹித ஸ்வோபாய பாவாஸ்து மே'' என்று ந்யாஸதிலகத்திலும் மற்றும் பல விடங்களிலும் ச்லோகபத்தமாக்கி வைத்தருளினர். தேசிகர் 5

நவரத்ந நவநிதியில் ஐந்தாவதுநிதி சரமச்லோகார்த்த ஸாரம் முற்றிற்று.

(6) ஆறாவது நி சேதநஸ்வரூப நிருபணஸாரம்.

தத்வத்ரயக்ரந்தத்தின் பெருமை

341. நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் மஹோபகாரகர்களாகத் திருவவதரித்தருளின ஆசார்யர்களில் பிள்ளை லோகாசார்யர் ப்ரதாந பரிகணிதராவர். இவ்வாசிரியர் ஸர்வஜ்ஞராக எழுந்தருளியிருந்தது பெரிதன்று; பரமகாருணிகராயெழுந்தருளியிருந்ததே இவர்க்குத் தன்னேற்றம். ஸம்ஸாரிகளை முமுக்ஷுக்களாக்கவும், முமுக்ஷுக்களை முக்தப்ராயர்களாக்கவும், முக்தப்ராயர்களை முக்தர்களாக்கவும் வல்ல திவ்ய ஸூக்திகளை யருளிச்செய்தவர் இவ்வாசிரியரொருவரே யாவர். இவருடைய தனியனில்தான் *ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நமஃ* என்கிற விலக்ஷணமான வாக்விந்யாஸம் அமையக் காண்கிறோம். ஸம்ஸாரமாகிற கொடிய ஸர்ப்பத்தினால் கடியுண்ட சேதநர்கள் உஜ்ஜீவிக்கப் பெறவேணுமாகில் பிள்ளை லோகாசாரியருடைய ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டே உஜ்ஜீவிக்கவேணுமென்று பூருவர்கள் அறுதியிட்டிருந்தார்கள். அரிய பெரிய ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தி வைத்து உலகத்தை வாழ்விக்க முந்துற முன்னம் ப்ரவர்த்தித்தவர் இவ்வாசிரியரே. இவர்தாம் பதினெட்டு ரஹஸ்ய க்ரந்தங்களை இட்டருளினர்.

342. ஸூத்ரம் போன்ற இவ்வாசார்ய ஸூக்திகளின் ஆழ்பொருளைத் தேனும் பாலுமமுதுமாக வெடுத்துரைத்துப் பரமோபகாரம் செய்தருளினவர் மணவாள மாமுனிகள். விசதவாக் சிகாமணிகளென்னும் விருது அவரொருவர்க்கே ஏற்கும் அவருடைய அமுதமென்மொழிகளான வியாக்கியானங்கள் அவதரித்திராவிடில் பிள்ளை லோகாசார்யருடைய பரம கருணையும் பயனற்றதாகும். உபயவேதாந்த ஸாரார்த்தங்களை நாம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களிலிருந்துதான் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். நமக்கு, திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகமாகிற ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தஜ்ஞானம் எப்படி ஆவச்யகமோ; அப்படியே சித்து அசித்து ஈச்வரனுகிற தத்வத்ரயத்தின் ஸ்வரூப ஸ்வபாவஜ்ஞானமும் மிகவு மாவச்யகமாகும். ஏற்கெனவே பிள்ளைலோகாசார்யரருளிச்செய்த தத்வசேகரம் முதலான சில திவ்ய க்ரந்தங்களிருந்தாலும் தத்வத்ரய மென்கிற க்ரந்தமே சிதசிதீச்வர ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை ஸங்க்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் வெளியிட்டது. .... *

மூன்று தத்துவங்கள் இன்னின்னவையென்பது

343. சித்தும் அசித்தும் ஈச்வரனுமாகிற மூன்று தத்வங்களே தத்வத்ரய மெனப் படுவன. சைதந்யத்திற்கு [அறிவுக்கு] ஆதாரமான வஸ்து சித்து எனப் படும். அறிவையுடைத்தாகாத வஸ்து அசித்தெனப்படும். [சேதநன் என்பதும் சித்து என்பதும் பர்யாயம்; அசேதநம் என்பதும் அசித்து-என்பதும் பர்யாயம்.] சேதநாசேதநப் பொருள்களுக்கு நியாமகனானவன் ஈச்வரனெனப்படுவன்.

ஜீவாத்ம ஸ்வரூபத்தை நிரூபித்தல்

344. ஜீவாத்மாவின் ஸ்வரூபமானது தேஹத்திற் காட்டிலும் இந்த்ரியத்திற் காட்டிலும் மநஸ்ஸிற்காட்டிலும் ப்ராணனிற்காட்டிலும் ஜ்ஞாநத்திற்காட்டிலும் வேறுபட்டதாய் அஜடமாய் ஆனந்தரூபமாய் நித்யமாய் அணுவாய் அவ்யக்தமாய் அசிந்த்யமாய் நிர்விகாரமாய் ஜ்ஞாநத்துக் கிருப்பிடமாய் ஈச்வரனுக்கு சரீரமாயிருக்கும்.

345. தேஹமே ஆத்மாவென்றும், இந்த்ரியங்களே ஆத்மாவென்றும் மநஸ்ஸே ஆத்மாவென்றும், ப்ராணனே ஆத்மாவென்றும் ஜ்ஞானமே ஆத்மாவென்றும், இப்படிப் பலர் பலவகையாகச் சொல்லுவதுண்டு; இவை யொன்றும் ஆத்மாவல்ல; இவையெல்லாவற்றிலும் வேறுபட்டு 'அஹம்' (நான்) என்கிற வ்யவஹாரத்திற்கு இலக்கான பொருளே ஜீவாத்மாவெனப்படும், தேஹம் இந்த்ரியம் முதலானவை ஆத்மாவல்ல என்பதை எங்ஙனே தெரிந்துகொள்ளும்படியென்னில்; என்னுடைய தேஹம் என்னுடைய இந்த்ரியம், என்னுடைய மனம் என்னுடைய ப்ராணன், என்னுடைய ஜ்ஞானம் என்றிப்படி 'என்னுடையது' என்கிற புத்திக்கும் அப்படிப்பட்ட வ்யவஹாரத்திற்கும் விஷயமாய்க்கொண்டு தேஹாதிகள் தோற்றுகின்றன; 'என்னுடைய' என்கிற சொல்லானது நான் என்பதன் ஆறும் வேற்றுமை. நான் என்பதற்கு எது அர்த்தமோ அதுவே தேஹம்

இந்திரியம்....என்பவற்றுக்கும் அர்த்தமாக இருக்கமுடியாது. நான் தேஹம், நான் இந்திரியம்' என்றிப்படி வ்யவஹாரமிருந்தால்தான் அஹமர்த்தமும் தேஹாதிகளும் ஒன்றேயா யிருக்கமுடியும். 'என்னுடைய மகன், என்னுடைய பிதா' என்றால் மகனும் பிதாவும் அஹமர்த்தத்திற் காட்டில் வேறுபட்டவர்களே யன்றி அஹமர்த்தமல்ல வென்று எப்படித் தெரிந்து கொள்ளுகிறோமோ அப்படியே என்னுடைய தேஹம் என்னுடைய இந்திரியம்' இத்யாதி வ்யவஹாரங்களினால் 'தேஹாதிகள் அஹம்ர்த்தமல்ல— அஹமர்த்தத்திற் காட்டில் வேறுபட்டவை' என்று தெரிந்துகொள்ளக் குறையில்லை.

கீழே நிரூபித்த ஜீவாத்ம ஸ்வரூபத்தை விவரித்தல்

346. இப்படி தேஹாதிவிலக்ஷணமான ஆத்மவஸ்துவானது அஜடமென்றும் ஆனந்த ரூபமென்றும் நித்யமென்றும் அணுவென்றும் அவ்யக்தமென்றும் அசிந்த்யமென்றும் நிர்விகாரமென்றும் ஜ்ஞாநாச்ரயமென்றும் ஈச்வரனுக்கு சரீரபூதமென்றும் கீழேசொன்னோம்; இவற்றையெல்லாம் விசதமாகத் தெரிந்துகொள்வதே ஆத்மஸ்வரூபஜ்ஞானமாகும்.

347. ஆத்மா அஜடமாயிருக்கையாவது ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கை. (அதாவது) தன்னுடைய தோற்றத்திற்கு இன்னொரு வஸ்துவை எதிர்பார்க்க வேண்டாதபடி யிருக்கை. ஒரு தீபமானது இன்னொரு தீபத்தை அபேக்ஷியாமலே தன் வ்யவஹாரத்திற்குத் தான் ஹேதுவாகிறாப்போலே ஆத்ம வஸ்துவானது ஜ்ஞானத்தைக்கூட அபேக்ஷியாமல், தானே தோற்றிக்கொண்டிருப்பதுதான் அஜடத்வம்

348. ஆத்மவஸ்து ஆனந்தரூபமா யிருக்கையாவது என்னென்னில்; ஆத்மஸ்வரூபம் தனக்குத் தானே ஸுகரூபமாயிருக்கை. இதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டியதற்கு சாஸ்த்ர ப்ரமாணமொன்றும் தேடவேண்டா; உறங்கியெழுந்தவன் 'நான் ஸுகமாக வுறங்கினேன்' என்று சொல்லுவது ஸர்வஸம்ப்ரதிபந்நம். உறக்க நிலைமையில் வெளி விஷயங்களின் அநுபவம் சிறிதுமில்லையென்றும், கேவலம் ஆத்ம ஸ்வரூபம்மட்டுமே ஸ்புரித்துக்கொண்டிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டிருக்கிறோம். அத்தகைய உறக்கம் விட்டு எழுந்தவன் 'ஸுகமாக வுறங்கினேன்' என்றால் அந்த ஸுகம் ஸ்வரூப ஸுகமேயாகவேணுமேயல்லது வேறொரு ஸுகத்திற்கு ப்ரஸக்தியில்லையே.

349. ஆத்மஸ்வரூபம் நித்யமாயிருக்கையாவது—ஒருகால் இருந்து மற்றொருகால் இல்லாமற் போகையன்றிக்கே எப்போது முண்டாயிருக்கை. எப்போதும் உண்டாயிருக்குமாகில், சாஸ்த்ரங்களில் ஆத்மாவுக்குச் சொல்லப்படுகிற ஜன்மமரணங்கள் கூடும்படி எங்ஙனே யென்னில்; ஜனிக்கிறான், மரிக்கிறானென்றால் ஆத்மாவுண்டாகிறான். ஆத்மா இல்லையாகிறான் என்பதாக அர்த்தமன்று. ஆத்மா தேஹத்தோடு ஸம்பந்திப்பது ஜன்மமெனப்படுகிறது; தேஹத்தைவிட்டுப் பிரிந்து போகை மரணமெனப்படுகிறது. ஆகவே ஆத்மா எப்போதுமுளனென்னத் தட்டில்லை யென்றுணர்க.

350. ஆத்ம ஸ்வரூபம் அணுவாயிருக்கையாவது—ஆத்மாவுக்கு ஹ்ருதயத்திலிருப்பையும், அங்கிருந்து உத்க்ரமணமாவதையும், மேலுலகத்திலிருந்து கீழுலகத்திற்குத் திரும்பி வருகையையும் சுடர்மிகு சுருதி தான் சொல்லுகையாலே அணுவென்னுமிட மறியலாம். விபுவாகில் இவை யொன்றும் கூடாதென்பதைப் பெரியார்களிடம் கேட்டுணர்வது.

ௐ

ஆத்மாவின் அணுத்வம் அவ்யக்தத்வம் முதலியவற்றை முதலித்தல்

351. ஆத்மவஸ்து அணுபரிமாண முடையதாய் ஹ்ருதயப்ரதேசத்தில் மட்டும் நின்றுவிடுமாகில் 'எனக்குக் காலில் நோவு; எனக்குத் தலையில் நோவு; எனக்குக் காலில் ஸுகம், எனக்குத் தலையில் ஸுகம்' என்றிப்படி காலே பிடித்துத் தலையளவும் சரீரமெங்குமொக்க ஸுக துக்கங்களை புஜிக்கிறபடி கூடுமோவென்னில், ரத்னம் ஸூர்யன் விளக்கு முதலான சுடர்ப் பொருள்கள் ஓரோவிடங்களிலே இருக்கச் செய்தேயும் அவற்றின் ஒளியானது சுற்றெங்கும் வியாபிக்கிறுப்போலே, ஆத்மா ஹ்ருதயப்ரதேசத்திலிருக்கச் செய்தேயும் ஆத்மாவின் தர்மமான ஜ்ஞானம் எங்கும் பரம்புகையாலே சரீரமெங்கு மொக்க ஸுக துக்கங்களை புஜிக்கைக்கு ஒரு குறையுமில்லை.

352. ஆத்ம ஸ்வரூபம் அவ்யக்தமா யிருக்கையாவது— உலகில் காணும் பொருள்களை க்ரஹிக்கின்ற கண் முதலியவற்றால் தோற்றாதிருக்கைதான் அவ்யக்தத்வமாவது.

353. [ஆத்ம ஸ்வரூபம் அசிந்த்யம்;]- அசிந்த்யமென்பதற்கு நினைக்கவொண்ணாதென்று பொருள். ஒருபடியாலும் நினைக்கவொண்ணாதென்று பொருள் கொள்ளலாகாது. அங்ஙனம் கொண்டால் ஆத்ம ஸ்வரூப விஷயமான ச்ரவணம் மனனம் எல்லாம் வ்யர்த்தமாக வேண்டிவரும். ஆகையால் அங்ஙனம் பொருள் கொள்ளத்தகாது. அசித்தோடு ஸஜாதீயமாக நினைக்கவொண்ணாதிருக்கையே அசிந்த்யத்வமென்று கொள்ளவேணும். ஆத்மஸ்வரூபம் நிர்விகாரமா யிருக்கையாவது—அசித்துப்போலே விகாரப்படுகையன்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கை. ஆக இப்படி யிருக்கையாலே சஸ்த்ரத்தால் சேதித்தல், அக்நியால் தஹித்தல்; ஜலத்தால் நனைத்தல், காற்று வெயில் முதலியவற்றால் உலர்த்தல் செய்கைக்கு இலக்காகாமலிருக்குமிவ்வாத்மவஸ்து. சஸ்த்ரமானது ஒன்றைச் சேதிக்க வேணுமானாலும், அக்னியானது ஒன்றை தஹிக்கவேணுமானாலும் அந்தந்த வஸ்துக்களிலே வியாபித்துச் செய்யவேண்டுமன்றோ; ஆத்மா ஸர்வ அசித்தத்வ வ்யாபகனாகை யாலே அவற்றிற்காட்டில் மிகவும் ஸூக்ஷ்ம பூதனாகையாலும், வ்யாப்யமாயும் ஸ்தூலமாயுமிருக்கிற இவை [சஸ்த்ரம் அக்நி முதலானவை] வ்யாபகமாயும் ஸூக்ஷ்மமாயுமிருக்கிற ஆத்மவஸ்துவை வியாபித்து விகாரப்படுத்தமாட்டாமை யாலே சஸ்த்ரம் முதலியவற்றினாலாகும் வெட்டுதல் கொளுத்துதல் முதலானவற்றிற்கு (ஆத்மவஸ்து) அநர்ஹமாயிருக்குமென்பதை எளிதினுணரலாம்.

354. 'ஜ்ஞானமே ஆத்மா' என்றும், ஜ்ஞானத்திற்கு ஆச்ரயம் ஆத்மா என்றும் உபநிஷத்து முதலிய ப்ரமாணங்களினால் அறிகின்றோம். ஞானத்திற்கு ஆச்ரயம் ஆத்மா என்பது பற்றி இப்போது நிரூபணமாகின்றது. ஆத்மா ஞானத்திற்கு

இருப்பிடமாயிருக்கும்; தீபமும் அதன் ஒளியுமாகிய இரண்டும் தேஜோத்ரவ்யமா யிருக்கச்செய்தேயும் தீபமானது ஒளிக்கு ஆச்ரயமாயிருப்பதுபோல, ஆத்மய தானும் ஜ்ஞாந ஸ்வரூபனுயிருக்கச் செய்தே தன்னுடைய தருமமான ஞானத்திற் குத் தன்னையொழியத் தனிப்பட்டிருத்தலாவது, தனிப்பட்டுத் தோன்றுதலாவது இல்லாதபடி தான் ஆதாரமாயிருத்தலே ஜ்ஞாநாச்ரயத்வமாகும்.

355. பௌத்தர் முதலான சில புறமதத்தவர்கள் இப்படி ஆத்மா ஜ்ஞாநாச்ர யபூத னென்பதை இசையாதே ஜ்ஞாந மாத்ரமென்று சொல்லுவதுண்டு; அது பிசகு; ஆத்மாவுக்கு ஜ்ஞாநாச்ரயத்வ மின்றிக்கே கேவலம் ஞானமாயிருக்குமதுவே யுள்ளதாகில் 'நான் இதை யறியா நின்றேன்' என்று உலகத்தில் ஸர்வ ஸம்ப்ரதி பந்நமாகக் காண்கிற வ்யவஹாரம் அஸங்கதமாக வேண்டிவரும்; நான் அறிவு' என்று தன்னை ஜ்ஞான மாத்ரமாகவன்றோ சொல்லிக்கொள்ள வேண்டும். இப் படிப்பட்ட வியவஹாரம் ஒரு வ்யக்தியினிடத்தும் காண்பதில்லை. 'இவ்வர்த் தத்தை நானறியா நின்றேன்' 'இவ்விஷயத்தை நானறிந்துகொண்டேன்' என்றிப் படியே வ்யவஹாரங்கள் எங்கும் காண்கையாலே, இவ்விஷயத்தை க்ரஹிப்பதான தொரு ஜ்ஞானத்திற்குத் தான் ஆச்ரயமென்னுமிடம் நன்கு தெரிகின்றதின்றோ.

356. ஆத்மாவை ஜ்ஞாதாவென்று தெரிந்துகொண்ட போதே கர்த்தாவென் றும் போக்தாவென்றும் தெரிந்துகொள்ளவேணும். இன்னது ஹேயம், இன்னது உபாதேயம் என்கிற ப்ரதிபத்திக்கு ஜ்ஞாத்ருத்வமானது ஹேதுவாயிருக்குமாகை யாலே ஹேயங்களை விடுகையிலும் உபாதேயங்களைப் பற்றுகையிலும் சிகீர்ஷையுண் டாகி [முயற்சியுண்டாகி என்றபடி] அம்முயற்சி அடியாகக் கர்த்ருத்வமுண்டா கிறது. எவன் ஒரு காரியத்தைச் செய்கிறானே அவன் அதனாலுண்டாகும் பலனை யனுபவிப்பவனுமாகிறான். ஆகவே கர்த்தாவானபோதே போக்தாவாகிறான். ஆன பின்பு ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் சொன்னது கர்த்ருத்வ போக்த்ருத்வங்களும் சொன்னபடியாகக் குறையில்லை.

357. இப்படி ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமா யிருந்துள்ள கர்த்ருத்வத்தை ஸாங்க்யர்கள் ப்ரக்ருதிக்கேயுள்ளதாகக் கொள்ளுகின்றார்கள்; அது பிசகு. ப்ரக்ரு திக்கே கர்த்ருத்வமாய் ஆத்மாவுக்கு அஃதில்லையாகில் ஆத்மாவுக்கு சாஸ்த்ரவச்ய யத்வமும் போக்த்ருத்வமும் குலைந்ததாகும்; சாஸ்த்ர வச்யத்வமாவது—விதி நிஷே தரூபமான சாஸ்த்ரத்துக்குத் தான் அதிகாரியாய்க்கொண்டு அதின் வசத்திலே நடக்கவேண்டுகையாம். சாஸ்த்ரங்களானவை ஒருபுறத்திலே 'இதைச் செய், அதைச் செய்' என்று கர்த்தவ்யங்களை விதிக்கும்; மற்றொருபுறத்திலே 'இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே' என்று நிஷித்தங்களை விலக்கும். இத்தகைய விதி நிஷேதங்கள் சேதநனைப்பற்றி அவதரித்தனவே யல்லது ப்ரக்ருதியைப்பற்றி அவதரித்தனவல்ல. ப்ரக்ருதிக்கேதான் கர்த்ருத்வமென்னில் சாஸ்த்ரங்களில் காணும் விதி நிஷேதங்கள் ப்ரக்ருதியை நோக்கியவை யென்ன வேணும். ஆகவே சாஸ்த்ரவச்யத்வம் சேதநனுக்குக் குலைந்ததாகும்.

358. அன்றியும், விஹிதங்களான ஸத்கருமங்களைச் செய்து. நிஷித்தங்களான துஷ்கருமங்களை விலக்கி வர்த்திக்கின்ற சேதநன் நல்ல பலன்களை யநுபவிக்கையும்,

விஹிதங்களை விட்டு நிஷித்தங்களைச் செய்து திரியும் சேதநன் தீய பலன்களை யநுபவிக்கையும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமா யிருக்கின்றது; இப்படிப்பட்ட ஸுகதுக்க ரூப பல போக்த்ருத்வமும் சேராமற் போகும். பல சொல்லி என்? சேதநன் கர்த்தாவாகாதபோது சாஸ்த்ரமே வீண் என்ன வேண்டிவரும்.

359. ஆனால் இந்த சேதநனுக்கு எல்லாவிதமான கர்த்ருத்வமும் ஸ்வரூப ப்ரயுக்தமாமோ வென்னில்; அன்னபாநாதிகளான லௌகிக போகங்களை யுத்தேசித்துப் பண்ணும் ஸ்வவ்யாபாரங்களில் கர்த்ருத்வம் ஔபாதிகமாகையாலே ஸ்வரூப ப்ரயுக்தமன்று. ஆனால் அது இவனுக்கு வந்தபடி தான் என்னென்னில் ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குணங்களினுடைய ஸம்ஸர்க்கத்தாலே யுண்டானதென்று சாஸ்த்ரம் சொல்லும்.

ஆத்மாவுக்குச் சொன்ன கர்த்ருத்வம் ஈச்வராதீனமென்று மூதலித்தல்

360. இனி இந்த கர்த்ருத்வமானது ஸ்வாதீநமா? பராதீனமா? என்கிற சங்கையிலே சொல்லவேண்டியவை சொல்லப்படுகின்றன. ஆத்மாவின் கர்த்ருத்வம் ஈச்வராதீநமென்று நிரூபிக்கப்படுகிறது. சாஸ்த்ரம் அர்த்தவத்தாக வேண்டியதற்காக கர்த்ருத்வம் ஆத்ம தர்மமென்று கொள்ளவேணும். அந்த கர்த்தாவுக்கு தர்மமான ஜ்ஞானம் இச்சை ப்ரயத்நம் ஆகிறவிவை பகவானுக்கு அதீனங்களா யிருக்கையாலும், பகவானுடைய அநுமதியில்லாமல் அந்த ஞானம் முதலியவை க்ரியாஹேதுவாக மாட்டாமையாலும் இவனுடைய கர்த்ருத்வம் ஈச்வராதீநமென்று கொள்ளவேணும்.

361. இங்ஙனே கொண்டால் புண்யபாபங்கள் ஈச்வரனுக்கேயாக வேண்டாவோ? சேதநனுக்கு ஆக இடமில்லையே! என்கிற சங்கை உதிக்கக்கூடும்; "சேதநனுடைய புத்திமூலமான ப்ரயத்நத்தை யபேக்ஷித்து ஈச்வரன் அநுமதி பண்ணுகையாலே அந்த க்ரியையைப்பற்றி வரும் புண்ய பாபங்களும் சேதநனுக்கேயாகின்றன" என்று நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்கின்றனர். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் *பராத் து தச் ச்ருதே: * என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் பராயத்தமென்று சொல்லப்பட்டிருப்பதும், *க்ருதப்ரயத்நாபேக்ஷஸ் து விஹிதப்ரதிஷித்த அவையர்த்த்யாதிப்ய: * என்கிற ஸூத்ரத்தினால் சங்கா பரிஹாரம் செய்யப்பட்டிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. விதி நிஷேத சாஸ்த்ரங்கள் வீணாகாமைக்காக இச்சேதநன் பண்ணின ப்ரதம ப்ரயத்நத்தை யபேக்ஷித்துக் கொண்டு ஈச்வரன் ப்ரவர்த்திப்பிக்கிறானென்றதாயிற்று.

ஆத்மாவின் அந்தரங்க நிரூபக நிரூபணம்

362. ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வத்திற் காட்டிலும் சேஷத்வமே முக்கியமென்பது குறிக்கொள்ளத்தக்கது. இவ்விஷயத்தைக் கூரத்தாழ்வான் திருக்கோட்டியூர் நம்பிபக்கலிலே ஆறுமாஸம் ஸேவித்திருந்து நிதியாகப் பெற்று எம்பெருமானார்க்கு விண்ணப்பம் செய்தார். இப்பரமார்த்தத்தை எம்பெருமானார் கீதாபாஷ்யத்திலே (ஏழாமத்யாயத்திலே) ஜ்ஞாநீ என்னுமதிகாரியை விவரித்தருளுமிடத்தில் "பகவச்சேஷதைகரஸ ஆத்மஸ்வரூபவித்" என்கிற ஸ்ரீ ஸூக்தியாலே யருளிச்செய்தார். ஈச்வர

ஸ்வரூபத்தை யறிந்தவன் ஜ்ஞானியென்று சங்கரபாஷ்யத்திலுள்ளது. அதைத் தள்ளி எம்பெருமானுர் "பகவச் சேஷதைகரஸே" த்யாதியை யருளிச்செய்தது திருவாய்மொழியில் (8-8-2) *அடியேனுள்ளா னென்ற சந்தையிலுள்ள நிதியான விசேஷத்தைத் திருவுள்ளம்பற்றியே யென்பதை குருமுகமாக விரியக்கேட்டுணர்வது. ஆத்மஸ்வரூபம் பத்தர் முக்தர் நித்யர் என்று மூன்று படிப்பட்டிருக்கு மென்பதும் மூவகைப்பட்ட ஆத்மவர்க்கமும் தனித்தனியே அனந்தமா யிருக்குமென்பதும் அறியத்தக்கவை. 9

நவரத்ன நவநிதியில் ஆருவது நிதி முற்றிற்று. ஏழாவது நிதி அசித்தத்வ நிரூபண ஸாரம்.

அசித்தத்வத்தின் பாகுபாடு

363. இனி அசேதந தத்வத்தைப்பற்றி அதி ஸம்க்ஷேபமாகச் சொல்லலாகிறது. அசேதநமென்றாலும் அசித்து என்றாலும் பரியாயமே யென்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. அறிவற்றதாய் விகாரப்பட்டுக்கொண்டே யிருப்பது அசித்தெனப்படும் இது சுத்தஸத்வமென்றும் மிச்ர ஸத்வமென்றும் ஸத்வசூனிய மென்றும் மூன்றுவகைப்படும். சுத்தஸத்வமென்பது பரமபதம். அது அசேதனகோடியிற் சேர்ந்தாலும் ஜடமாக இருக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. அஜடமென்று கொள்ளலாம். ஜடமென்று கொள்ளுகிற பக்ஷமு மொன்றுண்டு; தத்வ முக்தாகலாபத்தில் *இஹ ஜடாம் ஆதிமாம் கேசிதாஹு:* என்றார் வேதாந்த வாசிரியர். மிச்ரஸத்வமாவது ப்ரக்ருதி. இது ரஜோகுணத்தோடும் தமோகுணத்தோடுங் கூடின ஸத்வகுணத்தை யுடைத்தாகையாலே இது மிச்ரஸத்வ மென்னப்படுகிறது. ஸம்ஸாரியான சேதனர்களின் ஞானத்தையும் ஆனந்தத்தையும் மறைக்குமிது. விபரீத ஞானத்தையுமுண்டாக்கும். எம்பெருமானுடைய லீலைக்கு இது பரிகரமாயிருக்கும். இதை யிட்டே லீலா விபூதியென்பது. ப்ரக்ருதி யென்கிற பெயரோடுகூட அவித்யை மாயை என்கிற பெயர்களுமுண்டு இதற்கு. ஆச்சரியமான ஸ்ருஷ்டியைப் பண்ணுவதால் மாயை யென்கிறது.

ஸத்வசூன்யமென்கிற காலத்தைப்பற்றின நிரூபணம்

364. ஸத்வ சூந்யமென்று மூன்ருவதாகச் சொல்லப்பட்ட அசித்தத்வமாவது காலம். ப்ரக்ருதியினுடையவும் ப்ராக்ருதங்களினுடையவும் பரிணாமத்திற்கு இது ஹேதுவாயிருக்கும். அதாவது, எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்பத்தாலே இவற்றைப் பரிணமிக்கச் செய்கிறபோது காலத்தினுடைய அவஸ்தா விசேஷங்களைப் பார்த்துக்கொண்டிருந்து அவ்வக்காலங்கள் வந்தவாறே பரிணாம நிர்வாஹம் செய்து போருகையாலே இதற்குக் காலம் அவச்யா பேக்ஷிதமா யிருக்குமென்று கொள்க. சிலர் காலமென்பதே கிடையாதென்றார்கள். ஸ்தாவர ஜங்கம ரூபங்களான ஸகல பதார்த்தங்களும் காலத்தினலாய பரிணாமமுள்ளனவாகவே கட்கூடாகக் காணப்படுதலாலும், கலாகாஷ்டா முஹூர்த்தாதிகளைப்பற்றியும், வஸந்தம் முதலான ருதுக்களைப்பற்றியும், மதுமாதவாதி மாஸங்களைப்பற்றியும், மற்றும் இவற்றைச் சேர்ந்த பலவற்றைப்பற்றியும் வேதங்களிற் சொல்லுகையாலும் காலத்தை இல்லை செய்வது கூடாது. திக்குஎன்று தனியேஒருத்ரவ்ய முண்டென்று பலர் சொல்லுவது அயுக்தம்.

இருபத்துநான்கு தத்வ நிரூபணம்

365. முக்கியமாக, அவித்யை யென்றும், மாயையென்றும் சொல்லப்படுகிற ப்ரக்ருதியானது இருபத்துநான்கு தத்துவமாயிருக்கும். (அவற்றின் விவரணம்) சப்தாதி விஷயங்கள் ஐந்து; ஆகாசாதி பூதங்கள் ஐந்து; பஞ்ச ஜ்ஞானேந்திரியங்கள், பஞ்ச கருமேந்திரியங்கள்; இவற்றுக்கு ஸஹகாரியான மனஸ்ஸு. மஹான் அஹங்காரம் ப்ரக்ருதி என்பனவாம். திருவாய்மொழியில் *பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரிய மைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானங்கார மனங்களே*என்கிற பாசுரத்தை யநுஸந்திப்பது. இவை, போக்யம் போகோபகரணம் போகஸ்தானம் என்று மூவகையா யிருக்கும். விஷயங்கள் போக்யங்களாம். செவி வாய் கண் மூக்கு முதலானவை போகோபகரணங்களாம். பதிநான்கு லோகங்களும் ஸகலதேஹங்களும் போகஸ்தானங்களாம்.
அசித்ஸ்வரூப நிரூபணமாயிற்று. .... *

நவரத்ன நவநிதியில் ஏழாவது நிதி முற்றிற்று.
எட்டாவது நிதி—ஈச்வரதத்வ நிரூபண ஸாரம்.

366. கீழே நிரூபித்த சேதநா சேதநங்களுக்கு நியாமகனானவன் ஈச்வரனென்றும் ஸர்வேச்வரனென்றும் சொல்லப்படுவன், விஷ்ணு நாராயண வாஸுதேவாதிகளான திருநாமங்களினால் சொல்லப்படுவன். * தேவோ நாமஸஹஸ்ரவாந்' என்றும், * ஓராயிரமா யுலகேழளிக்கும் பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்* என்றும் சொல்லுகிறபடியே ஆயிரந்திருநாமங்கள் படைத்தவனுவன் அந்தத் திருநாமங்களுக்கு ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்த "பகவத்குண தர்ப்பணம்" என்னும் மறுபெயருடைத்தான பாஷ்யத்தை ஸேவித்தால் எம்பெருமானுடைய ஸ்வருபரூபகுண விபவைச்வரியங்களெல்லாம் விசதமாக விளங்கும்.

எம்பெருமானுடைய உபயலிங்க நிரூபணாதிகள்

367. நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போதே * உயர்வற வுயர்நல முடையவன் * என்று தொடங்கினராதலால் எம்பெருமானை ஸமஸ்தகல்யாண குணகண நிதியாக அறிவதே முக்கியமானது. * அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநனென்று அறியவேணும். அகிலஹேய ப்ரத்யநீகத்வமும் கல்யாணைகதாநத்வமுமாகிற இவை யிரண்டும் உபயலிங்க மெனப்படும். ஒருவிதமான தோஷமும் தட்டாமலிருக்கைதான் அகில ஹேயப்ரத்யநீகத்வமாகும். கல்யாணகுணமென்று பேர்பெற்றவை யெல்லாவற்றிற்கும் கொள்கலமாயிருக்கை—கல்யாணைகதாநத்வம்.

368. துக்கப்படுகை ஹேயகுணமானாலும் பரதுஃக்க துஃக்கித்வமென்பது ஹேய குணமன்றாதலாலும், ஸ்ரீ ராமாயணத்தில் * பஹவோ ந்ருப! கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே * என்ற மகுடத்தின்கீழ் * வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துஃக்கித:* என்று கூறின முகத்தால் கல்யாண குணமாகவே ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பதாலும் "பரதுக்க துக்கித்வத்தை ஸர்வேச்வரனுக்குக் கொண்டால் ஹேயப்ரத்யநீகத்வத்திற்கு மாறாகும்" என்கிற வாதத்திற்கு இடமில்லை.

369. எம்பெருமானுக்கு அநந்தனென்கிற திருநாமமு முண்டு அந்தமாவது பரிச்சேதம். தேசகாலபரிச்சேதம், வஸ்துபரிச்சேதம் என்கிற மூவகைப் பரிச்சேதமுமில்லாதவன் எம்பெருமான் என்றபடி. 'இன்ன தேசத்திலுள்ளான், இன்ன தேசத்திலில்லை' என்று சொல்ல முடியாதபடி எல்லா தேசங்களிலு முளனாகையாலே தேசபரிச்சேதமில்லாதவன். 'இன்னகாலத்திலுள்ளான், இன்னகாலத்திலில்லை' என்று சொல்லமுடியாதபடி எல்லாக் காலத்திலு மிருக்கையாலே காலபரிச்சேத மில்லாதவன், 'இன்ன வஸ்துவாக இருக்கிறான், இன்ன வஸ்துவாக இல்லை' என்று சொல்லமுடியாதபடி ஸகல வஸ்து ஸ்வரூபனாகவு மிருக்கையாலே வஸ்து பரிச்சேதமில்லாதவன்.

அந்தர்யாமித்வத்தில் தோஷஸம்பந்தமில்லாமை

370. எம்பெருமான் ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியா யிருப்பனென்றால் அந்தந்த வஸ்துக்களிலுள்ள தோஷங்கள் இவன்பால் ஒட்டாதோ? என்று சங்கை வரும். அந்த சங்கைவேண்டா. ஜீவாத்மாவானவன் சரீரத்திலும் இருக்கச்செய்தேயும் சரீரத்திற் குண்டான இளமை முதுமை முதலியன எப்படி அந்த ஆத்மாவுக்கு வருவதில்லையோ அப்படியே ஸர்வவஸ்து சரீரகனான பகவானுக்கும் ஒரு வஸ்துவினுடையவும்ஒருவிதமான தோஷமும் தட்டாது.

371. இதற்கொரு நிதர்சனம் காணலாம். குற்றம் செய்ததற்காக ராஜதண்டனை யடைந்த குற்றவாளி சிறைச்சாலையில் புகுவிக்கப்பட்டுத் துக்கங்களை யனுபவிக்கிறான். அதே சிறைச்சாலையில் அதற்கு நியாமகனான அதிகாரியும் உறைகின்றான். சிறையில் இருப்பு என்பது இவ்விருவர்க்கும் உள்ளதா யிருக்கச் செய்தேயும் அதிகாரியான பிரபுவுக்கு எவ்விதமான துக்கமும் கிடையாது. ஏன்? இவன் சிறைச்சாலையிலிருப்பது குற்றஞ் செய்தது காரணமாகவன்று; நியமிப்பதற் காக விருக்கிறான்; ஆகவே இவனுக்கு துக்கமில்லாததோடு கூட மாதந்தோறும் ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் பெறுகையாகிற ஆனந்தமுமுள்ளது. இதேபோல, கருமம் காரணமாக ஜீவன் சரீரவாஸம் பெறுகையாலே துக்கமுடையவனாக ஆகிறான். பரமபுருஷன் அங்ஙனன்றிக்கே *அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா* என்று வேதாந்தமோதினபடியே சாஸ்தாவாக அந்த: ப்ரவிஷ்டனா யிருப்பதனால் இவனுக்கு எவ்விதமான தோஷமும் ஒட்டாது.

எம்பெருமானுடைய நீர்மைக் குணங்களின் சிந்தனை

372. ஈச்வரன் ஒப்புயர்வற்ற எண்ணிறந்த திருக்குணங்களோடு கூடியிருக்கிறானெனிலும் முக்கியமாக தயை பொறுமை வாத்ஸல்யம் முதலான சில திருக்குணங்களையே நாம் நிச்சலும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பிறர் நோவு கண்டால் ஐயோவென்று இரங்கி யிருப்பன். அவர்களுக்கு எப்போதும் நன்மையையே சிந்தித்திருப்பன். நிலாத்தென்றல் சந்தனம் தண்ணீர்போலே பிறர்க்கே உரிமைப்பட்டிருப்பன். தன்னை யடிபணிந்தவர்களிடத்தில் ஜாதி அறிவு ஒழுக்கம் முதலானவற்றா லுண்டான தண்மையைச் சிறிதும் பாராமல் தன்னைப் பணிந்தவர்களென்பதொன்றே கொண்டு நேசித்திருப்பன். உற்றாருறவினர் கைவிட்ட காலத்திலும் தான் கைவிடாதே யிருந்து செயற்கரியன செய்தும் அவர்களின்

அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டிக்கொடுப்பன். அவர்களது காரியம் தலைக்கட்டினால் தன் காரியம் தலைக்கட்டிற்று என்றெண்ணி க்ருதக்ருத்யனா யிருப்பன். அவர்களுக்குத் தான் செய்த நன்மைகளில் ஒன்றையும் நினையாதே அவர்கள் செய்த ஸ்வல்ப ஸுக்ருதங்களையே மலையாகக்கொண்டு அவர்களை யநுக்ரஹிப்பதிலேயே நோக்கா யிருப்பன். மனைவியர் மக்கள் செய்யும் குற்றங்களைக் காணக் கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போல அவர்கள் குற்றங்களை நினையாதே குற்றங்களைப் பெரிய பிராட்டி யார் காட்டினாலும் 'என்னடியார் அது செய்யார்' என்று சொல்லியும், *செய்தா ரேல் நன்று செய்தார்* என்று சொல்லியும் வாத்ஸல்யம் காட்டியிருப்பன். மன மொழி மெய்களால் அவர்கள் குடிலர்களா யிருந்தாலும் தான் செவ்வியனா யிருந்து பரிமாறுவன்: இப்படிப்பட்ட அரிய பெரிய திருக்குணங்களை அநுபவ ரஸிகர்களான பெரியார் தங்களுடைய அநுபவத்திற்குப் போக்கு வீடாக எடுத்துரைத்தால் அதில் வெறுப்பும் அதிர்ச்சியு மின்றிக்கே யிருப்பதுதான் நம்போலியர்க்கு குணா நுபவம்.

எம்பெருமானுடைய ஸகல காரணத்வ நிரூபணம்

373. எம்பெருமானுடைய நீர்மைக்குணங்களைக் கீழே பரக்கப் பேசினபடி. மேன் மைக் குணத்தைப் பேசப்புக்கால் 'ஸகலஜகத்துக்களுக்கும் அவனே காரண பூதன் என்றறிவ தொன்றே போதுமானது. நான்கு அத்யாயங்கள் கொண்ட சாரீரக மீமாம்ஸை யென்னும் ப்ரஹ்மஸூத்ரத்தில் இரண்டத்யாயங்களால் அவனுடைய ஸகல ஜகத் காரணத்வமே பலவகைப் பூர்வபக்ஷங்களையும் நிரஸித்து ஸ்தாபிக்கப்படுகிறது. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் எம்பெருமானுடைய ஸங்கல்ப மாத்தி ரத்தினால் நிகழ்பவை. காரணத்வமானது உபாதாநத்வம் நிமித்தத்வம் ஸஹகாரித் வம் என்று மூவகையாயிருக்கும். ஒரு பானையுண்டாக வேணுமானால் மண் உபா' தான காரணமாயிருக்கும். குயவன் நிமித்த காரணமாயிருப்பன். தடி சக்கரம் தண்ணீர் முதலானவை ஸஹகாரிகாரணமா யிருக்கும். உலகில் எந்த வஸ்து ஜனிக்க வேணுமானாலும் இங்ஙனே மூன்று காரணங்கள் இன்றியமையாதனவாம். ஸகல ஜகத்துக்களுக்கும் உத்பாதகனான ஸர்வேச்வரன் தானொருவனே மூவகைக் காரண மாயுமிருப்பன் என்பதை நெஞ்சில் திடமாகக்கொள்ளவேணும்.

பரவ்யூஹ விபவாந்தர்யாம்யர்ச்சா நிரூபணம்

374. ஈச்வர ஸ்வரூபமானது—பரத்வம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமித்வம் ஆச்சாவதாரம் என்று ஐந்து ப்ரகாரத்தோடே கூடியிருக்கும். இவ்வைந்தையும் சுருக்கமாக உபபாதிக்கக்கேளீர். [பரத்வம்] *நலமந்த மில்லதோர் நாடு* என்கிற பரமபதத்திலே நித்யஸூரிகளான அனந்தகருட விஷ்வக்ஸேநாதிகளுக்கும், ஸம்ஸார ஸம்பந்தமற்றுச் சென்று சேர்ந்த முக்தாத்மாக்களுக்கும் போக்யனாய்க் கொண்டு எழுந்தருளி யிருக்குமிருப்பு பரத்வமெனப்படும்.

375. [வ்யூஹம்.] இதற்கு உபயோகம் லீலாவிபூதியி லாகையாலே இவ் விபூதியி னுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிக்கைக்காகவும் புபுக்ஷுக்களான ஸம்ஸாரிகளை இஷ்டப்ராபண அநிஷ்ட நிவாரணங்களாலே ஸம்ரக்ஷிக்கைக்காக வும் உபாஸகர்களை யநுக்ரஹிக்கைக்காகவும் ஸங்கர்ஷணப்ரத்யும்ந அநிருத்த ரூபேண நிற்கும் நிலை வியூஹமெனப்படும்.

376. [3- விபவம்.] * அஜாயமாநோ பஹுதா விஜாயதே * என்றும் * பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ* என்றும் உபநிஷத்து ஓதுகிறபடியும், * எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் * * மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய்க் குற ளாய், கானுரேனமுமாய்க் கற்கியாமின்னங் கார்வண்ணனே* என்று ஆழ்வாரரு ளிச் செய்கிறபடியும் மநுஷ்யதிர்யக் ஸ்தாவராதி ஜன்மங்கள் கொள்ளுகை விபவ மெனப்படும்.

377. [4. அந்தர்யாமித்வம்.] *ய ஆத்மாநம் அந்தரோ யமயதி* சாஸ்தா விஷ்ணு ரசேஷஸ்ய ஜகதோ யோ ஹ்ருதி ஸ்தித: * இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்* இத் யாதிகளிற் சொல்லுகிறபடியே சேதநருடையவுள்ளே ப்ரவேசித்து ஸகல ப்ரவ் ருத்திகளுக்கும் நியாமகனு யிருக்குமிருப்பு அந்தர்யாமித்வமெனப்படும்.

378. [5.அர்ச்சாவதாரம்.] *தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே* என் கிறபடியே நமக்கு அபிமதமான த்ரவ்யத்தைத் திருமேனியாகக் கொண்டு நம் போல்வாருடைய ஆராதனைக்கு எளியனுய் ஸர்வஸஹிஷ்ணுவாய் ஸ்நாந போஜ நாதி ஸகல வ்யாபாரங்களும் அர்ச்சக பராதீனமா யிருக்கப்பெற்ற நிலைமை அர்ச்சாவதார மெனப்படும்.

379. பிள்ளை லோகாசார்ய ரருளிச்செய்த தத்வத்யத்தில் முடிவான சூர்ணை "* ஸ்வஸ்வாமிபாவத்தை மாருடிக்கொண்டு அஜ்ஞரைப் போலேயும் அசக் தரைப்போலேயும் அஸ்வதந்த்ரரைப் போலேயு மிருக்கச்செய்தேயும் அபார காருண்ய பரவசனுய்க்கொண்டு ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளும்" என் பது, இஃதொன்றை நிச்சலும் சிந்தனை செய்து கொண்டு வாழ்வாரே வாழ்வார்.

நவரத்ன நவநிதியில் எட்டாவது நிதியான ஈச்வரஸ்வரூபநிரூபணம் ஸாரம் முற்றிற்று.

௯ ஒன்பதாவதுநிதி - விசிஷ்டாத்வைத ஸாரம்

380 உலகில் பலபல மதங்கள் தோன்றியிருந்தாலும் அவை வைதிக மத மென்றும் அவைதிக மதமென்றும் பொதுவாக இருவகுப்பாகும். வேதத்தைப் பிரமாணமாகக்கொள்ளும் மதம் வைதிகமதம். வேதத்தைப் புறக்கணித்து ஸ்வதந்திரமாகத் தோன்றிய மதம் அவைதிக மதம். அவைதிக மதங்களிற் காட்டி லும் வைதிக மதம் சிறந்ததென்னு மிடத்தை நாம் விவரிக்க வேணுமோ? வைதிக மதங்களுள் பரமபவித்திரமான விசிஷ்டாத்வைத தரிசனம் மிகச் சிறந்து விளங்கு கின்றது. நம்மாழ்வார் திருவாய் மொழி தொடங்கும்போது "உளன் சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" என்கிற பாசுரத்தினுல் 'தாம் போதிக்கும் பரம புருஷன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் விளங்குபவன்' என்றருளிச் செய்கை யாலே இக்கலியுகத்தில் அவ்வாழ்வார் தொடக்கமாகப் பரவியுள்ள விசிஷ்டாத் வைத ஸம்பிரதாயம் பரம வைதிகமென்னத் தட்டில்லை. ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்று வகுப்புகளும் நம் தரிசனத்தில் சீர்மைபெற்று விளங்குவன.

381 "ஆழ்வார்கள் வாழி, அருளிச்செயல் வாழி, தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி — ஏழ்பாரு முய்ய அவர்களுரைத்தவைகள் தாம்வாழி, செய்யமறை தன் னுடனே சேர்ந்து" என்னுமுபதேசரத்தினமாலைப் பாசுரத்தில் ப்ரமாணங்களும் ப்ரமாதாக்களும் ஸாரமாகத் தெரிவிக்கப்பட்டார்கள். ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதங் களாகிற உபய வேதங்களும் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதிகளும் நமக்கு ப்ரமாணம்.

யதார்த்தஜ்ஞான நிதிகளான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானுர் போல்வாரான மஹாசார்யர்களே ப்ரமாதாக்கள். ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவ மென்றும், அவனுடைய திருவடித் தாமரைகளேதஞ்சமென்றிருக்கை பரமஹித மென்றும், *நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்தமயமான நித்ய கைங்கர்யமே பரம புருஷார்த்த மென்றும் இங்ஙனே கூறப்படும் அர்த்தவிசேஷங்களே ப்ரமேய ச்ரேஷ்டங்களாக விளங்குகின்றன.

382 பரமவைதிகர்களென்கிற ஏற்றம் நமக்கே உரியது. ப்ரத்யக்ஷத்தாலோ அநுமானத்தாலோ அறிந்துகொள்ள முடியாத அர்த்த விசேஷங்களையறிவிக்கும் வாங்மயமே வேதமெனப்படும். வேதத்தை ப்ரமாணமாக இசையாத சார்வாகஜைந பௌத்தாதிகள் பாஹ்யர்களெனப்படுவர். வேதத்தைப் பரமப்ரமாணமாக இசைந்து வைத்தும் பரப்ரஹ்மம் குணசூந்யமென்றும் அலக்ஷ்மீக மென்றும் அசரீர மென்றும் விபூதிவிரஹிதமென்றும் இங்ஙனே மனம்போனபடி யெல்லாம் பேசுபவர்கள் குத்ருஷ்டிகளெனப்படுவர். குத்ருஷ்டிகளானாலும் வேதத்தை ப்ரமாணமாக இசையு மவர்கள் வேதபாஹ்யர்களிற் காட்டிலும் மேம்பட்டவர்களன்றோ வென்று சிலர் நினைக்கக்கூடும். பாஹ்யர்களோடு அவர்களோடு ஒரு வாசியில்லை. யென்றருளிச் செய்கிறார் கூரத்தாழ்வான்.

383. வேதம் கர்மகாண்ட மென்றும் ப்ரஹ்மகாண்ட மென்றும் இரு வகுப் பாகவுள்ளது. பூர்வபாகம் கர்மகாண்ட மென்றும், உத்தரபாகம் ப்ரஹ்மகாண்ட மென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்மகாண்ட மென்பது. பக வானுக்கு ஆராதன ரூபங்களான யஜ்ஞம் முதலிய கரும விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்ட மென்றும், அக்கருமங்களினால் ஆராதிக்கப்படு கின்ற பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ் மகாண்ட மென்றும் சொல்லிற்றாயிற்று இதுவே உபநிஷத்தென்கிறபெயராலும் வழங்கும். "வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:* என்கிற கீதையின்படி கர்ம காண்ட முங்கூட பகவானை ப்ரதிபாதிக்கவல்லதேயாயினும் அந்த ப்ரதிபாதனம் வ்யவஹிதமாயிருக்கும். உபநிஷித்து அவ்யவதாநேந ப்ரதிபாதகமாயிருக்கும்.

384. கர்மகாண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமினி யென்னும் மஹர்ஷியெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸையென்று பெயர். இதில் பன்னிரண்டு அத் யாயங்களே ஜைமினி மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும், மேல் நான்கு அத்யாயங்கள் காசக்ருத்ஸ்ந மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு இதைப்பற்றி இங்கு விசாரவிரிவு வேண்டா. ப்ரஹ்மகாண்ட மென்னும் உபநிஷத் பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷி யெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்டவொரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே சாரீரகமீமாம்ஸை யென்று பெயர். உத்தரமீமாம்ஸை யென் றும் வழங்குவர். ப்ரஹ்மஸூத்ரமென்பது இதனையே. ஒவ்வோரத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரகமீ மாம்ஸை யென்றதாயிற்று. இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட

அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் (156) நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் (545) ஐந்நூற்றுநாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும், பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களையும் கொண்டது ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமென்றதாயிற்று.

385. தத்வஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு உபநிஷத்துக்களே தஞ்சமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யயமற நிஷ்கர்ஷித்து விளக்கக்கூடியது இந்த ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமேயாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. இந்த சாஸ்த்ரத்தின் பொருளை நிஷ்கர்ஷமாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்துகொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்மஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார். மஹர்ஷிகளியற்றிய ஸூத்ரங்களின் பொருளை நம் போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால், நம் போன்ற அல்பமதிகளிடத்தில் பரமகருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்க பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம் அத்வைதம் சிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை இம் மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யமியற்றினார். த்வைத மதத்திற்காக ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் (மத்வாசார்) பாஷ்யமியற்றினார். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமி யெம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்தார்.

386. உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை ஸூத்ரகாரருடைய உள்ளத்திற்கு ஒத்ததாக நிஷ்பக்ஷபாதமாய் நிருமிக்கப்பட்டது. ஸ்ரீ பாஷ்யமேயென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அது நிற்க. ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்யத் தொடங்கும் போதே "பகவத்போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே" என்று [முன்னோர் மொழிந்த முறைதப்பாமே வியாக்கியானிப்பதாக] அருளிச்செய் திருப்பதனால் ஸ்ரீ பாஷ்யத்தின் ப்ராமாணிகத்வம் விளங்குகின்றது. ஆர்ஷவயாக்க்யாநகவசிதமாயும் அதிப்ராசீநமாயும் பரம பவித்திரமாயுமுள்ளது விசிஷ்டாத்வைதமேயென்றும், அதை நிலைநாட்டவல்ல பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமேயென்றும் ப்ராமாணிக வைதிகோத்தமர்களின் கொள்கை.

387. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த மென்னுஞ் சொல்லுக்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. ஸித்தாந்த மென்பதற்கு ப்ராமாணிகமாகப் பரிக்ரஹிக்கப்பட்ட அர்த்தமென்று தேர்ந்த பொருள். த்வைதமென்பது பேதம். இரண்டாயிருக்கும் தன்மை (த்விதா) எனப்படும். த்வைத மென்றாலும் அதுவே பொருள் பேதம் என்றதாயிற்று. அத்தோடு நஞ் சேர்ந்தால் அத்வைதம் என்றாகிறது. அபேதமென்று பொருள். விசிஷ்டஸ்ய அத்வைதம்—விசிஷ்டாத்வைதம். ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களோடு கூடின ப்ரஹ்மம் ஒன்று என்று அங்கீகரிக்கப்படுவதால் இந்த தரிசனம் விசிஷ்டாத்வைத மெனப்படுகிறது. சித்தும் அசித்துமாகிய இரண்டு தத்து

வங்கள் உண்மையில் கிடையாதென்றும் ப்ரஹ்மமொன்றே உள்ளதென்றும் கொள்ளுகின்ற பிறருடைய மதத்தைத் தள்ளி, மூன்று தத்துவங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்ளுவதே இந்த தரிசனத்தில் ஸாரமானது.

388. ச்ருதிவாக்யங்களை யுற்று நோக்கினால் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப்படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். (2) அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். * க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:* என்பது முதலான ச்ருதி வாக்யங்கள் சேதந அசேதந—ஈச்வரரூப தத்வத்ரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால் பேதத்தைக் காட்டுகின்றன. * நேஹ நாநாஸ்தி கிஞ்சந * * ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம* *தத் த்வமஸி* இத்யாதிகளான ச்ருதிவாக்யங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்களில்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால் அபேதத்தைக் காட்டுகின்றன.

389. ஆக, ச்ருதிகளில் சிலவிடத்து பேதப்ரதிபாதநமும் சிலவிடத்து அபேத ப்ரதிபாதநமுமிருப்பதாகத் தேறுகையாலே பரஸ்பர விரோதம் ஸ்பஷ்டமாகிறது. விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் ச்ருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கி ஸமந்வயம் காட்ட வேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. ப்ரஹ்மமொன்றுதான் ஸத்யமென்றுகொள்ளுகிறஅத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து பேதத்தைக் காட்டும் ச்ருதிவாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள். த்வைதிகளோவென்னில் பேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை உபேக்ஷித்துவிட்டார்கள்.

390. * யஸ்யாத்மா சரீரம், யஸ்யப்ருதிவீ சரீரம். ய ஆத்மநி திஷ்டந் * இத்யாதி வாக்யங்கள் பகவான் ப்ருதிவி முதல் ஆத்மா வரையிலுமுள்ள ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமி யாயிருக்கிறா னென்பதை ப்ரதிபாதிக்கின்றன; இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளுமான இரு வகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். ஸுபாலோபநிஷத்து முதலான அந்தர்யாமி ப்ராஹ்மணவாக்யங்களுக்கு உபய மதத்திலும் ஆதரவு கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆக, த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக ச்ருதி வாக்யங்களை அமுக்க்யார்த்தங்களாகக் கொள்ளுதல் உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது. இத்தகைய தோஷம் சிறிதும் காணப் பெறுதது நமது மதமென்னுமிடம் அடுத்தபடியாக விவரிக்கப்படு.

391. கீழே யெடுத்துக்காட்டிய மூன்று வகுப்பான ச்ருதிவாக்யங்களையும் ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத்வைதிகளேயாவர். ஒருச்ருதி வாக்கியத்திலும் அமுக்க்யார்த்த கல்பநை யென்பது கிடையாது. எங்ஙனே யென்னில், கடைசியாக எடுத்துக்காட்டப்பட்ட * யஸ்யாத்மா சரீரமித்யாதிகளான ச்ருதி வாக்யங்களுக்கு கடக ச்ருதிகளென்று பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேசமுமின்றிக்கே பொருந்தச் செய்ய வல்லவை அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்கள்-என்கிற காரணத்தினால் இவற்றுக்கு கடகச்ருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தம்.

392. * நேஹ நாநாஸ்தி கிஞ்சந * இத்யாதிகளான அத்வைத (அபேத) ச்ருதிகளினாலேற்பட்ட அபேதத்தையும் * க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:* இத்யாதிகளான த்வைத (பேத) ச்ருதிகளினாலேற்பட்ட பேதத்தையும் பொருந்தவிடும் வழி கேண்

மின். சேதநாசேதந ஈச்வரர்களான மூன்று தத்துவப் பொருள்களில் ஸ்வரூப பேதம் உண்மையாதலால் *க்ஷரம் ப்ரதாந மித்யாதி பேத ச்ருதியானது பேதத்தைச் சொல்லி யிருப்பது பாங்கே. ப்ரஹ்மம் சேதநாசேதந விசிஷ்டமாய்க் கொண்டு ஒன்றேயாகிறபடியால் *ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம இத்யாதியான அபேத ச்ருதிகளும் பொருந்தக் குறையில்லை. * யஸ்யாத்மாசரீரமித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதிகளானவை ஸர்வேச்வரனை ஸர்வாந்தர்யாமியென்று தெரிவிக்கும் முகத்தால் பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகின்றன என்பது நம் ஆசாரியர்களின் நிருபணம்.

393. சிதசிதீச்வரர்களாகிற மூன்று தத்துவங்களிலும் தனிப்படக் கண் செலுத்தினால் பேதம் க்ரஹிக்கப்படுகிறது; அசேதநமாகிய சரீரம் வேறு; அதனுள்ளுறையும் சேதநன் வேறு; அவனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா வேறு என்று பேத ப்ரதிபத்தி சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பல அவயவங்களின் கூட்டரவான சரீரத்திலே கை, கால், காது, மூக்கு முதலானவற்றைத் தனியே பார்க்குமிடத்து பேத ப்ரதிபத்தியும் 'அவயவஸங்காதம் ஒன்று' என்று பார்க்குமிடத்து அபேத ப்ரதிபத்தியும் பொருந்துகின்றது. தேவதத்தன் ஒருவன், யஜ்ஞதத்தன் ஒருவன் இத்யாதி வ்யவஹாரங்களில் தேவதத்தனுக்கும் யஜ்ஞதத்தனுக்கும் ஒருமை எங்ஙனம்? என்று விமர்சிக்கவேணும். 'தேவதத்த: க்ருச:, யஜ்ஞதத்த: ஸ்தூல:' இத்யாதி வ்யவஹாரங்களில் க்ருசத்வமும் ஸ்தூலத்வமும் சரீர தர்மமாகையாலே தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்கள் சரீர பரங்களே யென்று அறுதியிடப்படுகிறது. 'தேவதத்தோ மேதாவீ, யஜ்ஞதத்த: ப்ரதிபாவாந் இத்யாதி' வ்யவஹாரங்களில் மேதையும் ப்ரதிபையும் ஆத்ம தர்மமாகையாலே அந்த தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்களே ஆத்ம பரங்களென்றும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றல்ல வெவ்வேறுபட்டவை ஆக அநேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வவ்யவஹாரம் நிகழ்ந்து வருவது 'சரீர விசிஷ்டனான சரீரி ஒருவன்' என்னுமபிஸந்தியாலத்தனை.

394. இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்றச்ருதியும் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே. ஏவஞ்ச பேதத்திற்கும், அபேதத்திற்கும் அபாயமொன்றுமில்லை யென்றதாயிற்று. சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநா வஸ்துஸத்பாவம் ப்ராமாணிக மாகையாலே அபலபிக்க வொண்ணாததே. இங்ஙனே விசிஷ்டைக்யமும் அநுபவஸித்தமாகையாலே அபலபிக்க வொண்ணாததே. ஆக உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும் சரீர சரீரி பாவ நிபந்தநமாகவே ஒன்றாக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையாலே அப்படிப்பட்ட சரீர சரீரிபாவத்தை யுணர்த்துகின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணாதி ரூபங்களான ச்ருதி வாக்யங்களுக்கு நமது மதத்தில் மிகுந்தகௌரவமுள்ளது. அத்வைதிகள் பேதச்ருதிகளை அநாதரிப்பது போலவும், த்வைதிகள் அபேத ச்ருதிகளை அநாதரிப்பதுபோலவும், நாம் ஒரு வகையான ச்ருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே ஸர்வச்ருதி ஸாமரஸ்யம் நமக்கே யொழியப் பிறர்க்கில்லையென்பது தேறி நின்றது.

395 மதாந்தரஸ்தர்கள் ஒப்புக்கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக் கொண்டிருக்கின்றோம் நித்யஸூரிஸத்பாவம், எம்பெருமானுடைய கல்யாண குணாச்ரயத்வம், திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றை யெல்லாம் விட்டு சரீர சரீரிபாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைத

மென்று பெயரிடுவதில் என்ன விசேஷமென்னில், கேண்மின். ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகச்சரீரகத்வ மென்பதே ப்ரதாநமானது. ஆனதுபற்றியேயாம் இதுப்ரதாநமென்பது எங்ஙனமென்னில் ஸர்வச்ருதிகளினுடையவும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், ஸர்வச்ருதிகளுக்கும் ஸாமரஸ்யத்தை நிர்வஹித்து வாதி விஜய ப்ரயோஜகமாயிருப்பதனுலே இதற்கு ப்ராதாந்ய மென்றுணர்க.

396 இந்த சரீராத்ம பாவத்தைத் தெரித்து கொள்ளாமையினுலன்ரே பிற மதத்தவர்கள் ஸர்வ ச்ருதிஸாமரஸ்யத்தை நிர்வஹிக்க மாட்டாமல் தளருகின்ருர்கள் குத்ருஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலயா பரிஹரித்துத் தருவது இந்த சரீராத்மபாவமே யென்க. இங்கு ''யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம்'' இத்யாதியான வேத ந்தாசார்யச்லோக ரத்நத்தைத் திடமாகக்கொள்க இந்த ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தத்தை நன்கு தெரிந்துகொண்ட வொருவ்யக்தி நிற்கு மிடத்தில் விமதர்கள் எத்தனை பேர்கள் கூடி எவ்வளவு வாத கோலாஹலங்களைச் செய்தாலும் அவர்களுக்கு பங்கமேதவிர வேறில்லை யென்பது இதன் கருத்து.

397 சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு நாராயண பாரம்ய ப்ரதிபாதனத்தில் தான் முழு நோக்கென்னுமிடமும் முக்கியமாகஅறியத்தக்கது. ஜகத்காரண வஸ்து வாதிகளான வேதாந்த வாக்யங்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனிடத்திலேதான் பர்யவஸிக்கின்றன என்று ஸூத்ரகாரர் தாமே ஸித்தாந்தம் செய்திருக்கிருரென்பதை நன்கு உணரலாம்* அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா* என்று ப்ரஹ்ம விசாரத்தை ப்ரஸ்தாவித்து ஜந்மாத்யஸ்ய யத:* என்கிற அடுத்த ஸூத்ரத்தினுலே, 'எந்த வஸ்துவினிடத்தில் நின்றும் ஜகஜ் ஜந்ம ஸ்திதி லயங்கள் ஆகின்றனவோ அது ப்ரஹ்மம்' என்று ப்ரஹ்ம லக்ஷணம் காட்டினுர் வியாஸர். வேதாந்தங்களில் ஜகத் காரண வஸ்துவைத் தெரிவிக்கின்ற வாக்யங்கள் ஒரே விதமாக இல்லை. பரஸ்பர விருத்தங்கள் போல் தோன்ற நின்றன என்பது பிரஸித்தமான விஷயம். ஏதோ ஒரு வஸ்துதான் ஜகத் காரணமாக இருக்க முடியுமே ஒழிய பல வஸ்துக்கள் அப்படியிருக்க முடியாது பரஸ்பர விருத்தங்கள்போல் தோன்ற நின்ற காரண வாக்யங்களாலே; இந்த நிச்சயம் எப்படி உண்டாகுமென்று தோன்றக்கூடிய சங்கையை ஸூத்ரகாரர் பரிஹரித்தே யிருக்கிருர்.

398 ஸூத்ரங்களின் பொருளை நிர்வஹிப்பதற்கு உபநிஷத்துக்களிலிருந்து விஷய வாக்யங்கள் கொள்ளப்படுகின்றன வென்பது யாவருமறிந்ததே. அந்த விஷயவாக்யங்களிலெல்லாம் சொல்லப்படுகிற தன்மைகள் ஸ்ரீமந்நாராயணனுக்கே அஸாதாரணங்களென்பது ச்ருதிபுராணுதிகளில் ப்ரஸித்தம்—என்கிற விதனை முக்கியமாகக் குறிக்கொள்க. ஆனந்தமயத்வம், ஆதித்ய மண்டலத்திலுள்ளிருத்தல், புண்டரீகாக்ஷத்வம், அபஹதபாப்மத்வம், மோக்ஷார்த்த உபாஸந விஷயத்வம், அக்நி இந்திரன் முதலிய ஸர்வ தேவதைகளுக்கும் அந்தர்யாமியா யிருத்தல் இத்யாதிகளான தரும விசேஷங்களுக்கு இருப்பிடமான வஸ்துவே ஜகத்காரணமாகக் கூடியதென்று நிஷ்கர்ஷிக்கின்ற ஸூத்ரகாரருடைய உள்ளத்தில் ஸ்ரீமந்நாராயணனே உறைந்திருக்கின்ரு னென்பது பிராமாணிகர்களுக்கு அறிவரிதன்று. இனி, ஆதிசங்கராசாரியர் நாராயணபாரம்யத்தையே ஸ்தாபித்தவரென்பது நிருபிக்கப்படுகிறது.

399 பகவத்பாதர் இயற்றிய விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் தேவதாந்தரங்களுக்கு அவரத்வத்தை நிலைநாட்டி ஸ்ரீமந் நாராயணனுக்குப் பரத்வம் ஸ்தா

பித்திருப்பது நன்கு விளங்கா நின்றது. பாஞ்சராத்ராகம ப்ராமாண்யாதிகரணத்தில், * உத்பத்த்யஸம்பவாத் * என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் "தத்ர பாகவதா மந்யந்தே" என்று தொடங்கி பாஞ்சராத்ராகம ப்ரமேயங்களான விஷயங்கள் மூன்றென்று ஸங்க்ரஹித்து. அவற்றுள் இரண்டு விஷயங்களில் தம்முடைய ஸம்மதியைக் காட்டி, மூன்றாவதான ஒரு விஷயத்தில் மட்டும் வைமத்யம் காட்டியுள்ளார் பகவத்பாதர். தமக்கு ஸம்மதமாகக் காட்டின இரண்டு விஷயங்கள் இவை;— (இங்கு அவருடைய பங்க்திகளையே உதாஹரிப்போம்.) ''தத்ர யத்தாவதுச்யதே யோஸௌ நாராயண: ப்ரஸித்த: பரமாத்மா ஸர்வாத்மா இதி, தத் ந நிராக்ரியதே. யதபி தஸ்ய பகவத: அபிகமநாதிலக்ஷணமாராதநம் அஜஸ்ர மநந்யசித்ததயா அபிப்ரேயதே, ததபி ந ப்ரதிஷித்யதே; ச்ருதி ஸ்ம்ருத்யோரீச்வரப்ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்'' என்பன அவருடைய பாஷ்ய பங்க்திகள். இவற்றால், ஸ்ரீமந் நாராயணனுக்கே பாரம்ய ப்ரதிஷ்டாபநத்தில் பகவத் பாதர் ஊக்கமுடையவரென்பது மறக்கத்தக்கதன்று. ஈச்வராதி ஸாமாந்ய சப்தங்களுள்ள விடங்களில் வாஸுதேவ நாராயணாதி விசேஷ சப்தங்களையிட்டு வியாக்யானம் செய்யத் தொடங்கினவரும் பகவத் பாதரே யாவர்.

400. பரப்ரஹ்மம் நிர்க்குணம் என்பது பிறருடைய வாதம். ஹேயகுணமில்லாமையைத் தெரிவிக்க வேண்டி உபநிஷத்து சில விடங்களில் ப்ரஹ்மத்தை நிர்குணமென்று சொல்லி யிருப்பதுண்டு. எண்ணிறந்த திருக்கல்யாண குணமுடைமையை ஓதியிருக்கின்ற ச்ருதிசதங்களுக்கு விரோதமின்றிக்கே நிர்வாஹம் செய்யவேண்டுமன்றோ; அங்ஙனே நிர்வஹிக்குமளவில் நிர்க்குண ச்ருதிகளுக்கு ஹேயகுண மில்லாமையைக் கூறுவதில் தாத்பர்யம் என்றே சொல்லித் தீரவேண்டும். ப்ரதாநம் முதலானவை ஜகத் காரணமாகக் கூடுமென்று நேர்ந்த சங்கைகளைப் பரிஹரியா நின்ற சாரீரக மீமாம்ஸையானது பெரும்பாலும் அதிகரணந்தோறும் பரப்ரஹ்மத்தினிடத்திலுள்ள திருக்குணங்களை யெடுத்துக்கொண்டே அத்தகைய குணங்களில்லாத வஸ்துகளுக்கு காரணத்வம் ஸம்பவிக்கமாட்டாது' என்று தலைக்கட்டுகின்றது. இக்காலத்தவர்களான அத்வைதிகள் தங்கள் நூல்களில் ''ஆதிசங்கராசாரியரும் ஸகுணப்ரஹ்மத்தையும் ஸசரீர ப்ரஹ்மத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதுண்டு'' என்றெழுதுகிறார்கள்: நையாயிகர்கள் ,'உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணமகுணம் திஷ்டதி'' என்பர்கள். பரப்ரஹ்மத்திற்கு உத்பத்தி ஒப்புக்கொண்டாலாவது அது க்ஷணகாலம் நிர்க்குணமாக இருக்கவுமாகும். முமுக்ஷுக்களும் முக்தர்களும் நித்யர்களுமான ஸமஸ்த ஜீவராசிகளையும் தன்னுடைய குணாநுபவத்தினாலேயே உஜ்ஜீவிப்பிக்குமதான ப்ரப்ரஹ்மம் க்ஷணமாத்ரமும் நிர்க்குணமாக இருக்ககில்லாது. .... *

நவரத்ன நவநிதியில் ஒன்பதாவதுநிதி முற்றிற்று.


ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியர் எழுதிய

நற்பொருளெழுநூறில் நான்காவது நூறு முற்றிற்று.

மணவாளமாமுனிகள் வைபவ ஸாரம்.

[ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசார்ய தாஸன்]

நமது ஸம்பிரதாயமானது ஆழ்வார்களாலும் ஆசாரியர்களாலும் பெருமை பெற்றுப் பொலிகின்றது. இவ்வாழ்வாராசாரியர்களின் பரம்பரையானது பொய்கையாழ்வார் தொடங்கிப் பொய்யிலாத மணவாளமாமுனிகளோடு தலைக்கட்டுகின்றது. இப்பெரியார்கள் நமக்குச் செய்தருளிய பேருதவிகளுக்கு நாம் செலுத்தவேண்டிய கைம்மாறு அவர்களுடைய புகழ்களை வாயாரச் சொல்லிப் போற்றுவதும் கையாரவெழுதி மகிழ்வதுமேயாம். நாமாகச் சில செய்யுள்களையோ சுலோகங்களையோ இயற்றிப் போற்றுவதிற்காட்டிலும் முன்னோர்கள் மொழிந்தவற்றைக் கொண்டு போற்றுவது மேம்பட்டதாம். ஆழ்வார்களில் நம்மாழ்வார் ஒருவர்க்குமட்டுமே மதுரகவிகள் அருளிய **'கண்ணிநுண் சிறுத்தாம்பு'** என்ற துதியுள்ளது. மற்றுள்ள ஆழ்வார்களுக்கு அவரவர்களின் திவ்வியப்பிரபந்தங்கட்குத் தோன்றியுள்ள தனியன்களைத் தவிர வேறொரு துணுக்கையும் துதியாக அமைந்திலது.



இனி ஆசாரியர்களைப்பற்றிப் பேசப் புகுவோமாயின் ஸ்ரீ ராமாநுஜரொருவர் தவிர மற்றெவர்க்கும் தோத்திர நூல் அமைந்திலது. இராமாநுச நூற்றந்தாதியானது ஆசாரியரின் காலத்திலேயே அவதரித்து மேன்மை பெற்றது. யதிராஜஸப்ததி, யதிராஜவிம்சதி, யதிராஜ தண்டகம் முதலானவை பிற்காலத்தில் தோன்றியவை. ஸமகாலத்தில் தோன்றியதான துதிநூல் மேலே கூறிய நூற்றந்தாதியொன்றேயாம். வடுகநம்பியென்பவர் யதிராஜ வைபவமென்றொரு வடமொழி நூல் பணித்தாரெனினும் அது சரித்திர நூலேயன்றித் தோத்திர நூலன்று. இராமாநுசர்க்கு அடுத்துள்ள எம்பார், ஆழ்வான், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை முதலான ஆசாரியர்களுக்கு ஒரு தோத்திர நூலும் திருவவதரிக்கக் கண்டிலோம். இதனால் தோத்திரம் செய்யக்கூடிய பெருமை அவ்வாசிரியர்களிடத்து இல்லையென்று நாம் சொல்லுவதாகக் கருதலாகாது. பிரகிருதம் மணவாளமாமுனிகளைப்பற்றி நாம் கூறுவதை மட்டும் குறிக்கொள்ளவேணும்.

"ஏராரு மெதிராச ரெனவுதித்தான் வாழியே" என்று வாழ்த்தப்பட்டுவருகின்ற மாமுனிகள் எம்பெருமானாருடைய அபராவதாரமாகத் தோன்றினவரென்பதில் ஐயமில்லை. இவ்வளவேயன்று; அவர்தம் அவதாரத்திற்காட்டிலும் மிக்க மேம்பாடுடையது மாமுனிகள் தம் அவதாரம். சுதந்திரமாகப் புதிய நூல்களை அருளிச்செய்வதில் விசேஷ விருப்பமற்று ஏற்கெனவேயுள்ள சிறந்த நூல்களுக்கு வியாக்கியானமான நூல்களை இயற்றுவதிலேயே ஊக்கமும் ஊற்றமும் இருவர்க்கும் ஸமமானது. ஸ்ரீ பாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம் என்னுமிவை (ஸ்ரீ ராமாநுஜரியற்றியவை) வியாக்கியான

நூல்களேயன்றோ? அப்படியே மணவாள மாமுனிகளும் "சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள்' என்கிறபடியே பிள்ளைலோகாசாரியருடையவும் அவரது திருத் தம்பியாருடையவும் அருமருந்தன்ன திவ்விய ரஹஸ்ய நூல்களுக்கு வியாக்கியானங்களை யருளிச்செய்தார். ஸ்ரீ ராமாநுஜர் வேதார்த்த ஸங்க்ரஹம், கத்யத்ரயம், நித்யம் என்கிற சுதந்திர நூல்கள் சிலவற்றையும் அருளியதுபோல மாமுனிகளும், யதிராஜவிம்சதி, உபதேச ரத்தினமாலை முதலிய சுதந்திர நூல்களும் பல இட்டருளினர். இவ்வகையாலே இவ்வாசிரியர்களிருவர்க்கும் ஒருபுடையொப்புமை என்பது நிற்க, மாமுனிகளுக்கு ஸ்ரீ ராமாநுஜரிற்காட்டிலும் மிக்க ஏற்றமுள்ளமை கேண்மின்.

உபதேச ரத்தின மாலையில் "ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர், ஏராரெதிசாரரின்னருளால்—பாருலகில், ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்" என்ற பாசுரத்தின்படி ஸ்ரீ ராமாநுஜர்க்கு ஓர் ஏற்றம் பிரசித்தமாக உள்ளது. (அதாவது) ஆளவந்தார் முதலான முன்னோர்கள் அர்த்த விசேஷங்களின் அருமைபெருமைகளைக் கண்டு மறைத்தொளித்துப் போந்தார்களா யிருக்க, ஸ்ரீ ராமாநுஜர் அங்ஙனமன்றிக்கே பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் கூறுமாறு கட்டளையிட்டதாகக் காண்பதேயாம். இங்ஙனே பிறர்க்குக் கட்டளையிட்ட அப்பேராசிரியர் முன்னம் தாம் ரஹஸ்யப் பொருள்களை ஏடுபடுத்தி விளக்கியிருக்க வேண்டும். பிரமசூத்திரத்துக்குப் பல உரை நூல்களிட்டருளின ராமாநுஜர் ரஹஸ்யப் பொருள்களை விளக்கி ஒரு நூலும் பணித்திலரன்றோ? அஃது அவர்க்கு ஒரு குறையே யாகும். அக்குறையைத் தீர்த்துக்கொள்வதற்காகவே அவ்விராமாநுஜர் தாமே மாமுனி களாகத் திருக்கோலம் பூண்டார். இவ்வவதாரந்தன்னில் செய்தருளின காரியங்களே மிகமிகப் புகழத்தக்கவையாயின.

இப்பெருதவியின் பெருமையைக் கண்டே மாமுனிகளுக்குப் பலபல தோத்திர நூல்களை அக்காலத்தவர்களே இட்டு வைத்தனர். வடமொழியில் ஸ்ரீமத் வரவரமுனி சதகமென்று நூறுநூறு சுலோகங்கள் கொண்ட இரண்டு துதி நூல்கள் தோன்றின; ஒன்று எறும்பியப்பா பணித்தது; மற்றொன்று அஸ்மத்குலகூடஸ்தரான பிரதிவாதி பயங்கராசாரியர் பணித்தது. அன்றியும் "பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப்பிரபந்தங்கள்" என்னுமாபோலே, மாமுனிகளின் திருவடி பணிந்து அஷ்டதிக்கஜாசாரியர்களென்று பேர் பெற்ற எண்மர் எட்டுப் பிரபந்தங்கள் தென்மொழியில் இட்டு வைத்தனர். எறும்பியப்பா என்னுமாசிரியர் வரவரமுனி சதகமொன்றேயன்றி வரவரமுனி காவியம், வரவரமுனி சம்பூ, வரவரமுனி கர்ணாம்ருதம், அம்ருதத்வனி, தினசர்யா என்றிவை முதலான பல துதி நூல்களையும் பணித்துள்ளார். இத் துதிநூல்களெல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ள விஷயங்களை ஸாரமாக எடுத்துரைப்போமாயின் 'மாமுனிகளின் திருநாவீறு ஒப்பற்றது' என்பதொன்றே தேறி நிற்கும். இவர்தம் முந்தின அவதாரமான ஸ்ரீராமாநுஜரைப் பற்றின நூற்றந்தாதி முதலான துதி நூல்களை நோக்குங்கால் பிற மதத்தவர்களின் செருக்கையடக்கினரென்பது அவர் தம் பெருமையின் ஸாரமாகத் தெரியவரும். விரோதிகளை மாய்க்கும் பணி அவ்வவதாரந்தன்னில் தலைக்கட்டிற்றாதலால் மாமுனிகளான இவ்வவதாரத்தில் "முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்

முழுதும் நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்'' என்று தாமே பணித்தருளினபடி தூயவமுதைப் பருகிக் களிப்பதே செயலாகவிருந்தது இவ்வவதாரத்தினேற்றம்.

ஸ்ரீராமாநுஜரும் மாமுனிகளுமான இரண்டவதாரங்களையும் உற்றுநோக்குமளவில் ராமாநுஜரை ஸூர்யனுகவும் மாமுனிகளைச் சந்திரனுகவும் அறுதியிடலாம். உலகத்தில் பலர் பலவகையான விருதுகளைப் பெறுவதுண்டு. பண்டிதர் என்றும், வித்வான் என்றும், வாக்மி என்றும், விசாரதர் என்றும் அவரவர்கள் பெறும் விருதுகளைக் காண்கிறோம். மாமுனிகள் பெற்ற விருது **'விசதவாக் சிகாமணிகள்'** என்பது. கடல் சூழ்ந்த மண்ணுலகினுள் இந்த விருது மாமுனிகளொருவர்க்கே ஏற்கும். கூறியது கூறல், மயங்கவைத்தல், நலிந்து பொருள் கொள்ளவைத்தல், இன்னது சொல்லிற்றென்று தெரியாதபடி பேசிவைத்தல், பிறர் மனம் நோவப் பேசுதல், வீண் பேச்சுக்களை வளர்த்தல், முன்னோர் மொழிந்த முறைகளுக்கு மாறுகப் பேசுதல், முன்பின் முரண்படப் பேசுதல் முதலிய குற்றங்குறைகளை மாமுனிகளின் திவ்விய ஸூக்திகளில் இறையுங் காணவியலாது. இதைப் பலகால் பேசினுலும் புநருக்தியாகாது.


நம்பிள்ளையென்னுமாசிரியர் அரங்கன் ஸன்னிதியில் திருவாய்மொழியின் அரும் பெரும் பொருள்களை அனவரதமும் அருளிச்செய்து போந்தாரென்கிற பிரஸித்தியிருந்தும் அரங்கன் அவ்வாசிரியரைத் தனக்கு ஆசாரியராகக்கொள்ளவோ சிறப்புப்பாயிரமென்கிற தனியனை அவர்க்குப் பணிக்கவோ மனங்கொண்டிலன். அப்பரமன்தானே மாமுனிகள் பக்கலிலே சீடனுக இருந்து சந்திர ஸூரியர்கள் உள்ளவளவும் உலகில் ஓங்கி விளங்கி நிற்குமாறு உலகம் புகழும் தனியனென்றை விண்ணப்பம் செய்தது மிக அற்புதம். அந்த வரலாற்றின் சுருக்கம் வருமாறு:

தென்திருவரங்கம் கோயில்கொண்ட பெருமான் மணவாள மாமுனிகளுக்குத் தான் சீடனுகி அவரைத் தனக்கு ஆசிரியராகக்கொள்ளக் குதுகலித்தனன். திருவாய்மொழிக்குச் சிறந்த வியாக்கியானமாக அமைந்த ஈடு முப்பத்தாறுயிரப்படியின் அரும்பெரும் பொருள்களை மாமுனிகளின் திருவாக்கினுல் கேட்கப்பெறவேணுமென்று ஆவல் கொண்டனன். தனது திருக்கோயிலின் திருமுன்பே எழுந்தருளியிருந்து விளம்பியருள வேணுமென்று கட்டளையிட்டனன். அது கேட்டவுடனேயே மாமுனிகள்,

> ''நாமார் பெரியதிரு மண்டபமார்? நம்பெருமாள்
> தாமாக வெம்மைத் தனித்தழைத்து—நீ மாறன்
> செந்தமிழ் வேதத்தின் செம்பொருளை நாளுமிங்கே
> வந்துரையென் றேவுவதே வாய்ந்து''

என்று நைச்சியமாய் அநுஸந்தித்து மறுநாள் தொடங்கி ஓராண்டளவும் மேலே சொன்ன ஈடு முப்பத்தாறுயிரப்படியின் சீரிய பொருள்களைச் சிறப்புற விளக்கி வந்தார். அவ்வாண்டில் திருவரங்க நாதனுடைய நித்திய நைமித்திகத் திருவிழாக்களெல்லாம் நிறுத்தப்பட்டிருந்தன. ஓர் ஆனி மாதத் திருமூல நன்னுளில் இந்தப் பிரவசனம் சாத்துமுறை செய்வதாக நிச்சயிக்கப்பட்டு அது நடைபெற்று வரும்போது அரங்கநாதன் ஒரு சிறு குமாரனுய் அத்கிரளிலே வந்து நின்று, ''ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம், யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்'' என்று கைகூப்பி நின்று

விண்ணப்பஞ்செய்து விரைந்து சென்று மறைந்தனன். இந்த இதிகாசத்தை மாமுனிகளின் சீடர்களென்று பிரசித்தர்களாய் அஷ்டதிக்கஜாசாரியர்களென்று வழங்கப்படுபவர்களான ஆசிரியர்கள் எண்மரும் வடமொழிச்சுலோகங்களிலும் தென்மொழிச் செய்யுள்களிலும் அமைத்துப் பாடியுள்ளார்கள். அந்நாள் தொடங்கி அரங்கநாதனது கட்டளையினுல் ஊரும்நாடுமுலகமுமெங்கும் இத்தனியனே கோவில்களிலும் மடங்களிலும் மனைகளிலும் திவ்வியப் பிரபந்தங்களோதும்போது தொடக்கத் தனியனுக விளங்கி வருகின்றது.



வியாக்கியானங்கள் அருளிச்செய்வதில் மணவாள மாமுனிகளின் திறமை ஒப்புயர்வற்றது. பிள்ளைலோகாசாரியர் என்னுமாசிரியர் 'அஷ்டாதச ரஹஸ்யம்' என்று பெயர் பெற்ற பதினெட்டு ரஹஸ்ய நூல்களைப் பணித்திருந்தார். அவருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர் ஆசார்யஹ்ருதயமென்னும் ரஹஸ்ய நூலை அருளிச்செய்திருந்தார். ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்தில் உபயவேதாந்தமென வழங்கப்படுகின்ற வடமொழி தென்மொழி மறைகளின் ஆழ்ந்த கருத்துக்களை ஆர அமர ஆராய்ந்து வெளியிட்ட நூல்கள் இவற்றுக்கு மேற்பட வேறு எதுவுயில்லை. உலகாசிரியர் பணித்த பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஸ்ரீ வசனபூஷணம் தத்துவத்திரயம், முமுக்ஷுப்படி என்ற மூன்று ரஹஸ்ய நூல்களானவை அறியவேண்டும் அர்த்தமெல்லாம் அடங்கி நிற்பனவென்றுகொண்டு இவற்றுக்கு வியாக்கியானம் அருளிச்செய்தனர் மாமுனிகள். ஆசார்யஹ்ருதயமென்னும் நூலானது மேலேகுறித்த மூன்று ரஹஸ்யங்களும்

நாலாயிர திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களும் சேர்ந்து ஒரு வடிவுகொண்டதென்னும்படி அமைந்ததாதலின் அதற்கும் வியாக்கியானமிட்டருளினார் மாமுனிகள். இவர் அருளிச்செய்த நூல்கள் மற்றும் சில பல இருப்பினும் இந்நான்கு வியாக்கியான நூல்களும் நான்கு வேதங்களினும் மேம்பட்டவையென்னலாம்படி அமைந்தன.

உலகில் வியாக்கியான நூல்கள் எண்ணிறந்தவை தோன்றியுள்ளன. பெரிய வாச்சான்பிள்ளையும் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கட்கு வியாக்கியானங்கள் இயற்றினார்களேயன்றி, 'ஸூத்ரங்கள்' என்னும் வகையிலே அமைந்த இத்தகைய நூல்களுக்கு வியாக்கியானம் இயற்றினவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்தில் மாமுனிகளைத் தவிர வேறு எவ்வாசிரியருமிலர். மூலத்திற்கு அவதாரிகையிடுகிற அழகும், மூலத்தை விவரித்தருளுகிற பாங்கும், ஆங்காங்கு அர்த்தங்களைத் தொகுத்து நிகமித்தருளுகிற பண்பும், பண்டிதர்கட்கும் தோன்றமாட்டாத சங்கைகளைத் தோற்றுவித்துப் பரிஹார வழிகளை உணர்த்தும் பரிசும், பிற மதங்களை மறுத்தெழுத நேர்ந்தாலும் ஒருவர் மனமும் நோவாத படிக்கும், வீணான நிந்தைகளும் பரிஹாஸங்களும் புகாத படிக்கும் எந்த இடத்தையெடுத்தாலும் சாஸ்திர நுண் பொருள்களே கைகொள் கனியாம்படிக்கும், 'நூற்கடல்கள் எல்லாவற்றையும் கரைகண்டவர் இவர் ஒருவரே' என்று திண்ணமாக எண்ணும்படிக்கும் வியாக்கியானித்தருளினவர் மாமுனிகளொருவரே.

இவருடைய திவ்ய ஸூக்தியமுதக் கடலினின்று முக்கியமான ஒரு விசேஷத்தை முன்னம் இங்கெடுத்துக் காட்டுவோம். மாமுனிகள் தாம் ஆங்காங்கு மூலத்திற்குச் சேர விவரித்து அருளிச்செய்யும் அர்த்த விசேஷங்கள் வேறு சில ஆசிரியர்களின் நூல்களிலுமிருந்தால் அவ்விடங்களை எடுத்துக்காட்டி யருளாதொழியார். இந்த நடை பிற ஆசிரியர்களின் நூல்களிற் காணவரிது; 'சிலர் இப்படி உரைப்பர்; சிலர் இங்ஙனே கூறுவர்' என்று லகுவாகக் காட்டிப் போவார்களேயன்றிப் பெயரையும் இடத்தையும் வாசகங்களையும் காட்டவே மாட்டார்கள். மாமுனிகள் வியாக்கியான நடை இத்தகையதன்று. 'இன்ன ஆசிரியர் இன்னவிடத்திலே இன்னபடி கூறியுள்ளார்; அவரது வாசகங்கள் இவை' என்று மிக விளக்கங் காட்டியே தீருவர். இது மாமுனிகளின் திவ்யஸூக்திகளுக்கு உண்டான தனிச்சிறப்பு. இது காரணமாகவே, "பொய்யிலாத மணவாள மாமுனி புந்தி வாழி" என்று உலகப் பிரசித்தமான வாழ்த்து அமைந்தது.

வைணவ சமயக் குரவர்களில் வடமொழியிலும் தென்மொழியிலும் சிறியனவும் பெரியனவுமாக நூல்கள் இயற்றினவர்கள் [ஆழ்வார்களைத் தவிர] ஏறக்குறைய இருபதின்மர் (உலகம் போற்ற நின்ற ஆசிரியர்கள்) மாமுனிகளுக்கு முற்பட்டவர்கள் தேறுவர்கள். அத்தனைபேருடையவும் நூல்களிலிருந்து, உரிய இடங்களில் உயரிய வசனங்களை எடுத்து மேற்கோள் கொடுத்திருக்கும் அழகு அற்புதமானது. இதற்குமேல் மற்றோர் அதிசயம்—மேற்கோள்களை எடுத்துக்காட்டிவிட்டு 'என்கிறபடியே' என்று போய்விடாமல் அவற்றின் பொருளைத் தெரிந்துகொள்வதற்கு வேறு வியாக்கியானங்களைத் தேடவேண்டாமல், அவ்விடங்களில் தமக்கே உரிய நடையில் விவரணமுங் காட்டியருள்வது மிகப்பெரிய மாண்பு. 'ஆழ்ந்து கூர்ந்து ஆராய்தல்' என்னும் முறையிலே மாமுனிகளின் வியாக்கியானத் திருவாக்குகளை நோக்குங்கால், இராமபிரான் மாருதியின்

இனிய சில மொழிகளைக் கேட்டதும் இளையோனை நோக்கிக் கூறியதாகக் கம்பர் பெருமான் பாடியுள்ள,

"இல்லாதவுலகத் தெங்கு மீங்கிவனிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே யென்னுங்காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே ஆர்கொலிச் சொல்லின்செல்வன்
வில்லார்தோள் இளையவீர விரிஞ்சனோ விடைவலானோ?"

என்னுஞ் செய்யுளே நினைவுக்குவரும். இக்காலத்தில் இதிஹாஸபுராண பாஞ்சராத்திரம் முதலிய எல்லா நூல்களும் பல லிபிகளில் பல முறைகளில் பலவகை அட்டவணை களுடனும் அச்சேறியுள்ளன. இஃது ஒரு நூற்றுண்டுக்கு உட்பட்ட செய்தி. ஆசிரியர் காலத்தில் ஓலையேடு தவிர வேறு கிடையாது. அதுவும் ஓரூரில் ஒன்றிரண்டு சுவடிகளுக்கு மேல் காண்பதரிது. எந்த மூலையில் எந்த விஷயமுள்ளதென்று கண்டறிவதற்கும் இயலாது. இத்தகைய நிலையில் மாமுனிகள் இதிஹாஸபுராண ஸ்ரீ பாஷ்யாதிகளான வடமொழி நூல்கள் பலவற்றிலுமிருந்து ஆயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு வசனங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ளார் என்று நாம் ஏற்றக்குறைவின்றிக் கணக்கெடுத்து வெளியிட்டிருப்பது உலகம் பரவியுள்ளது. இஃதொன்றைமட்டும் நோக்குங்கால், ஆளவந்தாரென்ற ஆசிரியரால் "ப்ரக்ருஷ்டவிஜ்ஞான பலைகதாமநி" என்று போற்றப் பட்ட ஆதிசேஷனே மாமுனிகளாகத் திருவவதரித்தனரென்று மேலையார் கூறியுள்ளது மிகப் பொருத்தமென்றுணரலாகும்.

மாமுனிகளின் மாண்பைச் சுருங்கச் சொல்லில் தாம் இயற்றியருளின நூல்களுள் ஒன்றான ஆர்த்திப் பிரபந்தத்தில் (பா—28) "பண்டு பலவாரியரும் பாருலகோருய்யப் பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மை, கண்டதெல்லாமெழுதியவை கற்றறிந்தும் பிறர்க்குக் காதலுடன் கற்பித்துங் காலத்தைக் கழித்தேன்" என்று தாமேயருளிச்செய்தபடி ஏற்கெனவே தோன்றியுள்ள பூருவர்களின் பொன்மொழிகளைப் பிரவசனஞ் செய்தருள் வதிலேயே மிகுந்த காதலுடையராயிருந்தும், இவ்வுலகின் பாக்கியபரிபாகமடியாக சிஷ்யர் களின் வேண்டுகோளுக்கிணங்கியும் எம்பிரானது கட்டளையை முன்னிட்டும் தேனும் பாலும் கன்னலும் அமுதுமான திவ்விய நூல்களையுமிட்டருளிக் கலியுகத்தைக் கிருதயுக மாக்கி எழுபத்து மூன்றாண்டுகள் இந்நிலவுலகத்தில் வாழ்ந்து நலமந்தமில்லதோர் நாடு புகுந்தனரென்பதாம்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் *துவளில் மாமணி மாடமோங்கு* *உண்ணுஞ் சோறு பருகுநீர்* முதலான சில பதிகங்களில் தம்முடைய பெருமையைத் தாமே வெளியிட்டுக் கொண்டவாறுபோல மாமுனிகள் தாமும் ஆர்த்திப் பிரபந்தத்திலே,

"தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்; திருவரங்கந் திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்; மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்; மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்; முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்; முழுது நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்; பின்னையொன்றுதனில் நெஞ்சுசெல்லாமற் பெற்றோம்; பிறர் மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே"

என்று அருளிச்செய்த பாசுரத்தையே நிச்சலும் சிந்தனைசெய்து உய்வோமாக.

மாமுனிகளின் திவ்யஸூக்திகளை மாச்சரியத்தினால் அநுபவிக்கப்பெறாதவர்கள் கிடக்கட்டும். அப்ரமேய பாக்யவசத்தாலே அவற்றை யநுபவிக்கப் பிறந்தவர்களுங்கூட ஆழ்ந்துநோக்கி யநுபவிக்கப்பெறாதார் பலருளரென்பது அடியேனுடைய அநுபவத்தில் கண்ட விஷயம். கட்டலைகள்போன்ற விஷயங்களில் ஒரே விஷயம் ஸ்தாலீபுலாகந்யாயேந காட்டிநிற்கிறேன். ஸ்ரீ வசநபூஷணத்தில் (98) "ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்" என்பதொரு சூர்ணிகை. இவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் "சமமாவது அந்த: கரண நியமநம்; தமமாவது பாஹ்யகரண நியமநம்" என்றருளிச்செய்து, இதற்கு ப்ரமாணங்காட்டியருளத் திருவுள்ளம்பற்றி "*சமச் சித்தப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச் சேந்த்ரிய நிக்ரஹ:* என்னக்கடவதிறே" என்று ஒரு ப்ரமாணம் காட்டி, உடனே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியையும் காட்டவேண்டி "*க்ஷமா ஸத்யம் தமச் சம:* என்கிற விடத்தில் 'தமோ பாஹ்யகரணாநாம் அநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம:—அந்த: கரணஸ்ய ததா நியமநம்' என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது." என்று கீதாபாஷ்ய ஸூக்தியை யெடுத்துக் காட்டியருளினார். இவ்வளவோடு நில்லாமல் அடுத்தபடியாக "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்றருளிச்செய்தார். அதன் கருத்து என்னவென்றால், பாஹ்யகரணாநாம் நியமநம் தம:, அந்த: கரணநியமநம் சம: என்று இப்படியே கொள்ள வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; அந்த:கரண நியமநம் தம:, பாஹ்யகரண நியமநம் சம: என்று கொள்ளுவதுமுண்டு என்பதாம். கீழே இரண்டு ப்ரமாணங்களைத் தாமே யெடுத்துக் காட்டிவிட்டு அவற்றோடு ஸம்பந்தப்படாதபடி "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்று அருளிச்செய்வது மணவாளமாமுனிகளின் இயல்புக்குச் சேராது; அப்படியிருக்க எங்ஙனே யருளிச்செய்தாரென்று விமர்சிக்க ப்ராப்தம். மேலேகாட்டின ஸ்ரீஸூக்தியில் "மாறிச் சொல்லுவதுமுண்டு" என்னாமல் "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்று ஸாதித்திருக்கை யாலும், அதுதானும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை உதாஹரித்தவுடனே ஸாதித்திருக்கை யாலும் பாஷ்யகாரரான ஸ்வாமியே மற்றோரிடத்தில் மாறிச் சொல்லியிருக்கிறாரென்று தெரிவிக்கப்பட்டதாகிறது. அப்படி ஓரிடத்தைத் தாம் காணாமல் அந்த ஸ்ரீஸூக்தியை ஒருகாலும் அருளிச்செய்யமாட்டார் மாமுனிகளென்பது ஸத்யம். இதுபற்றியேயன்றோ "பொய்யிலாத மணவாளமாமுனிபுந்திவாழி" என்று உலகமெல்லாம் வாழ்த்துவது.

கேண்மின்; அந்த கீதாபாஷ்யத்திலேயே ஸ்வாமி தாமே மாறிச் சொல்லியுள்ளார்; (அதாவது)—பதினாறுமத்யாயத்தில் முதல் சுலோகத்தில் 'தாநம் தமச் ச யஜ்ஞச் ச' என்றும், இரண்டாம் சுலோகத்தில் "த்யாகச் சாந்தி: அபைசுநம்" என்றும் வருகிறது. அங்கும் தம சமங்களுக்கு விவரணமுள்ளது. கீழே காட்டின விவரணம் பத்தாமத்யா யத்தில் நான்காவது சுலோகத்தின் பாஷ்யத்திலுள்ளது. (16—1, 2ல்) காணும் விவரணம் அதனில் வேறுபட்டது. அந்த:கரணத்தின் நியமனத்தை தமமாகவும், பாஹ்யகரணத்தின் நியமனத்தை சமமாகவும் இங்கு பாஷ்யகாரர் அருளிச்செய்துள்ளார். அவரும் ஸ்வோக்தி விருத்தமாகவருளிச்செய்பவரல்லர். இரண்டு படியையும் அவர் ப்ரமாணஸித்தமாகக் கண்டவராகையாலே ஒரு படியை ஓரிடத்திலும் மற்றொரு படியை மற்றோரிடத்திலும் அருளிச்செய்தார். மணவாளமாமுனிகள் அவருடைய புநரவதாரபூதராதலால் இரண்டு படியும் தமக்கு ஹ்ருத்கதமாயிருக்கையாலே "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்றருளினர்.

இங்ஙனே தத்துவமிருக்க, வேதாந்தவாசிரியர் பணித்த தாத்பர்ய சந்த்ரிகையில் மேலே யெடுத்துக்காட்டிய பதினொருமத்யாய ஸ்தலத்தில்—“ஏதேந கேஷாஞ்சித் அநயோச் சப்தயோர் வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்க்யாநம் நிரஸ்தம்” என்கிற பங்க்தி காணப்படுகிறது. மணவாளமாமுனிகள் தேசிகனுடைய காலத்திற்குப் பிற்பட்டவராகையாலே மாமுனிகளின் ஸ்ரீஸூக்திக்கு மறுப்பாக அது அருளிச்செய்ததென்று கொள்வதற்கு அவகாச லேசமுமில்லை. வேறு யாருடைய உக்திக்கு மறுப்பென்று விமர்சிக்குமளவில் சங்கர பாஷ்யத்திற்கு மறுப்பென்று ஸ்பஷ்டமாக விளங்காநின்றது. ஆனால் நம் பாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திக்கும் மறுப்பாகத் தேறுகிறது. வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்க்யானம் பண்ணியருளினவர் நம் பாஷ்யகாரருமாதலால், இது ப்ராமாதிகமென்னவேணும்.

பத்தாவது அத்யாயத்தில் பாஷ்ய ஸ்ரீஸூக்தியிருக்கும்படியையும், அங்கு சந்த்ரிகையில் தாம் விசேஷித்து அருளிச்செய்தபடியையும் மறக்கவல்லவரன்றே தேசிகன். சமம் தமம் என்று இரண்டுபதம் வேண்டியதில்லை; அந்யதர பதமிருந்தாலும் அதற்கே பாஹ்ய ஆந்தரகரண நியமனத்தைப் பொருளாகக் கொள்ளமுடியும். ஆனாலும் தனித்தனி இரண்டு பதங்களிருப்பது வீணாகாதபடிக்கு அர்த்தபேதம் காட்டுவது யுக்தம் என்று திருவுள்ளம்பற்றி “.........பௌநருக்த்ய பரிஹாராய விஷயபேதே வக்தவ்யே நியமந க்ரமேண தமசமயோ: பாஹ்யாந்தகரண விஷயத்வோக்தி:” என்று சந்த்ரிகையில் ஸாதித்திருப்பதனால் இதற்கும் சேராதபடியன்றோ பதினொருமத்யாயத்தில் சந்த்ரிகை அவதரித்துள்ளது. அன்றியும் “ஏதேந, வ்யுத்க்ரமேண கேஷாஞ்சித் வ்யாக்க்யாநம் நிரஸ்தம்” என்கிற பங்க்தியும் சிறிது பராமர்சிக்கத்தக்கது. **ஏதேந** என்பதற்கு ‘பாஷ்யகாரர் இப்படியருளிச்செய்திருக்கையாலே’ என்று தானே பொருளாகும். நம்முடைய பாஷ்யகாரர் ஸாதித்ததனாலே சங்கரபாஷ்யம் எப்படி நிரஸ்தமாகும். இது மஹா ப்ராஜ்ஞர்கள் விமர்சிக்கவேண்டிய விஷயமென்று விட்டுவிடுகிறேன். மணவாளமாமுனிகளின் பரம ப்ராமாணிகத்வ நிருபணம் மட்டுமே இங்கு அடியேனுக்கு உத்திஷ்டம். இத்தகைய விப்லவங்களோ உபப்லவங்களோ ஈஷத்தும் இடம்பெறாத ஸ்ரீஸூக்திகள் மாமுனிகளுடையனவே. ... ...

(வெண்பா.)

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளே தஞ்சமெனத் தாங்கொண்ட—மின்னுபுகழ்
வேதியர்கள் தாளன்றி வேறொன் றறியாதார்
மேதினியில் விண்ணவர்க்கும் மேல்.

"THE THENNACHARYAS"

A clarification, with particular reference to Sri Vedanta Desika, currently solicited by some North Indian Scholars.)

Speaking about the traditional school of philosophic thought, the 'Thenkalai Srivaishnavites are being loosely referred to as 'Thennacharyas' or 'Thennacharya Sampradayees'. There is, however no *per contra* denomination as 'Vadavacharyas', although the terms 'Thenkalai' and 'Vadakalai' are in vogue. As could be seen from the line 'Vadakalai, Thenkalai, vadugu, kannadam' in the opening section of 'Kamba Ramayana', these four words refer to the four languages (vis.) Sanskrit, Tamil, Telugu and Kannada respectively. It would appear that those Vaishnavites who extend special patronage to Sanskrit go under the name and style of 'Vadakalais' while those, who similary bestow loving care on Tamil, in an extraordinary degree, are known as 'Thenkalais'. None can, however, throw adequate light on the point of time at which these appellations came into being - the mystery of the names of the two languages being applied to their patrons as well. The beauty, rather, the pity of it is that the expressions 'Thenkalai' and 'Vadakalai' have not occurred in any of the works of the 'Poorvacharyas.' But these words have invaded, with a vengeance, the records of the law Courts during the last hundred years and woven a huge volume of forensic literature around them. Again, these two words, associated, rather indentified with the particular contours of the caste mark worn by the two sections of Vaishnavites on their foreheads, leave one guessing, in vain, their etymological bearing or kinship. To the mere strickler in words, this might sound strange, if not preposterous, and yet, through sheer usage, it has become too fundamental to be questioned. Leaving it aside, for the present, it would indeed be profitable to examine what exactly 'Thennacharya Sampradaym' connotes and who, in this context, are known as 'Thennacharyas'. Sri P. B. A. Swami, more knowledgeable and painstaking than whom none is available in our midst, has thrown adequate light on this, from time to time, and has once more focussed the attention of his numerous readers on this, in the 97th discourse of his "Upanyasa Satadvayam", reinforced, in greater depth, in "Vaidhika Manohara-163" just published.

The expression 'Thennacharya' is not to be confounded as referring to any of the current - day Vaishnavites or the 'Thenkalais'. As a matter of fact, it refers mainly to the 'Poorvacharyas' - the ancient preceptors such

as Nathamunigal, Alavandar and other Srivaishnava Acharyas. While approaching the Ashram of sage Agastya, **Sri Rama spoke to Lakshman, as follows:—**

" Dakshina dikkrita yena saranya punyakarmana ". (தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா). Again, in 'Perumal Thirumozhi' Sri Kulasekhara Azhvar has reverently alluded to Agastya, the great progenitor of the Tamil language as " Vandamizh Mamuni " while Vedanta Desika has said in glowing terms in his Dramidopanishad Tatparya Ratnavali', that the Tamil language which beamed forth from Agastya came to be acquired and handled by the Great Saints. All the Sri Vaishnava Acharyas, who drank deep of the nectarine hymns of the Azhvars would thus be eligible to be dignified as 'Thennacharyas', as contra'- distinguished from the Smarthas and Madhvas, who were not conversant with the Divya Prabandhams. So then, there need be no doubt lingering in anybody's mind whether Sri Vedanta Desika, who shone in the Vaishnavite firmament 600 years ago, in all splendour, came under a different section or group outside the ken and compass of the glorious galaxy of the 'Thennacharyars'.

That Sri Vedanta Desika was as much a 'Thennacharya' as any other contemporaneous Vaishnava Acharya is amply borne out by the fact that apart from his own extra-ordinary devotion to the Divya Prabandham, he has been enshrined and worshipped in the temples, at several pilgrim centres having the Thennacharyas as their age-long votaries. The pundram (caste-mark) worn on the relative idol in all such temples including the one in the temple at his birthplace is the same as the one worn by the 'Thennacharyas' (viz) 'Thenkalai'.

Unbridled malignance, on the part of a few, here and there, manifesting in vandalistic designs on the temple at the birthplace of Sri Desika, at Srirangam and elsewhere, aimed at changing the caste-mark on Desika's idol as well as the temple walls, was sternly dealt with **under the law, as it should be. The** suppressed desires and unrealised ambitions, goaded on by the injured pride of the misadventurers, however, led to their setting up during the last 100 years and even less separate shrines for Vedanta Desika ,with 'Vadakalai' caste-mark in private dwellings, estates etc., outside the precincts of the ancient temples where, in the eyes of the law, such an act would be sacrilege.

It may be mentioned, in this connection, that Thirukachi Nambigal, even though of Non-Brahmin origin, is worshipped in Sri Vaishwavite temples on a par with other Poorva Acharyas. Some of his shrines are also in the management and full control of Saivites who trace their origin to Thirukachi Nambigal. But they have not taken it into their heads to convert the idols of

Thirukachi Nambigal according to their own creed, with Vibuthi (holyash), etc., smeared on the forehead, but have seen to his worship according to his Vaishnavite creed itself. How noble would it be if the Vadakalais emulate the same example in the case of Sri Vedanta Desika also.

That (1) Sri Vedanta Desika lived in great amity with the contemporaneous Acharyas and made the fullest use of the knowledge imparted through the works of the seniors, like Nanjeeyar, Periavacchanpillai etc., (2) the tenets being studiously singled out by a section of the Vaishnavites as stamping out their separate identity, were not actually subscribed to by Vedanta Desika and (3) the only authentic life-history of Vedanta Desika is the 'Acharya-Champu', all others being garbled versions, spurious interpolations etc., maliciously engineered by a few innovators, have been succinctly brought out by Sri P. B. A. Swami in his numerous works during the last forty, odd years. He would still not be tired ef presenting these facts over and over again until the desired objective, viz., reconsolidation of the rank and file of Vaishnavites under the common aegis of :Sri Ramanuja Darsanam', is achieved. Those who might be in a vein to dub this as an utopian dream will do well to realise that all that is needed is the dawn of the requisite measure of intellectual honesty which would help tear off all ill-conceived notions and prejudices and see things in their proper perspective, with the aid of the many solvents dispensed by P. B. A. Swamy unremittingly. This, however, seems to be a far cry judging from the trend of events during the last hundred years and the feverish activities now apace in connection with the celebration of the ensuing 701st birth anniversary of Sri Vedanta Desikar, with an unmistakable tinge of fanaticism.

It may be mentioned, in this context for the benefit of those who point the accusing finger at the 'Thenkalais' for not reciting in their temples the 'Desika Prabandhas' and cry down their devotion to Desikar, that there is hardly any point in it. *Ab initio* there is nothing like 'Desika Prabandhas', as Sri Desikar did not bring out a separate prabandham, as such. In his esoteric works such as 'Sampradaya Parisuddhi', there are slokas as well as Tamil songs at the beginning, the middle and the end. These songs forming an integral part of the respective works do not and cannot constitute separate prabandhas. Curiously, however, these songs have been culled out and styled collectively as 'Desika Prabandhas' and individually as 'Amritaaswadini', 'Amritaranjani' and so on, in recent times, on a piece with several other innovations. What is worse, certain pieces such as 'Adaikkalappathu' composed by others have also been palmed off as 'Desika Prabandhas' and smuggled in. Even

otherwise, it has to be noted that the 'Thenkalais' do not recite, in their temples, all the compositions of the 'Poorvacharyas', for example, 'Gnana Saram' and 'Prameya Saram' composed by Arulala Perumal Emberumanar and the 'Ashta Prabandhas' of Divya Kavi Pillai Perumal ayyangar.

Gwalior,
20th July, '68.

(S. SATYAMURTHI AYYANGAR.)

மேலேகண்ட ஆங்கில வியாஸத்திற்கு மூலமான தமிழ்க்கட்டுரை.

ஸாம்ப்ரதாயிக வ்யவஹாரங்களில் "தென்னாசார்யர்கள்" என்றும் "தென்னாசார்ய ஸம்பிரதாயம்" என்றும் வ்யவஹரிக்கப்பட்டு வருவதைக் காணாநின்றோம். இதற்கு எதிராக வடவாசார்யர்களென்கிற வ்யவஹாரமிருந்து வருகிறதாவென்று பார்த்தால் அப்படியொரு வ்யவஹாரமிருப்பதாக எங்குங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, தென்கலை, வடகலை என்கிற பிரயோகம் மட்டும் தொன்று தொட்டு வந்திருக்கிறது. கம்ப ராமாயணத்தின் ஆரம்பப் பகுதியில் "வடகலை தென்கலை வடுகு கன்னடம்" என்கிற செய்யுளிருப்பது ப்ரஸித்தம். ஆனால் இது பாஷையைப் பற்றினது. ஸம்ஸ்க்ருதம் தமிழ் தெலுங்கு கன்னடம் என்கிற பாஷைகளையே அங்குக் கம்பர் விவக்ஷித்திருக்கிறாரென்பது அவ்விடத்திலேயே இரண்டாமடியினால் ஸ்பஷ்டம். வடகலையான ஸம்ஸ்க்ருதத்தை விசேஷித்து ஆதரிப்பவர்கள் வடகலையார்; தென்கலையான தமிழை விசேஷித்து ஆதரிப்பவர்கள் தென்கலையார் என்று கொண்டு இந்த வ்யவஹாரம் நிகழ்வதாயிற்று. ஆனால் இஃது என்றைக்கு நிகழத் தொடங்கிற்று? இந்த வ்யவஹாரத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகர் யார்? என்று கேட்டால் விடை கூறமுடியாது. இது முன்னோர்களின் நூல்களில் ஏறியிருப்பதுமன்று. நீதி மன்றத்துக் காகிதங்களில் நிறைய ஏறியிருக்கின்றதென்பது தெரிந்ததே. வடகலை தென்கலையென்கிற இந்த சொற்களுக்கும் புண்ட்ரத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லாதிருக்கவும், ஒருவகை யாகாரமுள்ள திருமண் காப்புக்குத் தென்கலை நாமமென்றும், மற்றொருவகை யாகாரத்திற்கு வடகலை நாமமென்றும் வ்யபதேசம் உண்டாயிருப்பது இனி மாறுபடப் போகிறதில்லை. தென்னாசார்ய ஸம்பிரதாயம் என்கிற வ்யபதேசம் மட்டும் சிறிது ஆழ்ந்து ஆராயத்தக்கது. வடவாசார்யர் என்கிற ப்ரதிநிர்தேசம் அடியோடில்லாமல் தென்னாசார்யரென்கிற வ்யபதேசம் மட்டுமே நிகழ்ந்து வருதலால் இந்த வ்யபதேசத்திற்கு இலக்கானவர்கள் யாவர்? என்று ஆராயவேண்டுவது அவசியமாகிறது.

விவாதப் பேச்சுக்களில் தலையிடாத பரமஸாத்விகர்களான பெரியார்களும் 'தென்னாசார்யர்கள், தென்னாசார்ய ஸம்பிரதாயம்' என்கிற வ்யபதேசங்களை வழங்கி வருதலால் இதற்கு இலக்கானவர்கள் யாவர்? என்று பிராமாணிகமாக விமர்சித்து முடிக்கவேணும். இந்த வ்யபதேசமானது தென்கலையார் என்கிற வ்யபதேசம்

போலே இக்காலத்தவர்களை நோக்கியதன்று. பூருவாசாரியர்களையே நோக்கிய தென்பதில் ஐயமில்லை. ஸ்ரீமந்நாத முனிகள் ஆளவந்தார் முதலான ஸ்ரீவைஷ்ண வாசாரியர்களனைவரும் தென்னாசாரியர்களெனப்படுவர். சக்ரவர்த்தி திருமகனார் அகஸ்த்யாச்ரமத்தருகேயெழுந்தருளும்போது இளையபெருமாளை நோக்கி *தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா* என்று அகஸ்திய முனிவர் பெருமை யைக் கூறுகின்றார். குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் அகஸ்திய முனிவரை "வண்டமிழ்மாமுனி" என்றே வ்யபதேசிக்கிறார். தேசிகனும் த்ரமிடோப நிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் "ஸாச அகஸ்த்ய ப்ரஸூதா த்விதி பரிஜக்ர்ஹே" என்றும், பாதுகாஸஹஸ்ரத்தில் "கும்பீஸூநோராஸூர கபலக்ராஸிநஸ் ஸ்வைர பாஷா" என்றும் பெருமதிப்புத் தோற்றப் பேசியுள்ளார். ஆக, ஆழ்வார்களின் ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுள்ள ஸ்ரீவைஷ்ணவாசாரியர்க ளனைவரும் தென்னா சார்யர்களென்கிற வ்யபதேசத்திற்குப் பாத்திரமாயினர். இதற்கு ப்ரதிகோடி களாகச் சொல்லத் தக்கவர்கள் திவ்யஸூரி - திவ்யப்பிரபந்த - திவ்யதேசங்களில் அவகாஹனமும் மதிப்பு மற்றவர்களான ஸ்மார்த்த மாத்வாதிகளே யாவர். அவர்களைத் தவிர்த்த ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களுக்கெல்லாம் தென்னாசார்யர் களென்கிற வ்யபதேசம் நிர்விசேஷமாகவுள்ளது. வேதாந்த தேசிகனுட்பட ஸகலாசாரியர்களுக்கும் இந்த வ்யபதேசம் ஸமமான தென்பது தத்துவமுணர்ந்த பெரியார்களுக்கு உடன்பாடு. ... ... *

வேதாந்த தேசிகனும் தென்னாசார்ய வகுப்பில் அந்வயித்தவரே யொழிய அவர்க்கென்று தனியேயொரு வகுப்பிருந்ததாக நினைப்பது நியாயத்திற்குச் சேராது. தென்னாசார்யர்களாலேயே தொன்று தொட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகிற திவ்யதேசங்கள் பலவற்றில் அவருடைய திவ்யமங்கள விக்ரஹம் ப்ரதிஷ்டை பெற்றும் உத்ஸவாதிகளைப் பெற்றும் வருவது அபலபிக்க முடியாதது. திவ்யதேசங்களில் ஸன்னிதிக்கு வெளிப்பட்ட விடங்களில் அவர்க்கு ஆலய நிர்மாண-மஹோத்ஸவோபலாலனாதிகள் ஆரம்பமாகி எத்தனை ஸம்வத்ஸரமாகி யிருக்குமென்று வினவினால் ஆர்ஜவத்துடன் விடை கூறவல்லார் எவ்விதமாக விடை கூறுவரென்றால் நிகழும் நூற்றாண்டில் தானென்பர்; சென்ற நூற்றாண்டி லேயே ஆரம்பமாயிற்று என்றும் சொல்லுவர். உடனே எதற்காக இந்த விச்வா மித்ர ஸ்ருஷ்டிகள்? என்று வினவினால் த்ருப்திகரமான விடை வருமா? என்று பார்க்கவேணும். அறுநூறாண்டுகட்கு முன்பு அவதரித்திருந்த ஆசிரியர்க்கு அந் நாள் தொடங்கி ஒருவிதமான வழிபாடு நடந்துவாரா நிற்க, பிற்பட்ட காலத்தில் (அதாவது மிகவும் ஸந்நிஹிதமான காலத்தில்) திடீரென்று ஒரு கோலாஹலத் தைக் கிளப்பி அஸ்தாநே மாச்சரியத்தை வளரச் செய்யும் செயல்களை நடத்திக் கொண்டு போருவதானது எம்பெருமானுடைய லீலைகளிலே இதுவுமொன்று என்று நினைப்பதற் குறுப்பா மத்தனை யொழிய வேறு பேசத்தானாவதுண்டோ?

காஞ்சீபுரியில் திருக்கச்சி நம்பிகள் ஸன்னிதி யுள்ளது. அதைப் பரிபாலிக் கும் பொறுப்பை பஸ்மதாரிகளான சைவர்கள் பரம்பரையாக ஏற்று வருகிறார்கள். அவர்கள் திருக்கச்சி நம்பிகளின் ஸம்பிரதாயம் வேறாயிருக்கின்ற தென்பதை யுண

ராதவர்களல்லர். அந்த ஸம்பிரதாயத்தை மாற்றித் தங்களைப்போல் அவரையுப் (அர்ச்சையில்) பஸ்மதாரியாக ஆக்கிவிட வேணுமென்று நினைப்பதாகவோ அதற்குரிய சேஷ்டைகள் செய்வதாகவோ இதுவரையில் தெரியவில்லை. காஞ்சியில் மட்டுமன்று; மற்றும் அநேக ஸ்தலங்களிலும் திருக்கச்சி நம்பிகள் பக்கலிலே பரிவு காட்டுபவர்களும் அவர்க்குத் தொண்டுசெய்பவர்களும் சைவர்களாகத்தான் காணப்படுகிறார்கள். அவர்கள் நம்பியின் சின்னங்களை மாறுபடுத்த முயலுவதில்லை. தங்களுடைய சின்னங்களை யிட்டு அவரைத் தனியே பிரதிஷ்டை செய்து தாங்கள் தனியாக ஆராதிக்கவும் ஆசைப்படுவதில்லை. ஸகலவித யோக்யதா ஸம்பந்நரான தேசிகனிடத்தில் ஜந்மாந்தர ஸஹஸ்ர நற்றவப் பயனாக ஒரு வகுப்பினர்க்கு பக்தி விளைந்தது உஜ்ஜீவந ஹேதுவே யென்பதில் ஐயமில்லை. அவ்வாசார்ய ஸார்வபௌமனுடைய வழிபாடுகள் தொன்றுதொட்டு எந்தவிதமாக நிகழ்ந்து வருகின்றதென்பதைப் பிராமாணிகர்கள் அபலாபம் செய்ய முடியுமா?

முதன் முதலாகத் திருவரங்கம் பெரிய கோயிலில் தேசிக விக்ரஹத்தில் திருமண் விபர்யயம் செய்யவேணுமென்று ஒரு வகுப்பினர்க்குத் தோன்றிற்று. அப்படியே செய்தார்கள். செய்த க்ஷணத்திலேயே ஹாஹாகாரம் ஏற்பட்டது. அந்த விஷமச்செயல் அநீதிதானென்று முடிவு செய்த அரசாங்கப் பிரபுக்கள் அதற்காக ஆயிரம் ரூபாயபராதம் விதித்தார்கள். அது மூன்று நீதிமன்றங்களிலும் ஊர்ஜிதமாயிற்று. உலகத்தில் எத்தனையோ விஷமச் செயல்களுக்கு எத்தனையோ விதமான சிக்ஷைகள் ஏற்படுவதுண்டு. ஆயிரம் ரூபாயபராதம் விதிக்கப்பட்டதாகக்காணும் ஸம்பவம் இஃதொன்றுதான். இதனால் தேசிகனுடைய சின்னத்தைமாற்ற முயல்வது மிகப்பெரியவும் தவறு என்பது கையிலங்குநெல்லிக்கனியாக விளங்கவில்லையா? திருவவதார ஸ்தலத்து ப்ரக்ரியைகளும் ப்ரஸித்தமானவையே. பெரியதொரு வகுப்பில் விவேகி ச்ரேஷ்டர்கள் இல்லையென்று சொல்ல முடியுமா? நெஞ்சாலாவது நினைக்கமுடியுமா? ஆனால் அவர்களின் விவேகம் பயன்படவில்லை.

நெடுநாளாக நாம் வஸ்து ஸ்திதியைப் பலபல விஷயங்களில் எடுத்துக் காட்டுவதுபோல இவ் விஷயத்திலும் மனச்சாக்ஷியை மீறாமல் எடுத்துக் காட்டினதொழிய வேறில்லை. இதற்காக நம்மைச் சிலர் வெறுப்பது யுக்தமாகுமா? இது ப்ராமாணிகமா? அப்ராமாணிகமாக ஆக்ரஹத்தோடு தெரிவிக்கப்படுகிறதா? என்பதையன்றோ ப்ராமாணிக ப்ராஜ்ஞர்கள் பரிசீலிக்க வேணும். நெஞ்சை நடுநிலையில் வைத்து யுக்தா யுக்தங்களை விவேகிக்க வேண்டாவா? வேதத்தின் பதபாட விருத்தமாக வேதபாஷ்யங்கள் தோன்றியுள்ளன வென்று விரிவான விமர்சங்கள் வெளியிட்டேன். ஸ்மார்த்த வைதிக வித்வான்களும் இதை உகக்கிறார்களேயொழிய ஒருவரும் க்ஷேபிக்கவில்லை. உண்மைக்குமாறான விஷயங்களை நாம் ஒருபோதும் எழுதமாட்டோம்; நெஞ்சாலும் நினைக்கமாட்டோம். திருப்புட்குழி ஸ்வாமி யென்று போற்றப்படும் மஹான் போல்வார் ''அபிநிவேச வசீக்ருத சேதஸாம் பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரம:'' என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கேயன்றோ இலக்காகிக் காலங்கழித்தனர். ... ... *